# LST மீளாய்வு

தொகுப்பு 31 | வெளியீடு 349 | 2023 ஜூன்
www.lstlanka.org

LAW & SOCIETY TRUST

# அரகலய

## போராட்டத்தில் அரசியல்

**LST மீளாய்வு**
தொகுப்பு 31 │ வெளியீடு 349 │ 2023 ஜூன்

# அரகலய
## சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை

ISSN : 2820-2112

---

**ஹர்த்தால் முதல் போராட்டம் வரை: இலங்கையில் எதிர்ப்பு அரசியலின் மாறிவரும் முகம்**

*சகுந்தலா கதிர்காமர்*

**தலைவர்கள் இல்லாமல் எம்மால் சமாளிக்க முடியாதா? அரகலயவின் அரசியல் சூழமைவில் பொதுமக்கள் அபிப்பிராயங்களின் பகுப்பாய்வு**

*விதுர முனசிங்க மற்றும் பிரபாத் ஹேமந்த குமார*

**இணைய வழி போராட்டம் (ஒன்லைன் அரகலய): அரசியலில் சமூக ஊடகத்தின் பங்கு பற்றிய ஓர் உருவரை**

*லாரா விஜேசூரிய மற்றும் சமல் விமுக்தி ஹேமச்சந்திர*

**கோட்டாகோகம மக்கள் பல்கலைக்கழகம்: மாற்றுப் புலமைசார் வெளியொன்றின் ஒரு பரிசோதனை**

*சமல் விமுக்தி ஹேமசந்திர*

**மக்கள் போராட்டங்களில் பெண்கள்**

*ஸ்வஸ்திகா அருலிங்கம் மற்றும் மரிசா த சில்வா*

**அரகலய - இலங்கை மக்களின் போராட்டம்: எதிர்ப்புக் கலையின் ஊடாக எதிர்க்கும் கலையின் வெளிப்பாடுகள் ய**

*சகுன கமகே*

---

இலங்கையில் அச்சிடப்பட்டது

# உள்ளடக்கம்


**ஆசிரியர் தலையங்கம்** 1

---

**கட்டுரைகள்**

**ஹர்த்தால் முதல் போராட்டம் வரை: இலங்கையில் எதிர்ப்பு அரசியலின் மாறிவரும் முகம்** 4

*சகுந்தலா கதிர்காமர்*

**தலைவர்கள் இல்லாமல் எம்மால் சமாளிக்க முடியாதா? அரகலயவின் அரசியல் சூழமைவில் பொதுமக்கள் அபிப்பிராயங்களின் பகுப்பாய்வு** 20

*விதுர முனசிங்க மற்றும் பிரபாத் ஹேமந்த குமார*

**இணைய வழி போராட்டம் (ஒன்லைன் அரகலய): அரசியலில் சமூக ஊடகத்தின் பங்கு பற்றிய ஓர் உருவரை** 41

*லாரா விஜேசூரிய மற்றும் சமல் விமுக்தி ஹேமச்சந்திர*

**கோட்டாகோகம மக்கள் பல்கலைக்கழகம்: மாற்றுப் புலமைசார் வெளியொன்றின் ஒரு பரிசோதனை** 55

*சமல் விமுக்தி ஹேமசந்திர*

**மக்கள் போராட்டங்களில் பெண்கள்** 65

*ஸ்வஸ்திகா அருலிங்கம் மற்றும் மரிசா த சில்வா*

**அரகலய - இலங்கை மக்களின் போராட்டம்: எதிர்ப்புக் கலையின் ஊடாக எதிர்க்கும் கலையின் வெளிப்பாடுகள்** 70

*சகுன எம். கமகே*


# ஆசிரியர் தலையங்கம்

போராட்டம் (அரகலய) ஆரம்பித்த (2022 மார்ச் 15) ஒரு வருடத்தின் பின்னர் இந்த எல்.எஸ்.ரி மீளாய்வு வெளியிடப்பட்டுள்ளது. வெகுமக்கள் எதிர்ப்பின் பூதாகரமான வெளிப்பாடே போராட்டமாகும். பால் நிலைத் தடைகளையும் வகுப்புவாதத் தடைகளையும் ஊடுருவிய, உள்ளடக்கும் தன்மைமிக்க இப்போராட்டம் இதுவரையில் எதிர்வினையற்று மௌனம் காத்த நடுத்தர வகுப்பினரையும் உள்ளீர்த்த ஒரு போராட்டமாகும். கோட்டாபய ராஜபக்ஷவின் வாக்கு வங்கியான விவசாயிகளும் தொழிற்சங்கங்களும் அவருக்கு எதிராகத் திரும்பிய நிலையில் கட்சி விசுவாசிகளையும் போராட்டம் உள்வாங்கியிருந்தது. இதுவரையில் தீர்க்கப்படாத சிறுபான்மையினரின் கோரிக்கைகளை அங்கீகரித்த போராட்டம் அவர்களை உள்வாங்கி அவர்களின் கடந்தகாலப் போராட்டங்களைத் தற்போதைக்கு ஏற்று அங்கீகரித்துள்ளது. இது அரசியல்வாதிகளால் வழிநடத்தப்பட்டதல்ல. இது இளையோரையும் முதியோரையும் ஈர்த்தது. இந்த அடிப்படையில் நோக்குகையில் இது தனித்துவமானதாகும்.

உயர்ந்த வாழ்க்கைச் செலவும் பணவீக்கமும் எரிபொருள் பற்றாக்குறையும் அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறையுமே போராட்டத்திற்கான ஊக்கிகளாகும். ஆனால் இது ஆன்மாவின் தேடலைத் தூண்டி இலங்கையில் அரசியலின் தன்மையினைக் கோடிட்டுக் காட்டியது. ஊழலிலும் உறவினர்க்குக் காட்டும் தனி ஆதரவிலும் புறந்தள்ளுதலிலும் எதேச்சாதிகாரத்திலும் புதையுண்டிருந்த நிலை.

மக்களைப் பொறுத்த அளவில் போராட்டம் பல விடயங்களையும் குறித்து நின்றது. அது ஒரு நிகழ்வாக இருந்தது, பாராளுமன்ற ஜனநாயகத்தின் பழைமையான பிரதிநிதித்துவ நிறுவனங்களுக்குச் சவால் விடுத்த ஓர் அரசியல் செயன்முறை என்பதுடன் முறைமையினைத் தூயதாக்கி அதனைப் புதிதாக உருவாக்குவதற்கான வாய்ப்பினையும் அது உருவாக்கியது. “கோடா கோ ஹோம்” மற்றும் “முறைமை மாற்றம்” ஆகியனவே சுலோகங்களாக இருந்தன. போராட்டம் என்பது ஓர் அற்புத நிகழ்வாகவும் அரசியல், சமூக

மற்றும் புலமைசார் வெளியாகவும் இருந்தது. இது ஒரு புதிய எதிர்காலத்திற்கான ஒரு பாதையாக இருந்தது. போராட்டம் ஜனநாயக சக்தியினை வெளியிட்டது. அது இலங்கை அரசியலமைப்புப் புதிர்களையும் சுய சான்றாக இருந்த பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் நெருக்கடியினையும் கோடிட்டுக்காட்டியது. போராட்டமானது ஒரு முறைமை மாற்றத்திற்கான இளைஞர்களின் கோரிக்கைகளுக்கு பதிலளிப்பதற்கு முறைமைகளால் இயலாமல் இருந்தமையின் விளைவாகும். நிலவுகின்ற முறைமை மற்றும் அதிகாரக் கட்டமைப்புகளுக்கு இலங்கை வரலாற்றில் இளைஞர்கள் சவால் விடுத்த மூன்றாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

இது அரசியலமைப்பு மறுசீரமைப்புக்களைக் கோருவதற்கான வாய்ப்பாக இருந்தது. மக்கள் கவுன்சில்கள், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களையும் நேரடி ஜனநாயகத்தின் ஏனைய பொறிமுறைகளையும் மீளப் பெற்றுச் செல்லுமாறு கோருவதற்கான உரிமை, அரசியல் மற்றும் பணித்துறை ஆட்சி மேல் வர்க்கத்தினரால் பயன்படுத்தப்படும் அதிகாரத்தின் மீதான சமுதாய ரீதியான பரிசீலிப்புக்கள் மற்றும் சமனிலைப்படுத்தல்களாகப் பிரஜைகள் இயக்கங்கள் மற்றும் கொள்கைக் கலந்துரையாடல்களில் பங்கேற்பதற்கான பங்கேற்புமிக்க பிரஜை அமைப்புக்கள் - இவை எல்லாம் பிரதிநிதித்துவப் பாராளுமன்ற ஜனநாயகத்தின் நீடித்த குறைபாடுகளைத் தீர்ப்பதற்கான அவ்வாறான சில எண்ணக்கருக்களாகும்.

போராட்டத்தின் போது பிரஜைகள் இயக்கத்தின் இடையீடுகள் இலங்கையின் அரசியலுக்கு முற்றுமுழுவதும் ஒரு புதிய பரிமாணத்தினைச் சேர்த்து எதிர்வினையற்ற பார்வையாளர்கள் என்ற பிரஜைகளின் வகிபாத்திரத்தில் இருந்து அவதானமும் பங்கேற்புமிக்க அரசியல் செயற்படுனர்கள் என அரசியலில் அவர்களின் வகிபாத்திரத்தில் ஒரு மாற்றத்தினைக் குறித்தது. அந்த இடைமாற்றச் செயன்முறை, எமது ஜனநாயகத்தினை மீள் கற்பனை செய்து ஆழப்படுத்துவதற்கான புதிய புலமைசார் சக்தியினையும் அரசியல் சக்தியினையும் வழங்கியதுடன், வெறுமையற்றதும் ஆனால் முற்றுமுழுவதும் புறக்கணிக்கப்பட்டதுமான இக் கருத்தியல்களின் அர்த்தத்திற்கு உண்மையாக, எமது ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கு அரசியலமைப்பு அத்திவாரங்களையும் வழங்கியுள்ளது. போராட்டமானது கலை, கேலிச்சித்திரம் மற்றும் சிற்பங்கள் மூலம் பிரஜைகள் தொடர்பாடலின் புதிய வடிவங்களுக்கான ஒரு வெளியினையும் உருவாக்கியுள்ளது.

பின்வருவன உள்ளிட்ட கட்டுரைகளின் சேகரிப்பின் மூலமாக இந்த பல்பரிமாணங்களை எல்.எஸ்.ரி மீளாய்வு உள்வாங்குகின்றது: இலங்கையில் எதிர்ப்பியக்கங்களின் வரலாறு பற்றிய ஒரு மீளாய்வு ("ஹர்த்தால் முதல் அரகலய வரை: இலங்கையில் ஆர்ப்பாட்ட அரசியல்களின் மாறிவரும் முகம்" – சகுந்தலா கதிர்காமர்), போராட்டச் சூழமைவில் வெகுமக்கள் அபிப்பிராயம் பற்றிய பகுப்பாய்வு, (தலைவர்கள் இல்லாமல் எம்மால் சமாளிக்க முடியுமா? போராட்டத்தின் அரசியல் சூழமைவில் வெகுமக்கள் அபிப்பிராயம் பற்றிய ஒரு பகுப்பாய்வு" – விதுர முனசிங்ஹ மற்றும் பிரபாத் ஹேமந்த குமார), போராட்டச் சூழமைவில் சமூக ஊடகத்தின் அரசியல் வகிபாத்திரத்தின் உருவரை (அரகலய ஒன்லைன்: சமூக ஊடகத்தின் அரசியல் வகிபாத்திரம் பற்றிய உருவரை (லாரா விஜேசூரிய மற்றும் சமல் விமுக்தி ஹேமசந்திர) ஒரு மாற்றுப் புலமை வெளியினை உருவாக்குவதில் அதன் வகிபாத்திரம் (கோட்டா கோகம மக்கள் பல்கலைக்கழகம்: ஒரு மாற்றுப் புலமை வெளியின் பரிசோதனை (சமல் விமுக்தி ஹேமசந்திர), போராட்டத்தில் பெண்களின் வகிபாத்திரம் பற்றிய ஒரு பகுப்பாய்வு – பால்நிலை, இனத்துவம் மற்றும் சமயம் ஆகியவற்றின் எல்லைகளை உடைத்தல் ("மக்கள் போராட்டத்தில் பெண்கள்" – சுவஸ்திகா அருலிங்கம் மற்றும் மரிசா த சில்வா) மற்றும் எதிர்ப்புக் கலையின் உருவாக்கத்திற்காக அது உருவாக்கிய வாய்ப்பு (போராட்டம் - இலங்கை மக்களின் போராட்டம்: எதிர்ப்புக் கலையின் மூலம் எதிர்ப்புக் கலையின் வெளிப்பாடு – சகுணா கமகே).

பொது வெளியிலும் வெகுமக்கள் கற்பனையிலும் போராட்டம் வேர் பிடித்ததில் இருந்து ஒரு வருடம் கடந்தோடி விட்டதுடன் தற்போதைய அரசாங்கம் தனது அதிகாரம் மக்களால் அங்கீகரிக்கப்படுவதை உறுதிப்படுத்தியதுடன் நிலைமை மாறியுள்ளது. இயக்கத்தின் அரசியல்

ஊழல் பற்றிய அச்சம் போராட்டத்திற்கான நடுத்தர வகுப்பின் ஆதரவில் சிலவற்றினை நீர்த்துப் போகச் செய்துள்ளதுடன் "முறைமை மாற்றம்" வேண்டும் எனக் கோரிய கோசங்கள் "அரசாங்கத்திற்கு ஒரு வாய்ப்பினை வழங்குங்கள்" என்ற வேண்டுகோள்களுடன் போட்டியிடுகின்றன. எவ்வாறாயினும், பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டமூலம் போன்ற கொடுமையான சட்டங்களை அரசாங்கம் பரிசீலித்து வரும் ஒரு சூழமைவிலும் மக்களின் வாழ்க்கை வாய்ப்புக்களில் கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்தும் கட்டமைப்பு ரீதியான சீராக்கல்களுக்கான பொருளாதார மறுசீரமைப்புகள் பலவற்றினையும் அரசாங்கம் பரிசீலித்து வரும் ஒரு சூழமைவிலும் இந்தக் கலப்புச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. "முறைமை மாற்றத்திற்கான" பிரச்சாரம் எதேச்சதிகாரம் மிக்க 'பொலிஸ் ஆட்சியினால்'[1] கீழறுக்கப்படும் அறிகுறிகளைக் காட்டுகின்றது. தனது கையில் அரசு கொண்டுள்ள சட்டம் மற்றும் பாதுகாப்புப் படைகள் எனும் கருவிகளைக் கொண்டு வெகுமக்களின் போராட்டங்களை எதிர்ப்பதற்கு அரசு தன்னைத் தயார்படுத்தி வருகின்றது.

எதிர்ப்பு அரசியல் மீளுருவாக்கப்பட்டு, வரலாற்றில் இருந்து பாடம் கற்கக் கூடாது என்ற அவ்வாறான பிடிவாதமான, ஒற்றைத் தீர்மானத்தினை எதிர்ப்பதற்கான வலிமை பெறப்படலாம்.

## குறிப்புக்கள்

1 "Aragalaya, One Year on: ATA is Spoiling the Party," *Sunday Time*" April 09, 2023, https://www.sundaytimes.lk/230409/

# ஹர்த்தால் முதல் போராட்டம் வரை: இலங்கையில் எதிர்ப்பு அரசியலின் மாறிவரும் முகம்

*சகுந்தலா கதிர்காமர்**

*சுதந்திரத்திற்கு பின்னரான இலங்கையில், போராட்டங்களில் உள்ள அரசியலின் மாறுகின்ற முகம் பற்றிய விரிவான பகுப்பாய்வை ஆசிரியர் முன்வைக்கிறார்.*

*போராட்டம் மற்றும் சமீபத்திய உலகளாவிய போராட்ட இயக்கங்களைச் சுற்றியுள்ள மொழி வகைப்பாட்டிற்கும் நேர்த்தியாக்கம் செய்வதற்கும் இந்தியாவின் ஆழமான பங்களிப்பையும் அவர் குறிப்பிடுகிறார்.*

அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிரான மற்றும் அரசாங்கம் செயற்படாமைக்கு எதிரான பிரஜைகளின் எதிர்ப்பின் பல்வேறு வெளிப்பாடுகளை இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னரான வரலாறு கண்கூடாகக் கண்டுள்ளது. எதிர்ப்பின் சில வெளிப்பாடுகள் (ஆட்சிக் கவிழ்ப்பு மற்றும் ஆயுதக் கிளர்ச்சி போன்றவை) தெளிவாகவே அரசியலமைப்புக்கு முரணானவையாகவும் சட்டவிரோதமானவையாகவும் இருக்கையில் போராட்டத்தின் பல வெளிப்பாடுகள் தாமே அரசியலமைப்புடன் முரண்படாதவையாக அல்லது சட்டவிரோதமற்றவையாக உள்ளன. பேச்சுச் சுதந்திரம், கருத்து வெளிப்பாட்டுக்கான சுதந்திரம் மற்றும் தொழில் உரிமைகள் போன்ற உரிமைகளை உத்தரவாதப்படுத்தும் (அல்லது உதட்டளவு சேவை செய்யும்) ஜனநாயகங்களில் ஒன்றுகூடுவதற்கான (ஆர்ப்பாட்டம் செய்வதற்கான உரிமை உள்ளடங்கலாக) உரிமை நன்கு நிலைநாட்டப்பட்டுள்ளது. தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டம் செய்வதற்கான அவர்களின் உரிமைகள் பற்றிய புரிதலைப் பணிநிறுத்தம் செய்வதற்கான உரிமையினை உள்ளடக்குவதற்காக விஸ்தரித்துக்கொண்டுள்ளனர். பணிநிறுத்தம் என்பது அரசியலமைப்பு ரீதியாகச் சர்ச்சைக்குரிய ஒன்றாக இருந்தபோதும் இது அடிக்கடி பயன்படுத்தப்படும் உபாயமார்க்கமாக உள்ளது.

அரசியல் கட்சிகள், குறிப்பாக எதிர்க்கட்சியில் இருக்கையில், ஆர்ப்பாட்டங்களையும் எதிர்ப்புக்களையும் ஏற்பாடு செய்வதற்கு அல்லது அவற்றுக்கு உதவுவதற்கு நாடுகின்ற போது ஆட்சியில் உள்ள அரசாங்கங்கள் இவற்றினை அசௌகரியமாகக் கருதி எதிர்ப்பினை அல்லது எதிர்ப்பாளர்களை எதிர்க்கின்றனர். குறிப்பாக இவர்கள் ஆட்சியிலுள்ளவர்களுக்கு உண்மையைக் கூறுவதாகக் கோருகையிலும் மகிழ்வற்ற பிரஜைகளின் வாழ்வியல் யதார்த்தங்களை வெளிப்படுத்துவதாகக் கோருகையிலும் இவ்வாறு நடக்கின்றது. எதிர்ப்புக்களுக்குப் பொதுவாக அரசினால் அல்லது

* சகுந்தலா கதிர்காமர், சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை அமைப்பின் நிர்வாக இயக்குநர் ஆவார்.

அதன் முகவர்களினால் வன்முறைமிக்க பதிற்செயற்பாடு காட்டப்படுகின்றது. எதிர்ப்பாளர்களும் வன்முறை மூலம் எதிர்த்துநின்று சகல எதிர்ப்புக்களையும் குழப்பத்துடனும் வன்முறையுடனும் தொடர்புள்ளவையாக ஆக்குகின்றனர். ஆனால் இந்தத் தொடர்பு ஆதாரமற்றதாக இருக்கலாம்.

## ஹர்த்தால், சத்தியாக்கிரகம் மற்றும் கடையடைப்புக்களுடன் தெற்காசியா கொண்டுள்ள ஈர்ப்பு.

போராட்டம் தொடர்பான மொழியினை வகைப்படுத்தி அதனைச் செம்மைப்படுத்துவதற்கு இந்தியா அளப்பரிய பங்களிப்பினை வழங்கியுள்ளது. ஹர்த்தால்கள், சத்தியாக்கிரகம் மற்றும் கடையடைப்பு போன்ற இச்சொற்பதங்கள் அனைத்தும் ஒரே முடிவான கருத்துக்களைக் கொண்டுள்ளன மற்றும் இந்தியாவில் எதிர்ப்பு அரசியலில் ஈடுபடாதவர்களுக்கு இந்த நுணுக்கங்கள் புரிவதில்லை. இந்தியர்களுக்கும் ஏனைய துணைக்கண்டவாசிகளுக்கும் ‘ஹர்த்தால்’, ‘சத்தியாக்கிரகம்’ மற்றும் ‘வீதியை மறித்தல் (chakka jams)’ போன்ற சொற்கள் அதீத உணர்வுகளை எழுப்பி “வெள்ளையனே வெளியேறு” இயக்கத்துடன் இணைந்த பல நினைவுகளைப் புதுப்பிக்கின்றது. இது நிச்சயமாக விடுதலைக்கும் சுதந்திரத்துக்குமான நியாயமான போராட்டமாகும்.

ஹர்த்தால் எனும் சொற்பதம் பல இந்திய மொழிகளிலும் காணப்படுவதுடன் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் இந்தியச் சுதந்திர இயக்கத்தின் போதே இச்சொல் முதலில் பயன்படுத்தப்பட்டது. இச்சொற்பதம் குஜராத்தி மொழியில் இருந்து வருகின்றது. குஜராத்தியரான மஹாத்மா காந்தி தனது சுதந்திரச் சார்புப் பொதுப் பணி நிறுத்தங்களைக் குறிப்பிடுவதற்கு இச்சொல்லைப் பயன்படுத்தியதுடன் இச்சொல்லைச் செயற்திறனுடன் நிறுவனமயமாக்கினார்.

ஹர்த்தால் என்பது வேலைத்தளங்களையும் அலுவலகங்களையும் கடைகளையும் நீதிமன்றங்களையும் முழுஅடைப்புச் செய்யுமாறு அழைப்பு விடுக்கும் சிவில் ஒத்துழையாமையினதும் வெகுமக்கள் எதிர்ப்பினதும் ஒரு வடிவமாகும். இது தொழிலாளர் பணி நிறுத்தத்தினை ஒத்ததாகும். ஒரு பொதுவான பணி நிறுத்தத்திற்கு மேலதிகமாக, பாடசாலைகளும் வியாபாரத் தலங்களும் தன்னார்வத்துடன் மூடப்படுவதை இது சம்பந்தப்படுத்துகின்றது. வெகுமக்கள் விரும்பாத அல்லது அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாத தீர்மானங்களை வாபஸ் பெறுமாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்குமாறு மக்களிடம் வேண்டுகோள் விடுக்கும் ஒரு வழியே இதுவாகும். ஹர்த்தால் பிரதானமாக அரசியல் காரணங்களுக்காகவே பயன்படுத்தப்படுகின்றது என்பதுடன் அரசாங்கத்தின் கொள்கை அல்லது நடவடிக்கைக்கு எதிராக எதிர்ப்புத் தெரிவிக்கும் எதிர்க்கட்சியினால் அதிகம் பயன்படுத்தப்படும் ஒரு தந்திரமாகவும் காணப்படுகின்றது.

சமஸ்கிருதத்திலும் இந்தியிலும் சத்தியாக்கிரகம் என்பது “உண்மையினைப் பற்றிப்பிடிப்பது” என்பதைக் குறிக்கின்றது. ஒரு கருத்தியலாகவும் அரசியல் உபாயமார்க்கமாகவும் இருந்த சத்தியாக்கிரகம் மஹாத்மா காந்தியினால் சாத்தான் எனக் கருதப்பட்ட இந்தியாவில் இருந்த காலனித்துவ ஆட்சிக்குத் திடசங்கற்பமிக்க ஆனால் அஹிம்சை வழியிலான எதிர்ப்பினை உருவாக்கவும் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டது. சத்தியாக்கிரகத்தில் மூன்று வடிவங்கள் உள்ளன. அவையாவன: ஒத்துழையாமை, சிவில் ஒத்துழையாமை மற்றும் பகிஷ்கரிப்பு என்பனவாகும். சத்தியாக்கிரகம் எனும் சொற்பதம் எதிர்ப்பின் பின்னாலுள்ள அரசியலை நடுநிலையாக்கி எதிர்ப்புக்கு ஒரு சீரிய பண்பின் உணர்வினைப் புகுத்துகின்றது – குடிமைச் சீரிய பண்பு.

“பந்த்”; (Bandh) என்பதன் நேரடி அர்த்தம் “மூடுதல்” என்பதாகும். இது இந்தியா மற்றும் நேபாளம் போன்ற தெற்காசிய நாடுகளில் பிரதானமாக அரசியல் செயற்படுனர்களால் பயன்படுத்தப்பட்ட சிவில் ஒத்துழையாமையின் மூலமான எதிர்ப்பின் ஒரு வடிவமாகும். இது பணி நிறுத்தத்தினை ஒத்த பண்புகளைக் கொண்டுள்ளது. மூடுதலின் போது ஒரு சமுதாயத்தினால் பொதுவான பணி நிறுத்தத்தினையும் உருவாக்க முடியும்.

“சக்கா ஜேம்” என்பது வீதியை மறிப்பதற்கு அல்லது எதிர்ப்பின் ஒரு வடிவமாக வேண்டுமென்றே போக்குவரத்து நெரிசலை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்படும் தந்திரமாகும். போக்குவரத்தினை ஸ்தம்பிக்கச் செய்வதற்குச் செயற்பாட்டாளர்கள் புகையிரதத் தடங்களில் அல்லது வீதிகளில் மறியலில் ஈடுபடலாம்.

தென்னாபிரிக்காவிலுள்ள டிரான்ஸ்வல்லின் பிரித்தானிய காலனித்துவ அரசாங்கத்தினால் ஆசியாவைச் சார்ந்தவர்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மஹாத்மா காந்தியினால் இது 1906 ஆம் ஆண்டு முதலில் நிகழ்த்தப்பட்டது. எவ்வாறாயினும், காந்தியின் முதலாவது சத்தியாக்கிரகம் இந்தியாவில் 1917 ஆம் ஆண்டு அவரிச் செடி (indigo) வளரும் சம்பரன் (Champaran) எனும் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தச் சத்தியாக்கிரகம் இந்திய சுதந்திர இயக்கத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கிளர்ச்சி எனக் கருதப்படுகின்றது.

காலனித்துவ யுகச் சட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சம்பரானில் விவசாயிகளின் எதிர்ப்பியக்கத்தினை காந்தி ஏற்பாடு செய்தார். குத்தகை விவசாயிகளான இவர்களில் பலர் அவர்களின் நிலத்தின் ஒரு பகுதியில் குத்தகைக்கான ஒரு நிபந்தனையாக எவ்விதக் கொடுப்பனவும் இன்றி அவரிச் செடிகளை வளர்க்க வேண்டும் என நிர்ப்பந்திக்கப்பட்டனர். சாயம் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்ட அவரிச் செடி ஒரு காசுப் பயிர் என்பதால் விவசாயிகள் சந்தை விலைகளினால் பாதிப்புறும் நிலையில் இருந்தனர். இச்செடிகள் மண்ணின் வளத்தினையும் குன்றச் செய்தன. சம்பரான் சத்தியாக்கிரகம் இந்திய இளைஞர்களுக்கும் சுதந்திரப் போராட்டத்திற்கும் ஒரு நெறிப்படுத்தலை வழங்கியது. அதுவரை இந்திய சுதந்திரப் போராட்டம் பிரித்தானியக் காலனித்துவ முறைமையினுள் இந்தியாவின் பங்கேற்பினைக் குறித்துரைத்த மிதவாதிகளுக்கும் இந்தியாவில் காலனித்துவ ஆட்சியினைக் கவிழ்ப்பதற்கு வன்முறையினைப் பயன்படுத்த வேண்டும் என ஆதரித்து வாதாடிய வங்காளத்தைச் சேர்ந்த தீவிரவாதிகளுக்கும் இடையில் பிரிக்கப்பட்டு ஊசலாடிக்கொண்டிருந்தது.

உயர் ஊதியத்தினைக் கோரி ஆலைத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்த அஹமதாபாத் ஆலைப் பணி நிறுத்தத்திற்கு (Ahmedabad Mill Strike) 1918 ஆம் ஆண்டு காந்தி ஆதரவு வழங்கினார். கொள்ளை நோயின் போது ஆலை உரிமையாளர்கள் தொழிலாளர்களின் கொடுப்பனவினை அதிகரித்தனர். ஆனால் கொள்ளை நோய் தணியத் தொடங்கியதும் கொடுப்பனவினைக் குறைப்பதற்கு ஆலை உரிமையாளர்கள் விரும்பினர். இந்தக் குறைப்புக்கு இணங்காத தொழிலாளர்கள் ஒரு புதிய கொடுப்பனவுத் திட்டத்தினைப் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்த விரும்பினர். தொழிற்துறை உரிமையாளர்கள் இதற்கு மறுப்புத் தெரிவித்ததும் பணி நிறுத்தத்தில் ஈடுபடுமாறு தொழிலாளர்களை வேண்டிய காந்தி உண்ணாவிரதமிருந்து அவர்களுக்கு ஆதரவு வழங்கினார். ஆலை உரிமையாளர்கள் மீதான அற ரீதியான அழுத்தத்தினை அதிகரித்ததன் மூலம் அவர்கள் இறுதியில் அதிகரிப்புக்கு இணங்கினர். உண்ணாவிரதத்தில் ஈடுபட்டதன் மூலம் காந்தி பணி நிறுத்தத்திற்கு ஒரு அறம் சார்ந்த பரிமாணத்தினைக் கொடுத்தார் என்பதுடன் ஆலை உரிமையாளர்களுடன் தனக்கிருந்த நட்பினையும் பொருட்படுத்தாமலே காந்தி இதனைச் செய்தார்.

தமது பயிர்களில் விளைச்சல் குறைவடைந்ததால் பூரணமான சலுகைகளுக்கு குடியான விவசாயிகள் உரித்துப் பெற்றிருந்தனர். ஆனால் தமது வருமானத்தினை இழக்க விரும்பாத அரசாங்கம் இவ்விவசாயிகளை வரி செலுத்துமாறு நிர்ப்பந்தித்து வந்தது. இவ்வாறு இடருற்ற குடியான விவசாயிகளுக்கு உதவுவதற்காக 1918 ஆம் ஆண்டு காந்தி சர்தார் வல்லபாய் பட்டேலுடன் கூட்டுச் சேர்ந்தார். கேடா சத்தியாக்கிரகத்தினை (Kheda Satyagraha) ஏற்பாடு செய்த காந்தி அநீதிக்கு எதிராகச் சாகும் வரை உண்ணாவிரதமிருக்குமாறு அனைத்து விவசாயிகளையும் வேண்டினார். கொடுப்பதற்கு ஆற்றல் இருந்தாலும் வரியைக் கொடுக்காதிருப்பதன் மூலம் ஏழை விவசாயிகளுக்கு ஆதரவு வழங்குமாறு காந்தி பணக்கார விவசாயிகளிடம் வேண்டுகோள் விடுத்தார்.

சில குறிப்பிட்ட அரசியல் வழக்குகளை ஜுரர்கள் இல்லாமல் விசாரிப்பதற்கு அனுமதி வழங்கி, வழக்கு விசாரணை இன்றி சந்தேக நபர்களுக்குச் சிறைத்தண்டனையினை அனுமதித்த ரொவ்லாட் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து 1919 ஏப்ரலில் காந்தி ஹர்த்தால் பிரகடனம் செய்தார். ஏகாதிபத்தியச் சட்டவாக்க சபையின் மூலமாகப் பிரித்தானியர்களால் நிறைவேற்றப்பட்ட ரொவ்லாட் சட்டம் (Rowlatt Act) பயங்கரவாதிகளின் வன்முறையினைத் தடுக்கும் எனக் கூறியது. பிடியாணையின்றிக் கைதுசெய்து இரண்டு வருடங்கள் தடுத்துவைப்பதற்கான ஏற்பாடுகளைக் கொண்டிருந்ததால் இச்சட்டமானது இந்தியர்களின் சிவில் சுதந்திரங்களைக் கடுமையாகக் கட்டுப்படுத்தியது. பிரார்த்தனையுடனும் உண்ணாவிரதத்துடனும் நாடளாவிய ஹர்த்தாலை மேற்கொள்ளுமாறு காந்தி அழைப்புவிடுத்தார் - இதுவே சத்தியாக்கிரகப் பிரச்சாரத்தின் பிரதான கூறுகளாகும். ஹர்த்தாலினதும் சத்தியாக்கிரகத்தினதும் உபாயமார்க்கங்களை இணைத்ததன் மூலம் பிரித்தானிய அநீதிக்கு காந்தி ஒரு வலுவான எதிர்ப்பினை உருவாக்கினார். எவ்வாறாயினும்,

1919 ஏப்ரில் 13 ஆம் திகதி பஞ்சாபில் இடம்பெற்ற ஜாலியன்வாலா பாக் படுகொலைக்கு இட்டுச்சென்ற வன்முறைச் சம்பவங்கள் உள்ளிட்ட வன்முறைச் சம்பவங்கள் ஏற்பட்டு இயக்கம் எதிர்பார்த்ததை விட வித்தியாசமான ஒரு திசையில் பயணித்ததால், தனது அஹிம்சைக் கொள்கைகளில் இருந்து இயக்கம் விலகிய காரணத்தினால் ரௌலட் சத்தியாக்கிரகத்தினைக் காந்தி 1919 ஏப்ரில் 18 ஆம் திகதி நிறுத்தினார்.

பாரத் பந்த் (Bharat bandh) என்பது இந்தியா முழுவதுமான அடைப்புக்கான அழைப்பாகும். இவ்வாறான அடைப்பிற்குத் தனிப்பட்ட மாநிலத்தில் அல்லது மாநகரசபைப் பிரதேசத்தில் அழைப்பு விடுக்க முடியும். அடைப்பினைப் பிரகடனப்படுத்தும் சமுதாயம் அல்லது அரசியல் கட்சி பொதுமக்கள் வீட்டில் இருக்கவேண்டும் என்றும் வேலைக்குச் செல்லக்கூடாது என்றும் எதிர்பார்க்கின்றது. கடை வைத்திருப்பவர்கள் அவர்களின் கடைகளை மூடவேண்டும் என்றும் பொதுப் போக்குவரத்து இயக்குனர்கள் இயக்கங்களை நிறுத்தவேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றனர். பாரிய நகரங்கள் கூட ஸ்தம்பிக்க வைக்கப்பட்ட நிகழ்வுகள் நடந்தேறியுள்ளன.

2010 ஆம் ஆண்டில், எரிபொருள் விலை அதிகரிப்பினை எதிர்த்து தேசிய ஜனநாயக முன்னணியும் (National Democratic Alliance - NDA) ஐக்கிய முற்போக்குக் கூட்டணியைச் சாராத 13 கட்சிகளும் நாடளாவிய அடைப்புக்கு அழைப்பு விடுத்தன. இந்த அடைப்பினால் இந்தியர்கள் அவர்களின் நாளாந்தப் பணிகளை மேற்கொள்வதில் இருந்தும் தடுக்கப்பட்டனர், குறிப்பாக என்.டி.ஏ. மற்றும் இடதுசாரிக் கட்சிகள் ஆட்சி செய்த மாநிலங்களில் இந்த நிலை ஏற்பட்டது.

பிரதமர் மன்மோகன் சிங்கின் பொருளாதார மறுசீராக்கல்களுக்கும் டீசல் மற்றும் சமையல் எரிவாயுக்கான மானியக் குறைப்புக்கும் சுப்பர் மார்க்கட் மற்றும் டிபார்ட்மென்ட் ஸ்டோர்ஸ் உள்ளிட்ட சில்லறைத் துறையில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பெரும் பங்கினைக் கொண்டிருப்பதற்கும் எதிர்ப்புத் தெரிவித்து BJPயும் ஏனைய கட்சிகளும் 2012 ஆம் ஆண்டு நாடளாவிய அடைப்புக்கு அழைப்பு விடுத்தன.

2018 ஆம் ஆண்டு, மஹாராஸ்திராவின் பூனே மாவட்டத்தில் பௌத்தர்கள் மீதும் சில இந்து தலித்துக்கள் மீதும் இந்து தத்துவவாதிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரகாஷ் அம்பேத்கர் அடைப்புக்கு அழைப்பு விடுத்தார். பொலிஸார் நடவடிக்கை எடுக்காமைக்கு எதிராகவும் அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். மஹாராஸ்திரா மக்களில் 50 சதவிகிதத்திற்கும் மேற்பட்டவர்கள் அடைப்பிற்கு ஆதரவு வழங்கினார்கள் அல்லது அடைப்பில் பங்குபற்றினார்கள்.

அண்மைக் காலத்தில் இந்தியாவில் இடம்பெற்ற எதிர்ப்புப் போராட்டங்களில் முதன்மையானதாகவும் உலகளாவிய கவனத்தினை ஈர்த்ததுமான ஆர்ப்பாட்டம் விவசாயிகளின் எதிர்ப்புப் போராட்டமாகும் (2020–2021). உற்பத்திக்கான உத்தரவாத விலைகளை உறுதிப்படுத்தும் ஒழுங்கமைக்கப்பட்ட விவசாய உற்பத்திச் சந்தைப்படுத்தல் குழு முறைமையினைப் படிப்படியாக அழித்து ஈற்றில் அதனை முடிவுக்குக் கொண்டுவரும் என விவசாயிகள் நம்பிய பண்ணைச் சட்டங்களின் தொகுதிக்கு எதிராகவே விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இச்சட்டம் தங்களைப் பெருநிறுவனங்களின் கருணையில் விட்டுவிடும் என விவசாயிகள் அச்சப்பட்டனர். மேலும், கடன்களை வழங்கியும் உரிய காலத்திலான கொள்வனவினை உறுதிப்படுத்தியும் பயிர்களுக்கான போதிய விலைகளை அளித்தும் இடைத்தரகர்களாகச் (தரகு முகவர்கள்) செயற்பட்ட விவசாயத் துறையிலுள்ள சிறு அளவிலான வியாபாரிகளுடன் தமக்கிருக்கும் உறவினைச் சட்டங்கள் முடிவுக்குக் கொண்டுவரும் என விவசாயிகள் நம்பினர். பல மாநிலங்களையும் சேர்ந்த பெரும் எண்ணிக்கையிலான விவசாயிகள் டெல்லியில் குவிந்து, வீதிகளில் முகாமிட்டு, உணவு சமைத்து, குளிரையும் பொருட்படுத்தாது நடத்திய எதிர்ப்புப் போராட்டம் ஒரு வருடம் வரை நீடித்ததுடன் சட்டவாக்கம் வாபஸ் பெறப்படும் வரை இவர்கள் போராட்டத் தளத்தினை விட்டுச் செல்வதற்கு அல்லது வீதித் தடைகளை அகற்றுவதற்கு மறுத்தனர். தமது எதிர்ப்புக்களின் கட்புல நாடகத்தின் உச்சக்கட்டமாக சுதந்திர தினப் பவனியில் பங்குபற்றுவதற்காகத் தமது டிராக்டர்களில் விவசாயிகள் டெல்லியில் குவிந்தனர். இந்தியாவில் விவசாயிகளின் எதிர்ப்பின் ஒரு வருட பூர்த்தியினைக் குறிக்குமுகமாக அனைத்திந்திய பந்த் 2021 செப்டெம்பர் 27 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது. இறுதியில் அரசாங்கம் சட்டவாக்கத்தினை வாபஸ் பெற்றது. விவசாயிகளின் இந்தப் போராட்டம் ஓர் அரசியல் கட்சியினாலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் செயற்படுனர்களாலோ ஏற்பாடு செய்யப்படாது விவசாயிகளால் தாமே ஏற்பாடு செய்யப்பட்டதால் இது அசாதாரணமான ஓர் எதிர்ப்பாகக்

காணப்பட்டதுடன் இந்த எதிர்ப்புப் போராட்டம் அனைத்து வயதுக் குழுக்களையும் சமயத்தினையும் இனத்துவத்தினையும் மாநிலங்களையும் சேர்ந்த விவசாயிகளை ஒன்றிணைத்தது. எதிர்ப்புப் போராட்டம் உத்தியோகபூர்வமான தலைமைத்துவக் கட்டமைப்பில் தங்கியிருக்கவில்லை.

அடைப்புக்களும் சக்கா ஜேம்களும் ஹர்த்தால்களும் சத்தியாக்கிரகங்களும் போராட்டங்களும் பணி நிறுத்தங்களும் இந்தியாவின் பல மாநிலங்களிலும் தொடர்ந்தும் அடிக்கடி இடம்பெறும் நிகழ்வுகளாக இருந்து வருவதுடன் காந்திய சுதந்திரப் போராட்டங்கள் மூலம் இவற்றுக்குக் கிடைத்த தொடர்பின் காரணமாகவும் அதனால் இவற்றுக்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் காரணமாகவும் பிரதான அரசியல் கட்சிகள் இவற்றில் அடிக்கடி தஞ்சமடைகின்ற காரணத்தினாலும் இவை வெகுமக்கள் கலாசாரத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக மாறியுள்ளது. இருந்தபோதிலும், இந்தியாவிலும் கூட இவற்றின் அரசியலமைப்பு ரீதியான ஒத்திசையும் தன்மை தொடர்ந்தும் குழப்பத்திற்குரியதாக இருக்கின்றது. உறுப்புரை 19(1) இல் பொதியப்பட்டுள்ள சங்கங்களை அமைப்பதற்கான அடிப்படை உரிமையுடன் இவை பல தடவைகள் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. ஏதிர்ப்புத் தெரிவிப்பதற்கான உரிமை ஓர் அளப்பரிய ஜனநாயக உரிமை என்கின்ற காரணத்தினால் ஹர்த்தால்கள் அரசியலமைப்புக்கு முரணானவை அல்ல என இந்திய உச்ச நீதிமன்றம் பல தடவைகள் தீர்ப்பு வழங்கியுள்ள போதிலும் பணி நிறுத்தத்தினை அவை அடிப்படை உரிமைகளாகக் கருதுவதில்லை என்பதுடன், பந்த் எனும் அடைப்புக்களையும் சட்டபூர்வமானவையாகக் கருதுவதில்லை.

## இந்தியாவின் மொழிப் போராட்டமானது இலங்கையின் மொழிப் போராட்டமாகவும் ஊருறுவியது. (அப்போதைய, சிலோன்)

மஹாத்மா காந்தியினால் அகத்தூண்டுதல் பெற்ற யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் பூரண சுயாட்சியினை அல்லது பிரித்தானியர்களிடமிருந்து பிரிந்த சுயாட்சியினைக் கோரி டொனமூர் ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட வரையறுக்கப்பட்ட மறுசீராக்கல்களை நிராகரித்தபோது எதிர்ப்பின் இந்திய மொழி இலங்கையில் (அப்போதைய சிலோன்) எதிர்ப்பின் மொழியினுள் ஊடுருவியது. பிரித்தானிய ஆட்சிக்கெதிராக யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் அடிபணியாமைக்கான குறியீட்டு ரீதியான சமிக்ஞைகளைக் காட்டி இந்த எதிர்ப்பின் மொழியினைப் பயன்படுத்திப் பல எதிர்ப்புக்களையும் சத்தியாக்கிரகங்களையும் நடத்தியுள்ளனர்.[1]

## சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையில் எதிர்ப்பின் அரசியல்

### 1953 ஆகஸ்ட் 12 ஹர்த்தாலை நினைவுகூர்தல்: சிக்கன நடவடிக்கைகளுக்கு எதிரான எதிர்ப்பு

சிங்கள மொழியில் “ஹர்த்தால்” என்பது “வர்ஜனய” என அழைக்கப்படுகின்றது. 1953 ஆம் ஆண்டு இலங்கையில் (அப்போதைய சிலோன்) நடைபெற்ற ஹர்த்தால் அரசியல் வரலாற்றில் பொதிந்துவிட்டது. ஏனெனில், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்திற்கு எதிராக நாட்டில் நடத்தப்பட்ட முதலாவது மக்கள் போராட்டமாக இப்போராட்டம் அமைந்தமையினாலாகும். சுதந்திரம் கிடைத்து ஐந்தே வருடங்களில் இப்போராட்டம் நடைபெற்றது. அப்போது ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு எதிராக சிவில் ஒத்துழையாமை மற்றும் பணி நிறுத்தம் என நாடளாவிய ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. இதுவே சிலோனில் இடம்பெற்ற முதலாது வெகுமக்கள் அரசியல் செயற்பாடாகும் மற்றும் சுதந்திரத்திற்குப் பின்னரான முதலாவது பாரிய சமூக நெருக்கடியாகும். காந்தியின் ஹர்த்தால்களைப் போலன்றி, இதன் போது உயிரிழப்பும் கணிசமானளவு சொத்துச் சேதமும் ஏற்பட்டன.

அரசாங்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து சிவில் ஒத்துழையாமை மூலமும் பணி நிறுத்தங்களின் மூலமும் அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்துமாறு லங்கா சமசமாஜக் கட்சியும் ஏனைய இடதுசாரிக் கட்சிகளும் மக்களிடம் வேண்டுகோள் விடுத்தன. பிரதானமாக உழைக்கும் வர்க்கத்தினரால் ஆரம்பிக்கப்பட்ட ஹர்த்தால் என்பதால் இதில் சாதி,

இன அல்லது சமயப் பிளவுகளால் எதிர்ப்பாளர்கள் பிரிக்கப்படவில்லை. பொது உட்கட்டமைப்புக்களை நாசமாக்கி அழித்த எதிர்ப்பாளர்களின் குறிக்கோளான அரசாங்கத்தினைப் பயமுறுத்தி அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நிறுத்தவேண்டும் என்பது நன்கு நிறைவேற்றப்பட்டது. ஒரு நாள் மட்டுமே நீடித்த ஆர்ப்பாட்டத்தின் போது குறைந்தது 10 பேர் கொல்லப்பட்டதுடன் வீதிகளுக்கும் பாலங்களுக்கும் புகையிரதப் பாதைகளுக்கும் ஏனைய சொத்துக்களுக்கும் பெரும் சேதமேற்பட்டு இறுதியில் இவற்றின் விளைவாக பிரதமர் டட்லி சேனநாயக்க இராஜினாமாச் செய்ய நேரிட்டது.

இலங்கை (அப்போதைய சிலோன்) பொருளாதார நெருக்கடியின் பிடியில் இருந்தது; நாட்டினை ஆட்கொள்ளவிருந்த பல நெருக்கடிகளுள் முதலாவது நெருக்கடி. கொரிய யுத்தத்தின் முடிவுடன், இறப்பர் மற்றும் தேயிலை எற்றுமதிகள் சடுதியாக வீழ்ச்சியடைந்ததுடன் நலனோம்புகைச் செலவுகளுக்கு ஆதாரவளித்த பண்டங்களின் விலைகளின் திடீர் உயர்வு முடிவடைந்தது.

சௌகரியமான பெரும்பான்மையுடன் ஐக்கிய தேசியக் கட்சி 1952 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்ததால் அது வலுவுணர்வினைப் பெற்று பொருளாதாரத்தினைச் சீர்திருத்தத் தயாரானது. நாட்டின் பிரதான உணவான அரிசிக்கான விலைகள் அதிகரித்து வந்த ஒரு சந்தரப்பத்தில் அரிசி மானியத்தினை அகற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. சீனி போன்ற அத்தியாவசியப் பண்டங்களின் விலையை உயர்த்தி, பாடசாலைப் பிள்ளைகளின் மதிய உணவு விநியோகத்தினை நிறுத்தி, சுகாதாரத் துறை மீதான செலவினத்தினைக் குறைத்து, ஏனைய சமூக உதவி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான செலவினங்களைக் குறைத்து புகையிரதப் போக்குவரத்துக் கட்டணங்களையும் தபால் சேவைகளுக்கான கட்டணங்களையும் தொலைபேசிக் கட்டணங்களையும் தந்திச் சேவைக் கட்டணங்களையும் அரசாங்கம் உயர்த்தியது. நலன்புரி அரசிற்கான அனைத்து அடையாளங்களும் அச்சுறுத்தலுக்கு உள்ளாயின.

“நாட்டின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிதியளிப்பதற்கு அரசாங்கத்தினால் பணத்தினைப் பெற முடியாதுள்ள” காரணத்தினாலேயே உணவு மானியத்தினை அரசாங்கம் அகற்ற வேண்டி நேரிட்டது என்று அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நிதி அமைச்சரான திரு. ஜே.ஆர். ஜயவர்தன நியாயப்படுத்தினார். பிரான்சின் ராணியாக இருந்து பிரபல மேரி அண்டனட்டின் பதிலைப் போன்று மானியங்களைக் கேட்ட வறிய மக்களிடம் அவர்களின் சொந்த உணவினை வளர்க்குமாறு நிதி அமைச்சரான ஜயவர்தன ஆலோசனை கூறினார். நாடு நிலச்சுவாந்தர்களால் ஆக்கப்பட்டுள்ளது என்பதே அவரின் ஊகமாக இருந்தது என்பதில் சந்தேகமில்லை. வரிச் சலுகைகளும் வேறு உதவிகளும் பொருளாதாரத்தினை வளர்க்க உதவும் என்ற அடிப்படையில் அரசாங்கம் அவற்றினைச் சமூகத்தின் செல்வந்த வகுப்பினருக்கு அறிவித்த காரணத்தினால், திரு. ஜே. ஆர். ஜயவர்தனவின் கருத்துக்கள் பொதுமக்கள் மத்தியில் எடுபடவில்லை.

ஆயிரக்கணக்கான இந்திய வம்சாவளிப் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிரஜாவுரிமையினை நீக்கியதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஏற்கனவே பெருந்தோட்டத் தொழிலாளர்களையும் தமிழ் அரசியல் கட்சிகளையும் தூரப்படுத்தியிருந்தது. உயர் வாழ்க்கைச் செலவும் தரத்தில் குன்றிப் போன வாழ்க்கை நிலைமைகளும் தொழிலாளர்களின் மத்தியிலும் கிராமிய வறியவர்களின் மத்தியிலும் கோபத்தினைத் தூண்டின. தொழிலாளர்கள் மீதும் வறியவர்கள் மீதும் அரசாங்கம் பச்சாதாபம் இல்லாதிருக்கின்றது என இம்மக்கள் நம்பினர்.

## ஹர்த்தாலில் தலைமைத்துவமும் அரசியல் அணிதிரட்டலும்

அரசாங்கத்தின் சிக்கன நடவடிக்கைகளுக்கு எதிராக வெகுமக்கள் எதிர்ப்பு உருவாகி வந்த காரணத்தினால் கிராமியப் பிரதேசங்களில் கணிசமான ஆதரவினைக் கொண்டிருந்த லங்கா சமசமாஜக் கட்சி 1953 ஆகஸ்ட் 12 ஆம் திகதி ஒரு நாள் ஹர்த்தாலை அறிவித்தது. கம்யூனிஸ்ட் கட்சியும் லங்கா சமசமாஜக் கட்சியில் இருந்து பிரிந்த வலதுசாரி தேசியவாதக் குழுவான விப்லவகாரி சமசமாஜக் கட்சியும்(VLSSP), பிரச்சாரத்தில் இணைந்துகொண்டன. ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து 1951 இல் உருவாக்கப்பட்ட பிரதான எதிர்க் கட்சியான இலங்கை சுதந்திரக் கட்சிக்கு எஸ். டபிளியு.ஆர்.டி. பண்டாரநாயக்க தலைமை தாங்கினார். எதிர்க்கட்சியான இலங்கை சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் அடக்குமுறையினைக் கண்டித்தாலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவளிக்கவில்லை. இலங்கை தமிழரசுக் கட்சி அல்லது பெடரல் கட்சி ஹர்த்தாலில் நேரடியாகப் பங்கேற்கவில்லை ஆனால் ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தது. அரசாங்கம் தனிமைப்படுத்தப்பட்டது.

ஆகஸ்ட் 12 ஆம் திகதி, குடியான விவசாயிகளும் இளைஞர்களும் கொழும்புக்கான நுழைவாயிலுக்குக் குறுக்கே தடுப்பரண்களை அமைத்து கொழும்பின் நுழைவாயிலை மறித்ததுடன் பொலிஸாருடனும் கூடச் சண்டையில் ஈடுபட்டனர். கொழும்புக்கும் ஏனைய பிராந்தியங்களுக்கும் இடையிலான தொடர்பாடல் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டன. பாலங்கள் அழிக்கப்பட்டன. போக்குவரத்தும் தபால் சேவைகளும் நிறுத்தப்பட்டன. சில புகையிரதப் பாதைகள் தகர்க்கப்பட்டு சில புகையிரதங்கள் நிறுத்தப்பட்டுக் கைப்பற்றப்பட்டன. கொழும்பிலும் தெற்கு மற்றும் மேற்குக் கிராமியப் பிரதேசங்களிலும் பொலிஸார் ஒன்பது தொழிலாளர்களையும் இளைஞர்களையும் சுட்டுக்கொன்றதுடன் 175 ஆர்ப்பாட்டக்காரர்களுக்குப் பாரதூரமான காயங்கள் ஏற்பட்டன. ஒரு நாளைக்கான எதிர்ப்புக்கே அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும், சில பிரதேசங்களில், குறிப்பாக கொழும்பிலும் புறநகர்ப் பிரதேசங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்தன. அவற்றை நிறுத்துமாறு லங்கா சமசமாஜக் கட்சி அழைப்பு விடுத்தமையினையும் தாண்டி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் அதுவாகவே உத்வேகத்தினையும் பலத்தினையும் பெற்றுக்கொண்டது.

## ஹர்த்தாலுக்கு அரசின் பதிற்செயற்பாடு

தான் முற்றுகையிடப்பட்டதாக உணர்ந்து தனது பாதுகாப்புப் பற்றி அச்சம் கொண்ட UNPஅமைச்சரவை, கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த பிரித்தானிய யுத்தக் கப்பலில் அதன் கூட்டத்தினை நடத்தியது. ஆளுனரான சேர் ஒலிவர் குணதிலக பிரதமரின் ஆலோசனையின் பிரகாரம் ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்குவதற்காக அவசரகாலச் சட்டத்தினைப் பிரகடனப்படுத்தினார். இராணுவத்தினை அழைத்த அவர் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கண்ட இடத்தில் சுடுமாறு உத்தரவிட்டார். இடதுசாரிக் கட்சிகளின் அலுவலகங்களும் அச்சகங்களும் மூடப்பட்டதுடன் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு சொத்துக்களுக்குச் சேதமேற்படுத்துபவர்களுக்கு மரண தண்டனை அறிவிக்கப்பட்டது. இவ்வாறான கடுமையான நடவடிக்கைகளைத் தொடர்ந்து வன்முறை அடக்கப்பட்டது.

ஹர்த்தாலுக்கு லங்கா சமசமாஜக் கட்சி வழங்கிய பங்களிப்பு என நோக்குகையில் அது பெருமளவுக்கு உணர்வுகளைக் கிளறிவிடும் உரைகளாக மாத்திரமே காணப்பட்டது. கட்சி எவ்விதமான நடவடிக்கைகளையும் ஏற்பாடு செய்யவில்லை அல்லது பாதுகாப்புக் குழுக்களை அமைப்பதற்கு அழைப்பு விடுக்கவில்லை. சுவாரஷ்யமாக, இந்த ஹர்த்தால் (எழுபது வருடங்களின் பின்னர் ஏற்பட்ட போராட்டத்தினைப் போன்று) தலைவரற்றதாகவே தென்பட்டது. ஏனெனில், ஆர்ப்பரித்த குழப்பங்களைத் தொடர்ந்து எவ்விதமான பின்தொடரல்களும் இருக்கவில்லை. ஹர்த்தாலின் பின்னர் அரசுக்கு எதிராக மிகச் செறிவான தாக்குதலுக்காக அணிதிரள்வதற்கு எல்.எஸ்.எஸ்.பி. தவறியமைக்கான காரணத்தினை அக்கட்சியின் உத்தியோகபூர்வ வரலாற்றாய்வாளரான லெஸ்லி குணவர்தன பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "….மக்களின் மீது அரசாங்கம் சுமைகளைச் சுமத்திய அதன் நடவடிக்கைகளுக்கு எதிரான வெகுமக்கள் இயக்கமானது எதிர்ப்பின் ஒரு கட்டத்தினை மட்டுமே எட்டியது, அரசாங்கத்தினைக் கவிழ்ப்பதை நோக்காகக் கொண்டிருந்த கட்டத்தினை அல்ல". புதிய பொதுத் தேர்தலை நடத்துவதற்காக ஐ.தே.க. அரசாங்கத்தினை நிர்ப்பந்திக்கும் வகையில் போராட்டம் அதன் பின்னர் மாற்றப்பட்டது. ஹர்த்தாலைப் புரட்சிகரமான மாற்றத்திற்கான ஓர் ஊக்கியாகப் பயன்படுத்துவதை விடத் தனது பாராளுமன்றச் சூழ்ச்சித்திறனுக்கான ஓர் ஒத்தாசையாக – ஒரு தந்திரமாகவே எல்.எஸ்.எஸ்.பி. அதனை நோக்கியதாகத் தென்படுகின்றது.

1953 ஆம் ஆண்டின் ஹர்த்தாலைச் சிலர் ஒரு வகுப்புவாதப் போராட்டமாகவே அடையாளப்படுத்தினர். உழைக்கும் வர்க்கத்தினருக்கு நிர்ப்பந்திக்கும் சக்தி உண்டு என இலங்கை அரசியல்வாதிகளை அடையாளம் காணச் செய்ததே ஹர்த்தாலின் நீண்ட கால விளைவாக இருந்தது. இது பதிலாகத் தொழிற் சங்கங்களின் அரசியல் மற்றும் நிர்ப்பந்த சக்திகளை அதிகரித்தது.[2]

இரண்டு எதிர்ப்பியக்கங்களும் தலைவரற்றது போல் தென்பட்டாலும், 1953 ஆம் ஆண்டின் ஹர்த்தாலைப் போலன்றி 2022 ஆம் ஆண்டின் போராட்டம் ஒரு "முறைமை மாற்றத்திற்காகக்" கோரிக்கை விடுத்தது. புதிய முறைமையின் பரிமானங்களைப் போராட்டம் பரிபூரணமாக எடுத்துவிளக்காவிட்டாலும், மாற்றம் என்பதற்கான வலியுறுத்தல் எங்கும் இழையோடியிருந்தது.

# 1956 சத்தியாக்கிரகப் பிரச்சாரம்: சிங்களம் மட்டும் சட்டத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டம்

சிங்களக் கட்சிகளும் தமிழ்க் கட்சிகளும் 1953 ஹர்த்தாலின் போது குறுகிய காலத்திற்கு ஒன்றிணைந்திருந்தன. ஆனால், இந்த ஒற்றுமை "சிங்களம் மட்டும்" கொள்கையின் அறிமுகத்துடன் காணாமற் போனது. மொழிச் சமத்துவத்தினையும் சமஉரிமைக் கோட்பாட்டினையும் முன்பு அங்கீகரித்த இடதுசாரிக் கட்சிகள் அவற்றின் நிலைப்பாட்டினைக் கைவிட்டன. தமிழ்க் கட்சிகளால் முன்னெடுக்கப்பட்ட சத்தியாக்கிரகப் பிரச்சாரங்களுக்குத் தேசிய ஹர்த்தால் வழிவிட்டதுடன் இதுவே தமிழ் அரசியல் கட்சிகள் விரும்பிய அரசியல் எதிர்ப்பின் புது வடிவமாக மாறியது.

அரசாங்கத்தின் சிங்களம் மட்டும் சட்டம் மற்றும் மொழிச் சட்டம் ஆகியவற்றுக்கு எதிரான அஹிம்சை வழியிலான முதலாவது எதிர்ப்புப் போராட்டம் 1956 ஆம் ஆண்டு நிகழ்த்தப்பட்டது. சிங்களம் மட்டும் சட்டத்தினால் தாம் ஏமாற்றப்பட்டதாக உணர்ந்த தமிழ் அரசியல் கட்சிகள் சட்டத்திற்கு எதிராகக் கடுமையான எதிர்ப்பினை வெளிக்காட்டினர். சமத்துவமிக்க பிரஜைகள் என்ற தமது நிலையினைச் சீர்குலைப்பதற்கான ஒரு பொறிமுறையாக அவர்கள் அதனை நோக்கியதுடன் தமது பொருளாதார வாய்ப்புக்களில் தாக்கத்தினை ஏற்படுத்தும் ஒரு நடவடிக்கையாகவும் நோக்கினர்.

பெடரல் கட்சியின் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் தலைமையில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் காலி முகத்திடலில் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டு சத்தியாக்கிரகம் நடத்தி 1956 ஆம் ஆண்டின் மொழிச் சட்டத்திற்கு எதிராக எதிர்ப்புத் தெரிவித்தார்கள். இருந்தபோதிலும், இவர்கள் மீது சிங்களக் காடையர்கள் ஏவிவிடப்பட்டு வன்முறையும் அவமானப்படுத்தலும் இவர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டன.

பிரபல தமிழ்ச் சட்டத்தரணியும் சிலோன் செனட் சபையின் அங்கத்தவருமான சோமசுந்தரம் நடேசன் இவ்வாறு அதனைக் குறிப்பிட்டிருந்தார்: "குண்டர்கள்", பாராளுமன்ற வளாகத்தினுள்ளேயே, இந்த நாட்டின் பிரதமரின் கண் முன்னாலேயே, இங்கே அமர்ந்திருக்கும் அப்பாவி மனிதர்கள் மீது ஏவிவிடப்பட்டனர், அக்குண்டர்கள் இவர்களின் காதுகளைக் கடித்து ஈவிரக்கமின்றித் தாக்கியுள்ளனர். இவ்வளவு அராஜகமும் நடந்தேறுகையில் கட்டவிழ்த்து விடப்பட்டவர்கள் மீது ஒரு துப்பாக்கிச் சூடு கூட நடத்தப்படவில்லை.... ஏன்? கட்டளைகள் வழங்கப்பட்டன: "சுட வேண்டாம், வெறுமனே பார்த்துக்கொண்டிருங்கள்."[3]

"சிங்களம் மட்டும்" கொள்கையினை ஏற்றுக்கொள்வதற்காகத் தமிழர்களைப் பயமுறுத்துவதற்காகக் கலகமும் வன்முறையும் அரசாங்கத்தினால் தூண்டப்பட்டதுடன் அதற்கு அதிதீவிரத் தேசியவாத சிங்கள அமைப்புக்களும் பிக்குகளும் முனைப்புடன் ஆதரவு வழங்கினார்கள் என அவர் குறிப்பிட்டார்.[4]

வன்முறை நன்கு ஆவணப்படுத்தப்பட்டது. சத்தியாக்கிரகமிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு அவர்கள் மீது கல்லெறி நடத்தப்பட்டது. ஒரு தமிழர் அருகிலுள்ள பேரை வாயினுள் எறியப்பட்டார். மற்றொருவரின் காது கடிக்கப்பட்டு பிய்த்தெடுக்கப்பட்டது (DeVotta 2004). காயமடைந்த தமிழர்களுள் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தனர். பிரதான வீதியில் இருந்த பொலிஸார் எதிர்வினையற்ற பார்வையாளர்களாக நின்றுகொண்டிருந்தனர். தெளிவாக, அவர்கள் மீது தாமே தாக்குதல் நடத்தப்படாவிட்டால் தலையிட வேண்டாம் எனத் தெளிவான கட்டளைகள் வழங்கப்பட்டிருந்தன (Ibid).

காலி முகத்திடலில் தமிழர்கள் மீதான தாக்குதலும் அதனைத் தொடர்ந்து கொழும்பில் நடத்தப்பட்ட தாக்குதல்களும் நகரம் முழுவதும் தமிழர்கள் மீது மேலும் தாக்குதல்கள் நடத்தப்படுவதற்கும் கொள்ளை நிகழ்த்தப்படுவதற்கும் தூண்டுதலாக அமைந்ததுடன் இது நாடு முழுவதும் அரசின் ஆதரவுடன் சிங்களக் காடையர்களின் தாக்குதல்கள் அலையாகப் பரவுவதற்குப் பொறிவைத்தது. சிங்களம் மட்டும் சட்டம் விவாதிக்கப்படுகையில் கூட, நாடெங்கிலும் வன்முறை பரவிக்கொண்டிருந்ததுடன் தமிழர்கள் தாக்கப்பட்டுக்கொண்டிருந்தனர்.

10,000 இற்கும் மேற்பட்டவர்களின் பங்கேற்புடன் மட்டக்களப்பில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் இலங்கைப் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். துப்பாக்கிச் சூட்டில் குறைந்தது இரண்டு தமிழர்கள் கொல்லப்பட்டனர். இதனைத் தொடர்ந்து நகரத்தில் திட்டமிடப்பட்டிருந்த மற்றொரு பாரிய பெடரல்

கட்சி ஊர்வலத்தினைப் பிரதமர் எஸ்.டபிளியு.ஆர்.டி. பண்டாரநாயக்க தடை செய்தார்.

மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் வன்முறைகள் தலைதூக்கின. ஆனால் மிக மோசமான வன்முறை சிங்களக் குடியேறிகள் வாழ்வதற்காக உருவாக்கப்பட்ட கல்லோயாவில் வெடித்தது. இப்பிரதேசத்தில் வாழ்ந்த தமிழர்கள் சிங்களக் காடையர்களால் 1956 ஜுன் 11 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டனர். அற்புதமான வதந்திகளால் அகத்தூண்டுதல் பெற்ற சிங்களக் காடையர்கள் அரசாங்கத்தின் வாகனங்களையும் புல்டோசர்களையும் தம் வசப்படுத்தி அத்துடன் சக்திவாய்ந்த வெடிபொருட்களையும் தம் வசம் எடுத்து காலனியில் வாழ்ந்த தமிழ்ச் சிறுபான்மையினரைச் சில நாட்களாகக் கிலிகொள்ள வைத்தனர். பெருவாரியான தமிழர்கள், நிச்சயமாக நூற்றுக்கும் மேற்பட்டவர்கள், படுகொலை செய்யப்பட்டனர். இன்னும் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் ஓடி ஒளியும் நிலையேற்பட்டது" (Manor 2009).

இறப்புக்களின் எண்ணிக்கையும் திகிலைப் பரப்பியமையின் அளவும் குறைத்தே அறிக்கையிடப்பட்டன. "மட்டக்களப்பிலும் கல்லோயாப் பள்ளத்தாக்கிலும் 20 முதல் 200 பேர் வரை கொல்லப்படுமளவுக்கு வன்முறை கோலோச்சியது. இந்த எண்ணிக்கை எந்தத் தரப்பு கணக்கெடுப்பினை மேற்கொண்டது என்பதில் தங்கியுள்ளது. (Wriggins 2016)

இதன் பின்னர் வன்முறை நாடெங்கும் பரவியது. கொழும்பில் ஓர் இந்து ஐயர் உயிருடன் எரிக்கப்பட்டார். கொழும்பின் வீதிகளில் சுற்றியலைந்த குண்டர்கள் பாதையால் சென்றவர்களால் சிங்களப் பத்திரிகைகளை வாசிக்க முடியுமா என்று பரிசீலித்தனர். வாசிக்க முடியாதவர்கள் தாக்கப்பட்டனர் அல்லது கொல்லப்பட்டனர். அவசரகாலச் சட்டத்தினைப் பிறப்பிக்கும் வரை அரசாங்கம் ஐந்து நாட்கள் காத்திருந்தது.[5] இது 1953 ஆம் ஆண்டின் ஹர்த்தாலைக் கட்டுப்படுத்தியதை விட முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது.

கல்லோயா வன்முறை முன்னெப்பொழுதும் கண்டிராத அளவுக்கு வெடித்ததுடன் இரண்டு வருடங்களின் பின்னரான அழிவுமிக்க வன்முறைக்கான முன்மாதிரியினையும் அது நிலைநாட்டியது (Tambiah 1992).

## 1958 சத்தியாக்கிரகப் பிரச்சாரம்: பண்டா – செல்வா ஒப்பந்தத்தினைப் பிரதமர் இரத்துச்செய்தமைக்கான எதிர்ப்பு

1957 ஜுலை 26 ஆம் திகதி, பிரதமர் பண்டாரநாயக்காவும் தமிழ்க் கட்சித் தலைவரான திரு. செல்வநாயகமும் ஓர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். தமிழர்கள் செறிந்து வாழும் பிராந்தியங்களுக்கு குறிப்பிட்ட அளவு சுயாதீனத்தினை நிலைநாட்டும் ஏற்பாடுகளை உருவாக்கவே இந்த ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டது. மொழி அடிப்படையில் பிராந்தியங்கள் பிரிக்கப்படவிருந்தன. தமிழ் மொழிக்கான சமமான அந்தஸ்து, பெருந்தோட்டங்களில் தொழில்புரியும் தமிழர்களின் பிரஜாவுரிமையினை மீள வழங்கல், பாரம்பரியமாகத் தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் குடியேற்றங்களை மேற்கொள்வதை உடனடியாக நிறுத்தல் ஆகியவையும் ஒப்பந்தத்தின் அம்சங்களாகும். எவ்வாறாயினும், இந்த அரசியல் இணக்கத்தினை எதிர்த்த சங்கத்தின் (சிங்கள உயர் மத பீடம்) உறுப்பினர்களும் சிங்களச் சமுதாய உறுப்பினர்களும் ஒப்பந்தத்திற்கு எதிராக அரசியல் சமூகத்தினை அணிதிரட்டினர்.

1958 ஆம் ஆண்டு பண்டா - செல்வா ஒப்பந்தம் பிரதமரினால் ஒருதலைப்பட்சமாக இரத்துச்செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து தமிழ்க் கட்சிகள் சத்தியாக்கிரகப் பிரச்சாரத்தினை ஆரம்பித்தனர். இது செயலூக்கம் பெறத் தொடங்கியதும் வவுனியாவில் நடைபெறவிருந்த பெடரல் கட்சியின் பேராளர் மகாநாட்டுக்குச் சென்றுகொண்டிருந்த தமிழர்களைச் சிங்களக் காடையர்கள் தாக்கத் தொடங்கினர். கலவரத்தால் நாடே தீப்பிழம்பானது. அவசரகாலச் சட்டத்தினைப் பிரகடனப்படுத்த அரசாங்கத்திற்கு நான்கு நாட்கள் எடுத்தன. இதேவேளை, நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். மொழிக் கொள்கையினால் உருவான பதற்றம் தீர்க்கப்படாத அரசியல் சமூகம் ஒன்றினை உருவாக்கக் காரணமாகியது. தான் கட்டவிழ்த்துவிட்ட அதே தேசியவாத சக்திகளுக்கு இரையான பிரதமர், சோமராம தேரரால் 1959 செப்டெம்பர் 26 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார். பௌத்த துறவியாகவும் ஆசிரியராகவும் ஆயுர்வேத மருத்துவச் சிகிச்சையாளராகவும் சோமராம தேரர் இருந்தமையால் பண்டாரநாயக்கவின் வாக்கு வங்கியினை உள்ளடக்கிய ஐந்து தூண்களில் மூன்றின் வடிவமாக அவர் இருந்தார்.[6]

சுதந்திரத்தின் முதலாவது தசாப்தத்தினைப் பின்னோக்கிப் பார்க்கையில், அது ஒரு கொந்தளிப்பு நிறைந்த காலப்பகுதியாகவே காணப்படுகின்றது. வன்முறை மிக்க எதிர்ப்புக்களாலும் பொருளாதார இழப்புக்களால் உருவான வன்முறைகளாலும் தேசத்தினைக் கட்டியெழுப்பும் தேசிய அடையாளத்தினைச் சுற்றிய மற்றும் சிறுபான்மையினரின் நிலையைப் பற்றிய தீர்க்கப்படாத பதற்றங்களாலும் இந்தக் காலப்பகுதி அமைதி கெட்டிருந்தது. இந்தப் பிரச்சினைகள் பல வருடங்களாக அரசியல் சமூகத்தில் தொடர்ந்தும் செல்வாக்குச் செலுத்திவருகின்றன.

ஆளுகை நிறுவனங்களில் இருந்தும் அரச கட்டமைப்புக்களில் இருந்தும் பிரஜைகள் தூரமாக்கப்பட்டமையும் அவர்களின் அதிகரித்துவந்த அவநம்பிக்கையும் தொடர்ந்தும் அதிகரித்து எழுபத்தைந்து வருடங்களின் பின்னர் போராட்டமாக (அரகலய) உச்சம் பெற்றது.

## பெடரல் கட்சியின் 1961 சத்தியாக்கிரகம்: தமிழ் சமுதாயத்தை ஓரங்கட்டுவதற்கு எதிராகத் தொடரும் எதிர்ப்பு

1960 இல் உருவாக்கப்பட்ட பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் தலைமையிலான அரசாங்கம் நிர்வாகப் பரப்புக்களையும் நீதித்துறைப் பரப்புக்களையும் "முழுவதும் சிங்களமயமாக்கும்" அதன் கடப்பாட்டினை துரிதப்படுத்தியது. இதற்கமைய, நிர்வாகத்தின் சகல பரப்புக்களிலும் சிங்களமே தனியான அரசகரும மொழியாக அமுல்படுத்தப்படும். நாட்டின் சகல பகுதிகளிலும் நீதிமன்றங்களின் மொழியாகச் சிங்களத்தினை ஆக்கும் சட்டவாக்கத்தினை நிறைவேற்றுவதற்கும் அரசாங்கம் எண்ணியது. இது தமிழ் மக்கள் மத்தியில் அவர்களின் அரசியல் எதிர்காலம் பற்றிய பாதுகாப்பற்ற உணர்வினை அதிகரித்ததுடன் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என பெடரல் கட்சியின் வாக்காளர்களின் மத்தியில் இருந்து எழுந்த பாரிய அழுத்தத்திற்கு அக்கட்சியின் தலைமைத்துவம் ஆளானது. பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினையினைத் தீர்ப்பதற்குத் தமிழ்த் தலைவர்கள் முயற்சித்த போதிலும் இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் முறிவடைந்ததைத் தொடர்ந்து, வடக்கிலும் கிழக்கிலும் பரந்த அளவிலான சத்தியாக்கிரகப் போராட்டத்தினை 1961 பெப்ரவரி 20 ஆம் திகதிக்கு முன்னர் நடத்துவதற்குக் கட்சி தீர்மானித்தது.

சத்தியாக்கிரகப் போராட்டத்தின் பரிமானங்களை கட்சியின் தலைவரான எஸ்.ஜே.வி. செல்வநாயகம் ஒரு நீண்ட அறிக்கையில் பெப்ரவரி 19 அன்று குறிப்பிட்டிருந்தார். அர்ப்பணிப்புக் கொண்ட தொண்டர்கள் குழுவினர்கள் கச்சேரிகளின் நுழைவாயில்களில் அல்லது நிர்வாகச் செயலகங்களின் நுழைவாயில்களில் அமர்ந்து அரசாங்க ஊழியர்களை பணிக்குச் செல்லாமல் தடுப்பதன் மூலம் அவர்கள் வேலை செய்வதைத் தடுக்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள பிரச்சாரம் பின்னர் மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் நடத்தப்படும். அஹிம்சை நடவடிக்கைகள் மூலம் வடக்கிலும் கிழக்கிலும் சிவில் நிர்வாகத்தினை ஸ்தம்பிக்கச் செய்வதே இதன் நோக்கமாகும்.

1961 பெப்ரவரி 20 ஆம் திகதி, சத்தியாக்கிரகத் தொண்டர்களின் முதலாவது தொகுதியினர் கட்சி அலுவலகத்தில் குழுமிய பின்னர் யாழ்ப்பாண கச்சேரியினை நோக்கி ஊர்வலமாகச் செல்லத் தொடங்கினர். அக்குழுவிற்கு செல்வநாயகம் தலைமை தாங்கியதுடன் சத்தியாக்கிரகத் தொண்டர்கள் கச்சேரியின் நுழைவாயிலின் முன்பாக அமர ஆரம்பித்தனர். கச்சேரியின் பிரதான நுழைவாயிலின் முன்பாகவும் உத்தியோகபூர்வ வதிவிட நுழைவாயிலின் முன்பாகவும் தரையில் அமர்ந்து, அரசாங்க ஊழியர்கள் அவர்களது அலுவலகத்தினுள் சென்று வேலைசெய்வதைத் தடுத்தனர்.

சில பெண் தொண்டர்கள் முன்னரங்கத் தலைவர்களின் பின்னால் அமர, ஒரு பிரபலமான பாடகர் பஜனைகளைப் (bhajans) பாடி அக்காலத்தில் நிலவிய காந்திய உணர்வுடன் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தினை ஒழுங்குபடுத்தினார். மஹாத்மாவுக்கு விருப்பமான பக்திப் பாடல்களை அவர் பாட ஆரம்பித்தார். தலைமைப் பாடகர் பாடல் வரிகளைப் பாட ஏனையோர் அந்த வரிகளையே மீட்டிப் பாடத் தொடங்கினர். சுவாரஷ்யமான விடயம் யாதெனில், அரகலயவில் பங்குபற்றிய ஆர்ப்பாட்டக்காரர்களும் இதே அணுகுமுறையினையே பின்பற்றினர். தலைமைப் பாடகர் எதிர்ப்பின் வரிகள் ஒன்றிரண்டைப் பாட ஏனையோர் அவர்களின் எழுதப்பட்ட பாடல் வரிகளை பதிலாகப் பாடினர்.

சத்தியாக்கிரகம் செய்தவர்களின் முயற்சிகளைத் தாண்டி, பொலிஸார் ஒரு வழியை உருவாக்கி அடைப்பினை உடைத்து அரசாங்க அதிபர் அவரின் வேலைத்தளத்திற்குச் செல்வதை உறுதிப்படுத்தினர். அரசாங்க அதிபர் தப்பிச் சென்றதால் ஆத்திரமுற்ற பொதுமக்கள் வாகனத்திற்குக் கல்லெறிய ஆரம்பித்தனர். வளித்திரைக் கண்ணாடி வெடித்தது. மக்கள் மீது பாய்ந்த பொலிஸார் மிதமிஞ்சிய பலத்துடன் பதிலடி கொடுத்தனர். அவர்கள் மக்களுக்கு லத்திகளால் அடித்தும் வானை நோக்கிச் சுட்டும் கண்ணீர்ப்புகை அடித்தும் எதிர்வினையாற்றினர். அஹிம்சையான சத்தியாக்கிரகம் வன்முறைமிக்க சண்டையாக மாறிக்கொண்டிருக்கும் ஒரு தெளிவான ஆபத்துக் காணப்பட்டது. பெடரல் கட்சித் தலைவர்கள் மக்களிடம் அமைதியாகக் கலைந்து போகுமாறு வேண்டினர். கூட்டம் குறைவடைந்தது. பதற்றம் தணிந்தது. சத்தியாக்கிரகம் கைவிடப்பட்டது. இலங்கைத் தமிழ் பேசும் மக்களுக்கு மகத்தான நாள் எனவும் எமது உரிமைகளை வென்றெடுக்கத் தமிழர்கள் நேரில் களத்தில் குதித்த நாள் எனவும் தமிழ்த் தலைமைகள் அந்த நாளை நினைவுகூர்ந்தாலும், அது “தீயின் ஞானஸ்நானம்” எனவும் விபரிக்கப்படுகின்றது.

சத்தியாக்கிரகம் செய்தவர்கள் மற்றும் பொதுமக்கள் என 53 பேர் காயங்களுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். மேலும் 300 இற்கும் மேற்பட்ட பொதுமக்களும் சத்தியாக்கிரகம் செய்தவர்களும் சிறு காயங்களுக்காகச் சிகிச்சை பெற்றனர். பொலிஸாரின் நடவடிக்கைகள் தமிழ் மக்களைக் கோபமடையச் செய்ததுடன் இது சத்தியாக்கிரகத்தினைத் தமிழ் மக்கள் மத்தியில் பிரபலமாக்கியது. அடுத்து வந்த ஒரு தசாப்தத்தில் இவ்வடிவிலான எதிர்ப்பே உசாவல் புள்ளியாகக் காணப்பட்டது.

தொடர்ந்து வந்த வருடங்களில் சிறுபான்மையினரின் மனதைப் புண்படுத்தி அவர்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்திய பல கொள்கைகள் காணப்பட்டன. இவற்றுள் பல்கலைக்கழக நுழைவுப் பரீட்சை தொடர்பான கொள்கைகள் மற்றும் அரசாங்கத் துறைத் தொழில்வாய்ப்புத் தொடர்பான கொள்கை மற்றும் தனிப்பட்ட பாதுகாப்புத் தொடர்பான கொள்கை ஆகியன காணப்பட்டன. சத்தியாக்கிரகமும் அமைதியான ஆர்ப்பாட்டங்களும் மரியாதையினையும் பெறுபேறுகளையும் பெறத் தவறிய காரணத்தினால் அதன் பெறுமதி தமிழ் சமுதாயத்தின் மத்தியில் குறைவடையத் தொடங்கியது. குறிப்பாக, ஆயுதப் போராட்டமே பெறுபேறுகளை ஈட்டித் தரும் எனும் நிலைப்பாட்டினை எடுத்த தமிழ் இளைஞர்களின் மத்தியில் சத்தியாக்கிரகம் அதன் மவுசினை இழந்தது.

## புதுப்பிக்கப்பட்ட எதிர்ப்பு அரசியல்: சத்தியாக்கிரகம் முதல் பிரிவினை வரையும் அதற்கு அப்பாலும்

தமிழீழ விடுதலைப் புலிகளின் எழுச்சியுடன் மொழி, சமவுரிமைகள், சமஷ்டிவாதம், மற்றும் மாகாண சபைகள் மூலமான பிராந்திய சுயாட்சி ஆகியவை பற்றிய சொல்லாடல்களை ஆயுதப் போராட்டம் மீதான ஈர்ப்பும் தனிநாட்டுக்கான கோரிக்கையும் பதிலீடு செய்தன. பாராளுமன்ற விவாதங்கள் மூலமும் ஹர்த்தால்கள் மூலமும் சத்தியாக்கிரகங்கள் மூலமும் உரிமைகளைக் கோரி நின்ற முறை ஆயுதப் போராட்டத்திற்காக பதிலீடு செய்யப்பட்டதுடன் இது முழு அளவில் பரிணமித்த பிரிவினைவாத யுத்தத்தில் உச்சம் பெற்றது. இந்த ஆயுதப் போராட்டத்தின் போது, எண்ணற்ற அரசியல் படுகொலைகளும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களும் கொரில்லா தாக்குதல்களும் நடந்தேறி வடக்கும் கிழக்கும் ஆளப்பட முடியாத பிரதேசங்களாக ஆக்கப்பட்டு முழு நாடுமே இதனால் பாதிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் 2009 ஆம் ஆண்டு இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டதுடன் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டாலும் தொடர்ந்து வந்த வருடங்களில் முரண்பாட்டிற்கான காரணங்கள் தொடர்ந்தும் தீர்க்கப்படாததாகவே காணப்பட்டன. “நீதியற்ற சமாதானத்தின்” நெருடல் மிக்க யுகம் என இது விபரிக்கப்பட்டது. இருந்தபோதிலும், மோதலினால் உருவாக்கப்பட்ட அழிவினதும் இராணுவக் கண்காணிப்பினதும் அடிக்கடி பயன்படுத்தப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தினதும் நிழலில் தமிழர்களின் எதிர்ப்புக்கள் திசை மாற்றப்பட்டன.

வீதியில் அணிவகுத்து கட்டிடங்களின் நுழைவாயில்களை மறித்து எதிர்ப்பில் ஈடுபட்ட தமிழ் எதிர்ப்பாளர்களுக்கு பதிலடி கொடுப்பதில் அரசு கெட்டித்தனம் மிக்கதாக இருந்த அதேவேளை, தமிழ் அரசியல்வாதிகளும் செயற்பாட்டாளர்களும் எதிர்ப்பினை ஒலிக்கச் செய்வதற்கு மாற்று வழிகளைத் தேட ஆரம்பித்தனர். 2021 ஆம் ஆண்டு பெப்ரவரியில் முடிவடைந்த “பொத்துவில்

முதல் பொலிகண்டி வரை" (P2P) எதிர்ப்பியக்கம் இலங்கைத் தமிழர்களின் அரசியல் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகக் கருதப்படுகின்றது. ஐந்து நாட்கள் நடைபெற்ற "P2P" எதிர்ப்புப் பேரணி 2021 பெப்ரவரி 3 ஆம் திகதி கிழக்கில் ஆரம்பித்து 2021 பெப்ரவரி 7 ஆம் திகதி வடக்கில் பூர்த்திசெய்யப்பட்டது. ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் நடைபவணியாகவும் வாகனங்களிலும் அம்பாறை மாவட்டத்தின் பொத்துவிலிலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்தின் பொலிகண்டி வரை சென்றனர். அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களை ஊடறுத்து 700 கிலோ மீற்றர் நெடுந் தூரத்தினைக் கடந்து பவனித்த P2P எதிர்ப்புப் பவனியில் இலட்சக்கணக்கில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் கலந்துகொண்டு வழிநெடுகிலும் எதிர்ப்புப் பவனிக்கான அவர்களின் ஆதரவினையும் ஒற்றுமையினையும் காட்டியமை கூட்டொருமையினதும் ஐக்கியத்தினதும் குறிப்பிடத்தக்க அம்சங்களாக மிளிர்ந்தன.[7] நீண்ட காலம் அடக்கிவைக்கப்பட்டிருந்த இலங்கைத் தமிழ்ச் சமுதாயம் பிரம்மாண்டத்திலும் நோக்கெல்லையிலும் பரந்ததான புத்தாக்கமிக்க அரசியல் பிரச்சாரத்தில் ஈடுபடுவதற்கான வாய்ப்பினை P2P எதிர்ப்பு வழங்கியது. சிவில் அணிதிரட்டலைத் தடுத்துவைப்பதற்குக் காரணமாக இருக்கும் அடக்குமுறை மிக்க சட்டச் சூழமைவினையும் அரசியல் சூழமைவினையும் தாண்டி இவ்வாறான ஒரு பிரம்மாண்டமான அரசியல் எதிர்ப்புப் பேரணியை ஒழுங்கமைத்து நிறைவேற்றுவதற்கான ஆக்கத்திறன் மிக்க ஆற்றல் சமுதாயத்தினுள் காணப்படுகின்றது என்பதைப் பொதுவாக முழு உலகிற்கும் நிரூபித்த ஒரு நிகழ்வாகவே P2P விபரிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் தமிழர்களால் மேற்கொள்ளப்பட்ட அஹிம்சை வழிப் போராட்டங்களின் நினைவலைகளை P2P எதிர்ப்புப் போராட்டம் மீட்டிக்கொடுத்த அதேவேளை, இந்த நாட்டில் தமிழ் அரசியலின் எதிர்காலப் பயணப் பாதை ஜனநாயக வழியிலும் அஹிம்சை வழியிலும் தன்முனைப்புடன் இயங்குதிறன் மிக்கதாக இருக்கலாம், கட்டாயம் இருக்க வேண்டும் மற்றும் இருக்கும் என்பதையே இது சுட்டிக்காட்டியது.[8]

## சத்தியாக்கிரகப் பிரச்சாரங்கள் - பொருளாதார நீதியைப் பெறுவதற்கான சிவில் ஒத்துழையாமை, அஹிம்சை வழி நடவடிக்கைகள் மற்றும் உண்ணாவிரதங்கள்

பணி நிறுத்தங்கள் மற்றும் சத்தியாக்கிரகங்கள் என்பவை தமது துயரங்களும் குறைகளும் செவிமடுக்கப்படவில்லை என நினைப்பவர்களால் ஆட்சிக் கட்டிலில் வீற்றிருக்கும் அரசாங்கத்திற்கு எதிராகப் பாரம்பரியமாக மேற்கொள்ளப்படுபவையாக இருக்கும் அதேவேளை, திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களே ஓர் அமைச்சராக இருந்துகொண்டே தொழிற்சங்கத் தலைவர் என்ற ரீதியில் ஒரு வெற்றிகரமான பணி நிறுத்தத்தினை நடத்திய ஒரே அமைச்சராக இருக்கக்கூடும். இடதுசாரித் தொழிற்சங்கவாதிகளில் பலர் தாம் அமைச்சர்களாக மாறியதும் உழைக்கும் வர்க்கத்தினருக்கு எதிராகத் திரும்புகின்ற போது, திரு.சௌமியமூர்த்தி அவ்வாறு செய்யவில்லை. ஜயவர்தனவின் அரசாங்கத்தில் ஓர் அமைச்சராக இருந்துகொண்டு பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பணி நிறுத்தத்தின் மூலம் பொருளாதாரத்தினையே தொண்டமான் தள்ளாட வைத்தார். ஆனால், தொண்டமான் அவரின் நேரடி நடவடிக்கைகளை "பிரார்த்தனைப் பிரச்சாரம் என்றும் இதன்படி ஒவ்வொரு தொழிலாளரும் வேலை செய்வதற்கு பதிலாக ஒரு வணக்கத்தலத்திற்குச் சென்று அங்கே ஊதிய அதிகரிப்புக்காக முழு நாளும் பிரார்த்தனையில் ஈடுபடுவர்" என்றும் நாசூக்கான உட்பொருள் பொதித்து நடத்திவைத்தார்.

அரசாங்கம் தொண்டமானின் கோரிக்கைக்கு அசைந்து கொடுத்தது. இதனைத் தொழிற்சங்க நடவடிக்கைக்குக் கிடைத்த வெற்றி எனக் களிபேருவகை கொள்வதைத் தொண்டமான் தனது கூர்மதியினால் தவிர்த்து, "பிரார்த்தனைகளால் மலைகளையும் நகர்த்த முடியும்" என்பதற்கு இது ஒரு சான்று என்றும் "எமது பிரார்த்தனைகளுக்கு பதில் கிடைத்துவிட்டது" என்றும் குறிப்பிட்டார்.[9]

தொழில்வழங்குநர்களின் விட்டுக்கொடாமையும் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவினம் காரணமாகப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் விடுக்கும் ஊதியக் கோரிக்கைகளைத் தீர்ப்பதற்கு அவர்கள் மறுக்கின்றமையும் தொழிலாளர்களுக்கும் அரசாங்கத்திற்கும்

தொழில்வழங்குனர்களுக்கும் இடையிலான உறவினைத் தொடர்ச்சியாக அலைக்கழித்து வருகின்றது.[10] பெருந்தோட்டத் தொழிலாளர்களின் மத்தியிலான ஆர்ப்பாட்டங்களுக்கான ஆதரவு அதிகரித்து வருவதுடன் தேர்தல்களுக்கு முன்னர் தொழிலாளர்களின் வாக்குகளைப் பெறுவதற்காக வழங்கப்பட்ட வாக்குறுதிகளின் காரணமாகவும் தேர்தல்களின் பின்னர் ஊதியங்களை மீளாய்வு செய்வதற்குத் தவறுகின்றமையினாலும் தொழிலாளர்கள் அதிகரித்த அளவில் விரக்தியுற்று வருகின்றனர். "அவர்கள் (பெருந்தோட்டத் தொழிலாளர்கள்) நியாயமாக நடத்தப்படாவிட்டால், தாம் தீவிரவாதத்தின் கைகளில் விழுவதற்குக் காலம் எடுக்காது" எனத் தொழிற்சங்கத் தலைமைகள் எச்சரித்துள்ளன.

இன்றைய சூழமைவில் (2023) 1000 ரூபா நாளாந்த வேதனத்திற்காகப் போராடுவது அர்த்தமற்றதாகும். ஏனெனில், ரூபாவின் பெறுமதி குறைக்கப்பட்டுள்ளதுடன் இறக்குமதிச் செலவுகள் பணவீக்கத்தினை வானளாவ உயரச் செய்துள்ளன. முன்னெப்பொழுதும் முகங்கொடுத்திராத பொருளாதார நெருக்கடிக்கு அரசாங்கம் முகங்கொடுத்து வருகின்றது. பெருந்தோட்டத் துறை அதற்கேயுரித்தான நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்றது. தொழிலாளர்களோ இந்த இரண்டு நெருக்கடிகளுக்குள்ளும் சிக்கியுள்ளனர்.

கேப்பாப்பிலவில் எடுக்கப்பட்ட 133 ஏக்கர்கள் காணிகளை அவற்றின் உண்மையான உரிமையாளர்களிடமே விடுவிக்குமாறு கோரி முல்லைத்தீவினைச் சேர்ந்த மக்கள் குழுவினர் 300 நாட்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தினை 2017 டிசம்பரில் ஆரம்பித்த போது நல்லாட்சி அரசாங்கமும் எதிர்ப்புக்கு முகங்கொடுத்தது. இராணுவத்தின் வசமிருக்கும் காணிகளின் விடுவிப்பினை உறுதிப்படுத்துவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இடையீட்டினை எதிர்க்கட்சித் தலைவரும் பிரதான தமிழ்க் கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான ஆர். சம்பந்தன் பல தடவைகள் கோரியிருந்தார். கேப்பாப்பிலவில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை முல்லைத்தீவு மக்களிடம் கையளிப்பதற்கு இலங்கை இராணுவம் இறுதியில் இணங்கியது. சர்ச்சைக்குரிய காணிகளில் இருந்து வெளியேறிய இராணுவம் பொதுமக்களிடம் காணிகளை மீள வழங்குவதற்காகத் துருப்புக்களை வேறு இடங்களில் நிலைகொள்ளச் செய்தது. பிரதேசத்தில் அமைந்திருந்த இராணுவத்தினால் பயன்படுத்தப்பட்ட கட்டிடங்கள் தகர்க்கப்பட மாட்டாது என்றும் அவற்றை மக்கள் பயன்படுத்தலாம் என்றும் இராணுவம் உறுதிப்படுத்தியது. காணிகள் மீள வழங்கப்பட்டதுடன் கேப்பாப்பிலவில் இடம்பெயர்ந்தவர்களைப் புது வருடத்தில் மீளக் குடியேற்றுவதற்கும் அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது.

உத்தேச ஹம்பாந்தோட்டை காட்டு யானை முகாமைத்துவ ஒதுக்கம் அரசாங்க வர்த்தமானியில் உள்ளடக்கப்பட வேண்டும் எனக் கோரி வல்சபுகல விவசாயிகளால் 2021 ஜனவரி 18 ஆம் திகதி சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. எண்பத்தெட்டு கமநல அமைப்புக்களால் ஆதரவளிக்கப்பட்ட சத்தியாக்கிரகம் 68 நாட்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றது.

மனித யானை மோதலுக்கான தீர்வினைத் தேடல் (Human Elephant Conflict - HEC) வட மத்திய மாகாணத்தில் அநுராதபுர மாவட்டத்தில் மதவாச்சியில் அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் 15 நாட்கள் தொடர்ச்சியாக ஒரு சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுவருகின்றது. மனித யானை மோதல் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்த நாடும் இவர்கள் அதற்கான ஒரு புதிய தீர்வினை முன்மொழிகின்றனர். The Morning பத்திரிகையாளர்களிடம் பேசிய அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவரான சுசந்த குமார, மனித யானை மோதலால் தம் வாழ்வில் அதிகரித்த அளவில் ஏற்பட்டுவரும் பாதகமான தாக்கங்களின் காரணமாகவும் இப்பிரச்சினைக்கான ஒரு புதிய தீர்வுக்கான தேவையினைக் கோடிட்டுக்காட்டவுமே தாங்கள் மார்ச் 19 ஆம் திகதி இச்சத்தியாக்கிரகத்தினை ஆரம்பித்ததாகக் குறிப்பிட்டார். "இலங்கையின் பிரதான காட்டுயிர் வலயங்கள் உரிய முறையில் அடையாளம் காணப்பட்டு அவ்வலயங்களைச் சுற்றி வேலியிடப்பட வேண்டும் என நாம் முன்மொழிகின்றோம். வேலிகள் மின்சார வேலிகளாகத்தான் இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. பனை மரங்களாலான 20 மீற்றர் அகலமான வேலிகளாகக் கூட இருக்க முடியும். இந்த வேலிகளில் தேன்கூடுகளை வளர்க்க முடியும்."

நீண்ட காலத் தேசியக் கொள்கையினை உருவாக்குவதற்காக அரசாங்கத்துடன் ஒரு பொதுவான உடன்படிக்கையினை எட்டுவதற்காக 2022 மார்ச் மாதம் ஐக்கிய தேசியக் கட்சி ஒரு சத்தியாக்கிரகத்தினை நடத்தியது. ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரான பாலித ரங்கே பண்டார, மாறாக் கொள்கைகள் அடங்கிய உறுதியான

சட்டகத்துடன் நாடு முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும் என்றும் சத்தியாக்கிரகத்தின் குறிக்கோள் அடுத்து வரும் 15 முதல் 20 வருடங்களுக்காக ஒரு தேசியக் கொள்கையினை உருவாக்குவதற்காக அரசாங்கத்தினை ஊக்குவிப்பதாகும் எனக் குறிப்பிட்டார்.

அரகலய உச்சம் பெற்றிருந்த 2022 நவம்பரில், இரண்டு அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் சம்மேளனத்தின் (IUSF) தலைவர்களை விடுவிக்குமாறு கோரி கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் முன்பாகச் சத்தியாக்கிரகம் நடத்தப்பட்டது. அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் சம்மேளனத்தின் தலைவரான வசந்த முதலிகேயினையும் அனைத்துப் பல்கலைக்கழக பிக்குகள் சம்மேளனத்தின் (IUBF) சங்கைக்குரிய கல்வேவ சிறிதம்ம தேரரையும் உடனடியாக விடுவிக்குமாறு கோரியே பிரச்சாரம் நடத்தப்பட்டது. கொழும்பில் நடந்த ஆர்ப்பாட்டமொன்றில் பங்குபற்றியமைக்காக இரண்டு மாணவர் தலைவர்களும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டனர். சத்தியாக்கிரகத்தில் பங்குபற்றியவர்கள் தங்களின் காரணங்களைக் கோடிட்டு இலங்கையிலுள்ள ஐ.நா வதிவிட ஒருங்கிணைப்பாளரிடம் (UNRC) கடிதம் ஒன்றினைக் கையளித்தனர்.

## ஏதிர்ப்பு இயக்கங்களின் சக்தியும் ஜனநாயக அரசியலில் அவற்றின் தாக்கமும்

அண்மைக் காலங்களில், உலகம் ஏராளமான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைப் பார்த்துள்ளது. இவற்றுள் சிலவற்றில் அதிரடியான விளைவுகள் உருவாகி நன்கு நிலைபெற்றிருந்த கொடுங்கோலர்கள் அகற்றப்பட்டு ஆட்சிகள் மாறிய சம்பவங்களும் நடந்தேறியுள்ளன. சில எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் குழப்பங்களை உருவாக்கித் தற்போதைய நிலைக்குச் சவால்விடுத்துள்ளதேயன்றி முழுமையான மாற்றத்திற்கு இட்டுச்செல்லும் விரும்பத்தக்க விளைவினை அடையவில்லை. உக்ரைனின் ஒரேன்ஜ் புரட்சி, டுனீசியா, லிபியா, எகிப்து, சிரியா மற்றும் யெமன் ஆகிய நாடுகள் முழுவதும் அலையாய் அடித்த அரபு வசந்தம் என்பன அந்தந்த நாடுகளில் ஜனநாயகத்திற்கான மற்றும் உறுதிநிலைக்கான பாதையினை இடவில்லை. எனினும் எதேச்சதிகார ஆட்சிக்குச் சவால்விடுப்பதில் அவை அளப்பரிய தாக்கத்தினை ஏற்படுத்தின.

உக்ரைனின் ஒரேன்ஜ் புரட்சி எனும் 2004 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பத்தில் கிரெம்லினின் ஆதரவைப் பெற்ற வேட்பாளரான விக்டர் யனுகோவிச் ஜனாதிபதி பதவியைத் திருடிக்கொள்வதில் இருந்தும் அவரைத் தடுப்பதில் வெற்றியடைந்ததுடன் அவருக்கு எதிராகப் போட்டியிட்ட மறுசீரமைப்பாளரான விக்டர் யுசென்கோவைத் தேர்வுசெய்தது. எவ்வாறாயினும், தனது ஐந்து வருட ஆட்சிக் காலத்தில் இவர் உக்ரைனின் உட்பூசல்களுக்கு முகங்கொடுத்ததுடன் ஐரோப்பிய – அத்திலாந்திக் ஒருங்கிணைப்பினை நோக்கி உக்ரைனைத் தீர்மானகரமாக இவரால் அழைத்துச் செல்ல முடியாத மிகவும் விரக்திமிக்க ஆட்சிக் காலமாகவே இவரின் ஐந்து வருட ஆட்சி அமைந்தது. இக்காரணங்கள் யனுகோவிச் மீண்டும் வருவதற்கு வழியமைத்ததுடன் அவர் 2010 ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறவும் வாய்ப்பேற்பட்டது. அவர் ஜனாதிபதியானதும் சுதந்திர ஊடகம் எனும் அலாவுதீன் பூதத்தினை அவரால் மீண்டும் போத்தலினுள் அடைக்க முடியவில்லை. பதிலாக, ஒரேன்ஜ் புரட்சியின் பலாபலன்களை மறுதலையாக்குவதற்கு அவர் எடுத்த முயற்சிகள் 2014 கிளர்ச்சிக்கு இட்டுச்சென்று ஈற்றில் அவரின் வீழ்ச்சிக்கும் அது நேரடியாக வழியமைத்தது.

உக்ரைன் மக்கள் அவர்களைப் பற்றியும் அவர்களின் அடையாளத்தினைப் பற்றியும் புலனுணரும் விதத்தில் ஒரேன்ஜ் புரட்சி அளப்பரிய தாக்கத்தினை ஏற்படுத்தியது. சுதந்திரத்தின் முதல் பதின்மூன்று வருடங்கள் உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான அரசியல், கலாசார, சமூக மற்றும் பொருளாதார எல்லைகள் தெளிவற்றவையாகவே தொடர்ந்தும் காணப்பட்டன. எல்லையின் இரு தரப்பிலும் உள்ள அதிகமான மக்கள் கோட்பாட்டு ரீதியாக வேறான இரண்டு நாடுகளின் தலைவிதியினையும் பிரிக்கமுடியாது ஒன்றிணைந்ததாகவே தொடர்ந்தும் கருதினர். ஆனால் பல இலட்சக்கணக்கான உக்ரைன் மக்கள் 2004 ஆம் ஆண்டு சுதந்திரமான தேர்தல்களைப் பாதுகாப்பதற்காக அணிதிரண்ட போது இது அதிரடியாக மாறியதுடன் 2023 ஆம் ஆண்டில் அவர்கள் தொடர்ந்தும் ரஷ்யாவுக்கு எதிராகத் தமது நாட்டினையும் தமது ஜனநாயக வாழ்க்கை முறையினையும் பாதுகாத்து வருகின்றனர்.

எதிர்ப்புக்கள் ஒரு சூழமைவினைக் கொண்டுள்ளன. அந்தச் சூழமைவுகள் புறக்கணிக்கப்படலாகாது.

அரசாங்கம் எதிர்ப்புக்களுக்கு முகங்கொடுக்கையில் அவை வழமையாக அந்த எதிர்ப்புக்கள் சட்டவிரோதமானவை போன்றும் தமது சொந்தச் சட்டபூர்வமான அதிகாரத்திற்கு எதிரான சட்டபூர்வமற்ற சவால்கள் போன்றுமே எதிர்வினையாற்றுகின்றன, எதிர்ப்புக்கள் ஒரு சூழமைவினைக் கொண்டுள்ளன. அவை புறக்கணிக்கப்பட முடியாது மற்றும் புறக்கணிக்கப்படலாகாது.

எதிர்ப்புக்கள் எவற்றினைப் பொதுவாகக் கொண்டுள்ளன, அவை புவியியல் ரீதியாக எங்கே நடக்கின்றன என்பதைப் பொருட்படுத்தாது அல்லது அவற்றினை நடத்துபவர்கள் எந்த அரசியல் பிரிவுகளைச் சார்ந்தவர்கள் என்பதைப் பொருட்படுத்தாது. அவை ஜனநாயகத்தினதும் பொருளாதார அபிவிருத்தியினதும் சமூக அபிவிருத்தியினதும் தோல்விகளாகும், அவை உத்தியோகபூர்வ அரசியல் செயன்முறையில் உள்ள அதிருப்தி மற்றும் அவநம்பிக்கையினால் ஏற்படுகின்றன. அரசியல்வாதிகளின் மீதான விரக்தியினால் அரசாங்கங்களின் மீதான அவநம்பிக்கையினால் ஏற்படுகின்றன. சமூக அமைதியின்மையானது உள்ளடக்கப்பட்ட காலப்பகுதியின் போது ஒவ்வொரு பிராந்தியத்திலும் உருவானது என எதிர்ப்புப் பற்றிய ஆய்வின் பிரதான கண்டறிதல்கள் சுட்டிக்காட்டுகின்றன. மேலும் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பணி நிறுத்தங்கள் முதல் கலவரம் வரையான, சமூக மற்றும் அரசியல் இயக்கங்களின் பிரச்சாரம் வரையானவை போன்ற ஒழுங்கமைக்கப்படாத மக்கள் திரளின் நடவடிக்கைகள் வரை என எதிர்ப்புக்கள் பல்வேறு வடிவங்களை எடுத்துள்ளன. 2006 – 2020 காலப்பகுதியில் உலகம் முழுவதும் எதிர்ப்பாளர்களின் மிகவும் பரவலான கோரிக்கை "உண்மையான ஜனநாயகமாக" இருந்தது (Ortiz et al. 2022).

இந்த ஆய்வில் கிட்டத்தட்ட மூவாயிரம் எதிர்ப்புக்கள் மீளாய்வு செய்யப்பட்டுள்ளதால், அவை எதிர்ப்புக்கள் நிகழும் வீதத்தின் குறைந்து செல்லும் வீதத்தின் அடிப்படையில் நான்கு பிரதான வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன: (i) அரசியல் பிரதிநிதித்துவம் / அரசியல் முறைமைகள் ஆகியவற்றின் தோல்விகள் தொடர்பான எதிர்ப்புக்கள், உண்மையான ஜனநாயகம், ஊழல் மற்றும் ஏனைய குறைகளில் கவனம் குவித்தவாறு; (ii) பொருளாதார அநீதி மற்றும் சிக்கன மறுசீராக்கல்களுக்கு எதிராக; (iii) சிவில் உரிமைகள், சுதேச / இன உரிமைகள் முதல் பெண்களின் உரிமைகள் மற்றும் தனிப்பட்ட சுதந்திரங்கள் வரை; மற்றும் (iv) உலகளாவிய நீதி மற்றும் சிலருக்கு பதிலாக அனைவருக்குமான மிகச் சிறந்த சர்வதேச முறைமைக்கான எதிர்ப்பு.

கலந்துரையாடப்பட்டவாறு, அரசியல் எதிர்ப்பு இயக்கங்கள் இலங்கைக்கு ஒன்றும் புதியவையல்ல. சத்தியாக்கிரகம் மற்றும் ஹர்த்தால் ஆகியவற்றுக்கு அப்பால், சிங்கள இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆயுதக் கிளர்ச்சி மற்றும் அதிருப்தியுற்ற தமிழ் இளைஞர்களால் ஆரம்பத்தில் முன்னெடுக்கப்பட்ட மூன்று தசாப்த பிரிவினைவாத யுத்தம் என இரண்டு ஆயுதக் கிளர்ச்சிகளை நாடு அனுபவித்திருக்கின்றது. இருந்தபோதிலும், பேராசிரியர் ஜயதேவ உயங்கொட அடையாளம் கண்டது போன்று, "இலங்கையில் இப்போது இருப்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தருணம். சாதாரண பிரஜைகளும் அரசியல் வகுப்பினரும் புலமைசார் வகுப்பினரும் பாடம் கற்கவேண்டிய பொதுமக்களும் உள்ளிட்ட மக்கள் எவ்வகையான ஜனநாயக அரசியலமைப்பினை மற்றும் எவ்வகையான ஜனநாயக அரசியல் ஒழுங்கினைப் புதிதாகக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற கேள்விக்கு பதிலளிப்பதற்கு நாம் இத்தருணத்தினைப் பயன்படுத்த வேண்டும்." [11]

பலரும் அவதானித்ததையே பேராசிரியர் உயங்கொட சுட்டிக்காட்டியுள்ளார். போராட்டம் ஒரு ஜனநாயகச் சக்தியினை வெளியிட்டுள்ளது. இலங்கையின் அரசியலமைப்புப் புதிரையும் சுய சான்றாகவிருந்த பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் நெருக்கடியினையும் அது கோடிட்டுக்காட்டியது. வெகுமக்கள் ஆணையினை முன்பு குறுகிய காலம் அனுபவித்த ஜனாதிபதியை பதிலீடு செய்து பாராளுமன்றத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி ஒருவரை இலங்கை இப்போது கொண்டுள்ளது. வெகுமக்களின் வாக்குகளின் மூலம் பாராளுமன்ற ஆசனத்தினைப் பெறத் தவறிய போது பாராளுமன்றத்திற்கு நியமிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரினாலேயே அந்த ஜனாதிபதி பதிலீடு செய்யப்பட்டுள்ளார். இலங்கையில் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் நெருக்கடி பற்றி இதை விட என்ன கூற முடியும்?

முறைமை மாற்றத்திற்கான இளைஞர்களின் கோரிக்கைகளுக்கு பதிலளிப்பதற்கு முறைமைகளினால் இயலாமல் இருந்தமையினால் உருவானதே போராட்டமாகும் - அவ்வாறான மூன்று கோரிக்கைகளில் மூன்றாவது. பிரஜைகளின் எதிர்ப்பு இயக்கங்களின் சுலோகங்கள் மற்றும் கோரிக்கைகள் மூலமாக வெளிப்படுத்தப்படும் "ஜனநாயக அரசியல் சிந்தனையின் சுதேச அமைப்பின்" உருவாக்கத்தினை

உயங்கொட கோடிட்டுக்காட்டுகின்றார். இது அரசியலமைப்பு மறுசீரமைப்புக்களைக் கோருவதற்கான வாய்ப்பாக இருந்தது – மக்கள் கவுன்சில்கள், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களையும் நேரடி ஜனநாயகத்தின் ஏனைய பொறிமுறைகளையும் வாபஸ் பெற்றுச் செல்லுமாறு கோருவதற்கான உரிமை, அரசியல் மற்றும் பணித்துறை ஆட்சி மேட்டுக் குடியினரால் பயன்படுத்தப்படும் அதிகாரத்தின் மீதான சமுதாய ரீதியான பரிசீலிப்புக்கள் மற்றும் சமநிலைப்படுத்தல்களாகப் பிரஜைகள் இயக்கங்கள் மற்றும் கொள்கைக் கலந்துரையாடல்களில் பங்கேற்பதற்கான பங்கேற்புமிக்க பிரஜை அமைப்புக்கள் - இவை எல்லாம் பிரதிநிதித்துவப் பாராளுமன்ற ஜனநாயகத்தின் நீடித்த குறைபாடுகளைத் தீர்ப்பதற்கான அவ்வாறான சில எண்ணக்கருக்களாகும்.

போராட்டத்தின் போது பிரஜைகள் இயக்கத்தின் இடையீடுகள் இலங்கையின் அரசியலுக்கு முற்றுமுழுவதும் ஒரு புதிய பரிமாணத்தினைச் சேர்த்து எதிர்வினையற்ற பார்வையாளர்கள் என்ற பிரஜைகளின் வகிபாத்திரத்தில் இருந்து அவதானமும் பங்கேற்புமிக்க அரசியல் செயற்படுனர்கள் என அரசியலில் அவர்களின் வகிபாத்திரத்தில் ஒரு மாற்றத்தினைக் குறித்தது. அந்த இடைமாற்றச் செயன்முறை, எமது ஜனநாயகத்தினை மீள் கற்பனை செய்து ஆழப்படுத்துவதற்கான புதிய புலமைசார் சக்தியினையும் அரசியல் சக்தியினையும் வழங்கியதுடன் வெறுமையற்றதும் ஆனால் முற்றுமுழுவதும் புறக்கணிக்கப்பட்டதுமான இக்கருத்தியல்களின் அர்த்தத்திற்கு உண்மையாக, எமது ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கு அரசியலமைப்பு அத்திவாரங்களையும் வழங்கியுள்ளது. போராட்டமானது கலை, கேலிச்சித்திரம் மற்றும் சிற்பங்கள் மூலம் பிரஜைகள் தொடர்பாடலின் புதிய வடிவங்களுக்கான ஒரு வெளியினையும் உருவாக்கியுள்ளது.[12]

பொது வெளியிலும் வெகுமக்கள் கற்பனையிலும் போராட்டம் வேர்பிடித்ததில் இருந்து ஒரு வருடம் கடந்தோடிவிட்டதுடன் தற்போதைய அரசாங்கம் தனது அதிகாரம் மக்களால் அங்கீகரிக்கப்படுவதை உறுதிப்படுத்தியதுடன் நிலைமை மாறியுள்ளது. இயக்கத்தின் அரசியல் ஊழல் பற்றிய அச்சம் போராட்டத்திற்கான நடுத்தர வகுப்பின் ஆதரவில் சிலவற்றினை நீர்த்துப் போகச் செய்துள்ளதுடன் “முறைமை மாற்றம்” வேண்டும் எனக் கோரிய கோசங்கள் “அரசாங்கத்திற்கு ஒரு வாய்ப்பினை வழங்குங்கள்” என்ற வேண்டுகோள்களுடன் போட்டியிடுகின்றன. எவ்வாறாயினும், பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டமூலம் போன்ற கொடுமையான சட்டங்களை அரசாங்கம் பரிசீலித்து வரும் ஒரு சூழமைவிலும் மக்களின் வாழ்க்கை வாய்ப்புக்களில் கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்தும் கட்டமைப்பு ரீதியான சீராக்கல்களுக்கான பொருளாதார மறுசீராக்கல்கள் பலவற்றினையும் அரசாங்கம் பரிசீலித்து வரும் ஒரு சூழமைவிலும் இந்தக் கலப்புச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. “முறைமை மாற்றத்திற்கான” பிரச்சாரம் எதேச்சதிகாரம் மிக்க ‘பொலிஸ் ஆட்சியினால்’[13] கீழறுக்கப்படும் அறிகுறிகளைக் காட்டுகின்றது. தனது கையில் அரசு கொண்டுள்ள சட்டம் மற்றும் பாதுகாப்புப் படைகள் எனும் கருவிகளைக் கொண்டு வெகுமக்களின் போராட்டங்களை எதிர்ப்பதற்கு அரசு தன்னைத் தயார்படுத்தி வருகின்றது.

எதிர்ப்பு அரசியல் மீளுருவாக்கப்பட்டு, வரலாற்றில் இருந்து பாடம் கற்கக் கூடாது என்ற அவ்வாறான பிடிவாதமான, ஒற்றைத் தீர்மானத்தினை எதிர்ப்பதற்கான வலிமை பெறப்படலாம்.

## Endnotes

1 குறிப்பு

D.B.S.Jeyaraj,”The Jaffna Youth Congress Made History by Calling for “Poorana Swaraj”(Complete Independence) from Colonial Rule and Enforcing the 1931 Boycott Of State Council Elections in Jaffna” at https://www.dailymirror.lk/opinion/75-Years-of-Independence-and-the-Tamils-of-Sri-Lanka/172-253544

2 Saman Gunadasa,“The lessons of the 1953 mass uprising (hartal) in Sri Lanka”, World Socialist Web Site, 2 September 2020, at https://www.wsws.org/en/articles/2020/09/02/hart-s02.html

3 Remembering 1956 – Sri Lanka’s first Anti-Tamil pogrom, Tamil Guardian, 19th January 2023, https://www.tamilguardian.com/content/remembering-1956-sri-lanka-s-first-anti-tamil-pogrom

4 Ibid.

5 D.B.S Jeyeraj, 1961 Tamil ‘Satyagraha’ has baptism of fire on first day, Financial Times, 18 February 2021https://www.ft.lk/columns/1961-Tamil-Satyagraha-has-baptism-of-fire-on-first-day/4-713351

[6] The five pillarsor five great forces - Pancha maha balawegaya that constituted S.W.R.D. Bandaranaike's base were – thenative doctors, clergy, teachers, farmers and the workers.

[7] D.B.S.Jeyeraj, 'Tamil "P2P" Protest of 2021 and the Tamil "Satyagraha" of 1961', Daily Mirror,13 February 2021,

https://www.dailymirror.lk/opinion/Tamil-P2P-Protest-of-2021-and-the-Tamil-Satyagraha-of-1961/172-205729

[8] ibid.

[9] D.B.S Jeyaraj, "Pragmatic politics of plantation Tamil leader Saumiyamoorthy Thondaman," Daily Mirror , 2018-09-01. Also see: https://www.historyofceylontea.com/ceylon-publications/ceylon-tea-articles/pragmatic-politics-of-plantation-tamil-leader-saumiyamoorthy-thondaman.html https://www.historyofceylontea.com/ceylon-publications/ceylon-tea-articles/pragmatic-politics-of-plantation-tamil-leader-saumiyamoorthy-thondaman.html

[10] CWC leader R. Yogarajan warned in the March 10, 2001 issue of the WeekEnd Express: "Unless they (the plantation workers) are treated reasonably they will be forced into the waiting hands of radicalism."

[11] Prof. J. Uyangoda,"Taking Aragalaya Ideas Seriously",https://groundviews.org/2022/07/19/taking-aragalaya-ideas-seriously/

[12] ibid

[13] "Aragalaya, One Year on: ATA is Spoiling the Party," Sunday Times, April 09, 2023, https://www.sundaytimes.lk/230409/

## உசாவல்கள்


DeVotta, Neil. *Blowback: Linguistic Nationalism, Institutional Decay, and Ethnic Conflict in Sri Lanka.* Stanford University Press, 2004.

Manor, James. *The Expedient Utopian: Bandaranaike and Ceylon.* Cambridge University Press, March 19, 2009

Ortiz, I., Burke, S., Berrada, M., Saenz Cortés, H. "An Analysis of World Protests 2006–2020." In: *World Protests.* Palgrave Macmillan, 2022. Cham. https://doi.org/10.1007/978-3-030-88513-7_2

Tambiah, S.J. *Buddhism Betrayed?: Religion, Politics, and Violence in Sri Lanka.* The University of Chicago Press, 1992

Wriggins, William Howard. *Ceylon: Dilemmas of a New Nation.* Princeton University Press, 2016.

# தலைவர்கள் இல்லாமல் எம்மால் சமாளிக்க முடியாதா? அரகலயவின்[1] அரசியல் சூழமைவில் பொதுமக்கள் அபிப்பிராயங்களின்[2] பகுப்பாய்வு

*விதுர முனசிங்க மற்றும் பிரபாத் ஹேமந்த குமார**

நாட்டின் ஆறு பகுதிகளில் சட்டம் *மற்றும் சமூக நம்பிக்கையினால் 2022 ஆகஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாதங்களில் நடத்தப்பட்ட தொடர்ச்சியான நேர்காணல்களின் அடிப்படையில், அரகலயவிற்குப் பின்னரான அரசியல் சூழல் குறித்த மக்களின் கருத்துக்கள் குறித்து பொதுக் கருத்தை ஆசிரியர்கள் முன்வைக்கின்றனர்.*

## தொகுப்பு

நாட்டின் ஆறு பிரதேசங்களில் சட்டம் மற்றும் சமூக நம்பிக்கையினால் (Law and Society Trust லோ அன்ட் சொசைட்டி டிரஸ்ட்) 2022 ஆகஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாதங்களில் நடத்தப்பட்ட நேர்காணல்களின் தொடரினை இக்கட்டுரை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

இரண்டு பிரதான பிரச்சினைகள் பற்றிய பொதுமக்கள் அபிப்பிராயத்தினைப் பெற்றுக்கொள்ளும் முயற்சியாகவே இந்த நேர்காணல்கள் நடத்தப்பட்டன:

1. கோட்டாபய ராஜபக்ஷவின் இராஜினாமாவினைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியின் (UNP) தலைவரான ரணில் விக்கிரமசிங்கவை நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP) தேர்ந்தெடுத்தது. சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையின் கட்சி அரசியலில் செல்வாக்குச் செலுத்திவரும் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியினதும் (UNP) ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் (SLFP) அரசியல் வாய்ப்புக்களில் இந்த மாற்றம் என்ன விளைவினைக் கொண்டிருக்கும்?

2. அரசியல் கருத்து வேறுபாட்டின் பலமான அலை (அரகலய – போராட்டம்) ஏன் சடுதியாய் ஓய்ந்து போனது? முன்னாள் அரச தலைவரான கோட்டாபய ராஜபக்ஷவை அகற்றிய பின்னர் உடனடியாக ஒரு நிச்சயமற்ற காலப்பகுதி ஏன் உருவானது?

பொதுமக்களின் அபிப்பிராயத்தின் அடிப்படையில், இக்கட்டுரை ஆசிரியர்கள் மூன்று பிரதான கண்டறிதல்களைச் சமர்ப்பிக்கின்றனர்.

* விதுர முனசிங்க சட்டம் மற்றும் சமூக நம்பிக்கையின் சிரேஷ்ட ஆய்வாளராவார். பிரபாத் ஹேமந்த குமார சட்டம் மற்றும் சமூக நம்பிக்கையின் ஆய்வு உதவியாளர் ஆவார்.

1. பதிலளித்தவர்களில் பெரும்பான்மையானவர்கள், இரண்டு பிரதான அரசியல் கட்சிகளுக்குமிடையில் (அதாவது UNP மற்றும் SLFP) குறிப்பிடத்தக்க வித்தியாசம் உள்ளது என இனிமேலும் நம்பத் தயாராக இருக்கவில்லை. எவ்வாறாயினும், சிங்கள பௌத்தர்கள், கிராமப்புறத்தவர் / நகர்ப்புறத்தவர் மற்றும் மேற்கத்தேய எதிர்ப்பாளர்கள் போன்ற SLFP முகாமினால் பிரதிபலிக்கப்பட்ட அடையாள லேபல்களுடன் மக்கள் இன்னும் தங்களை அடையாளப்படுத்தி அணி சேர்க்கின்றனர். எதிர்கால அரசியலைத் தீர்மானிப்பதில் இந்த அடையாள லேபல்கள் தீர்மானகரமான காரணிகளாக இருக்கக்கூடும் என்றாலும், இந்த லேபல்களையும் அக்கறைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டபூர்வ தன்மையை எந்த அரசியல் கட்சி அல்லது அரசியல் தலைவர் கொண்டிருப்பார் என்ற விடயம் இக்கட்டத்தில் தெளிவற்றதாகவே உள்ளது.

2. தற்போது நிலவுகின்ற பொருளாதார நிலைமைகளுக்கும் அரசியல் நிலைமைகளுக்கும் கடுமையான எதிர்ப்புக்கள் வெளிப்படுத்தப்படுவதையும் தாண்டி, தீர்மானம் வகுத்தலுக்கும் அதன் பின்னரான ஆளுகைச் செயன்முறைகளுக்கும் இன்றியமையாத பங்களிப்பினை வழங்குவதில் மக்கள் அக்கறை கொண்டிருக்கவுமில்லை அல்லது அதற்கான தமது ஆற்றலில் நம்பிக்கை கொண்டிருக்கவுமில்லை. தம்மை விட அரசியலில் மெத்தப் படித்த “தலைவர்களின்” கைகளிலேயே அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்பதே அவர்களின் அபிப்பிராயமாக இருக்கின்றது. நாட்டின் அதிகார அரசியலில் முன்னுதாரணமிக்க மாற்றத்தினை உருவாக்கக்கூடிய ஒரு சக்தியாக “போராட்டத்தினை” (அரகலயவினை) ஏற்றுக்கொள்வதற்கு மக்கள் தயாராக இருப்பதாகத் தெரியவில்லை.

3. இலங்கை அரசியலில் அரசியல் போஷிப்பு என்பது ஒரு முக்கியமான கூறாக உள்ளது. இரண்டு பிரதான அரசியல் கட்சிகளுக்குமிடையில் அதிகாரம் ஒரு ஒழுங்கு முறையில் நகர்த்தப்படுவதற்கு இது வழிவகுக்கின்றது. போராட்டத்தின் காரணமாக இது பலவீனமடைந்து மாற்று அரசியல் சக்திகளுக்கான மற்றும் ஏனைய அரசியல் கட்சிகளுக்கான ஒரு தளத்தினை உருவாக்கியுள்ளது போல் தெரிகின்றது. ஆனால் புதிய அரசியல் ஆட்சியின் கீழ் பழைய அரசியல் மையங்கள் அவற்றின் அரசியல் ஆதரவினை மீள்குழுவாக்கி அவற்றினை வலுப்படுத்தி வருகின்றன. இது எதிர்காலத் தேர்தல்களில் தவிர்க்க முடியாத காரணியாக இருக்க முடியும்.

இரண்டு பிரதான கட்சிகள் தவிர தேர்தல்களின் மூலம் அரசியல் அதிகாரத்தினைப் பெற்றுக்கொள்ள நினைக்கும் எந்தக் குழுவுக்கும் இவை பிரதான சவால்களாக உள்ளன. ஆதரவு அரசியலானது மக்களின் கரங்களிலிருந்து அரசியலை அகற்றி அதனை அரசியல் மேல் வர்க்கத்தினரின் ராஜ்யமாக ஆக்கியிருக்கின்றது. குடிமை அரசியலில் முனைப்பாக ஈடுபட்டுப் பாராளுமன்ற அரசியலுக்கு அப்பால் அரசியல் அதிகாரத்தினைப் பயன்படுத்துவதற்காக மக்களை வலுவூட்டுவதில் தீவிர கவனம் செலுத்தும் குழுக்களுக்கு இது பெருந் தடையாகும்.

## அறிமுகம்

ஜனாதிபதித் தேர்தல்களின் வரலாற்றிலேயே அதிகூடிய எண்ணிக்கையிலான வாக்குகளான 69 இலட்சம் வாக்குகளைப்[3] பெற்று கோட்டாபய ராஜபக்ஷ 2019[4] ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியாகினார். இதனைத் தொடர்ந்து 2020 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையினைப் பெற்றுக்கொண்டது. சில உபாய மார்க்கமிக்க கட்சித் தாவல்களுடன், அரசியலமைப்புக்கான 20 ஆவது திருத்தத்தினை நிறைவேற்றுவதை இயலுமாக்குவதற்கு 2/3 பெரும்பான்மை பெற்றுக்கொள்ளப்பட்டது. இந்தத் திருத்தத்துடன் ஜனாதிபதி அவரின் நிறைவேற்று அதிகாரத்தினை மேலும் வலுப்படுத்திக் கொண்டார். இதற்கமைய, அவரும், எண்ணிக்கை ரீதியில் உறுதியான சட்டவாக்கத்தினால் ஆதரவு வழங்கப்பட்ட நிறைவேற்று அதிகாரத்துடன் அவரின் கட்சிச் செல்வாக்குக்கு உட்பட்ட அரசியலும் 1977 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்தனவின் தலைமையிலான அரசாங்கத்தின் நிலையினையே பிரதிபலித்தது. பிரதானமாகச் சிங்கள - பௌத்தர்களைக்[5] கொண்ட ஜனாதிபதியின் சமச்சீரான வாக்கு வங்கியினால் அவரின் அதிகாரம் மேலும் திடப்படுத்தப்பட்டது. ஆனால், ஜனாதிபதியாக இருந்த இரண்டு வருடங்களினுள்ளேயே கோட்டாபய ராஜபக்ஷவும் அவரின் அரசாங்கமும் கடுமையாக விமர்சிக்கப்பட்டு பலத்த எதிர்ப்புக்கு முகங்கொடுத்தனர். இந்த எதிர்ப்பினை அவரின் அரசியல் கோட்டைகளான தெற்கின் சிங்களப் பெரும்பான்மைப் பிரதேசங்களில் சான்றாகக் காண முடிந்தது.

ஜனாதிபதியின் தனிப்பட்ட வாசஸ்தலத்திற்கு மிகவும் அருகில் 2022 மார்ச் 31 ஆம் திகதி நடந்த போராட்டத்தின் பின்னர் கொழும்பிலும் புறநகர்ப் பிரதேசங்களிலும் இடம்பெற்ற போராட்டங்கள் வேறு விதமாக மாற்றம் பெற்றன. அதன் பின்னர், போராட்டங்கள் மேலும் வலுப்பெற்றதுடன் அதிகமான மக்கள் ஒற்றுமையுடன் போராட்டத்தில் இணைந்துகொண்டனர். ஏப்ரல் 9ஆம் திகதி முதல் ஜூலை 22ஆம் திகதி வரையான காலப்பகுதியில் போராட்டம் நாளுக்கு நாள் தீவிரமடைந்து போராட்டக்காரர்கள் காலிமுகத்திடலையும் ஜனாதிபதி செயலகத்தினை அண்டிய பகுதிகளையும் ஆக்கிரமித்து "போராட்டக் களத்தை" உருவாக்கினர்.

இக் காலகட்டத்தின் போது நிலவிய பொதுமக்களின் தீவிரமான அழுத்தத்தினால் நிதி அமைச்சரும் பிரதமரும் மற்றும் அமைச்சரவையும் இராஜினாமாச் செய்ய நேரிட்டது. இறுதியில் போராட்டக்காரர்கள் ஜனாதிபதி செயலகத்தினையும் பிரதமரின் அலுவலகத்தினையும் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தினையும் அலரி மாளிகையினையும் (பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம்) முற்றுகையிட்டதைத் தொடர்ந்து ஜனாதிபதியும் இராஜினாமாச் செய்ய நேரிட்டது. 1971 ஆம் ஆண்டிலும் 1987 - 89 காலப்பகுதியிலும் அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கங்களை அகற்றும் நோக்கத்துடன் நடந்தேறி அரச கொடூரத்தினாலும் அடக்குமுறையினாலும் தோல்வியுற்ற ஆயுதக் கிளர்ச்சிகளுக்கு இது முற்றிலும் மாற்றமானதாக இருந்தது.[6] இந்த ஆயுதக் கிளர்ச்சிகளுக்கும், 2022 ஆம் ஆண்டின் போராட்டத்திற்கும் இடையிலான தெளிவான வித்தியாசம் என்னவெனில் 2022 போராட்டம் அமைதியான மக்கள் எழுச்சி என்பதுடன்.[7] இப்போராட்டம் ஆட்சியில் இருந்த ஜனாதிபதியினையும் அவரின் அரசாங்கத்தினையும் கவிழ்ப்பதில் வெற்றி கண்டது.

அரசியலமைப்பின் ஏற்பாடுகள் மற்றும் பாராளுமன்ற நடைமுறைகள் ஆகியவற்றினைப் பின்பற்றி, கோட்டாபய ராஜபக்ஷவினால் வறிதாக்கப்பட்ட ஜனாதிபதி பதவியின் எஞ்சிய பதவிக் காலத்திற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவினை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (தொடர்ந்தும் பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையினைக் கொண்ட கட்சி), ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தது. பாராளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்க ஓர் ஆசனத்தினை மட்டுமே கொண்டிருந்தமையினை பொருட்படுத்தாமலேயே அவர்கள் இவ்வாறு அவரைத் தேர்ந்தெடுத்தனர். இதன் மூலம் அரசாங்கமொன்றினை அமைத்து அதன் அதிகாரத்தினை மீளப் பெற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கு இயலுமானதாகவிருந்தது.

ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் ரணில் விக்கிரமசிங்க போராட்டத்தினை நசுக்குவதற்குக் கொடிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தினைப் (PTA) பயன்படுத்தியதோடு, கருத்து வெளிப்பாட்டுக்கான சுதந்திரம், ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் மற்றும் கருத்து வேறுபாட்டுக்கான சுதந்திரம் ஆகியவற்றினை அடக்குவதற்கு ஏனைய பல சட்டங்களையும் பயன்படுத்தினார். நிறைவேற்று அதிகாரம் பொதுமக்களின் போராட்ட பலத்தின் முன் பலவீனமடைந்திருந்த நேரத்தில் போராட்டக்காரர்களுக்கு எதிராக அவர் எடுத்த கடும் நடவடிக்கை நினைத்துப் பார்க்க முடியாததாகும். எவ்வாறாயினும், இப்போராட்டத்தில் மிகவும் ஆச்சரியமூட்டும் நிகழ்வொன்றாக, மக்கள் போராட்டத்தினைக் கைவிட்டுவிட்டு அவர்களின் நாளாந்த வாழ்க்கைக்குத் திரும்பிவிட்ட வேகம் உள்ளது. இன்றும் கூட வெவ்வேறு இடங்களில் போராட்டங்களின் பல்வேறு வடிவங்களைப் பல்வேறு மட்டங்களில் காணக்கூடியதாக இருந்தாலும் இவை எவையுமே பொதுமக்கள் பங்கேற்பின் அதே மட்டத்தினைக் கவர்பவையாகவோ அல்லது 2022 ஏப்ரல் - ஜூலை காலப்பகுதியில் நிலவிய தீவிரத்தின் அதே மட்டத்தினை எடுத்துக்காட்டுபவையாகவோ இல்லை.

## *பிரதான அவதானிப்புக்கள்*

கடந்த சில மாதங்களாக இலங்கையில் நடந்தேறிய அரசியல் மாற்றங்களை நோக்குகையில், இரண்டு விடயங்களை அவதானிக்க முடியும்:

1. சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கை அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வந்த இரண்டு பிரதான அரசியல் முகாம்களுக்கிடையிலான வித்தியாசம் குறைந்துவிட்டது. 2019 இல் 69 இலட்சம் வாக்காளர்களினால் நிராகரிக்கப்பட்ட நபர் தேர்தலில் வெற்றிபெற்ற கட்சியினால் ஜனாதிபதியாக ஆக்கப்பட்டுள்ளார். மக்கள் பிரதிநிதிகளின் ஆதரவினைப் பெற்ற கட்சி,

அதே மக்களால் பாராளுமன்ற உறுப்பினராக நிராகரிக்கப்பட்ட ஒரு தனிநபரை ஜனாதிபதிப் பதவிக்குக் கொண்டு வந்துள்ளது. இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னரான அரசியல் வரலாற்றில் இது முன்னெப்பொழுதும் நடந்திராத ஒரு நிகழ்வாகும்.

2. இரண்டு வருடங்களுக்கு முன்பு அறுதிப் பெரும்பான்மையுடன் தாமே தெரிவு செய்த தலைவருக்கும் அவரின் அரசியல் கட்சிக்கும் எதிர்ப்பினைத் தெரிவிப்பதற்காக மக்கள் ஆயிரக்கணக்கில் வீதியில் திரண்டனர். பொதுமக்கள் போராட்டத்தின் இந்தத் தீவிர செயன்முறை சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையில் ஒருபோதுமே நிகழ்ந்திராததாகும். தேர்தல் செயன்முறைக்கு அப்பால் மக்கள் தீர்மானகரமான முறையில் முனைப்பான அரசியலில் ஈடுபட்டு உண்மையிலேயே மிக முக்கியமான அரசியல் பதவிகளைப் புரட்டிப் போட்டனர். எவ்வாறாயினும், இந்தச் செயன்முறையும் தீவிரமான போராட்டமும் முடிவடைந்த பின்னர் மக்கள் நேரடியாக ஆளுகையில் சம்பந்தப்படுவதற்கு பதிலாகத் தேர்தல்களில் அவர்களின் அரசியல் அதிகாரத்தினைக் காட்டுவதற்காக மீண்டும் அவர்களின் வழமையான வாழ்க்கைக்குத் திரும்பிவிட்டனர்.

இலங்கையின் எதிர்கால அரசியலில் இந்த இரண்டு புதிய அனுபவங்களும் எவ்வகையான விளைவுகளை உருவாக்கும் என்பதை ஆராய்வதே எமக்கு முன்பிருக்கும் அடுத்த சவாலாகும். சில மாதங்களே நீடித்த இந்தத் தனித்துவமான நிகழ்வுகள் தொடர்பாகப் பல்வேறு பகுப்பாய்வுகளும் கலந்துரையாடல்களும் தற்போது நடைபெற்று வருகின்றன. ஆனால் இந்தக் கலந்துரையாடல்களில் பெரும்பாலானவை சமூகத்தில் பிரபலமான அரசியல் மற்றும் சித்தாந்தக் கொத்தணிகளின் வட்டத்திற்குள் வரையறுக்கப்பட்டுள்ளன. இந்தச் சூழமைவில், இந்தப் பாரிய அரசியல் நகர்விற்குத் தலைமைதாங்கி, அதில் பங்குபற்றி அதனை அணிதிரட்டியவர்கள் என்ற ரீதியில் இந்த அரசியல் சூழமைவினைப் பொதுமக்கள் எவ்வாறு புலனுணர்கின்றனர் என்பதில் நாம் கூர்மையான கவனத்தினைச் செலுத்தினோம். வரப்போகும் தேர்தல்களில் இலங்கை அரசியலின் எதிர்காலத்தினை இந்தப் “பொதுமக்களே” தீர்மானிப்பார்கள். இந்த ஆய்வின் போது, பொதுமக்களின் அபிப்பிராயங்கள் மற்றும் புலனுணர்வுகளின் அடிப்படையில் அரசியலின் எதிர்காலப் பாதையினைப் புரிந்துகொண்டு ஊகிப்பதே எமது கவனக் குவிப்பாக இருந்தது.

## நேர்காணல் முறையியல்

இந்த நோக்கத்தினை மனதில் கொண்டு, எழுமாறாகத் தெரிவுசெய்யப்பட்ட 25 ஆண்களுடனும் 25 பெண்களுடனும் நாம் 2022 ஆகஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாதங்களில் விரிவாகப் பேசினோம். நேர்காணப்பட்ட குழுவினர் 22 - 78 வயது வீச்சினைக் கொண்டவர்களாக இருந்ததுடன் விவசாயிகள், மீனவர்கள், நாட்கூலிகள், கூலிவேலை செய்பவர்கள், அரசாங்க ஊழியர்கள், தனியார் துறை ஊழியர்கள் போன்ற பரந்த வகையிலான தொழில்களைப் புரிபவர்களாகவும் அதிர்ஷ்ட இலாப டிக்கட் விற்பவர்கள், ஓய்வுபெற்றவர்கள் (ஆசிரியர்கள், அதிபர்கள், சட்ட அமுலாக்கல் அதிகாரிகள்), சிறு வியாபார உரிமையாளர்கள் போன்ற பல்வேறு மட்டங்களைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தனர். நேர்காணலுக்காக 45 நிமிடங்கள் முதல் இரண்டரை மணித்தியாலங்கள் வரையில் நேரம் செலவிடப்பட்டது. ஐந்து பிரதேசங்களில் இருந்து குழு தெரிவு செய்யப்பட்டிருந்தது. இதில், நான்கு பிரதேசங்கள் பெரும்பான்மையாகச் சிங்களப் பிரதேசங்களாகவும் 2019 தேர்தல் பிரச்சாரங்களின் போது கோட்டாபய ராஜபக்ஷவின் கோட்டைகளாகவும் இருந்தவையாகும். அவையாவன:

**அம்பாந்தோட்டை மாவட்டம்** - இது ராஜபக்ஷ குடும்பத்தின் பாரம்பரிய அதிகாரத் தளமாகும். 2019 ஆம் ஆண்டு அம்பாந்தோட்டையில் அளிக்கப்பட்ட வாக்குகளில், கோட்டாபய ராஜபக்ஷ 66.17 சதவீத[8] வாக்குகளைப் பெற்றதுடன் 2020 பொதுத் தேர்தலில் SLPP கட்சியானது 75.1 சதவீத[9] வாக்குகளைப் பெற்றுக்கொண்டது.

**குருணாகல் மாவட்டம்** - முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2020 பொதுத் தேர்தலில் இந்த மாவட்டத்தில் போட்டியிட்டு அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொண்டார். தேர்தலின் பின்னர் அவர் பிரதமராக நியமிக்கப்பட்டார். இந்த மாவட்டத்தில், 2020 பொதுத் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளில் SLPP கட்சியானது 66.9 சதவீத[10] வாக்குகளைப் பெற்றது. 2019 ஜனாதிபதித் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளில் கோட்டாபய ராஜபக்ஷ 66.92 சதவீத[11] வாக்குகளைப் பெற்றார்.

**அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்கள்** - இந்த இரண்டு மாவட்டங்களிலும் பெரும்பான்மையாக வாழ்பவர்கள் சிங்கள விவசாயிகளாவர். சிங்களம் பேசும் மக்கள் எப்போதெல்லாம் இலக்கு வைக்கப்படுகின்றார்களோ அப்போதெல்லாம் இந்த இரண்டு மாவட்டங்களின் மீதும் கவனம் குவிக்கப்படும். கோட்டாபய ராஜபக்ஷவின் முதலாவது அரசியல் பேரணி அநுராதபுரத்திலேயே நடைபெற்றது.[12] ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் அநுராதபுரத்தில் அமைந்துள்ள நாட்டின் மிகவும் தனிச்சிறப்பு வாய்ந்த ஸ்தூபிகளில் ஒன்றான ருவன்வெலிசாயவிலேயே[13] கோட்டாபய ராஜபக்ஷ பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். பௌத்தர்களைப் பொறுத்த அளவில் இது அளப்பரிய முக்கியத்துவம் வாய்ந்ததாகும். 2019 ஜனாதிபதித் தேர்தலில் இந்த மாவட்டங்களில் அளிக்கப்பட்ட வாக்குகளில் கோட்டாபய ராஜபக்ஷ 67.95 சதவீதத்தைப்[14] பெற்றுக்கொண்டார். 2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளில் இவரின் கட்சி 56.97 சதவீதத்தினைப் பெற்றுக்கொண்டது.

பொலன்னறுவை மாவட்டம் மைத்திரிபால சிறிசேனவினால் பிரதிநிதித்துவம் செய்யப்படும் மாவட்டமாகும். 2015 ஆம் ஆண்டில் இவர் ராஜபக்ஷ ஆட்சியிலிருந்து பிரிந்து சென்று எதிர்க்கட்சியில் இணைந்து ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் 2020 பொதுத் தேர்தலின் போது இவர் ராஜபக்ஷ குழுவுடன் மீண்டும் இணைந்து SLPP இல் போட்டியிட்டார். ஜனாதிபதித் தேர்தலின் போது இம்மாவட்டத்தில் அளிக்கப்பட்ட வாக்குகளில் கோட்டாபய ராஜபக்ஷ 73.66 சதவீதத்தினைப்[15] பெற்றுக்கொண்டார். 2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளில் கட்சி 53.01 சதவீதத்தினைப்[16] பெற்றுக்கொண்டது.

இரசாயண உரத்தினைத் தடைசெய்வதென கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த திடீர் முடிவு இந்த இரண்டு மாவட்டங்களிலும் பரவலாக விமர்சிக்கப்பட்டதுடன் இந்தத் தீர்மானத்தினால் இந்த இரண்டு மாவட்டங்களும் மிகவும் பாதிக்கப்பட்டன. இந்த மாவட்டங்களைத் தெரிவுசெய்ததில் இதுவும் ஒரு முக்கிய காரணியாகக் கருதப்பட்டது.

**கம்பஹா மாவட்டம்: நீர்கொழும்பு தேர்தல் தொகுதி** – பொதுவாக இப்பிரதேசம் SLFP முகாமுக்குப் பெரிதும் அனுகூலமானதல்ல. இப்பிரதேசம் கத்தோலிக்க மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டுள்ளது. எவ்வாறாயினும், 2019 இல் நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலில் இலக்குவைக்கப்பட்ட கடுவாபிட்டிய புனித செபஸ்தியார் ஆலயம் இந்தத் தேர்தல் தொகுதியிலேயே அமைந்துள்ளது என்பது மாத்திரமன்றி, தாக்குதலால் இறந்தவர்களும் காயமடைந்தவர்களும் இப்பிரதேசத்திலேயே செறிந்து காணப்பட்டனர். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி மற்றும் அதற்குப் பொறுப்பானவர்களுக்குத் தண்டனை என்பவையே 2019 மற்றும் 2020 தேர்தல்களின் போது பிரதான சுலோகங்களாகப் பயன்படுத்தப்பட்டன. இந்தத் தேர்தல் தொகுதியில் இருந்து அளிக்கப்பட்ட வாக்குகளில் இருந்து கோட்டாபய ராஜபக்ஷ 52.04 சதவீதத்தினைப்[17] பெற்றுக்கொண்டார். பொதுத் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளில் இவரின் கட்சி 38.23 சதவீதத்தினைப்[18] பெற்றுக்கொண்டது.

இந்த நான்கு மாவட்டங்களுக்கு மேலதிகமாக, கொழும்பு மத்தி மற்றும் பொரளை எனும் இரண்டு தேர்தல் தொகுதிகளும் தெரிவுசெய்யப்பட்டன.

பாரம்பரியமாக கொழும்பு - மத்தி (ரணில் விக்கிரமசிங்கவின் ஆசனம்[19]) தேர்தல் தொகுதியும் பொரளை தேர்தல் தொகுதியும் SLFP முகாமுக்கு அரசியல் ரீதியாகப் பலவீனமான தளங்களாகவே இருந்து வருகின்றன. 2019 தேர்தலில் இந்த இரண்டு தேர்தல் தொகுதிகளிலும் அளிக்கப்பட்ட வாக்குகளில் இருந்து கோட்டாபய ராஜபக்ஷ முறையே 16.39 சதவீதத்தினையும்[20] 41.76 சதவீதத்தினையும்[21] பெற்றுக்கொண்டார். பொதுத் தேர்தலின் போது இவரின் கட்சியான SLPP, அளிக்கப்பட்ட வாக்குகளில் முறையே 18.93 சதவீதத்தையும்[22] 38.67 சதவீதத்தையும்[23] பெற்றுக்கொண்டது.

## இந்தப் பாரம்பரிய அரசியல் முகாம்கள் இன்னும் உள்ளனவா?

சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையில், பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் பிரதான அம்சமாக இரண்டு அரசியல் முகாம்களுக்கிடையில் மாத்திரம் அதிகாரம் நகர்த்தப்பட்ட விதம் காணப்படுகின்றது. ஆரம்பத்தில் இந்த முகாம்கள் UNP இனாலும் லங்கா சமசமாஜ கட்சியுடன் (LSSP) இணைந்த கம்யூனிஸ்ட் கட்சியினாலும் (CP) பிரதிநிதித்துவம் செய்யப்பட்டன. பின்னர், UNP மற்றும் SLFP, LSSP மற்றும் CP கூட்டுக்களினால் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டன. இந்த முகாம்கள் சாத்தியமான ஒவ்வொரு விதத்திலும் ஒன்றை விட மற்றையது வித்தியாசமானது என்பதால் மக்கள் தங்களின் அரசியல் தெரிவுகளை மேற்கொள்வதற்காக அவர்கள் முன் சமர்ப்பிக்கப்பட்டன. 1970 பொதுத் தேர்தலில் SLFP, LSSP மற்றும் CP கூட்டான ஐக்கிய முன்னணியினைப் (சமகி பெரமுன) பிரதிநிதித்துவம் செய்த சிறிமாவோ பண்டாரநாயக்கவின் தேர்தல் விஞ்ஞாபனம் பின்வருமாறு குறிப்பிட்டது:

> "அவர் (SWRD பண்டாரநாயக்க) எழுச்சிபெற்று வந்த முதலாளித்துவத்தின் சிறகுகளைத் துண்டிக்கத் தயாராக இருந்தார். முதலாளித்துவத்தின் கொம்புகளைப் பிடித்து அதனைச் சமவுடைமைத் தூணில் கட்டுவதே அவரின் நோக்கமாக இருந்தது. அவர் சிங்கள மொழியின் நாயகன். எம் முன்னோர் தம்முயிர் ஈந்து பாதுகாத்த ஒப்புவமையற்ற பரிசினைக் காக்கக் களத்தில் நின்ற மாமனிதர் அவர். ஏகாதிபத்தியத்தினால் களங்கப்பட்டிருக்கும் மொழியினையும் சமயத்தினையும் நாம் காத்து சிறுபான்மையினரின் மொழியினையும் கலாசாரத்தினையும்பாதுகாப்போம்." (பண்டாரநாயக்க 1970, 2)

SLFP இன் தலைமையிலான இந்த அரசியல் முகாம் அனேகமாக எப்போதும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான முகாமாகவும் இடதுசாரி முகாமாகவும் நலன்புரி முகாமாகவும் சிங்கள - பௌத்த முகாமாகவும் கிராமிய வாக்கு வங்கியினைப் பாதுகாக்கும் முகாமாகவும் தேசிய கலாசாரத்தினைப் பாதுகாக்கும் முகாமாகவும் கீழ்த்தட்டு மக்களையும் நடுத்தர வர்க்கத்து மக்களையும் பாதுகாக்கும் முகாமாகவும் சித்தரிக்கப்பட்டு வருகின்றது.[24] UNP தலைமையிலான மற்றைய முகாம் அனேகமாக எப்போதும் முதலாளித்துவத்திற்கு ஆதரவான, தாராளவாதப் பொருளாதார அபிவிருத்தியினை நோக்கிய நடைமுறை ரீதியான அணுகுமுறையினை எடுக்கின்ற மற்றும் மேற்குலகுக்குப் பக்கச்சார்பான (உலகம் செல்லும் திசையில்) ஒரு சக்தியாகவே மக்களுக்குக் காட்டப்பட்டு வருகின்றது. கட்சியின் தலைமைத்துவத்திற்கு அமைவாக, வரலாறு நெடுகிலும், கட்சியானது பாராளுமன்ற ஜனநாயகத்திற்கும் பொருளாதார மறுமலர்ச்சிக்காக வர்த்தக சுதந்திரத்திற்கும் தனிநபர் சுதந்திரத்திற்கும் இன நல்லுறவுக்கும் அர்ப்பணிப்புக் கொண்டுள்ள கட்சியாக இருந்து வருகின்றது[25].

SLFP எதனைத் தூக்கிப் பிடித்ததோ அதற்கு எதிரான ஒன்றாக UNP இனைக் காட்டுவதற்காக UNP க்கு எதிரான சக்திகள் அதனை நகர/ சிங்களத்திற்கு எதிரான சக்தியாக தொடர்ச்சியாகச் சித்தரித்து வருகின்றன. SWRD பண்டாரநாயக்கவே நாட்டின் எதிர்காலத்தினை நாசமாக்கிய சூத்திரதாரி எனவும் அவர் நிர்ணயித்த பாதையினை SLFP வெறுமனே பின்தொடர்ந்தது எனவும் SLFP இன் வழிகாட்டியான SWRD பண்டாரநாயக்க தொடர்பான UNP இன் நிலைப்பாடு காணப்படுகின்றது. SLFP இன் பொருளாதாரக் கொள்கையினையும் அதன் அமுல்படுத்தலையும் UNP விமர்சித்துள்ளது.

> "திரு. பண்டாரநாயக்க 1956 இல் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், அவரின் அரசியல் மற்றும் பொருளாதாரப் பரிசோதனைகளின் மூலமாக நாட்டினை அதலபாதாளத்திற்கு இழுத்துச்சென்றார். 1970 - 77 காலப் பகுதியில் திருமதி. பண்டாரநாயக்கவின் அரசாங்கம் அதன் தர்க்கரீதியான இலக்கிற்காக பண்டாரநாயக்கவின் அழிவுதரும் கொள்கைகளைக் கொண்டுவந்தது." "இருக்கின்ற இலாபகரமான வியாபாரத்தினைக் கைப்பற்றுவதே 1956 இல் இருந்து அரசாங்கத்திற்கான SLFP இன் கொள்கையாக இருந்தது" (சந்திரபிரேம 1997, 137)

எவ்வாறாயினும், இரண்டு முகாம்களுக்கும் இடையிலான பொருளாதார பேதங்களை முடிவுக்குக் கொண்டுவந்து 1994 ஆம் ஆண்டில் SLFP திறந்த பொருளாதாரக் கொள்கையினை ஏற்றுக்கொண்டது. இந்தப் புதிய மாற்றம் பற்றிக் கருத்துத் தெரிவித்த UNP இன் தீவிர ஆதரவாளர்களான சீ.ஏ. சந்திரபிரேம போன்றவர்கள், வளர்ச்சியடைந்த ஜனநாயகங்களின் யுகத்தினுள் இலங்கை நுழைந்துள்ளது என்றும்

இருகட்சி ஆட்சி முறைமையிலுள்ள ஒரே வித்தியாசம் சித்தாந்தங்களில் உள்ள பாரிய வித்தியாசங்களுக்கு பதிலாக அவர்கள் எவ்வாறு ஆளுகின்றனர் என்பதாகும் என்றும் குறிப்பிட்டனர். அவரை மேற்கோள் காட்டி: "முதலாளித்துவம் மற்றும் சமவுடைமை மீதான கடும் சண்டைக்குப் பதிலாக (*Ibid,* 124) ஒவ்வொன்றும் எவ்வாறு ஆளப்படுகின்றது என்பது மீதே போராட்டம் உள்ளது. இரண்டு கட்சிகளும் அவற்றின் பொருளாதாரக் கொள்கை தொடர்பாக இணங்கியிருந்தாலும், SLFP தன்னை வித்தியாசப்படுத்தவே தொடர்ச்சியாக முயற்சி செய்தது. UNP இன் இறுக்கமான திறந்த சந்தைக் கொள்கைகளுக்கு மாறாகத் தமது பொருளாதாரக் கொள்கைகள் மிகவும் மனித நேயமிக்கவை என SLFP குறிப்பிட்டது.

> "போட்டிமிக்க திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு நாம் மனிதநேய அணுகுமுறையினைப் பின்பற்றுவோம் என, நாம் 1994 இல் பிரகடனப்படுத்தினோம். ஒரு சிலருக்கு மட்டுமல்லாமல் பலரின் மத்தியிலும் திறந்த பொருளாதாரத்தின் பலாபலன்களை விநியோகிப்பதே எமது நோக்காகும். தெட்டத்தெளிவாக இதைக் குறிப்பிடுவதாயின், திறந்த பொருளாதாரத்தின் நன்மைகளும் அனுகூலங்களும் சமூகத்தின் மிகவும் விளிம்பு நிலையிலுள்ளவர்களைச் சென்றடையும்." (SLFP 2001, 10).

இரண்டு கட்சிகளுமே திறந்த பொருளாதாரக் கொள்கையினை அங்கீகரித்த போதிலும், SLFP அதன் பிரதான அரசியல் எதிரியான UNP இனை விட ஓர் உறுதியான சித்தாந்த ரீதியான வித்தியாசத்தினை 2020 பாராளுமன்றத் தேர்தல் வரை பேணியது. இந்த வித்தியாசத்தினைப் பேணுவதற்கு குணதாச அமரசேகர போன்ற செல்வாக்கு மிக்க சித்தாந்தவாதிகள் பங்களிப்பு நல்கினர். 2011 இல் அவர் பின்வருமாறு எழுதுகின்றார்:

> "சேர் பண்டாரநாயக்கவின் வெற்றியானது இலங்கையின் பாரம்பரியத்தினை மீட்டெடுப்பதை நோக்கிய அநாகரிக தர்மபாலவின் பயணத்தின் அடுத்த படியாகவே நோக்கப்பட வேண்டும். அவரின் அகால மரணத்தின் பின்னர், சிங்கள – பௌத்த மகிமையினை திருமதி பண்டாரநாயக்க அம்மணியின் மூலம் அடைந்துகொள்வதற்காக மக்கள் அவரின் பின்னால் அணிதிரண்டனர். தனது கலாசாரப் பின்புலத்தின் காரணமாகத் தனது வகிபாத்திரம் பற்றிப் பிரக்ஞை கொண்டிருந்த அவர், இந்த இலக்கினை அடைவதற்காக மாக்சியவாதிகளின் உதவியினைப் பெற்றுக்கொண்டார். தனது 17 வருட நீண்ட நெடிய ஆட்சியின் போது ஜே.ஆர். ஜெயவர்தன சிங்கள பௌத்த பாரம்பரியத்தினை அழித்து, தேசிய பாரம்பரியத்தினையும் மனிதநேய விழுமியங்களையும் புரிந்துகொள்வதற்கு பதிலாக உண்பதையும் குடிப்பதையும் பற்றி மட்டுமே கவலைப்பட்ட ஓர் இழிந்த தலைமுறையினை உருவாக்கினார். தெற்கில் இருந்து வரும் ஒரு தலைவரினால் தேசிய பாரம்பரியத்தினை மீட்டெடுக்க முடியும் என்ற நம்பிக்கையில் மக்கள் 2005 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷவினைத் தேர்ந்தெடுத்தனர். மன்னன் ஆறாம் பராக்கிரமபாகுவின் பின்னர் நாட்டினை ஒன்றுபடுத்திய ஒருவராக அவரை அடையாளப்படுத்தியமை தவறானதல்ல." (அமரசேகர 2011, 17-18).

2019 ஜனாதிபதித் தேர்தலின் போது இந்த இரண்டு முகாம்களுக்கும் இடையிலான வித்தியாசம் நன்கு உருவாக்கப்பட்டது. 2015 - 2019 காலப்பகுதியில் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருக்க ஐக்கிய தேசியக் கட்சி அக்காலகட்டத்தில் அரசாங்கத்தினை நடத்தியமை, SLPP (SLFP முகாம்) தலைமையிலான கூட்டணி UNP க்கு எதிரான ஒரு பிரதானமான சக்தியினை உருவாக்குவதற்கு அனுமதித்தது.[26] உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் சூழமைவில் தேசிய பாதுகாப்பினைப் பாதுகாக்கத் தவறியமை, சிங்கள - பௌத்தர்களைப் புறக்கணித்தமை மற்றும் தேசிய வாதத்தினைப் புறக்கணித்தமை என்பன ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான SLFP முகாமின் வழமையான விமர்சனங்களாக மீண்டும் தலைதூக்கியதுடன் ரணில் விக்கிரமசிங்க தோல்வியுற்ற தலைவராக மீண்டும் ஒரு தடவை சித்தரிக்கப்பட்டார். ரணில் விக்கிரமசிங்கவையும் அவரின் அரசியல் முன்னணியினையும் தோற்கடித்து கோட்டாபய ராஜபக்ஷவும் அவரின் SLFP (SLPP) அரசியல் முகாமும் மிகப் பெரிய வெற்றியினைப் பெறுவதை இந்தப் பின்புலம் இயலுமாக்கியது.

ஆனால் வெறும் இரண்டே வருடங்களினுள், எந்தத் தனிநபரை SLPP மிகக் கடுமையாக விமர்சித்ததோ, மக்களால் நிராகரிக்கப்பட்ட அத் தனிநபரான

ரணில் விக்கிரமசிங்கவையே பொதுமக்களின் போராட்டங்களின் காரணமாக ஜனாதிபதியாகத் தெரிவுசெய்தது. அதன் பின்னர், ரணிலின் தலைமையிலான அரசாங்கத்தினை அமைப்பதற்குக் கட்சி ஆதரவு வழங்கியது. இப்போது இந்த இரண்டு எதிரெதிர் முகாம்களும் சகவாழ்வு வாழ்கின்றன. இந்த இரண்டு கட்சிகளும் உருவாக்கிய பிரிவுகளின் அடிப்படையில் வாக்களித்துத் தம்மை ஒழுங்கமைத்த மக்கள் எவ்வாறு இந்தப் புதிய மாற்றத்தினைப் புலனுணர்வர்? இலங்கை அரசியலில் இந்த இரண்டு முகாம்களினாலும் பரப்பப்பட்ட சர்ச்சைக்குரிய சித்தாந்தங்களின் எதிர்காலம் என்ன?

தற்போதைய சூழமைவில் இந்த இரண்டு அரசியல் முகாம்களும் சகவாழ்வு நடத்தினாலும் அவற்றுக்கு இடையில் தெளிவான வித்தியாசம் இருப்பதாகத் தாம் இன்னும் நம்புவதாக பதிலளித்தவர்கள் 50 பேரைக் கொண்ட எமது மாதிரியில் 10 பேர் குறிப்பிட்டனர். எதிர்காலத்தில் தாம் ஒன்றில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு (மற்றும் ரணில் விக்கிரமசிங்க) அல்லது SLPP க்கு வாக்களிப்பதில் உறுதியாக இருப்பதாகக் குறிப்பிட்டனர். இரண்டு குழுக்களுக்கும் இடையிலான அவர்களின் வேறுபடுத்தல் மேலே கலந்துரையாடிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது, அதாவது, இரண்டு முகாம்களும் தம்மை எவ்வாறு வரலாற்று ரீதியாக அடையாளப்படுத்தி வகைப்படுத்தியுள்ளன என்பதாகும்.

UNP இற்குச் சார்பாகப் பேசியவர்கள் பொருளாதாரத்தினை அடிப்படையாகக் கொண்டு கட்சிகளுக்கு இடையிலான பிரதான வித்தியாசத்தினை அடையாளப்படுத்தினர். UNP இன் ஆதரவாளரான அநுராதபுர விவசாயி ஒருவர் கூறுகையில், வரலாறு நெடுகிலும், நாட்டில் ஏதோ ஒரு வகையில் பொருளாதார அபிவிருத்திக்கான நிலைமைகள் UNP ஆட்சியின் போது மாத்திரமே இருந்திருக்கின்றன எனக் குறிப்பிட்டார். பொருளாதார அபிவிருத்தியினை மறுதலையாக்குவதற்கு SLFP இனவாதத்தினையும் பௌத்த தீவிரவாதத்தினையும் பயன்படுத்துகின்றது என இவர் கருத்துரைத்தார். ஒவ்வொரு தடவையும் SLFP இனால் பொருளாதாரம் சீர்குலைக்கப்பட்ட பின்னர் மக்கள் UNP அரசாங்கங்களையே தெரிவு செய்கின்றனர் என அவர் மேலும் குறிப்பிட்டார். ஆனால், அதிகாரத்தினை மீண்டும் அடைவதற்காக SLFP அதன் தந்திரங்களைத் தொடர்ந்து பயன்படுத்திவருவது, நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியினை UNP அடைவதைச் சாத்தியமற்றதாக்குகின்றது.[27]

வனாத்தமுல்லையைச் சேர்ந்த UNP ஆதரவாளரான ஒரு பெண் குறிப்பிடுகையில், UNP அரசாங்கங்களில் சகலரும் பொருளாதார நலன்களைப் பெறுகின்றனர் ஆனால் SLFP அரசாங்கத்தில் அதன் ஆதரவாளர்கள் மாத்திரமே ஏதாவது உதவியினைப் பெறுகின்றனர் எனத் தெரிவித்தார்.[28] இரண்டு கட்சிகளும் ஒரே விதமான பொருளாதாரச் சித்தாந்தங்களைக் கொண்டிருந்தாலும் அதன் அமுல்படுத்தலில் கணிசமான வித்தியாசம் உண்டு என அவர் நம்புகின்றார்.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த 2015 - 2019 *நல்லாட்சி அரசாங்கம்* எடுத்த தொலைநோக்கற்ற பொருளாதாரத் தீர்மானங்களே தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குக் காரணமாகும் என வித்தியாசமான அபிப்பிராயத்தினைக் குருணாகலையைச் சேர்ந்த நபர் ஒருவர் வெளியிட்டார்[29]. UNP இன் பொருளாதார முகாமைத்துவம் பற்றி மேலும் கருத்துத் தெரிவித்த அம்பாந்தோட்டையின் சூரியவெவவைச் சேர்ந்த சிறு வியாபார உரிமையாளர் ஒருவர் பின்வருமாறு குறிப்பிட்டார்: ‘கிராமிய உட்கட்டமைப்பினை முன்னேற்றுவதற்கு எந்த UNP அரசாங்கமும் வேலை செய்யவில்லை. அவை பாரிய அளவிலான வியாபாரங்களிலேயே கவனம் குவித்தன. மாறாக, வீதிகளையும் மதகுகளையும் நிர்மாணித்துச் சராசரிக் கிராமத்தவர்களை SLFP அரசாங்கம் எப்போதும் கவனித்து வருகின்றது’.[30] இருந்தபோதிலும், SLFP இனை ஆதரித்து UNP இனை எதிர்த்த பலரின் அவ்வாறான நிலைப்பாட்டுக்குப் பொருளாதாரப் புலனுணர்வுகள் காரணமாக இருக்கவில்லை. தற்போதுள்ள கூட்டமைப்பினை அவர்கள் நிலவுகின்ற அரசியல் ஸ்திரமின்மைக்கான ஓர் இடைக்கால ஏற்பாடாகவே நோக்குகின்றனரே அன்றி ஒரு நீண்ட கால உடன்படிக்கையாக நோக்கவில்லை.

> “UNP என்பது ரணில் அல்ல. அவருக்குப் பின்னால் ஏகாதிபத்தியச் சார்புச் சக்தி உள்ளது. அவர்கள் ஒரு குறிப்பிட்ட வகுப்பினை மட்டுமே பிரதிநிதித்துவம் செய்கின்றனர். இலங்கையர்களில் பெரும்பான்மையானவர்கள் SLPP இற்காக வாக்களித்தனர். UNP இற்கு மத்திய வகுப்பும் மேல் வகுப்பும் ஆதரவளிக்கின்றனர். இந்த இரண்டு கட்சிகளும் தலைமைத்துவ மட்டத்தில் ஒன்று சேரலாம். ஆனால் கீழ் மட்டத்தில் ஒன்றுசேர்வதை நாம் எதிர்பார்க்க முடியாது. இவை இரண்டு வகுப்புக்கள். செல்வந்தர் மற்றும் வறியவர்.[31]

இரண்டு முகாம்களுக்கும் இடையிலான வித்தியாசத்தினை மீள வலியுறுத்தி, பொருளாதாரம் தொடர்பாக ரணில் விக்கிரமசிங்கவினால் அண்மைக் காலத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தற்காலிகமானவை என்றும் இரண்டு முகாம்களுக்கும் இடையிலான வித்தியாசங்கள் நீண்ட காலத்தில் மீண்டும் தலைதூக்கும் என்றும் UNP இற்கு எதிரான குழு உணர்கின்றது.[32]

எவ்வாறாயினும், இரண்டு அரசியல் முகாம்களுக்கும் இடையிலான பாரம்பரிய வித்தியாசங்கள் இப்போது இல்லை என பதிலளித்தவர்களில் 4/5 பங்கினர் நம்புகின்றனர். இந்த முகாம்களின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு இடையில் இவர்கள் எந்த வித்தியாசத்தினையும் காணவில்லை என்பதுடன், SLFP தம்மை உள்நாட்டுக் கலாசாரத்தினதும் தேசியவாதத்தினதும் சிங்கள - பௌத்த அடையாளத்தினதும் பாரம்பரியத்தினதும் பிரதிநிதிகளாக முன்வைப்பதிலுள்ள உண்மைத்தன்மையினையும் இவர்கள் சந்தேகிக்கின்றனர்.

> "ரணிலிடம் ஏகாதிபத்தியவாதச் சிந்தனை இருக்கின்றது. வெற்றிலை இல்லாவிட்டால் சுவிங்கம் சாப்பிடுங்கள் என அவர் ஒரு தடவை எம்மிடம் கூறினார். நாம் குளங்களை நிரப்பிக் கட்டிடங்களைக் கட்டவேண்டும் என அவர் ஆலோசனை முன்வைத்தார். மறுபுறத்திலுள்ள தலைவர்கள் இவற்றினைத் தமது நன்மைக்காகப் பயன்படுத்தி தேசியப் பெருமையினதும் பாரம்பரியத்தினதும் மீட்பர்களாகப் பாசாங்கு செய்கின்றனர். நீங்கள் உண்மையாகவே இதை நோக்கினால், ஜே.ஆரை விடவும் ரணிலை விடவும் இவர்களே மக்களைத் தவறாக வழிநடத்துகின்றனர். குறைந்தபட்சம் UNP அதன் நிலைப்பாடு என்ன என்பது தொடர்பாக வெளிப்படையாக உள்ளது. இவர்கள் தங்களது கதைகளுக்கு ஆதரவு பெறுவதற்காக அனைத்தையும் திரிபுபடுத்துகின்றனர். வயிற்றுப் பிரச்சினையினையும் பசிப் பிரச்சினையினையும் UNP தீர்க்கையில் SLFP தேசியவாதத்தின் மூலமும் சமயத்தின் மூலமும் மக்களின் இதயங்களதும் மனங்களதும் பிரச்சினைகளைத் தீர்க்கின்றது.[33]

கடுமையான விமர்சகர் ஒருவர் இந்தக் கட்சிகளுக்கிடையில் அவற்றின் பெயர்களைத் தவிர வேறு எந்த வித்தியாசமும் இல்லை என நினைக்கின்றார்.

> "இவர்கள் இருவரும் எம்மை அழித்து அவர்களைப் பாதுகாத்துக்கொள்கின்றனர். எல்லா பஸ்சும் ஒன்றுதான். காலத்திற்குக் காலம் சாரதிதான் மாறுகின்றார். அவ்வளவுதான். பண்டாரநாயக்க UNP யை விட்டு விலகியதற்குக் காரணம் அவர் எம் மீது கொண்டிருந்த கரிசனையல்ல. மாறாக, D.S தனது மகனைப் பிரதமராக ஆக்க முயற்சிப்பதை அவர் கண்டதாலேயே ஆகும்[34].

> "இது ஒரு சீட்டாட்டம். ஓவ்வொரு குழுவும் சீட்டுக் கட்டைக் கலைக்கின்றது. யாரும் புதிய சீட்டுக்களைச் சேர்ப்பதுமில்லை அல்லது எவற்றையும் அகற்றுவதுமில்லை. நாங்கள் படம் பார்ப்பது போல் வெறுமனே இதை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.[35]

கட்சிகளுக்கிடையில் வித்தியாசங்கள் இல்லை எனப் பெரும்பான்மையானவர்கள் ஏற்றுக் கொண்டாலும், SLFP இன் சித்தாந்தத்தினையே அதிகமானவர்கள் விரும்புகின்றனர். அவர்களின் கருத்துப்படி, இது நாம் அரசியலில் பரிசீலிக்க வேண்டிய ஒன்று. SLFP உடன் தொடர்புபடுத்தப்பட்ட சித்தாந்தம் அவர்களால் இப்போது பிரதிநிதித்துவம் செய்யப்படுவதில்லை என்பதே இவர்களின் கரிசணையாக உள்ளது. உதாரணமாக, ஓர் இளம் பெண் குறிப்பிடுகையில், தான் கோட்டாபய - மஹிந்த கூட்டுக்கு வாக்களித்த போது SLPP சிங்கள - பௌத்தத்திற்கு முன்னுரிமையளித்து முஸ்லிம்களின் சக்தியினைக் குறைக்கும் என அதிக எதிர்பார்ப்புக் கொண்டிருந்ததாகக் குறிப்பிட்டிருந்தார். ஆனால், அந்த அரசாங்கம் அதன் வாக்குறுதியினை நிறைவேற்றவில்லை. சிவனொளிபாத மலையின் காவல் கடவுள் எனத் தான் நினைக்கும் சுமன சமன் போல் கோட்டாபய ராஜபக்ஷவின் புகைப்படங்களைத் தனது முகப்புத்தகத்தின் சுயவிபரப் படமாகப் (Profile picture) போட்டிருந்த நாட்களைத் திரும்பிப் பார்க்கையில் தான் இப்போது வெட்கப்படுவதாக அவர் குறிப்பிடுகின்றார்.[36]

SLFP இன் கிராமிய நாட்டம் தொடர்பாக மக்கள் பேசிய போதும் இதே போன்ற கருத்துக்கள் வெளிவந்தன.

> “மஹிந்த ஐயா அவர் பிறந்த கிராமத்தினைக் கொழும்பைப் போல அபிவிருத்தி செய்து மக்களின் வாழ்வினைச் சிறப்பானதாக்க விரும்பினார். கிராமத்து மக்கள் அவர்களின் வாழ்வினைப் பற்றி அக்கறை கொண்டுள்ளனர். நகரத்து மக்கள் கிராமத்து மக்களை விட உணர்வற்றவர்கள் எனப் பொதுவாகக் கூறப்படுகின்றது. அது உண்மையென்றே நான் நினைக்கின்றேன். ரணிலை பாருங்கள் - அவரிடம் பச்சாதாபம் கிடையாது.[37]

மஹிந்த ராஜபக்ஷ ஆரம்பத்தில் இந்த நிலைப்பாட்டினையே பிரதிநிதித்துவம் செய்தார் என பதிலளித்த பலரும் நினைத்தனர். ஆனால் அவர் பின்னாட்களில் பாதை தவறிவிட்டார். இதுவே கோட்டாபயவுக்கும் நடந்தது என வேறு சிலர் நினைத்தனர். SLFP இடம் இருந்து வருகின்ற மேற்கத்தேயச் சதித்திட்டக் கோட்பாடுகள் பற்றிய கூற்றுரைகள் முற்றுமுழுவதும் தவறானதாக இருக்க முடியாது என அவர்கள் நினைக்கின்றனர். அவர்களைப் பொறுத்த அளவில் SLFP இச்சதித்திட்டத்திற்கு இரையாகிவிட்டது.

> “பசிலிடமும் கோட்டாவிடமும் அவர்களின் சகோதரருக்கு நாட்டில் மதிப்பு உண்டு என மேற்குலகம் கூறியிருக்க வேண்டும். அதனைப் பயன்படுத்தி ஆட்சியைப் பெற்றுக்கொண்டு நாட்டை அழியுங்கள்.[38]

பாரம்பரியச் சித்தாந்தங்களை SLFP இப்போது பிரதிநிதித்துவம் செய்வதில்லை எனப் பெரும்பான்மையானவர்கள் நம்பினாலும் கூட, SLFP இன் பாராம்பரியச் சித்தாந்தங்கள் சராசரி வாக்காளர்களின் மத்தியில் இன்னும் உறுதியான அத்திவாரத்தினைக் கொண்டுள்ளன என்பதைக் கவனத்தில் கொள்வது பொருத்தமானதாகும். இவ்வாறான கோட்பாடுகளை உள்ளடக்குவதற்கான சட்ட பூர்வமான உரிமை மஹிந்த ராஜபக்ஷவிற்கும் அவரின் குடும்பத்திற்கும் அல்லது SLFP க்கும் இனிமேலும் இல்லை. ஆனால் இந்தக் கருத்துக்கள் பொருத்தமானவை என்றும் வலிதானவை என்றும் மக்கள் இன்னும் கருதுகின்ற காரணத்தினால், தான் அக்கோட்பாடுகளை நேர்மையாகப் பிரதிபலிப்பதாக அரசியல் பரப்பில் மக்களை ஒருவர் உணரச் செய்வதற்கான தளம் இன்னும் திறந்தே இருக்கின்றது. இந்தக் கருத்துக்களைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கான வாய்ப்பு இனிமேலும் பாரம்பரிய அரசியல் முகாம்களிடம் குறிப்பாக SLFP இனை வைத்திருப்பவர்களிடம் இல்லை என்ற போதிலும், இவை தொடர்ந்தும் இலங்கை சமூகத்தில் கணிசமான அதிகாரத்தினைக் கொண்டிருக்கின்றன.

> “நாட்டை நேசிக்கின்ற மற்றும் நாட்டுக்குத் தன்னால் நல்லது செய்ய முடியும் என மக்களுக்கு உணர்த்தக்கூடிய மேலும் மக்களின் இதயங்களைத் திருப்திப்படுத்தக்கூடிய ஒருவர் போட்டியிட்டால் அவருக்கு உண்மையான வாய்ப்பு இருக்கின்றது. ஆனால் அவர் அல்லது அவர்கள் இந்த இரண்டு கட்சிகளில் இருந்தும் வரக்கூடாது. மக்கள் இந்த இரண்டு குழுக்களின் மீதும் அதிருப்தியடைந்துள்ளனர். அவர்கள் வித்தியாசமான கட்சியில் இருந்து வரவேண்டும் அல்லது சுயாதீனமாகப் போட்டியிட வேண்டும்.”[39]

## போராட்ட அரசியலுக்கு அப்பால் அரசியலில் ஈடுபடுவதற்கு மக்கள் ஏன் தயங்குகின்றனர்?

நேர்காணல்களில் நாம் ஆராய்ந்த இரண்டாவது பரப்பு அரசியல் குழப்பச் சூழமைவில் கருத்து வேறுபாட்டின் உறுதியான அலைகள் தணிந்து ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்திற்கு வருவதை இயலுமாக்கி அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற அடக்குமுறையினை இயலுமாக்கிய காரணங்களாகும். என்ன நடந்தது என்பதைப் பற்றி ஆழமாகச் சிந்தித்து தற்போது நிலவும் நிலை பற்றிய தமது அபிப்பிராயத்தினை வெளிப்படுத்துமாறு பதிலளித்தவர்கள் ஊக்கப்படுத்தப்பட்டனர்.

50 பங்குபற்றுனர்களில், 5 பேர் மட்டுமே போராட்டத்திற்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். போராட்டக்காரர்கள் வகித்த வகிபாத்திரம் இன்றியமையாதது, நியாயமானது எனக் குறிப்பிட்ட அதீத பெரும்பான்மையினர் அதனை மிக நேர்த்தியான ஒரு நடவடிக்கை என வகைப்படுத்தினர். இவர்களில் சிலர் காலி முகத்திடல் போராட்டத் தளத்திற்குக் குறைந்தது ஒரு தடவையாவது சென்றுள்ளனர். மேலும் ஒரு தடவைக்கு மேலும் கூடச் சென்றுள்ளனர். தனிநபர் ஒருவர் பிராந்தியப் போராட்டத் தளத்தில் பல வாரங்கள் முனைப்பாகப் பங்குபற்றி போராட்டத்திற்கு ஆதரவு வழங்கியிருக்கின்றார். ஆனால் போராட்டத்தின்

வகிபாத்திரம் பற்றிய இவர்களின் அபிப்பிராயம் வெவ்வேறானவையாகக் காணப்பட்டன.

பதிலளித்தவர்களில் சிலர் UNP க்கு ஆதரவு தெரிவித்தனர். குறிப்பாக ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்ததுடன் (இவர்கள் அனைவரும் ஆண்கள் மற்றும் இவர்களில் ஒருவர் தனது குடும்பத்துடன் கோட்டாகோகமவில் ஓரிரவைக் கழித்துள்ளார்.) இளைஞர்களின் போராட்டத்திற்கு நியாயமான காரணங்கள் உள்ளன என்பதை இவர்கள் ஏற்றுக்கொண்டனர் என்றாலும் போராட்டம் இறுதியில் அரசியல்மயமாக்கப்பட்டு அரசியல் கட்சிகளின் தேவைகளை நிறைவேற்றத் தொடங்கியது எனக் குறிப்பிட்டனர்.[40] இளைஞர்கள் போராட்டத்திற்கு மட்டும் வரையறுக்கப்பட்டதைப் பற்றியும் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கோ அல்லது வெளிநாட்டு உறவுகளை மேம்படுத்துவதற்கோ அல்லது நாட்டினுள் அதிக டொலர்களைக் கொண்டுவருவதற்கோ தேவையான இராஜதந்திர அறிவு அவர்களுக்கு இல்லை என்பது பற்றி இவர்கள் தொடர்ச்சியாகப் பேசினர். இவர்களின் கருத்துப்படி, இந்தப் பணிக்கு ரணில் விக்கிரமசிங்கவையும் அவரின் நெருக்கமான சகாக்களையும் தவிர பொருத்தமான சிறந்த நபர் இல்லை.[41] அவர்கள் போராட்டக்காரர்களுக்கு எதிராகக் குரோதம் கொண்டிருப்பதாகவே தெரிகின்றது. போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில் போராட்டத்திற்குத் தமிழ் புலம்பெயர் சமூகமும் மேற்கு நாடுகளும் அரச சார்பற்ற நிறுவனங்களும் நிதியளித்தன என்றும் அவர்களின் நிகழ்ச்சிநிரலைப் பின்பற்றுவதற்காக இளைஞர்கள் தவறாக வழிநடத்தப்பட்டனர் என்றும் இவர்களில் பலர் நம்பினர்.[42]

போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்காத சிலர் SLPP ஆதரவாளர்களின் மத்தியில் இருந்தனர். மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக மே 9 ஆம் திகதி அலரி மாளிகைக்குச் சென்ற பெண் ஒருவர் தான் காலி முகத்திடலில் போராட்டக்காரர்களைத் தாக்கிய குழுவுடன் சேரவில்லை எனக் குறிப்பிட்டார். ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகப் பேசியவர்களைப் போன்று இவர்கள் அதே மட்டத்தில் போராட்டக்காரர்கள் மீது வெறுப்பினையோ அல்லது அதிருப்தியினையோ காட்டவில்லை என்பதுடன் பொதுமக்கள் மத்தியிலான விழிப்புணர்வுக்குப் போதிய காரணங்கள் இருந்தன என்பதை ஏற்றுக்கொண்டனர். ஆனால் அதற்கு அப்பால் ஆளுகையில் இடையீடு செய்யுமளவுக்குப் போராட்டத்திற்கு முதிர்ச்சி உண்டு என இவர்கள் நம்பவில்லை.[43] எது எவ்வாறிருப்பினும், போராட்டமானது தமிழ்ப் புலம்பெயர் சமூகத்தினதும் வெளிநாட்டுச் சதித் திட்டங்களினதும் NGO நிகழ்ச்சிநிரலினதும் பலியாளாக மாறியது என்ற கருத்தினையே பலரும் கொண்டிருந்தனர்.[44]

பங்குபற்றுனர்களில் 4/5 பேர் இரண்டு அரசியல் முகாம் தொடர்பாகவும் விமர்சனக் கண்ணோட்டம் கொண்டிருந்ததுடன் போராட்டத்தினைப் பாராட்டத் தவறவில்லை. கணிசமான எண்ணிக்கையானவர்கள் ரணில் விக்கிரமசிங்க பற்றிய தமது கடுமையான அதிருப்தியினை வெளியிட்டனர். ஆனால் இந்த அரசாங்கத்தினை எதிர்ப்பதாயின் அதற்கு இன்னும் காலம் தேவைப்படலாம் என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டனர். அவர்கள் பகிர்ந்துகொண்ட கருத்துக்கள் சிக்கலானவையும் பல்வகைமையானவையுமாகும். அவர்களில் அதிகமானவர்கள் போராட்டத்திற்கான தலைமைத்துவத்தை எடுத்தவர்கள் எனப் பல்கலைக்கழக மாணவர்களை அடையாளப்படுத்தினர். ஆனால் வெகு சொற்பமானவர்களைத் தவிர, அவர்கள் ஒருபோதுமே அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் (IUSF) என்ற பெயரினைக் கேள்விப்பட்டதில்லை அல்லது ஒன்றியத்தினைக் குறிக்கப் பொதுவாகப் பயன்படுத்தப்படும் 'அந்தரே' என்ற பெயரைக் கூடக் கேள்விப்பட்டதில்லை.

> "பல்கலைக்கழக மாணவர்கள்தானே போராட்டத்தினை முன்னின்று நடத்தினார்கள்? அவர்கள் எமக்காகவே அதைச் செய்தார்கள், ஆனால் எம்மால் அதில் பங்கெடுக்கக் கூட முடியவில்லை. ஆனால் அவர்கள் நம் அனைவருக்காகவுமே அதைச் செய்தார்கள் என்பதை நாமறிவோம்.[45]"

போராட்டத்தில் அரசியல் கட்சிகளின் ஈடுபாட்டினை அவர்கள் மெச்சவில்லை. எவ்வாறாயினும், மக்கள் விடுதலை முன்னணியின் (JVP) ஈடுபாடு பற்றியும் சரத் பொன்சேகா போன்ற செயற்பாட்டாளர்கள் பற்றியும் சமகி ஜனபலவேகயவின் (SJB) ஆதரவாளர்கள் பற்றியும் அவர்கள் அரிதாகவே குறிப்பிட்டனர். தாம் அடுத்த தேர்தலில் JVP க்கு வாக்களிக்கப் போவதாக 12 பேர் நேரடியாகக் குறிப்பிட்டனர். மேலும் அச்சந்தர்ப்பத்தில் தமது கிராமங்களில் JVP எவ்வாறு முன்னெப்பொழுதும் இல்லாத அளவுக்கு ஆதரவினைப் பெற்றுவருகின்றது என்பது பற்றியும் அவர்கள் கூறினர். அவர்களில் அதிகமானவர்கள் "225 பேருக்கும் இல்லை" ("No to all 225") என்றே கூறினர். பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்யப்படாத அரசியல் கட்சிகளினதும் அரசியல் குழுக்களினதும் ஈடுபாடு பற்றி பதிலளித்தவர்கள்

சரியாக அறிந்திருக்கவில்லை. சொற்பமானவர்கள் புரன்ட்லைன் சோசலிஸ்ட் கட்சியின் பெயரினைக் குறிப்பிட்டனர். தான் பல தேர்தல்களில் அந்தக் கட்சிக்கு வாக்களித்ததாக ஒரு பெண் குறிப்பிட்டார். எவ்வாறாயினும், அவர்களைப் பொறுத்த அளவில், போராட்டம் என்பது இலங்கையின் அரசியல் முறைமை மீதான அதிருப்தியின் ஒரு வெளிப்பாடு என்பதுடன் அந்த அதிருப்தி பல்கலைக்கழக மாணவர்களினாலும் ஏனைய இளைஞர் குழுக்களினாலும் வெளிப்படுத்தப்பட்டது. அரசாங்கத்திற்கு எதிர்ப்புக் காட்டியதற்கு மேலதிகமாக, போராட்டக்காரர்கள் ஆளுகையில் சம்பந்தப்பட வேண்டும் என வெகு சொற்பமானவர்களே (50 பேரில் 03 பேர்) குறிப்பிட்டனர். ஆளுகை என்பது மிகவும் சிக்கலான செயன்முறை எனவும் அது போராட்டக்காரர்களின் நிபுணத்துவத்திற்கு அப்பாற்பட்டது எனவும் பலரும் நம்பினர். அவர்களின் கருத்துப்படி, மிகுந்த அனுபவமும் கல்வியறிவும் உடையவர்களே ஆளுகையில் இருக்கவேண்டும் என்பதுடன் அவர்கள் போராட்டக்காரர்களின் கருத்துக்களையும் உள்வாங்க வேண்டும். அதிகமானவர்கள் ரணில் விக்கிரமசிங்கவை ஓர் அரசியல் தலைவராக நிராகரித்த போதிலும் இச்சந்தர்ப்பத்தில் ஆட்சி செய்வதற்கு அவருக்கு மட்டுமே ஆற்றலும் சக்தியும் உள்ளது என்பதை ஏற்றுக்கொண்டனர்.

> "ரணில் ஆறு தடவைகள் பிரதமராக இருந்திருக்கின்றார் என நான் நினைக்கின்றேன். இத்தடவை ஓர் ஆசனத்துடனேயே அவர் பாராளுமன்றத்திற்கு வந்தார். என்றோ ஒரு நாள் ஜனாதிபதியாக வேண்டும் என்ற கனவு அவருக்கு இருந்தது. அதை அவர் எவ்வாறோ நிறைவேற்றிவிட்டார். நாம் அவரை விரும்பவில்லை என்பது உண்மைதான். ஆனால் அவர் அகத்தூண்டுதலளிக்கின்றார். மேலும், வெளிநாட்டு உதவிகளைப் பெறுவதற்கும் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் பாராளுமன்றத்தினைச் சமநிலைப்படுத்துவதற்கும் அரசாங்கத்தினை ஸ்திரப்படுத்தவும் எமக்கு உள்ள ஒரே ஒருவர் அவர்தான்."[46]

மற்றொருவரின் கருத்துப்படி, பாராளுமன்றத்தில் உள்ள 225 பேரும் கள்வர்களே. ஆனால் இந்தப் பொருளாதார நெருக்கடியினை வெற்றிகொள்வதற்கு அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த ஊழல் அற்ற குறைந்தது 20 பேர் ஒன்றுசேர்ந்து ஓர் அமைச்சரவையினை உருவாக்க வேண்டும்[47]. இச்சூழ்நிலையினை எதிர்கொள்வதற்கு அரசியல்வாதிகளுக்கு பதிலாக நிபுணர் குழு ஒன்றே தேவைப்படுகின்றது என ஏனைய சிலர் நினைத்தனர். இதேபோன்ற கருத்துக்களை வெளியிட்ட பதிலளித்தவர்களில் அதிகமானவர்கள் தாம் 2019 இல் SLFP இற்கு வாக்களித்ததாகக் குறிப்பிட்டனர். கோட்டாபயவுக்கு ஆதரவு வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட *"வியத்மகவினை"* விட இந்தக் குழு எவ்வாறு வித்தியாசப்படுகின்றது என்ற எமது கேள்விகளுக்கு பதிலளித்த அவர்கள், வியத்மகவில் உள்ளவர்கள் அவர்கள் மீது வைக்கப்பட்ட எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றவில்லை, எனவே தமது கடமைகளை உண்மையாக நிறைவேற்றக்கூடிய நிபுணர்களினதும் கல்வியியலாளர்களினதும் குழுவே எமக்கு இந்தத் தடவை தேவைப்படுகின்றது என அவர்கள் கூறினர்.

> "போராடுகின்ற இந்த மாணவர்களின் பின்னால் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் போன்ற நாட்டை நேசிக்கும் கற்றறிந்த மக்கள் உள்ளனர் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். அவர்கள் முன்வந்தால் அது சிறந்ததாக இருக்கும்."[48]

முன்னைய அரசாங்கத்தின் ஆட்சியினை விமர்சித்து (225 பாராளுமன்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கி) போராட்டத்தினை வலுவாகவும் இலகுவாகவும் நியாயப்படுத்தியவர்களிடம் போராட்டத்தின் வகிபாத்திரம் பற்றியும் இந்த அரசியல் வெற்றிடத்தில் மக்கள் பற்றியும் கேள்வி கேட்ட போது அவர்களின் மத்தியில் கனத்த மௌனம் நிலவியதை அவதானிக்க முடிந்தது. பலர் கூறினர், "இது இப்போது பாராளுமன்றத்தில் தீர்க்கப்பட வேண்டும். அப்போது ஒரு புதிய பாராளுமன்றத்தினைத் தேர்ந்தெடுக்க நாம் தேர்தலுக்குச் செல்ல முடியும்.[49] அதே பழைய 225 பேரினாலும் அடுத்த தேர்தலில் போட்டியிட்டு மீண்டும் வெற்றி பெற முடியுமா என நாம் கேட்டபோது எமக்குக் கிடைத்த பதில், 225 பேருக்கும் ஆரம்பத்தில் காட்டப்பட்ட எதிர்ப்புடன் பெரிதும் ஒத்துப் போகவில்லை.

> "உண்மை. நாம் என்ன கூறினாலும், இவர்களில் பலர் மீண்டும் பாராளுமன்றத்திற்கு வருவார்கள். எம்மால் அவர்களைப் பூரணமாக அகற்றிவிட முடியாது. நீண்ட காலம் பதவி வகித்தவர்களின் அனுபவம் எமக்குத் தேவை. ஆனால் திருடுவதைத் தடுப்பதற்கான ஒரு பொறிமுறை கட்டாயம்

இருக்கவேண்டும். இவர்கள் தான் நாட்டினை இந்தப் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளியவர்கள். இவர்களால் தான் இதனை மீண்டும் பழைய நிலைமைக்குக் கொண்டு வர முடியும். இவர்கள் திருடியதில் ஒரு பகுதியினைத் திரும்பத் தந்தாலே அது போதியதாக இருக்கும்”[50]

பொருளாதார நெருக்கடியில் இருந்தும் அரசியல் நெருக்கடியில் இருந்தும் மீளுவதற்கு முயற்சிக்கையில், முன்னைய ஆட்சியாளரைத் துரத்தியடிப்பதில் தீர்மானகரமான வகிபாத்திரத்தினை வகித்த பொதுமக்களைக் கருத்தில்கொள்வதற்கு பதிலாக, பதிலளித்தவர்களில் அதிகமானவர்கள் பாரம்பரிய தலைமைத்துவத்தினை வேண்டியும் பொதுப் புலமையாளர்களை வேண்டியும் பின்னோக்கியே சென்றனர். இவர்களின் கருத்துப்படி, பொதுமக்களால் தேசிய பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது ஆனால் தமது சார்பில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசியல்வாதிகளுக்கு அவர்களால் அழுத்தத்தினை வழங்க முடியும். சவால்களைத் தீர்ப்பதற்கு அரசியல்வாதிகளுக்கு அழுத்தம் கொடுப்பதும் அதனால் ஆளுகையில் சம்பந்தப்படுவதற்கு பதிலாக அவர்கள் தமது நாளாந்த வாழ்வினைத் தொடரக்கூடியதாக இருப்பதுமே போராட்டத்தில் இருந்து அவர்கள் எதிர்பார்த்ததாகும். அரசியல் செயன்முறையில் அதிக மக்களைச் சம்பந்தப்படுத்துவது நீடித்த அரசியல் குழப்பத்திற்கு இட்டுச்செல்லலாம்.

அவர்களின் கருத்துப்படி, அவர்களுக்கு அவசரமாகத் தேவைப்படுவது, அவர்களின் வாழ்வினைக் கொண்டு நடத்துவதற்காக ஓர் ‘உறுதியான’ அரசாங்கமே.

“எமது வாழ்க்கை பெரும் ஆபத்தில் உள்ளது. எமக்குச் சற்று நிவாரணம் தேவை. கோட்டாபய போய்விட்டார். ஆனால் யாராவது இதைத் தொடரவேண்டும். இல்லாவிடின், எமக்கென ஒரு நாடு இருக்காது. யாரும் இதைப் பொறுப்பேற்கவில்லை ஏனெனில் யாராலும் வேலை செய்ய முடியாது. இதை வலுப்படுத்த யாராவது வருவார் என நாம் காத்திருக்கின்றோம். இப்படியே எம்மால் தொடர முடியாது. நாம் மீண்டும் எமது அலுவல்களைப் பார்க்கவேண்டும்.”[51]

இவை அனைத்திலும் இழையோடும் ஒரு முக்கியமான விடயம், முனைப்பான குடிமை ஈடுபாட்டிற்கான தளத்தினை உருவாக்குவதற்குப் பதிலாகத் தமது பிரச்சினைகளையும் கஷ்டங்களையும் நன்கு நிலைபெற்ற அரசியல் கட்சிகளின் மூலமும் அரசியல் அதிகாரங்களின் மூலமும் தீர்ப்பதற்கான மக்களின் முதல் விருப்பமாகும். மறுபுறத்தில், நீண்ட கால ஈடுபாட்டிற்காகக் கடப்பாடு கொள்வதற்கான அவர்களின் இயலாமையும் ஆளுகை என்பது அறிவுடையவர்கள் மட்டுமே ஈடுபடுவதற்கான களம் என்பதும் அவர்களின் பதில்களில் பிரதிபலித்தன. இவர்களைப் பொறுத்தளவில், பொருளாதாரத்தினை மீட்பதும் நிறுவனங்களை மீளக் கட்டியெழுப்பி நாட்டை ஆளுவதும் போராட்டம் செய்வதைப் போல் யாராலும் செய்யக்கூடிய இலகுவான ஒன்றல்ல. பதிலளித்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் அவர்களின் செயலாண்மை இந்த விடயங்களில் முக்கியமானதாக இருக்கமுடியும் என நினைக்கவில்லை. அவர்களைப் பொறுத்தளவில் இது அவர்களின் கடமையல்ல. மாறாக, நாட்டில் அவர்கள் காணவேண்டும் என எதிர்பார்க்கும் மாற்றங்கள் பற்றிக் கேட்டபோது, வழமையான தேர்தல் வாக்குறுதி என்பதற்கு அப்பால் அவர்களால் எதையும் வெளிப்படுத்த முடியவில்லை. இவர்களில் அதிகமானவர்கள் ‘ஏதோ நல்லது’ நடக்கவேண்டும் என்றே நினைக்கின்றனர். ஆனால் இந்த நல்லது என்பது அவர்களைப் பொறுத்தளவில் என்ன என்பதைத் தெளிவுபடுத்தத் தவறிவிட்டனர்.

“அதைச் செய்யுமளவுக்கு நாங்கள் திறமையானவர்களல்ல. நாட்டிற்கு என்ன நடந்தது என்பதை எமக்கு விளக்குமாறு நாம் அவர்களைக் கேட்கின்றோம். நாம் உங்களுக்குச் சிறிது காலம் தருவோம் - என்று மட்டுமே எம்மால் கூறமுடியும். நீங்கள் என்ன செய்கின்றீர்கள் என்பதை நாம் பார்த்துக் கொண்டிருப்போம்.”[52]

“யார் தான் தவறு செய்வதில்லை. மக்கள் ஏதோ நல்லதைச் செய்ய முயற்சித்தார்கள். ஆனால் இறுதியில் எதுவும் உண்மையில் மாறவில்லை. போராட்டக்காரர்களோ அல்லது ஒட்டுமொத்தப் புதிய தலைமுறையோ முன்வந்து எமக்குச் சில பதில்களைத் தரவேண்டும் என நான் இப்போது நினைக்கின்றேன். அவர்களிடமும் பதில் இருப்பதாகத் தெரியவில்லை. அதிகாரத்தில் இருப்பவர்கள் பழைய ஆட்டத்தினையே மீண்டும் ஆடிக்கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் யாரைப் பற்றியும் நாம் மகிழ்ச்சியடையவில்லை. தேர்தலில் மக்கள் மாற்றத்தினை ஏற்படுத்தலாம்.

> ஆனால், நாம் தேர்ந்தெடுப்பதற்கு யார் இருக்கின்றார்கள்?"[53]

அரசியலிலும் ஆளுகையிலும் ஈடுபடுவதற்கு மக்கள் காட்டும் தயக்கம் பற்றி உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் ஒருவர் கருத்துரைத்தார்.

> "ஒரு பொது மன்றிலே எமது மக்கள் அவர்களின் கைகளை உயர்த்துவதற்குக் கூடத் தயங்குகின்றனர். கிராமக் கூட்டத்தின் கூட்ட அறிக்கையினை நிறைவேற்றுவதற்குக் கைகளை உயர்த்துமாறு நாம் மக்களைக் கேட்டால் கூட, 100 பேர் இருக்கும் சபையில் 2 அல்லது 3 பேரே அவர்களின் கைகளை உயர்த்துவார்கள். பின்னர் யாராவது இணங்காமல் இருக்கின்றார்களா என நாம் கேட்போம். இணங்கவில்லை என்றும் யாரும் சொல்ல மாட்டார்கள். இணக்கமின்மை இல்லாத காரணத்தினால் எல்லோரும் இணங்குகின்றார்கள் என நாம் நினைத்து கூட்ட அறிக்கையினை ஏற்றுக்கொள்கின்றோம். இவ்வாறான மக்கள் அரசியலில் முனைப்பாக ஈடுபடுவார்கள் என நீங்கள் நினைக்கின்றீர்களா? அவர்கள் தங்களின் பாரம்பரியக் கட்சிக்கு வெளியே வாக்குப் போட மாட்டார்கள்."[54]

## வாக்கு வங்கியினைக் கொண்டுள்ள பிரதான அரசியல் கட்சிகள் ஆதரவாளர் (போகஷகர்) - வாடிக்கையாளர் உறவினையே பேணுகின்றன

ஆரம்பத்தில் இந்த ஆய்விலே ஆராயப்படுவதற்கான ஒரு விடயமாக இது அடையாளப்படுத்தப்படாமல் இருந்தாலும், நேர்காணல்களில் இது பல்வேறு வழிகளில் தொடர்ச்சியாகக் கோடிட்டுக்காட்டப்பட்டது. நிச்சயமின்மை, அடக்குமுறை மற்றும் நாடு அராஜக நிலைக்குத் தள்ளப்படல் போன்ற பல காரணங்களினால் மக்கள் தங்களைப் போராட்டத்திலிருந்து தூரப்படுத்தியிருக்கலாம். எவ்வாறாயினும், இரண்டு பிரதான அரசியல் கட்சிகளுக்கும் மக்கள் பாடம் புகட்டுவார்கள் என்றே பலரும் நம்பினர் (JVP க்கு வாக்களிப்பதன் மூலம், அல்லது போராட்டத்திலிருந்து உருவாகும் ஒரு குழுவிற்கு வாக்களிப்பதன் மூலம் அல்லது யாருக்குமே வாக்களிக்காமல் விடுவதன் மூலம், ரணிலின் UNP, மற்றும் ராஜபக்ஷ குடும்பத்துடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் மற்றும் SLFP). இவையே வெளிப்படுத்தப்பட்ட அபிப்பிராயங்களில் உள்ளடங்கியிருந்தன. ஆனால் தேர்தலின் போது மக்களின் நடத்தை தொடர்பாகக் கலந்துரையாடிய போது, பிரதான கட்சிகளைச் சேர்ந்த அரசியல்வாதிகள் (குறிப்பாக, SLPP மற்றும் SLFP இனைச் சேர்ந்தவர்கள்) முன்னரைப் போல் கீழ் மட்டங்களில் முனைப்பாக இல்லை எனவும் அவர்கள் தங்களின் வழமையான அரசியலுக்குத் திரும்பினால் மக்கள் சுதந்திரமாக இருந்திருக்கலாம் எனவும் அதிகமானவர்கள் குறிப்பிட்டனர்.

> "SLFP ஆட்களுக்கு இனி எமது கிராமத்திற்கு வர முடியாது. வந்தால் மக்கள் அவர்களைத் துரத்தியடிப்பார்கள். அவர்கள் தங்களின் அரசியலை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ரணிலைப் பயன்படுத்த முயற்சிக்கின்றார்கள். காலப்போக்கில் அது சாத்தியமாகும். ஆனால் அவ்வாறு நடந்தால், விடயங்கள் மாறும். அவர்கள் பணத்தினையும் பொருட்களையும் விநியோகிக்க ஆரம்பிப்பார்கள். அவர்கள் தங்களின் அடியாட்களின் உதவியுடன் பிரச்சாரங்களில் ஈடுபட்டு எல்லா இடங்களிலும் பொக்கட் கூட்டங்களை நடத்திப் பிரசுரங்களை விநியோகிப்பர் அல்லது வாக்குறுதியளிப்பர். அது நடக்கையில், மக்கள் அதே வாக்களிக்கும் பாணியினைப் பின்பற்றுவர்."[55]

கீழ் மட்டங்களில் ஒழுங்கமைப்பினை மேற்கொள்வதற்குப் பிரதான அரசியல் கட்சிகள் ஒரு விசேட செயன்முறையினைப் பின்பற்றுவதாகப் பலரும் குறிப்பிட்டனர். பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் நான்கரை வருடங்கள் தொடர்ந்து சம்பாதிப்பதற்காக அவர்களின் அதிகாரம், பதவி மற்றும் அரசியல் வலையமைப்பினைப் பயன்படுத்தி, கடைசி ஆறு மாதங்களில் தங்களின் தேர்தல் தொகுதிக்கு வந்து, அடுத்த நான்கரை வருடங்களுக்காக மக்களின் வாக்குகளை வாங்குவதற்காகத் தமது பாரிய செல்வத்தில் இருந்து சொற்பமானதை விநியோகிப்பார்கள் என ஒருவர் குறிப்பிட்டார்.[56] இவ்வாறு செலவழிக்கும் பணம் உண்மையிலேயே அரசியல்வாதிகளுக்குச் சொந்தமானதல்ல ஆனால் அவர்களின் பதவியினைத் தவறாகப் பயன்படுத்தி அவர்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்ட அரச பணத்தினை அவர்கள் பெற்றுக்கொண்டதால் திரட்டிக்கொண்டதாகும் என மற்றொருவர் குறிப்பிட்டார்.[57]

‘பணத்தினையும் பொருட்களையும் விநியோகித்தல்’ என்ற சொற்பதத்தினை அவர்கள் பயன்படுத்தினாலும் மக்களின் வாக்கினைப் பெறுவதற்காக மக்களுக்கு உதவி வழங்குவதைப் போன்று அது எளிமையானதல்ல. இந்த ஆதரவாளர் - வாடிக்கையாளர் முறைமையினைப் பேணிக் கண்காணிப்பதற்கு அவர்கள் மிகச் சிக்கலான பொறிமுறையினைக் கொண்டுள்ளனர். இது உள்ளூர் அரசியல்வாதிகளாலும் அவர்களின் அரசியல் மற்றும் வியாபாரத் தொடர்புகள் மூலம் உருவாக்கப்பட்ட வலையமைப்புக்களாலும் நிர்வகிக்கப்படும் ஒரு பொறிமுறையாகும். இதன் மையத்தில் அரசியல் கட்சியின் கிராமக் குழுக்கள் காணப்படுகின்றன. உள்ளூராட்சி அரசியல்வாதிகள் இதற்குத் தலைமைதாங்குவதுடன் சமூக ரீதியாக முனைப்பான பல்வேறு தனிநபர்கள் இக்கட்டமைப்புடன் பணியாற்றுகின்றனர். இவர்கள் உள்ளூரிலுள்ள மரண உதவிச் சங்கங்களுடனும் இளைஞர் சங்கங்களுடனும் நலன்புரிச் சங்கங்களுடனும் சமுர்த்திச் சங்கங்களுடனும் நெருக்கமாகப் பணியாற்றுகின்றனர். தேர்தல்கள் இல்லாத காலங்களில் இந்த அமைப்புக்கள் சமூக நலன்களில் கவனம் செலுத்துகின்றன. இவ்வாறான நேரத்தின் போது, ஓர் அரசியல்வாதியை யாராவது அணுகுவதற்கு விரும்பினால் அது இந்தச் சமூகச் செயற்பாட்டாளர்களான பகுதியளவில் அரசியல் சார்ந்த செயற்பாட்டாளர்களின் மூலமே இடம்பெறுகின்றது. இவர்கள் சில நேரங்களில் உள்ளூர் அரசியல்வாதிகளிடம் இருந்து நன்மைகளையும் பெறுகின்றனர் (உள்ளூராட்சி அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான கேள்வி மனுக்கள் போன்றவை). அரசியல்வாதிகளை அணுகமுடியும் என்பதற்காக எவ்வித பொருள் ரீதியான நன்மைகளும் இன்றி அரசியல் கட்சிகளின் இந்தக் கிராம மட்டக் குழுக்களில் ஈடுபடுவதற்குச் சிலர் தம்மை அர்ப்பணித்துள்ளனர். இது ஒருவருக்கான அடையாளத்தினை உருவாக்கவும் கிராமத்தவர்களின் மத்தியில் பிரபலமாகுவதற்கும் வாய்ப்பினை உருவாக்குகின்றது.

தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகள் இத்தனிநபர்களை மேற்குறிப்பிட்ட வலையமைப்புக்களின் மூலம் பணிக்கமர்த்துகின்றனர். தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களை ஏற்பாடு செய்தல், சுவரொட்டிகளை ஒட்டுதல், பிரச்சாரம் செய்தல் போன்ற தேர்தல் நடவடிக்கைகள் இவர்களின் மூலமே ஏற்பாடு செய்யப்படுகின்றன. பிரதேசத்தில் பணியாற்றிய இவர்களின் அனுபவத்தின் காரணமாகக் குடும்பங்களின் அரசியல் சார்புகள் பற்றியும் கட்சிக்கு எந்த வாக்குகள் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் எந்த வாக்குகளைத் தமக்குச் சார்பாக மாற்றிக்கொள்ளலாம் என்பதையும் இவர்கள் அறிந்துள்ளனர். மக்களின் தேவைகள் பற்றியும் ஒவ்வொரு பிரதேசத்திலும் தேவைப்படும் பொது உட்கட்டமைப்புப் பற்றியும் இவர்கள் அறிந்துள்ளனர். இதற்கமைவாக, இந்தத் தேவைகளை அரசியல்வாதிகளின் மூலம் நிறைவேற்றித் தருவதாக இவர்கள் அரசியல் கூட்டங்களில் வாக்குறுதியளிக்க முடியும் அல்லது அவர்கள் இவற்றினை விரைவாக நிறைவேற்றச் செய்கின்றனர். இந்தக் கூட்டங்களில் உதவி விநியோகம் கூட நடைபெறுகின்றது. ஒவ்வொரு வட்டாரத்திலும் தங்களின் கட்சி பெற்றுக்கொள்ளும் வாக்குகளின் அன்னளவான எண்ணிக்கையினையும் இச்செயற்பாட்டாளர்கள் எதிர்வுகூறுகின்றனர். இந்த வலையமைப்புக்களை உயிர்ப்புடனும் முனைப்புடனும் வைத்திருப்பதற்காகக் காலத்திற்குக் காலம் பொது நிதியினைப் பயன்படுத்தி உள்ளூர் அபிவிருத்திக் கருத்திட்டங்களின் திறப்பு விழாக்களும் அத்திவாரமிடும் வைபவங்களும் நடத்தப்படுகின்றன.

> “தேர்தல் அண்மிக்கையில், விளையாட்டுக் கழகம் கூடுகின்றது. நிர்வாக சபை உறுப்பினர்கள் 150 இளைஞர்களைச் சேர்க்கின்றனர். அமைச்சர் கூட்டத்திற்கு வந்து 50,000 ரூபாவினை நன்கொடையாக அளித்து தேர்தலில் வென்றால் கரப்பந்தாட்டத் திடல் போன்ற ஏதோ ஒன்றினை வழங்குவதாக வாக்குறுதியளிக்கின்றார். இந்த இளைஞர்கள் பிரச்சாரத்தில் ஈடுபட்டு சுவரொட்டிகளை ஒட்டத் தொடங்குகின்றனர். இவர்களுக்குத் தாராளமாக உணவும் குடிபானமும் வழங்கப்படுகின்றன. தேர்தலின் பின்னர் இவர்களில் சிலருக்குக் குறைந்த தரத்திலான அரசாங்க உத்தியோகம் கிடைக்கின்றது. பதிலாக அந்த அரசியல்வாதிக்கு இவர்கள் தங்கள் குடும்பத்தினை வாக்களிக்கச் செய்கின்றனர்.”[58]

இதேபோன்று, தேர்தல் காலங்களில் மக்கள் விஜயம் செய்கையில் பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் மையங்களாகக் கட்சி அலுவலகங்களும் உள்ளூர் அரசியல்வாதியின் வீடும் மாறுகின்றன. நீர்கொழும்பைச் சேர்ந்த நபர் ஒருவர் குறிப்பிடுகையில், தேர்தலுக்குக் கிட்டத்தட்ட ஒரு மாதம் இருக்கையில் பிரதேசத்தினைச் சேர்ந்த பிரபலமான அரசியல்வாதி ஒருவர் நாளொன்றுக்கு

பத்து இலட்சம் ரூபா செலவழித்து மக்களுக்குப் பல்வேறு உபசாரங்களையும் பணத்தினையும் ஏனைய வசதிகளையும் வழங்குவதாகத் தெரிவித்தார்.[59] இவ்வாறான சந்தர்ப்பங்களில், உள்ளூர் அரசியல்வாதிகளும் கிராமக் குழுக்களின் உறுப்பினர்களும் உள்ளூரில் முனைப்பாகச் செயற்படும் தனிநபர்களும் அரசியல்வாதிகளுக்கும் மக்களுக்கும் இடையில் சந்திப்பினை ஒருங்கிணைக்கின்றனர்.

தேர்தல்களின் போது அரசியல்வாதிகளிடம் இருந்து நன்மைகளைப் பெற்ற பின்னர் தாம் விரும்பும் எந்தக் கட்சிக்கும் வாக்களிப்பது மக்களுக்கு இலகுவானதல்ல. பெண் ஒருவர் பின்வருமாறு கருத்துரைத்தார்:

> "அமைச்சர்தான் போட்டியிடுகின்றார். ஆனால் நாங்கள் உள்ளூர் அமைப்பாளருக்குத்தான் வாக்களிக்கின்றோம். அவர்தான் எம்முடன் எப்போதும் இருக்கும் மனிதர். எங்களுக்கு உதவக்கூடிய மனிதர் அவர்தான். நாம் வேறு யாருக்காவது வாக்களித்தால் எவ்வாறு நாம் அவரின் முகத்தில் விழிப்பது."[60]

> "எமது பிரதேசத்தில், யாருக்கு யார் வாக்களிக்கின்றனர் என்பதைக் கிராம அமைப்பாளர் நன்கறிவார். ஒவ்வொரு வீடும் எவ்வாறு வாக்களிக்கும் என்பது அவருக்குத் தெரியும். எந்தளவுக்கு என்று சொன்னால், பிரச்சாரத்தின் போது தங்களின் கட்சிக்கு வாக்களிக்காத வீடுகளுக்கு அவர்கள் வரக்கூட மாட்டார்கள். தலைமுறைகளாக மக்கள் எவ்வாறு வாக்களித்துள்ளனர் என்பதன் அடிப்படையில் மக்கள் ஏற்கனவே வகைப்படுத்தப்பட்டுள்ளனர். உங்களுக்கு ஏதாவது செய்யப்பட வேண்டுமாயின், உங்களின் கட்சி ஆட்சிக்கு வரும் வரை நீங்கள் காத்திருக்க வேண்டும். உங்களின் குடும்பத்தின் முதல் விருப்பத்திற்கு வெளியே நீங்கள் வாக்களித்திருந்தாலும் இதே நிலைதான். யாரும் உங்களை நம்பமாட்டார்கள். நீங்கள் இதைச் செய்வதென்றால், நீங்கள் மற்றைய கட்சிக்குப் பகிரங்கமாக அர்ப்பணிப்புடன் வேலை செய்யவேண்டியிருக்கும். அவ்வாறு செய்தால் நீங்கள் விமர்சிக்கப்பட்டுக் கேலிசெய்யப்படுவீர்கள்."[61]

தனது தெருவில் உள்ள ஒருவர் வேறொரு வேட்பாளருக்கு வாக்களித்தால், அவர்கள் அதைக் கண்டுபிடிப்பார்கள் என மற்றொருவர் நம்புகின்றார். "எனக்குத் தெரியாது எவ்வாறு என, ஆனால் அவர்களுக்குத் தெரியவரும்" என அவர் கூறினார்.[62] அவரின் கருத்துப்படி, ஒவ்வொரு குடும்பமும் எவ்வாறு வாக்களிக்கும் என்பது உள்ளூர்ப் பிரதிநிதிக்குத் தெரியும் என்பதாலும் அவர்கள் வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்குகளின் கணக்கினை வைத்திருக்கின்ற காரணத்தினாலும், யாருடைய வாக்குக் குறைந்துள்ளது என்பதை அவர்களால் இலகுவாக ஊகிக்க முடியும். தான் எக்கட்சியினால் நன்மையடைந்தாரோ அந்தக் கட்சியினை விட்டு வெளியே செல்வதற்குப் பலருக்கும் தைரியம் இல்லை. பிரதான அரசியல் கட்சியின் பொறிமுறை, வாக்காளரின் உள்மனதில் அச்சத்தின் மூலமும் வெட்கத்தின் மூலமும் நன்றியுணர்வு மூலமும் செல்வாக்குச் செலுத்துகின்றது.

போராட்டத்தின் காரணமாகப் பிரதான கட்சிகளின் கீழ் மட்ட அணிதிரட்டல் ஸ்தம்பித்துள்ளது எனக் கலந்துரையாடியவர்களில் அதிகமானவர்கள் குறிப்பிட்டனர்.

> "பிரதான அரசியல் கட்சிகளின் அடியாட்கள் இப்போது அமைதியாக உள்ளனர். ஆனால் போராட்டக்காரர்களை ரணில் அடக்குவதற்கு முயற்சிப்பதால் அவர்கள் மெதுவாக வெளியே வருகின்றனர். இது இன்னுமொரு வருடத்திற்குத் தொடர்ந்தால், அவர்கள் தங்களின் நாடகத்தினை மீள ஆரம்பிப்பார்கள்."[63]

## முடிவுரை

எழுமாறாகத் தெரிவுசெய்யப்பட்ட 50 தனிநபர்களின் அபிப்பிராயத்தினை ஒட்டுமொத்தச் சமூகத்தினதும் அபிப்பிராயமாகப் பொதுமைப்படுத்த முடியாது என்பதை நாம் ஏற்றுக்கொள்ளும் அதேவேளை, இந்த நேர்காணல்களில் உள்ளடங்கியுள்ள பொதுவான இயங்கியலும் அபிப்பிராயங்களும் இலங்கைச் சமூகம் கட்சி அரசியலைக் கையாளும் விதத்தினைக் காட்டுவதுடன் இந்த நாட்டில் எதிர்கால அரசியல் போக்குகள் தொடர்பாக நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டிய போக்குகளையும் காட்டுகின்றன. இந்த ஆய்வு அவ்வாறான போக்குகள் பற்றிய சில குறிப்பினை வழங்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம். இலங்கைச் சமூகத்தின் சிந்தனையின் மீது போராட்டம் கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பதை நேர்காணல்கள் வெளிக்கூறின. நாம்

கூர்மையாகக் கவனம் செலுத்திய முதலாவது விடயம் இலங்கையிலுள்ள இரண்டு பாரம்பரிய அரசியல் முகாம்கள் தொடர்பான கருத்துக்களாகும். நாம் இதில் அவதானம் செலுத்தினால், தேசியவாதம், இனத்துவம், நெறிமுறைகள், கலாசாரம், ஏகாதிபத்தியத்துக்கு எதிரான நிகழ்ச்சிநிரல், கிராமிய விழுமியங்கள் போன்ற SLFP/SLPP செயற்பாட்டாளர்களினால் ஊக்குவிக்கப்பட்ட சித்தாந்தங்கள் அரசியலில் இன்னும் தீர்மானகரமான வகிபாத்திரத்தினை வகிப்பது மிகத் தெளிவாகத் தெரியவரும். மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான SLP மேற்குறிப்பிட்ட கருத்துக்களின் தொகுதியினைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஆற்றலை இழந்துவிட்டது என்பது இது தொடர்பிலான எமது அவதானிப்பாகும். ஆனால், UNP க்கு / ரணில் விக்கிரமசிங்க நிர்வாகத்திற்கு எதிராக மக்களைத் திருப்பிவிடத்தக்க வகையில் இக்கருத்துக்கள் சுலோகங்களாகத் தொடர்ந்தும் நிலவிவருகின்றன. இந்தக் கருத்துக்களின் உருவமாக எந்தக் கட்சி மற்றும் எந்தத் தலைவர் மாறுவர் என்பது இன்னும் தெளிவற்றதாக உள்ளது. இந்தக் கருத்துக்களின் அருகதைமிக்க பிரதிநிதியாக மாறி அதனைத் தான் ஆட்சிக்கு வருவதற்கான தனது அரசியல் உபாயமார்க்கமாக எந்தக் கட்சியோ அல்லது தலைவரோ மாற்றுவதற்கான அவகாசம் சமூகத்தில் இன்னும் திறந்தே உள்ளது.

இரண்டு பிரதான அரசியல் கட்சிகளாலும் மக்கள் அதீத விரக்திக்கு உள்ளாகியுள்ளனர். இவ்வாறான சூழமைவில், மக்கள் அவர்களின் வாக்குகளை வித்தியாசமாகப் பாவித்து அவர்களின் பாரம்பரிய வாக்களிக்கும் பாங்குகளை உடைப்பதற்கான அவகாசம் உள்ளது. பாரம்பரியப் பெரும்போக்குக் கட்சிகளை விமர்சித்து JVP பெற்றுக்கொண்ட அவதானத்தினையும் நேர்காணல்களில் சான்றாகக் காண முடிந்தது.

நன்கு நிலைபெற்ற அரசியல் முகாம்களுக்கு வெளியே மக்கள் வாக்களிப்பதைத் தடுப்பதற்காகப் பாரம்பரிய செயற்பாட்டாளர்களினால் எந்த அளவுக்கு போஷகர் - வாடிக்கையாளர் உறவு பேணப்பட்டு வருகின்றது என்பது ஒரு முக்கியமான காரணியாக உருவானது. பிரதான கட்சிகளின் கீழ் மட்ட அரசியல் செயற்பாடு தற்போது பலவீனமடைந்துள்ளது. ஆனால் பிரதான கட்சிகளின் கீழ் மட்டச் செயற்பாடுகளின் பிரசன்னமும் ஈடுபாடும் காலப்போக்கில் உறுதியானதாக மாறும் என மக்கள் நம்புகின்றனர். ரணில் விக்கிரமசிங்கவின் ஜனாதிபதி ஆட்சியின் கீழ் இது ஏற்கனவே அவதானிக்கப்படுகின்றது. பிரதான அரசியல் கட்சிகளின் கீழ் மட்ட அரசியல் செயற்பாட்டியம் செல்வத்துடனும் அரச அதிகாரத்துடனும் பொது நிதியினைக் கையாளுவதற்கான ஆற்றலுடனும் உள்ளூர் வலையமைப்புக்களுடனும் உள்ளூர் மட்டத்திலான மேட்டிமை அதிகார உறவுகளுடனும் தொடர்புபட்டுள்ளது. பிரதான அரசியல் கட்சிகளினுள் வேரூன்றியுள்ள இந்தப் போஷகர் - வாடிக்கையாளர் முறைமைக்குச் சவால் விடுக்காமல் மரபுசாரா அரசியல் சக்தி ஒன்று வலுவான வெற்றியினை அடைவதை எண்ணிப் பார்ப்பது சாத்தியமற்றதாகும்.

அண்மையில் நடத்தப்பட்ட விரிவுரை ஒன்றில், சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையில் அரசியல் ‘ஸ்திரத்தன்மையில்’ செல்வாக்குச் செலுத்திய காரணிகளை நிர்மல் ரஞ்சித் தேவசிறி கோடிட்டுக்காட்டியுள்ளார் (அதாவது: ஜனநாயகத் தேர்தல்களின் மூலம் இரண்டு கட்சிகளுக்கிடையில் சுமுகமான அதிகார இடைமாற்றம்). அரசியல் செயன்முறையில் மேட்டுக்குடியினரின் ஆதிக்கம் பற்றி அவர் சமர்ப்பணம் மேற்கொண்டார். அரசியல் கட்சி முறைமையினுள் சமநிலையினை ஆழப்படுத்தும் முறைமை, பிரதான அரசியல் கட்சிகளுடன் நெருக்கமாக இணைந்துள்ள அரசியல் பழமைவாதம் மற்றும் தேர்தல் அரசியலில் நவ நிலமானிய உறவுகளின் வலையமைப்பு ஆகியவை இலங்கைச் சூழமைவில் நிலவும் பிரதான காரணிகளில் சிலவாக இருக்கின்றன (தேவசிறி, 2022).

நிலவுகின்ற பாரம்பரிய அரசியல் எல்லைகளுக்கு வெளியே வாக்களிப்பதைத் தடுப்பதற்கான பொறிமுறைகளாக வேரூன்றியுள்ள காரணிகள் பற்றிய புரிதல் எமது கலந்துரையாடல்களில் இருந்து உருவானது. இந்தத் தடை அரசியலில் பிரஜைகள் முனைப்பான வகிபாத்திரம் வகிப்பதில் இருந்தும் அவர்களைத் தடுக்கின்றது. இந்தக் கூறுகளைச் சவாலுக்குட்படுத்திய செயன்முறையாகப் போராட்டம் இருந்ததுடன் தற்பொழுதும் இருக்கின்றது. ஆனால், மக்களின் அபிப்பிராயத்தில், இந்த அரசியல் கட்சிகள் தற்காலிகமாக அபகீர்த்திக்கு உட்படுத்தப்பட்டாலும் மீண்டும் சக்திவாய்ந்தவையாக மாறிவருகின்றன.

இரண்டு பிரதான அரசியல் கட்சிகளுக்குமான ஒரு மாற்றீடாகத் தேர்தல் அரசியலில் வெற்றியீட்டுவதற்கு முயற்சிக்கின்ற கட்சிகள் எதிர்நோக்கும் பிரதான சவால் இதுவாகும். 2015 தேர்தல்களில் அதிகாரத்துக்கான அதீத எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருந்த JVP யைச் சேர்ந்த ஹரினி அமரசூரியவின் கருத்துப்படி, அத் தேர்தலில் JVP க்கு ஆறு ஆசனங்கள் மட்டுமே கிடைத்ததற்குக் காரணம் போஷிப்பு அரசியலைச் சுற்றியுள்ள அரசியல்

எதிர்பார்ப்புக்களை JVP பூர்த்திசெய்யவில்லை என்பதை மக்கள் உணர்ந்தமையாகும். போஷிப்பின் (ஆதரவின்) நலன்களுக்கு மக்கள் பழக்கப்பட்டுவிட்டதாகத் தெரிகின்றதுடன் அதனை அவர்கள் எதிர்பார்ப்பதாகவே தெரிகின்றது (அமரசூரிய 2021, 1-22)

அவரின் கருத்துப்படி, போஷகர் - வாடிக்கையாளர் உறவு என்பது இலங்கை அரசியலில் அதீத முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

> "சமூகப் பாதுகாப்பும் நலனோம்புகை நடவடிக்கைகளும் வலுவாக அகற்றப்பட்டதால், வளங்களை அணுகக்கூடியதாக இருப்பதற்கு மேட்டுக்குடியினருடனான தொடர்புகள் மிகவும் முக்கியமானவையாகும். வரையறுக்கப்பட்ட அரச துறைத் தொழில்களை அணுகல், பிரபலமான பாடசாலையில் பிள்ளையைச் சேர்த்தல், அரச வைத்தியசாலையில் முன்னுரிமை பெறுதல், அவசியமான உரிமங்களைப் பெறல் அல்லது வெறுமனே சட்டத்தினை மீறுவதற்கு அனுமதிக்கப்படுவது போன்றவை இந்த முக்கியமான இணைப்புக்களையும் தொடர்புகளையும் கொண்டிருப்பதில் அதிகரித்த அளவில் தங்கியுள்ளது" (அமரசூரிய 2021, 13)

இருப்பினும், பிரதான அரசியல் கட்சிகளால் பேணப்படும் போஷகர் - வாடிக்கையாளர் உறவுகளின் வலையமைப்பு போராட்டத்தின் காரணமாகப் பலவீனமடைந்துள்ளது. இது இப்போது மீளவும் ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றது என மக்கள் உணர்கின்றனர். இதற்கமைய, இந்தத் தடவையும், பிரதான அரசியல் கட்சிகளுக்குச் சவால் விடுக்கும் எந்த அரசியல் இயக்கமும் இந்த நாட்டின் தேர்தல் அரசியலிலுள்ள போஷகர் - வாடிக்கையாளர் உறவினை முறியடிக்கும் சவாலுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும்.

நிலவிய ஆட்சிக்குச் சவால் விடுக்கும் ஓர் அலையாக எழுந்த போராட்டம் அமைச்சரவையின் இராஜினாமாவுடன் உத்வேகம் பெற்று கோட்டாபய ராஜபக்ஷவின் இராஜினாமாவுடன் உச்சம் தொட்டது. ஆனால் இப்போது அதன் வலு நீர்த்துப்போகச் செய்யப்பட்டுள்ளது. அதன் தீவிரம் குறைந்து நாட்டினை ஓர் அராஜக நிலை சூழ்ந்துள்ள ஓர் உணர்வு எங்கும் வியாபித்துள்ளது. மக்கள் முன்னைய ஆட்சியினை எதிர்த்தாலும் அவர்கள் ஒரு புதிய அரசியல் முறைமையில் தலையிட்டுப் பங்குபற்றுவதற்குத் தயாராக இல்லை. இவ்வாறான முறைமையில் சம்பந்தப்படுவதற்குத் தாம் சிறப்பான தகைமையுடையவர்கள் என அவர்கள் நினைக்கவில்லை. கற்றறிந்தவர்கள், சக்திவாய்ந்தவர்கள், அரசியல் ஞானமிக்கவர்கள் மற்றும் அவசியமான முதிர்ச்சியினையும் அறிவினையும் ஆற்றலையும் கொண்டவர்கள் இப்பணிக்குப் பொறுப்பானவர்கள் என அவர்கள் நம்புகின்றனர். அவர்கள் அரசியல் தலைமைத்துவத்தினை எவ்வளவு விமர்சித்தாலும் பரவாயில்லை, அவர்கள் இன்னும் பாரம்பரிய அரசியல் தலைமைத்துவத்தினை நம்புகின்றனர். பாரம்பரிய அரசியல் தலைமைத்துவத்தினால் மட்டுமே ஆளுகை பற்றிய, பொருளாதாரம் பற்றிய, மத்திய வங்கி பற்றிய, வெளிநாட்டு உறவுகள் பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ள முடியும் என்றும் தொடர்புடைய நிறுவன முறைமைகளைக் கையாள முடியும் என்றும் பலரும் நம்புகின்றனர். அரசியல் என்பது மேட்டுக்குடியினரின் கடமையாக உள்ளது என்ற கருத்தின் வெளிப்பாடே இதுவாகும். தேர்தல்களில் வாக்களிப்பதைத் தவிர, போராட்டத்திற்கு அப்பால் அரசியல் அதிகாரத்தினைக் கையாளுவதற்கும் அதில் தலையிடுவதற்கும் மக்கள் குறைந்த அளவே தயாராக உள்ளனர்.

கீழ் மட்டத்திலிருந்து அரசியல் நிறுவனங்களைக் கையாளுவதற்குத் தமது குடிமை அதிகாரங்களைப் பயன்படுத்தும் முனைப்பான பிரஜைகள் குழுமத்தினை உருவாக்குவதன் மூலமே இந்த மேட்டிமைச் சார்புச் சிந்தனை வடிவத்திற்குச் சவால் விடுக்க முடியும். பாராளுமன்ற அரசியலுக்கு அப்பால் தமது குடிமை அதிகாரங்களைப் பயன்படுத்தும் முனைப்பான பிரஜைகள் குழுமத்தினை உருவாக்க முயற்சிக்கும் கட்சிகளுக்கு இது உண்மையான சவாலாகும். இது வெவ்வேறு மட்டங்களில் பயன்படுத்தப்படவுள்ள பிரஜைகள் ஈடுபாட்டுக்கான சிக்கலான மற்றும் புத்தாக்கமிக்க அரசியல் அணுகுமுறையினைத் தேவைப்படுத்தும் ஒரு நீண்ட கால மற்றும் கடினமான செயன்முறையாகும். தலைவர்களின் கரங்களில் இருந்து அரசியலை அலாக்காக எடுத்து அதனைச் சாமான்யர்களின் கரங்களுக்கு மாற்றுவதற்குத் தேவைப்படுவது இதுதான்.

# *Endnotes*

[1] கள நேர்காணல்களை ஏற்பாடு செய்து ஒருங்கிணைத்த வகிபாகத்திற்காக நாம் எமது விசேட பாராட்டுக்களை எம். கே. ஜயதிஸ்ஸ, சுனெத் குமார, அதுல திசாநாயக்க, ரஞ்சன் பெர்ணாண்டோ, பிரதீப் சுதர்சனி, ரசிக பாலசூரிய, டபிளியு. அஜித், மற்றும் லஹிரு மதுசங்க ஆகியோருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். இந்த ஆய்வினை உருவாக்குவதற்கு வழங்கிய உதவிக்காக சட்டம் மற்றும் சமூக நம்பிக்கையின் நிறைவேற்றுப் பணிப்பாளரான கலாநிதி சகுந்தலா கதிர்காமர் அவர்களுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தொழிற்பாடுகளின் பணிப்பாளரான சந்துன் துடுகலவுக்கும் ஆய்வாளர்கள் தமது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

[2] “அரகலய” அல்லது “போராட்டம்;” என்பது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் அவரின் அரசாங்கத்திற்கும் எதிராக நடந்தேறிய தனிமைப்படுத்தப்பட்ட போராட்டங்கள் 2022 ஏப்ரில் 09 முதல் காலி முகத்திடலில் பாரிய பொதுமக்கள் போராட்டமாகப் படிப்படியாக வளர்ச்சியடைந்த காலப்பகுதியினைக் குறிக்கின்றது. இதற்கென ஒதுக்கப்பட்ட போராட்டத் தளத்திற்குப் போராட்டக்காரர்களால் “கோட்டா கோகம” என மீள்பெயரிடப்பட்டது. அன்றிலிருந்து போராட்டம் “அரகலய” எனப் பெயரிடப்பட்டு அவ்வாறே பொதுமக்களாலும் போராட்டக்காரர்களாலும் அழைக்கப்பட்டது. நாளாந்தம் தீவிரம் பெற்ற போராட்டத் தளம் சுமார் மூன்று மாதங்கள் முனைப்புப் பெற்றிருந்தது. கோட்டா கோகம கட்டமைப்பினைப் போன்று அமைக்கப்பட்ட போராட்டத் தளங்கள் குறைந்த தீவிரத்துடன் இலங்கையின் பல்வேறு இடங்களில் உருவாகின.

[3] இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னரான அரசியல் வரலாறு நெடுகிலும் UNP மற்றும் SLFP ஆகிய கட்சிகளே எதிராளிகளாக இருந்திருக்கின்றன. ஆனால் 2015 ஆம் ஆண்டு UNP தலைமையிலான கூட்டில் SLFP இன் பொதுச் செயலாளரான மைத்திரிபால சிறிசேன பொது வேட்பாளராக மாறியதும், SLFP இன் மிகப் பெரும்பான்மையானவர்கள் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தின் கீழ் SLPP இனை உருவாக்கியதும் UNP இன் பிரதான எதிர்க்கட்சியாக SLPP மாறியது. SLFP இன் உண்மையான வாரிசாக SLPP தன்னைச் சித்தரித்ததும் SLFP இன் வாக்கு வங்கியில் பெரும்பான்மையானோர் SLPP இன் ஆதரவாளர்களாக மாறினர்.

[4] https://elections.gov.lk/web/wp-content/uploads/election-results/presidential-elections/pre2019/ PRE_2019_All_Island_Result.pdf

[5] எவ்வாறாயினும், சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க பெற்றுக்கொண்ட 62.28% அனைத்து வாக்குகளுடன் ஒப்பிடுகையில், கோட்டாபய ராஜபக்ஷ பெற்றுக்கொண்ட வாக்குகள் (52.25%) குறைவாகவே உள்ளன.

[6] கோட்டாபய ராஜபக்ஷ பல பொது நிகழ்வுகளிலும் அவரின் பதவியேற்பு வைபவத்திலும் சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் போதும் தனது சிங்கள – பௌத்த வாங்கு வங்கியினைப் பற்றிக் குறிப்பிட்டதுடன் தான் உண்மையில் ஒரு சிங்கள – பௌத்த தலைவர் எனவும் வலியுறுத்தியிருந்தார் - https://timesofindia.indiatimes.com/world/south-asia/i-am-the-leaderthat- you-searched-for-prez-gotabaya-rajapaksa-tell-lankans-onindependence-day/articleshow/80688206.cms

[7] வடக்கில் இடம்பெற்ற ஆயுதப் புரட்சி இங்கே உள்ளடக்கப்படவில்லை. ஏனெனில் அதன் முயற்சி இலங்கை அரசுக்கு எதிராகப் புதிய ஓர் அரசினை உருவாக்குவதேயன்றி ஆட்சியில் இருந்த அரசாங்கத்தினைக் கவிழ்ப்பதல்ல என்பதால் ஆகும்.

[8] இக்காலகட்டத்தில் நடந்த இரண்டு சம்பவங்களைத் தவிர, ஜனாதிபதியினாலும் அரசாங்கத்தினாலும் கூறப்படுவதற்கு அப்பால், போராட்டங்கள் வன்முறைமிக்கவையாக இருந்தன என விமர்சிக்க முடியாது. ஜனாதிபதி கோடாபய ராஜபக்ஷவின் தனிப்பட்ட வாசஸ்தலத்தின் முன்பாக 2022 மார்ச் 31 ஆம் திகதி நடத்தப்பட்ட பொதுமக்கள் போராட்டத்தின் போது பஸ் ஒன்று கொளுத்தப்பட்டமை முதலாவது சம்பவமாகும். அரசாங்கத்திற்கு விசுவாசமான குழுக்களினால் தந்திரமாக இந்த எரியூட்டல் சம்பவம் நிறைவேற்றப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அலரி மாளிகையில் இருந்து வெளியேறி காலி முகத்திடலில் அமைதியாகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களைத் தாக்குவதற்காக வந்த SLPP காரர்களுக்கும் குண்டர்களுக்கும் மக்கள் வன்முறைமிக்க முறையில் பதிலடி கொடுத்தபோது இரண்டாவது சம்பவம் நடந்தது. எதிர்த்தாக்குதல் நாட்டின் பல பாகங்களில் இன்னுமொரு நாள் தொடர்ந்து நடைபெற்று ராஜபக்ஷவினதும் அவரின் ஆதரவாளர்களதும் (SLPP பாராளுமன்ற உறுப்பினர்கள்) சொத்துக்கள் தாக்கப்பட்டன, சேதமாக்கப்பட்டன மற்றும் எரிக்கப்பட்டன. ஆனால் இந்த இரண்டு வன்முறை நாட்களின் பின்னர், கோட்டாபய ராஜபக்ஷ 2022 ஜூலை 09 ஆம் திகதி ராஜினாமாச் செய்வதற்குப் பலவந்தப்படுத்தப்பட்டது வரையில் வேறு குறிப்பிடத்தக்க வன்முறை நிகழ்வுகள் எவையும் அறிக்கையிடப்படவில்லை. இதன் பின்னர் போராட்டக்காரர்களினால் கையகப்படுத்தப்பட்டிருந்த அரச சொத்துக்கள் சில நாட்களின் பின்னர் அரசாங்க அதிகாரிகளிடம் அமைதியான முறையில் கையளிக்கப்பட்டன.

[9] https://elections.gov.lk/web/wp-content/uploads/election-results/presidential-elections/pre2019/ PRE_2019_Hambantota_Final%20District%20Result.pdf

[10] https://elections.gov.lk/web/wp-content/uploads/election-results/parliamentary-elections/ HambantotaV2.pdf

[11] https://elections.gov.lk/web/wp-content/uploads/election-results/parliamentary-elections/Kurun egalaV2.pdf

[12] https://elections.gov.lk/web/wp-content/uploads/electionresults/presidential-elections/pre2019/ PRE_2019_Kurunegala_Final%20District%20Result.pdf

[13] https://www.newsfirst.lk/2019/10/09/slpp-presidential-candidategotabaya-rajapaksas-inaugural-rally-at-anuradhapura/

[14] https://foreignpolicy.com/2019/11/19/sri-lanka-new-strongmanpresident-gotabaya-rajapaksa-election/

[15] https://elections.gov.lk/web/wp-content/uploads/election-results/presidential-elections/pre2019/ PRE_2019_Anuradhapura_Final%20District%20Result.pdf

[16] https://elections.gov.lk/web/wp-content/uploads/election-results/presidential-elections/pre2019/ PRE_2019_Gampaha_Final%20District%20Result.pdf

[17] https://elections.gov.lk/web/wp-content/uploads/election-results/parliamentary-elections/ Gampaha_Negombo.pdf

[18] https://elections.gov.lk/web/wp-content/uploads/election-results/presidential-elections/ pre2019/PRE_2019_Gampaha_Final%20District%20Result.pdf

[19] https://elections.gov.lk/web/wp-content/uploads/election-results/parliamentary-elections/ Gampaha_Negombo.pdf

[20] 1994 ஆம் ஆண்டில் இருந்து ரணில் விக்கிரமசிங்க கொழும்புமத்தியில் இருந்து போட்டியிட்டுள்ளார்.

[21] https://elections.gov.lk/web/wp-content/uploads/election-results/presidential-elections/ pre2019/ PRE_2019_Colombo_Final%20District%20Result.pdf

[22] Ibid

[23] https://elections.gov.lk/web/wp-content/uploads/election-results/parliamentary-elections/ Colombo_ColCentral.pdf

[24] https://elections.gov.lk/web/wp-content/uploads/election-results/parliamentary-elections/ Colombo_Borella.pdf

[25] இந்தக் கருத்துக்கள் கட்சியின் 1970, 1994, 2001, 2005 மற்றும் 2019 தேர்தல் விஞ்ஞாபனங்களில் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தன.

[26] ஐக்கிய தேசியக் கட்சி, http://www.unp.lk/about_party.html (2022 நவம்பர் 8 ஆந் திகதியன்று அணுகப்பட்டது.)

[27] இந்த நேரத்தில் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான எதிர்க்கட்சி பலவீனமடைந்திருந்ததுடன் மஹிந்த ராஜபக்ஷவினாலும் அவரின் குடும்பத்தினாலும் வழிகாட்டப்பட்ட அரசியல் கட்சியினால் அவர்களின் சித்தாந்தத்தின் காரணமாக வாக்கு வங்கியினைக் கவரக்கூடியதாக இருந்தது. SLFP உடன் இருந்த அனேகமாக அனைத்துக் கட்சிகளும் 2020 பொதுத் தேர்தல்களில் SLPP உடன் இணைந்ததுடன் SLFP உம் SLPP உடன் இணைந்துகொண்டது.

[28] எப்பாவலவைச் சேர்ந்த ஒரு விவசாயி – 2022 செப்டெம்பர் 16 இல் நேர்காணல் நடத்தப்பட்டது.

[29] வனாத்தமுல்லையைச் சேர்ந்த ஒரு பெண் – 2022 செப்டெம்பர் 03 இல் நேர்காணல் நடத்தப்பட்டது.

[30] குருணாகலைச் சேர்ந்த அரசாங்க ஊழியர் – 2022 ஆகஸ்ட் 02 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

[31] சூரியவெவவைச் சேர்ந்த சிறு வியாபார உரிமையாளர் ஒருவர் – 2022 ஆகஸ்ட 09 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

[32] குருணாகலைச் சேர்ந்த ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர் – 2022 ஆகஸ்ட 03 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

[33] நீர்கொழும்பு – முன்னக்கரயைச் சேர்ந்த ஒரு பெண் - 2022 ஆகஸ்ட 26 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

[34] சூரியவெவவைச் சேர்ந்த நபர் - 2022 ஆகஸ்ட் 02 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

[35] நீர்கொழும்பைச் சேர்ந்த மீனவர் ஒருவர் - 2022 ஆகஸ்ட் 25 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

[36] அம்பாந்தோட்டையைச் சேர்ந்த ஒரு நபர் - 2022 ஆகஸ்ட் 09 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

[37] கொழும்பைச் சேர்ந்த ஒரு பெண் - 2022 ஆகஸ்ட் 18 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

[38] சஹஸ்புரவைச் சேர்ந்த ஒரு பெண் - 2022 செப்டெம்பர் 03 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

[39] அநுராதபுரத்தைச் சேர்ந்த ஒரு விவசாயி - 2022 ஆகஸ்ட் 18 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

[40] நீர்கொழும்பைச் சேர்ந்த ஒரு பெண் - 2022 ஆகஸ்ட் 22 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

[41] அநுராதபுரத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி - 2022 ஆகஸ்ட் 16 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

[42] எப்பாவலவைச் சேர்ந்த ஒரு விவசாயத் தலைவர் - 2022 ஆகஸ்ட் 17 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

[43] நீர்கொழும்பைச் சேர்ந்த படகு தயாரிப்பவர் - 2022 ஆகஸ்ட் 25 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

[44] அம்பாந்தோட்டையைச் சேர்ந்த ஒரு விவசாயி - 2022 ஆகஸ்ட் 09 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

[45] பொலனறுவையைச் சேர்ந்த ஒரு பெண் - 2022 ஆகஸ்ட் 06 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

[46] நீர்கொழும்பைச் சேர்ந்த சுயதொழில் புரியும் பெண் ஒருவர் - 2022 ஆகஸ்ட் 25 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

[47] சஹஸ்புரத்தைச் சேர்ந்த ஓர் இளைஞர் - 2022 செப்டெம்பர் 15 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

[48] அநுராதபுரத்தைச் சேர்ந்த ஒரு பெண் - 2022 ஆகஸ்ட் 04 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

[49] ஹிங்குராகொடயைச் சேர்ந்த ஒரு பெண் - 2022 செப்டெம்பர் 06 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

[50] அம்பாந்தோட்டையைச் சேர்ந்த ஒரு விவசாயி - 2022 ஆகஸ்ட் 08 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

[51] பொரளையைச் சேர்ந்த ஓர் ஆண் - 2022 செப்டெம்பர் 18 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

[52] அநுராதபுரத்தைச் சேர்ந்த ஓர் ஆண் - 2022 ஆகஸ்ட் 16 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

[53] நீர்கொழும்பைச் சேர்ந்த ஒரு பெண் - 2022 ஆகஸ்ட் 26 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

[54] வனாத்தமுல்லயைச் சேர்ந்த ஓர் இளம் பெண் - 2022 செப்டெம்பரில் நேர்காணல் நடத்தப்பட்டது.

[55] நீர்கொழும்பைச் சேர்ந்த ஓர் உள்ளூராட்சி உறுப்பினர் - 2022 ஆகஸ்ட் 26 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

[56] நீர்கொழும்பைச் சேர்ந்த ஓர் ஆண் - 2022 ஆகஸ்ட் 25 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

[57] குருணாகலயைச் சேர்ந்த ஓர் ஆண் - 2022 ஆகஸ்ட் 03 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

[58] அநுராதபுரத்தைச் சேர்ந்த ஓர் ஆண் - 2022 ஆகஸ்ட் 17 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

[59] நீர்கொழும்பைச் சேர்ந்த ஓர் உள்ளூராட்சி உறுப்பினர் - 2022 ஆகஸ்ட் 26 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

[60] நீர்கொழும்பைச் சேர்ந்த மீனவர் - 2022 ஆகஸ்ட் 25 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

[61] பொலனறுவையைச் சேர்ந்த ஒரு பெண் - 2022 செப்டெம்பர் 06 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

[62] சூரியவேவவைச் சேர்ந்த இளைஞர் - 2022 ஆகஸ்ட் 10 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

[63] அம்பாந்தோட்டையைச் சேர்ந்த ஒரு தச்சர் - 2022 ஆகஸ்ட் 09 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

[64] பொலனறுவையைச் சேர்ந்த ஒரு விவசாயி - 2022 செப்டெம்பர் 06 ஆம் திகதி நேர்காணல் நடத்தப்பட்டது.

## உசாத்துணைகள்


அமரசேகர, குணதாச. *KawandayataHisak.* Boralasgamuwa: Visidunu Publications, 2011.

அமரசூரிய, ஹரினி. "Elite Politics and Dessent in Sri Lanka". *The South Asianist Vol. 4, No. 1,* Edinburgh: University of Edinburgh, 2021, 1-22.

"A public economy to empower the people", *Election Manifesto,* Colombo: SLFP, 2001.

பண்டாரநாயக்க, சிறிமாவோ. *To all the voters,* Colombo: SLFP, 1970.

சந்திரபிரேம, C.A. *KolapataSamajaya,* Colombo: Author Publication, 1997.

தேவசிறி, நிர்மல் ரஞ்சித். "Roots of the Present Political Instability in Sri Lanka.". Lecture. National Centre for Advanced Studies, Colombo, November 2, 2022.

# இணைய வழி போராட்டம் (ஒன்லைன் அரகலய): அரசியலில் சமூக ஊடகத்தின் பங்கு பற்றிய ஓர் உருவரை

*லாரா விஜேசூரிய மற்றும் சமல் விமுக்தி ஹேமச்சந்திர*[*]

*இக்கட்டுரையில், எழுத்தாளர்கள் இணைய அரகலயவை வடிவமைப்பதில் சமூக ஊடகங்களின் அரசியல் பங்கின் அடிப்படை வரைபை வழங்குகிறார்கள், இது அவர்களின் தனிப்பட்ட அனுபவங்கள் மற்றும் அரகலயவுடனான தீவிர ஈடுபாட்டை அடிப்படையாகக் கொண்டது.*

## அறிமுகம்

2022 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் பரவலாக உருவான ஆர்ப்பாட்டங்களில் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கலந்துகொண்டனர். இம்மக்கள் நேரடியாக அல்லது இணையத்தின் வழி (ஒன்லைன்) மூலமாக கலந்துகொண்டனர். அண்மைக் காலங்களில் நடைபெற்ற ஏனைய ஆர்ப்பாட்டங்களுடன் ஒப்பிடுகையில் இந்த ஆர்ப்பாட்டங்கள் பெரும் ஆதரவைப் பெற்று விரைவில், *'அரகலய'* என்று *சிங்கள மொழியிலும் 'போராட்டம்'* என்று *தமிழ் மொழியிலும்,* கொழும்பு *காலிமுகத்திடலிலும் ஏனைய பிரதேசங்களிலும் மையம் கொண்டிருந்த ஆர்ப்பாட்டங்களைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்பட ஆரம்பித்தனர். அரகலய* எனும் சொல்லின் முதல் எழுத்தான "அ" (A) பல விடயங்களையும் குறிக்க ஆரம்பித்தது.

இக்கட்டுரையின் ஆசிரியர்கள் போராட்டத்தில் முனைப்பாகப் பங்குபற்றி, கோட்டா கோகம மற்றும் புறக்கோட்டை ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு, இணையத் தளங்களின் வழியே தற்போதைய அரசியல் முறைமைக்கு எதிராகக் கருத்து வேறுபாட்டினை வெளிப்படுத்தியவர்கள் என்ற ரீதியில் அவர்களின் தனிப்பட்ட அனுபவத்தினை அடிப்படையாகக் கொண்டே இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

ஏப்ரல் நடுப்பகுதியில் மொறட்டுவை - கோட்டை பஸ் (வழி இலக்கம் 100) நடத்துனர்கள் பஸ் போகும் வழிப்பாதையினைக் கூறிப் பயணிகளை அழைக்கையில், *'தெஹிவளை – பம்பலபிடிய – கொள்ளுபிடிய – அரகலய'* என அழைத்தமையினைக் காண முடிந்தது. அரகலய மற்றும் கோட்டா கோகம (கோட்டா கோகம கிராமம்) ஆகியன பௌதிக ரீதியான இடங்களாக அங்கீகரிக்கப்பட்டமையினை இது குறித்துக்காட்டுகின்றது.

"225 பேரும் வேண்டாம்," "நீங்கள் பிழையான தலைமுறையினருடன் விளையாடுகின்றீர்கள்" மற்றும்

[*] லாரா விஜேசூரிய கொழும்பு பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறை பட்டதாரி என்பதுடன் சமல் விமுக்தி ஹேமச்சந்திர கொழும்பு பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறையில் தகுதிகாண் நிலை விரிவுரையாளராவார்.

“74 வருட சாபத்தினை முடிவுக்குக் கொண்டுவருவோம்” போன்ற அரகலயவில் பயன்படுத்தப்பட்ட பிரபலமான சுலோகங்கள் வெறுமனே ஆட்சியாளர்கள் மாறவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கவில்லை, மாறாக, சுதந்திரம், சமத்துவம் மற்றும் நீதிமிக்க ஓர் இலட்சிய சமூகத்திற்கே அவை அழைப்பு விடுத்தன. அரகலய ஓர் கருத்தியலாக நிலைமாற்றமடைந்தது.

அரகலய ஒரு நாளாந்த நிகழ்வாகவும் காணப்பட்டது. நாம் வீதியில் செல்கையில் வாகனங்கள் “*கபுடு கா காகா, பெசில் பெசில் பெசில்*” என்ற தொனியில் ஒலிப்பான்களை (ஹாரன்களை) ஒலிக்கச் செய்ததையும் நாம் கேட்டோம். எமது சமூக ஊடகக் கணக்குகளுக்குள் நாம் செல்கையில் அங்கே செய்திகள் எல்லாம் ஆர்ப்பாட்டம் பற்றிய செய்திகளாலும் வர்ணனைகளாலும் நிறைந்திருந்தன. எம்மில் அதிகமானவர்களுக்கு, வாழ்வின் ஓர் உள்ளார்ந்த அங்கமாக அரகலய மாறியது.

உலகம் முழுவதிலும் அண்மைக் காலங்களில் நடந்த மக்கள் போராட்டங்களைப் போன்று அரகலயவிலும் சமூக ஊடகங்கள் முனைப்பாகப் பயன்படுத்தப்பட்டன. துரிதமாக இணைக்கப்படும் மற்றும் துரிதமாகத் தகவல் பெறும் டிஜிட்டல் யுகத்தில் வாழும் எம்மில் பலருக்கு, சமூக ஊடகங்களில் என்ன நடக்கின்றது என்பதற்கும் நிஜ வாழ்வில் என்ன நடக்கின்றது என்பதற்கும் இடையில் ஒரு தெளிவான கோட்டினை இடுவது சிலவேளைகளில் கடினமாக இருக்கின்றது. சிலவேளைகளில், சமூக ஊடகத்தில் இடம்பெறும் சொல்லாடல்கள் நிஜ வாழ்விலும் நடந்தேறுகின்றன. சிலவேளைகளில், நிஜ வாழ்வின் நிகழ்வுகள் பதிவுசெய்யப்பட்டுச் சமூக ஊடகங்களில் அதே நேரத்தில் காண்பிக்கப்படுகின்றன.

இந்த எழுச்சிப் பிரவாகம், அரகலய சூழமைவின் விளைவான ஒன்றாகவே பார்க்கப்படுகின்றது. ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கள் கைகளில் எப்போதும் தொலைபேசிகளை வைத்துக்கொண்டு நடந்தேறும் நிகழ்வுகளைப் பதிவுசெய்வதை அல்லது வேறு இடங்களில் என்ன நடக்கின்றது என்பதைக் கண்டறிய முயற்சிப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. தொழில்நுட்பத் திறன் படைத்த இளைஞர்கள் அரகலயவில் பெருமளவில் பங்குபற்றியதால், சமூக ஊடகத்திற்கும் நிஜ வாழ்க்கைக்கும் இடையிலான எல்லைகள் அதிகரித்த அளவில் மங்கிப்போயின. அரகலய ஓப்லைனுக்கும் அரகலய ஒன்லைனுக்கும் இடையில் ஒரு கோட்டினை உறுதியாகப் பிரிப்பது கடினமானதாகக் காணப்பட்டது. நிஜ வாழ்க்கைச் சிக்கல்கள் ஒன்லைனில் பிரதிபலிக்கப்பட்டன, மேலும் அரகலயவின் அனுபவத்தை அதிகரிக்கச் சமூக ஊடகங்கள் பயன்படுத்தப்பட்டன. எனவே, ஆர்ப்பாட்டங்களில் சமூக ஊடகங்களின் இயங்கியல்மிக்க வகிபாத்திரத்தினைப் பற்றிய நமது புரிதல், ஆர்ப்பாட்டங்களுக்கான வெறும் ஒரு கருவியாக சமூக ஊடகங்களை நோக்கிய எமது பாரம்பரியப் புரிதலில் இருந்து வித்தியாசப்படுகின்றது. (Valenzuela, Arriagada and Scherman 2012; Freelon, McIlwain and Clark 2016)[1] இந்தக் கட்டுரை அந்த எல்லையின் தடுக்கும் வல்லமையில் குறைந்த தன்மையினையே பிரதிபலிக்கிறது.

இந்த கட்டுரையை நாங்கள் வடிவமைக்கும் போது, சில அவதானிப்புகளை நாம் வலியுறுத்துகிறோம், மேலும் ஆர்ப்பாட்டம் பற்றிய எங்கள் தனிப்பட்ட அனுபவத்தில் இருந்தே நாம் உள்ளீட்டினைப் பெறுகின்றோம். இச் செயன்முறையில், சிங்கள மொழிச் சமூக ஊடகங்களில் ஆர்ப்பாட்டம் தொடர்பாக நடைபெற்ற பிரசங்கங்களையும், குறிப்பிட்ட அளவிற்கு ஆங்கில மொழியில் நடைபெற்ற பிரசங்கங்களையுமே எம்மால் உள்வாங்க முடிந்தது என்பதுடன் எங்களுக்குத் தமிழ் மொழி ஆற்றல் இல்லாத காரணத்தினால் சமூக ஊடகங்களில் தமிழ் மொழியில் நடைபெற்ற பிரசங்கங்களை எம்மால் உள்வாங்க முடியவில்லை.

சமூக ஊடகப் பயன்பாட்டுடன் நேரடியாகத் தொடர்புறும் சில குறிப்பிட்ட அம்சங்கள் அரகலயவிற்கு உண்டு (ஒன்லைன் மற்றும் ஓப்லைன்). பிரஜைகளின் ஊடகத்துறையில் பரந்த பயன்பாடு, மக்களை அணிதிரட்டுவதில் சமூக ஊடகங்களின் வகிபாகம் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் திடப்படுத்தி வெளிப்படுத்தப்பட்ட அதிகாரத்தின் மீதான எதிர்ப்பு ஆகியவை இதில் உள்ளடங்குகின்றன. ஆர்ப்பாட்டக்காரர்கள் சமூக ஊடகங்களை எவ்வாறு பயன்படுத்தினர் (மற்றும் அவர்களால் பயன்படுத்தப்பட்டது) என்பதைப் புரிந்துகொள்ளும் நாட்டத்துடன் இக்கட்டுரையானது அரகலயவின் பரந்த நோக்கெல்லைக்குள் இந்த அம்சங்களை மீளாய்வு செய்கின்றது.

## பிரஜைகள் ஊடகத்துறை

துடிப்புமிக்க பிரஜைகள் ஊடகத்துறைக்கு எழுச்சியினை வழங்க சமூக ஊடகங்களும் அரகலயவும் இணைந்தன. ஊடகங்களின் அதிகார வரிசைகளின் உறுப்பினர்களல்லாத நபர்களுக்குச் சமூக ஊடகம் குரல்களை வழங்குகின்றது

(அதாவது, பாரம்பரிய ஊடகத்திற்குள் நிலைபெற்று அங்கீகரிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள்). பாரம்பரிய ஊடகங்களுக்கான அணுகல் இல்லாமை எனும் காரணத்தினால் கட்டுப்படுத்தப்படாது சாதாரண மக்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தச் சமூக ஊடகம் தளத்தினை வழங்குகின்றது, மக்களை அணிதிரட்டுகின்றது, நிகழ்வுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது. சாதாரண மக்கள் சமூக ஊடக ஊடகவியலாளர்களாக மாறுகிறார்கள். இவர்கள் பத்திரிகை ஆசிரியர்களின் கட்டுப்பாடுகளுக்கும் பெருநிறுவன அதிகார அடுக்குகளில் உள்ளவர்களின் கட்டுப்பாடுகளுக்கும் உட்படும் பாரம்பரிய ஊடகவியலாளர்களைப் போன்று கட்டுப்பாடுகளுக்கு முகங்கொடுப்பதில்லை.

அரகலயவின் சூழமைவினுள் பிரஜைகள் பத்திரிகைத் துறையின் வகிபாகம் பற்றிக் கலந்துரையாடுவதில், இந்தக் கட்டுரையானது, நிகழ்வுகளின் கள மட்ட உள்ளடக்கம், அபிப்பிராயங்களின் பரவலான பகிர்வு மற்றும் புலனுணரப்பட்ட தலைவர்களின் உருவாக்கம் மற்றும் / அல்லது அவர்களுக்கான அங்கீகாரம் ஆகியவற்றின் அடிப்படையில் பிரஜைகள் ஊடகத்துறையின் தாக்கத்தினை மீளாய்வு செய்கின்றது.

## புலனுணரப்பட்ட தலைவர்களின் அங்கீகாரம்

லாரா: ஏப்ரல் மாதத் தொடக்கத்தில், பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற போராட்டத்தில் நான் கலந்துகொண்டேன். நண்பர் ஒருவர் இதைப் பற்றி என்னிடம் கூறியதால் நான் அதில் இணைந்தேன். சுலோக அட்டைகளைத் தயாரித்துக் கொண்டு எனது வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் சிலருடன் நான் குறிப்பிட்ட நேரத்தில் வெளியே சென்றேன். வெளியே வந்ததும், மாணவர் சங்கங்களைச் சேர்ந்தவர்கள் எங்களிடம் நாங்கள் எங்கு நிற்க வேண்டும் என்று கூறினர். இது தன்னெழுச்சியான போராட்டம் என்பதைவிட தொழிற்சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டமாக இருக்குமோ என நாம் நினைத்தோம். போராட்டத்தை ஏற்பாடு செய்வதை விட எங்கள் எதிர்ப்புகள் முக்கியம் என்று நாங்கள் முடிவு செய்தோம், ஆனால் போராட்ட இயக்கங்களினுள் நின்று புலனுணரப்படும் தலைவர்களைப் பற்றிப் பேசுவதற்கான பயன்மிக்க உந்து சக்தியினை இந்த நிகழ்வு எனக்கு அளித்தது. தங்கள் சொந்த விருப்பத்தின் பேரில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்பவர்கள் அவ்வாறு செய்வதற்கான பல்வேறு நோக்கங்களைக் கொண்டுள்ளனர். எதிர்ப்பு பல்வேறு மட்டங்களில் இயல்பாகவே இடம்பெறலாம் என்பதுடன் அதை முன்னெடுப்பதற்கு ஒரு தலைவர்தான் வேண்டும் என்ற அவசியமில்லை. தலைவர் ஒருவர் இல்லாமல் போராட்டங்கள் நடக்காது என்பது தவறான ஒரு கருத்தியலாகும் என்பதுடன் இது பால்நிலை மற்றும் பாரம்பரிய அரசியல் இயக்கங்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டிருக்கலாம். (Silkey 2020)

லாராவின் அனுபவம் அரசியல் ஆர்ப்பாட்டம் மற்றும் அரகலய ஆர்ப்பாட்டக்காரர்கள் எனும் சூழமைவில் தலைமைத்துவம் பற்றிய பாரம்பரிய நியமங்களுக்கிடையிலான பதற்றத்தினை எடுத்துவிளக்குகின்றது. இலங்கை அரச பல்கலைக்கழகங்களில், மாணவர் சங்கங்கள் பாரம்பரியத் தலைவர்களின் வகிபாகத்தினை ஏற்கின்றன. மாணவர்கள் மீதான தமது அதிகாரத்தினைப் பேணுவதற்காக இவர்கள் பலத்தினைப் பிரயோகிக்கின்றனர் என்று இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டு வருகின்றது. எவ்வாறாயினும், அரகலயவில், எவ்விதமான கட்சி அல்லது சங்கங்களுடனும் தொடர்பற்ற எம்மைப் போன்ற மக்கள், சுயமாகவே ஆர்ப்பாட்டம் செய்ய முன்வந்தனர். அரகலயவின் ஆரம்பத்தில், பாரம்பரிய தலைமைத்துவ ஏற்பாட்டு முறைமைச் சட்டகம் ஒதுக்கப்பட்டு ஆர்ப்பாட்டம் செய்வதற்கான மற்றும் செயற்பாடுகளைத் தூண்டுவதற்கான தனிப்பட்டவர்களின் அதிகாரம் சமூக ஊடகங்கள் மூலம் கட்டவிழ்த்து விடப்பட்டது.

பென்னெட்டினால் குறிப்பிடப்பட்டவாறு, "சமூகத் தொழில்நுட்பத்தின் ஊடுருவிச் செல்லும் தொழில்நுட்பம் கூட்டுச் செயற்பாட்டுக்கான முக்கியமான ஊக்கிகளாக மாறுவதற்குத் தனிநபர்களை இயலுமாக்குகின்றது..." (பென்னெட் 2012, 22). இது தொடர்பில், பாரம்பரிய ஊடகங்களில் தங்களைச் சுதந்திரமாக வெளிப்படுத்த மக்களுக்கு மறுக்கப்பட்ட தளத்தினைச் சமூக ஊடகம் மக்களுக்கு வழங்கியுள்ளது. இது ஏனைய தனிநபர்களுடன் தனிப் பயன்பாட்டுக்கு உரியதாக்கப்பட்ட வலையமைப்பினை உருவாக்குகின்றது. இதனாலேயே பென்னெட்

குறிப்பிடுகின்றார், "தனிநபர்கள் அவர்களின் சொந்தப் பிரபஞ்சங்களின் மையத்தில் இருந்தாலும், அந்தப் பிரபஞ்சங்கள் மிகப் பெரியதாக இருப்பதற்குக் காரணம் எங்கும் வியாபித்திருக்கும் தொடர்பாடல் தொழில்நுட்பங்களின் சமூக வலையமைப்புருவாக்க ஆற்றல்களாகும் (பென்னெட் 2012, 22)." இது அரகலயவில் புலப்பட்டது. இயக்கத்தின் ஆரம்ப நாட்களில் ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்வதற்கும் அறிவிப்பதற்கும் சமூக ஊடகங்களே பயன்படுத்தப்பட்டன. இதனைப் பாரம்பரிய அரசியல் அல்லது சிவில் சமூகத் தலைவர்கள் மேற்கொள்ளவில்லை மாறாக எழுமாறான மக்களே மேற்கொண்டனர். இதில் பிரபலமான யூ டியூப் காரர்களும் எமது பல்கலைக்கழக சக மாணவர்களும் இருந்தனர். முன்னதாக இந்தச் சமூக ஊடக ஆளுமைகளான *ரத்தா* அல்லது *மோடிவேசன் அப்பச்சி* போன்றவர்கள் அரசியல் சார்பற்றவர்களாகவே கருதப்பட்டனர். இதனால், தம்மை ஒரு குறிப்பிட்ட அரசியல் குழுவுடன் அடையாளப்படுத்தத் தயங்கியவர்கள் இதிலே இணைவதற்குத் தூண்டப்பட்டனர். இதனால் அரகலயவிற்கு அரசியல் சார்பற்ற ஒரு பண்பு ஏற்பட்டது.

தலைவரற்ற ஓர் இயக்கத்தில், அதிகாரமானது பாரம்பரிய அரசியல் அதிகாரச் சட்டகங்களை விட வித்தியாசமாகக் கட்டமைக்கப்படுகின்றது. வேறு வார்த்தைகளில் கூறுவதாயின், அதிகாரம் நாம் பாரம்பரிய அரசியல் கட்சிகளில் காண்பதைப் போன்று ஒரு குறிப்பிட்ட நபரில் அல்லது குழுவில் செறிந்திராமல் அரகலயவில் உரிமை கோரும் ஒவ்வொரு தனிநபரிலும் பன்முகப்படுத்தப்படுகின்றது. இதன் விளைவாக, அதிகாரத்தில் உள்ளவர்கள் கூட ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்பினால் அதற்கென ஒரு தலைவர் அங்கே பொதுவாக இருக்க மாட்டார் (குருவிட்ட 2022). பெரும்பாலும், பாரம்பாரிய அதிகாரம் சில குறிப்பிட்ட தனிநபர்களை அல்லது குழுக்களைத் தலைவர்கள் எனத் தவறாக அடையாளம் கண்டு அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துகின்றது. ஆனால் இவர்களால் ஒட்டுமொத்த ஆர்ப்பாட்டத்திற்காகவும் பேச முடியாது அல்லது ஆர்ப்பாட்டத்தினைக் கட்டுப்படுத்த முடியாது என்பதை இவ்வாறான அதிகாரத்திலுள்ளவர்கள் அறியாதுள்ளனர். சிலர் அதிகமான ஆர்ப்பாட்டக்காரர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகையில் (அனைவராலும் அல்ல), அவர்கள் தலைவர் பதவியினை ஏற்கையில் அடுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அரகலயவில் இதுதான் நடந்தது என நாம் நினைக்கின்றோம்.

இத் தனிநபர்களில் சிலர் ஆர்வத்துடன் தலைமைத்துவப் பதவியினை ஏற்றுக்கொள்கின்றனர். தலைவர்களைத் (ஆண்கள்) தேடும் சமூகத்தின் இயற்சார்பு நிலையின் காரணமாக, இத்தலைவர்கள் அசலான ஏற்பாட்டாளர்களாகவும் அதிகாரம் கொண்டவர்களாகவும் சித்தரிக்கப்படுகின்றனர். இது பல மட்டங்களில் சிக்கல் மிக்கதாகும் - இது பாரம்பரிய சமூகத்தில் உள்ள அதிகாரக் கட்டமைப்புக்களை மீள உருவாக்கி இத்தலைவர்களை ஒரு பீடத்தில் ஏற்றி வைக்கின்றது (கோசல் மற்றும் ஜயசிங்க 2022). அரகலயவில் பங்குபற்றியவர்கள் அடிமட்ட நிறுவனங்களின் முக்கியத்துவத்தினையும் விஸ்தீரணத்தினையும் அறிந்த போதிலும், இந்த "அங்கீகரிக்கப்பட்ட தலைவர்களே" நினைவு கூறப்படுபவர்களாக இருப்பார்கள் என்பதை "மாமனிதர்" ("Great Man") கோட்பாடு உறுதிப்படுத்துகின்றது (Silkey 2020).[2] இத்தலைவர்களே பொதுவாக ஒன்லைனிலும் ஓப்லைனிலும் உடனடியாக அடையாளம் காணப்படக்கூடிய தலைவர்களாக உள்ளனர். தமது நலனுக்காகச் (இயக்க நலனுக்காகவும்) சமூக ஊடகத்தினையும் ஒன்லைன் தளத்தினையும் பயன்படுத்தக்கூடியவர்களாக இருந்தவர்களே ஆர்ப்பாட்ட இயக்கத்தின் மிகவும் வெற்றிகரமான அபிப்பிராயத் தலைவர்களாக இருந்தனர்.

சமூக ஊடகங்கள் பற்றிய பிரஜைகள் பத்திரிகைத்துறை சந்தேகத்திற்கு இடமின்றி இந்த முழுச் செயன்முறையினையும் துரிதப்படுத்துகிறது, ஏனெனில் நேரடியாகப் பங்கேற்காதவர்கள் சில தனிநபர்களின் சமூக ஊடக நிகழ்ச்சி நேர ஒளிபரப்புக்கள் மூலம் நடந்தேறும் நிகழ்வுகளை அடிக்கடி பார்க்கின்றனர். பாரம்பரிய அரச ஊடகங்கள் "வெளிப்படையாகப் பக்கச்சார்புடையவை" என்று கருதப்பட்டன, மேலும் அரச சார்பற்ற பாரம்பரிய ஊடகங்களும் செயன்முறையில் சில தொடர்புகளையும் அதற்கேயுரித்தான சொந்தப் பக்கச்சார்புகளையும் கொண்டிருந்தன (இஸ்மாயில், டோரோசியன் மற்றும் டுல்லி 2019)[3].

மக்கள் தங்களுக்கெனத் தனியான மற்றும் மிகவும் விருப்பமான செயற்பாட்டாளர்களைக் கொண்டிருந்ததுடன் இச்செயற்பாட்டாளர்களின் சமூக ஊடகங்கள் நடவடிக்கைக் கனங்களின் போது உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டன. கூர்மை பெற்ற இந்த அவதானம், தலைவர்களாக இச்செயற்பாட்டாளர்களின் பிம்பத்தினை உயர்த்தியது. சர்வதேச ஊடகங்களும் இந்தச் செயற்பாட்டாளர்களை அழைத்து, இவர்களுக்கு

இயக்கத்தின் தலைவர்கள் என்ற அங்கீகாரத்தை வழங்கி ஊடகப் பிரசித்தியும் வழங்கின

சமல்: ஜனாதிபதி ராஜபக்ஷவை ராஜினாமாச் செய்யுமாறு கட்டாயப்படுத்திய தினமான 2022 ஜூலை 9 ஆம் திகதியன்று நான் 20 கிலோ மீற்றர்கள் பேரணியாகச் சென்று கோட்டா கோகமவை மதியம் 1 மணியளவில் அடைந்தபோது, காலி முகத்திடலின் ஒரு முனையில் இருந்து மறுமுனை வரையான முழுப் பகுதியுமே நாடு முழுவதிலுமிருந்து வந்த (இன்னும் வந்து கொண்டிருந்த) ஆர்ப்பாட்டக்காரர்களால் நிரம்பியிருந்தது. மாலை 5 மணியளவில், "அரகலய" தலைவர்களின் ஊடகவியலாளர் சந்திப்பு நடந்தது. சந்திப்பில் 30-40 தலைவர்கள் கலந்துகொண்டனர். இவர்களில் பெரும்பாலானோர் அமர்ந்திருந்தனர், மீதமுள்ளவர்கள் பின்னால் நின்று கொண்டிருந்தனர். ஊடகவியலாளர் சந்திப்பைப் பார்த்தபோது, இந்தத் தலைவர்களுக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே பாரிய இடைவெளி இருப்பதை நான் அவதானித்தேன். இத்தலைவர்கள் யார் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் யாருக்கும் தெரியாது என்று நான் இன்னொரு நண்பரிடம் கேலியாகச் சொன்னேன். ஒரு பாரம்பரிய ஆர்ப்பாட்டத்தினையே நான் இவ்வாறு குறிப்பிட்டேன். பாரம்பரிய ஆர்ப்பாட்டத்தில் தங்கள் தலைவரை (தலைவர்களை) ஆர்ப்பாட்டக்காரர்களால் அடையாளம் காண முடியும். ஆனால் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஒரே சமூக ஊடக வலையமைப்பைச் சேர்ந்தவர்களைத் தவிர ஏனைய போராட்டக்காரர்களால் அரகலயவின் இந்தத் தலைவர்களை அடையாளம் காண முடியவில்லை.

## நிகழ்வுகளின் கள மட்ட உள்ளடக்கம்

களத்தில் நடந்த நிகழ்வுகளின் சமூக ஊடக உள்ளடக்கம் பாரிய வெற்றியாக அமைந்தது. பாரம்பரிய ஊடகங்கள் களத்திற்குச் சென்று நிகழ்வுகளை உள்ளடக்குவதற்குச் சற்று நேரம் எடுத்துக் கொண்டன. ஆனால், ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கள் கேமரா போன்களுடன் பொதுவாக அந்த இடத்திலேயே இருந்து என்ன நடக்கிறது என்பது பற்றிய புகைப்படங்களையும் வீடியோக்களையும் விரைவாகப் பதிவேற்றிக் கொண்டிருந்தனர். பிரஜைகள் ஊடகவியலாளர்களுடன் ஒப்பிடுகையில் பாரம்பரிய ஊடகங்களும் ஒரு குறிப்பிட்ட அளவிலான பாதுகாப்பை அனுபவித்தன. மே 6 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு வெளியே நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கண்ணீர்ப்-புகைத் தாக்குதல் நடத்தப்பட்டபோது பாரம்பரிய ஊடகக் கம்பனிகளைச் சேர்ந்த புகைப்படக்காரர்கள் உரிய முகக்கவசங்களுடன் களத்தில் நின்றபோது பிரஜைகள் ஊடகவியலாளர்களான நாங்கள் எங்கள் சேர்ட்களை நனைத்து முகத்தை மறைக்க வேண்டியிருந்தது. பாரம்பரிய ஊடகங்களால் பெருமளவுக்குப் பாதுகாக்கப்பட்ட மற்றும் அவர்களால் உள்ளடக்க முடியாமல் போன, ஆபத்தின் உணர்வினையும் உள்ளத்தினைத் தொடும் உணர்வினையும் இது பிரஜைகள் ஊடகவியலாளர்களினால் எடுக்கப்பட்ட காட்சிகளுக்கு வழங்குகின்றது.

பிரஜைகள் ஊடகவியலின் மற்றொரு அனுகூலம் சகல இடங்களிலும் கேமரா போன்களைக் கொண்ட மக்கள் இருக்கின்றமையாகும் (De Haan et al. 2020). செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டபோது இதன் பயன் புரிந்தது. ஏனெனில் அவர்கள் எப்போது, எங்கே கொண்டு செல்லப்பட்டனர் மேலும் எங்கே வைக்கப்பட்டனர் என்பதைப் பல நபர்களாலும் கண்காணிக்க முடிந்தது. கைது செய்யப்பட்டவர்கள் எப்படி, எப்போது, எங்கே அழைத்துச் செல்லப்பட்டனர் என்பதை இந்தச் செயற்பாட்டாளர்களில் பலரும் அறிந்திருந்ததால், அழைத்துச் செல்லப்பட்டவர்கள் ஏனைய சந்தர்ப்பங்களில் விடுவிக்கப்படுவதை விட மிக விரைவாக (பாதிப்பின்றி) விடுவிக்கப்பட்டனர். 21 ஆம் நூற்றாண்டில் காணாமல் போவது என்பது பிரஜைகள் பத்திரிகைத்துறையின் காரணமாக இனிமேலும் சாத்தியமற்றது எனக் கேலி செய்யப்பட்டது.

சமல்: 2022 ஜூலை 22 ஆம் திகதி அதிகாலை 2 மணியளவில் ஒரு திரைப்படத்தைப் பார்த்து முடித்துவிட்டு உறங்கச் செல்வதற்கு முன் வழமைபோல் அரகலய பற்றிய புதிய செய்தி தரவேற்றங்களை அறிவதற்காக எனது வாட்ஸ்அப் மற்றும் பேஸ்புக் கணக்குகளைப் பார்க்கையில் கோட்டா கோகம போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் கோரத் தாக்குதல் நடத்தியிருப்பதை அறிந்து நான் அதிர்ச்சியுற்றேன். எக்ஸ்போசர் செய்தி

மற்றும் சக ஆர்ப்பாட்டக்காரர்களால் வெளியிடப்பட்ட முகப்புத்தக நேரலை வீடியோக்களை நான் பார்க்க ஆரம்பித்தேன். நான் மிகவும் கவலையுற்றதுடன் ஆர்ப்பாட்டக்காரர்களின் பாதுகாப்புக் குறித்து மிகவும் அச்சப்பட்டேன். அதே சமயம், அரகலயவில் நான் சந்தித்து நெருக்கமான உறவைப் பகிர்ந்து கொண்ட சக ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கப்படுகையில் நான் மட்டும் வீட்டில் சௌகரியமாக இருப்பது எனக்குக் குற்றவுணர்வினை ஏற்படுத்தியது. ஆனால், பொலிஸாரால் அடிவாங்க நேரிடும் என்ற பயத்தால் நான் வீட்டை விட்டு வெளியே வரவில்லை.

ஓரிரு தொலைக்காட்சி அலைவரிசைகளைத் தவிர ஏனையவை அரகலய பற்றிய செய்திகளை வெளியிடவில்லை அல்லது அரகலய பற்றிய இழிவுபடுத்தும் தோற்றப்பாட்டினையே வழங்கின. கோட்டா கோகம மீதான பொலிஸாரின் சுற்றிவளைப்பு அதிகாலையிலேயே நடந்தது. அந்த நேரத்தில் அனைத்துத் தொலைக்காட்சி அலைவரிசைகளும் பெரும்பாலான வானொலி அலைவரிசைளும் மூடப்பட்டிருந்தன. ஆனால் சமூக ஊடகங்கள் காரணமாக, இந்தச் சுற்றிவளைப்பினை ஓர் ஆர்ப்பாட்டக்காரரின் கண்ணோட்டத்தில் இருந்து சமல் நேரடியாகப் பார்த்துக் கொண்டிருந்தார், வேறுவிதமாகக் கூறினால், கோட்டா கோகாமவில் அதை நேரில் அனுபவிப்பது போலப் பார்த்துக் கொண்டிருந்தார். மேலும், ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும் எங்கள் நண்பரும் சமலைப் போலவே இதைப் பார்த்துக் கொண்டிருந்தார். நேர வித்தியாசம் காரணமாக, பொலிஸ் சுற்றிவளைப்பு நடக்கையில் அவருக்குப் பின்னிரவு நேரமாக இருந்தது. ஆர்ப்பாட்டக்காரர்களை அரச குரூரத்தில் இருந்து காப்பாற்றாமைக்கான பதிலை இங்கிலாந்து அரசியல்வாதிகளிடம் இருந்து டுவிட்டர் வழியே கோரப்போவதாக அவர் எங்களிடம் கூறினார். இவ்வாறு நாட்டிலுள்ள மக்களையும் உலகம் முழுவதிலுமுள்ள மக்களையும் சமூக ஊடகங்கள் அரகலயவுடன் கூட்டொருமையுடன் இணைத்தன.

இருப்பினும், பிரஜைகள் ஊடகத்துறையிலும் குறைபாடுகள் உள்ளன. பிரசித்திபெற்ற ஊடகவியலாளர்கள் கடினமான உண்மைகளைக் கையாள்வதற்கும், அதீத உணர்வுமிக்க மொழியைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்கும் அவர்களின் தனிப்பட்ட எதிர்வினைகளைக் கலந்து செய்தியினை அறிக்கையிடுவதைத் தவிர்ப்பதற்கும் பயிற்சி பெற்றுள்ள அதேவேளை, பிரஜைகள் ஊடகவியலாளர்களுக்கு அவ்வாறான பயிற்சிகள் வழங்கப்படவில்லை. அரகலய சூழமைவில் அச்சத்தினை ஏற்படுத்தும் வகையில் வேண்டுமென்றே தவறான தகவல்களை வழங்குவது குறைவாக இருந்தபோதிலும், உண்மைகளைத் தவறாகச் சித்தரித்துப் பிரஜைகள் ஊடகவியலாளர்கள் செய்திகளை அறிக்கையிட்ட பல சம்பவங்கள் நிகழ்ந்தன. உதாரணமாக, மே மாதம் 9 ஆம் திகதி, கோட்டா கோகம நூலகத்தை மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் அழித்துவிட்டனர் என்ற தலைப்புடன், தரையில் புத்தகங்கள் சிதறிக் கிடக்கும் புகைப்படம் பரப்பப்பட்டது. மே 9 ஆம் திகதி நூலகத்தில் கை வைக்காததால் இது பொய்யான செய்தியாகும். தாக்குதல் நடத்தப்படலாம் என ஊகித்து ஆர்ப்பாட்டக்காரர்கள் புத்தகங்களை அவசர அவசரமாகப் பாதுகாப்பான இடத்திற்கு மாற்ற முயன்றபோதே அந்தப் புகைப்படம் எடுக்கப்பட்டிருந்தது. எனினும், நூலகம் தாக்கப்பட்டதென்ற தவறான செய்தி சமூக ஊடகச் சமுதாயத்தின் மத்தியில் வேகமாகப் பரப்பப்பட்டது. மேலும், ஜூலை 13 ஆம் தேதி அரசாங்கம் கோட்டா கோகம மீது தாழ்வாகப் பறக்கும் ஹெலிகாப்டரை அனுப்பியபோது, அது வீடியோவில் பதிவு செய்யப்பட்டு, நிராயுதபாணிகளான ஆர்ப்பாட்டக்காரர்களைச் சுடப் போகின்றார்கள் என்ற செய்தி அறிக்கையிடப்பட்டது. அந்த அச்சம் சந்தேகத்திற்கிடமின்றி உண்மையானது என்றாலும், ஹெலிகாப்டரினால் துப்பாக்கிச்சூடு நடத்தப்படவில்லை. இருப்பினும், களத்தில் இல்லாதவர்களில் பலர் அச்செய்தியினை நடந்ததாகவே நம்பினர். அரகலயவில் இருந்தவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை வலியுறுத்திக் காட்டுவதற்காகச் சமூக ஊடகங்களில் வீடியோக்களையும் பதிவுகளையும் தொடர்ந்து பதிவேற்றம் செய்த பலர் மிகுந்த உணர்வுபூர்வமான மொழிகளையும் செயல்களையும் பயன்படுத்தினர். சில செயற்பாட்டாளர்கள் இக்கணத்தின் அழுத்தத்தின் காரணமாக வன்முறை மேற்கொள்ளுமாறும் பழிவாங்குமாறும் ஆதரித்து வாதாடியமை ஒரு சவாலாக இருந்தது.

# அபிப்பிராயங்களுக்கான திறந்தவெளிகள் - அறிந்தும் அறியாமலும் வெளியிடுபவை

சமூக ஊடகம் என்பது மக்கள் அவர்களின் தனிப்பட்ட கருத்துக்களை உலகத்துடன் பகிர்ந்து கொள்வதற்குப் பாதுகாப்பினையும் வலுவூட்டப்பட்டமையினையும் உணரும் ஒரு தளமாகும். சமூகத்தின் சில பிரிவினர்களின் குரல்களை மீளுருவாக்கும் பாரம்பரிய ஊடகங்கள் - அதாவது, குறிப்பிட்ட மட்டத்தில் கல்வியினையும் பயிற்சியினையும் சமூக மூலதனத்தினையும் கொண்ட உறுப்பினர்களின் - தகவல்களின் நுழைவாயிலாகவும் சிறப்புரிமைகளின் பாதுகாவலராகவும் கருதப்படுகின்றன. எவ்வாறாயினும் சமூக ஊடகங்கள் யாருடைய குரல்களையும், எல்லோருடைய குரல்களையும் மீளுருவாக்கலாம் மேலும் அவற்றினால் மீளுருவாக்க முடியும். மேலே கலந்துரையாடியவாறு சில பிரஜைகள் ஏனையோரை விட நம்பகத்தன்மை உடையவர்களாக அல்லது மிகப் பிரபலமானவர்களாகக் காணப்படுகின்றனர். எவ்வாறாயினும், எப்பிரஜையும் நடப்பு நிகழ்வுகள் பற்றிய தமது சொந்த அபிப்பிராயத்தினைப் பகிர்வதற்கான ஆற்றலைக் கொண்டுள்ளனர். இதன் காரணமாக, உண்மைகள் அல்லது பகுப்பாய்வுகளால் ஆதாரப்படுத்தப்படாத பல அபிப்பிராயங்களும் கருத்துக்களும் வெளிப்பட்டுப் பிரபல்யம் பெற்றன. இது ஒன்லைனிலும் நிஜ உலகிலும் விரோதங்களைத் தூண்டின. ஆர்ப்பாட்டம் செய்யும் பிரஜைகளின் வெவ்வேறு பிரிவினர்கள் ஏனையவர்களின் அபிப்பிராயங்களால் மனம் புண்பட்டு சமூக ஊடகங்களிலும் களத்திலும் மோதல்கள் அதிகரித்தபோது ஆர்ப்பாட்டங்களை இந்த விரோதங்கள் மோசமாகப் பாதித்தன. சமூக ஊடகங்களின் வரம்புகளும் தெளிவாகத் தெரிபவையாக இருந்தன. தகவல்களையும் அபிப்பிராயங்களையும் பகிர்வதற்கான ஒரு தளத்தினை இது உருவாக்கினாலும், ஆழமான சிந்தனையினையும் பகுப்பாய்வினையும் விவாதத்தினையும் இது தூண்டவில்லை. நியம வேறுபாடுகளைத் தவறவிட, இலகுவாக இருக்கும் ஒரு தளத்தினை உருவாக்குகிறது. இது பிரச்சினைகளதும் யதார்த்தத்தினதும் தேவையற்ற இருமைச் சித்தரிப்புக்கு வழிவகுத்து, மேலதிகமான சமூகப் பிளவினையும் அரசியல் பிளவுகளையும் உருவாக்குகிறது.

ஒரு திரையின் இடைமுகம் ஊடாக மக்கள் மற்றவர்களுடன் சம்பந்தப்படுகையில், மறுமுனையில் இருப்பது ஒரு மனிதன் என்பது இலகுவில் மறந்துவிடுகின்றது. இது நிஜ வாழ்க்கையில் ஏற்படுவதை விட மிக விரைவாக விவாதங்கள் அதிகரிப்பதற்குக் காரணமாகின்றது. அரகலயவின் சமூக ஊடக வெளியில் இது பல்கூறுகளைக் கொண்ட சொல்லாடல்கள் மூலம் நடந்தேறியது. இதன்போது பற்பக்க விவாதங்கள் குறைக்கப்பட்டு இரண்டு துருவப்படுத்தப்பட்ட தரப்புக்களாக அவை மாறும் வரை நிலைமாற்றப்பட்டன. ஒரு சொல்லாடல் அரகலயவைச் சூழுகையில் ஒரு பிரிவினர் போராட்டத் தளம் தனித்துவமானது மற்றும் முன்னெப்பொழுதும் நடந்திராதது எனப் பெருமிதப்பட்டபோது ஏனைய தரப்பினர்கள் இது போன்ற ஏனைய ஆர்ப்பாட்டங்களின் மீது கவனத்தினை ஈர்த்து இந்த கூற்றுக்கள் அனைத்தையும் நிராகரித்தனர். “நீங்கள் (இதை ஜனாதிபதியென, அரசாங்கமென, எந்த அதிகாரப் பிரமுகரும் என அர்த்தப்படுத்தலாம்) தவறான தலைமுறையினருடன் விளையாடுகிறீர்கள் (அல்லது வேறு இங்கிதமற்ற சொற்கள்) என்ற சுலோக அட்டைகளைத் தாங்கி நின்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் சமூக ஊடகங்களால் விமர்சிக்கப்பட்டு ஆர்ப்பாட்டக்காரர்களின் மூத்த தலைமுறையினர்கள் முகங்கொடுத்த சகல தடைகளும் அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டன.

சமூக ஊடக இடையீடுகளுக்கும் வரம்புகள் உள்ளன. தொனியின் நுண்மை இழப்பும், ஆழத்தின் இழப்பும், பகுப்பாய்வின் இழப்பும், சொற்களின் எண்ணிக்கையினாலும் பதிவின் நீளத்தினாலும் தீர்மானிக்கப்படுகின்றன. திரையினை அடிப்படையாகக் கொண்டு நிகழும் இடையீடுகள் பெரும்பாலும் மனிதநேயமற்றவையாக இருப்பதுடன் முக்கியமான கலந்துரையாடல்களும் வாதங்களும் மனதைப் புண்படுத்தும் சொற்களுடன் சகிப்பின்மையினை வெளிப்படுத்துபவையாக மாறுகின்றன. கண்ணோட்டங்கள் மற்றும் அனுபவங்கள் பற்றிய பயன்மிக்க கலந்துரையாடலாக இருந்திருக்க வேண்டியவைகள் தனிநபர்களும் குழுக்களும் மேலும் துருவமயமாவதற்குப் பங்களிப்பு வழங்கும் அழிவுமிக்க வாதங்களாக மாறின. அரச பல்கலைக்கழகங்களின் தயாரிப்புக்கள் என்ற ரீதியில், அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் சம்மேளனம் பற்றிய சொல்லாடலை நாம் காத்திரமானதென உணர்ந்தோம். இந்த மாணவர் அமைப்பு சமூக ஊடகங்களில் நாயகர்களாகக் கொண்டாடப்படவுமில்லை அல்லது கொள்கையற்றவர்களாகத் தூற்றப்படவுமில்லை. இவர்களின் வகிபாகத்தின் ஓப்லைன் யதார்த்தமும், சிக்கலும் பன்முகமும் கொண்ட இவர்களின் சூழ்நிலைகளும் துல்லியமாகவோ அல்லது

பக்கச்சார்பின்றியோ முன்வைக்கப்படவில்லை. ஆனால், உடன்படாதிருப்பதற்காக, பகைமையற்ற, ஆழ்சிந்தனைமிக்க மற்றும் ஆக்கபூர்வமான கலந்துரையாடலையும் உடன்பாடுகளையும் நோக்கிச் செல்வதற்குச் சமூக ஊடகக் கலாசாரமும் ஒன்லைன் தளமும் தயாரற்றவையாகவே உள்ளன.

## அணி திரட்டல்

செய்தி ஒன்றின் பரவலை விஸ்தரிப்பதற்குக் குறியீடுகளைப் பயன்படுத்தி, சமூக ஊடகங்களைக் கற்பனைத்திறனுடன் அரகலய பயன்படுத்தியது. சில குறிப்பிட்ட ஹேஷ்டெக்குகளின் பரவலான பயன்பாட்டை இவை நடைமுறைப்பத்திச் செம்மைப்படுத்தின (Freelon, McIlwainand Clark 2016). ஒன்லைனில் ஆதரவு பெறும் ஆர்ப்பாட்ட இயக்கங்கள் அவற்றுக்கு எதிரானவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்கும் எத்தனிக்கின்றன (Freelon, McIlwain and Clark 2016). அரகலயவைப் பொறுத்தவரை இதனைச் சமூக ஊடகங்களினுள்ளும் பல்வேறு முகாம்களைச் சேர்ந்த அரகலயவின் பௌதிக வெளியிலும் தெளிவாகக் காணக்கூடியதாக இருந்தது.

மக்களைப் பல வழிகளில் அணிதிரட்டும் நோக்கத்துடன் மக்களுடன் தொடர்பு கொள்வதற்கான ஒரு வழிமுறையாகச் சமூக ஊடகம் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது, சிலவேளைகளில், ஒரு சாதாரண செய்தி அல்லது சுவரொட்டி பரவலாகப் பரப்பப்பட்டு ஒரு குறிப்பிட்ட நேரத்திலும் திகதியிலும் ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டம் பற்றிய செய்திகள் பரப்பப்பட்டன (Tufekci and Wilson 2012). செய்தி பகிரும் செயலிகளில் ஆர்ப்பாட்டக் குழுக்கள் உருவாக்கப்பட்டு ஒரு பொத்தானை அழுத்துவதன் மூலம் அவை அணிதிரட்டப்பட்டன. இவற்றில் சில சாதாரண வாட்ஸ்அப் குழுக்களாக இருந்தன. சந்திகளில் நடக்கும் ஆர்ப்பாட்டங்களில் சந்தித்துக்கொண்ட அயலவர்கள் இதில் சேர்க்கப்பட்டனர். கண்காணிப்புக்கும் தடைகளுக்கும் குறைவாக உட்படும் மாற்றுத் தளங்களில் அனுசரிக்கப்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்களாகச் சில இருந்தன. இந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்களில் சேர, குழுவில் ஏற்கனவே உள்ள நம்பகமான நபரால் பரிந்துரைக்கப்பட வேண்டும். இந்த அணிதிரட்டலின் சிறந்த எடுத்துக்காட்டு, ஜுலை 9 ஆம் திகதி நடத்தத் திட்டமிடப்பட்ட ஆர்ப்பாட்டமாகும். இத்தினத்தில் கொழும்பில் திரண்ட மக்கள் வெள்ளத்துடன் இணைவதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் அவசரமாக விதிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டத்தை மீறிப் பொதுப் போக்குவரத்து இல்லாததையும் தாண்டிக் கொழும்புக்கு வந்தனர். இந்த ஆர்ப்பாட்டத்திற்குப் பல நாட்களுக்கு முன்னர், சமூக ஊடகங்களில் வெவ்வேறு மொழிகளில் வெவ்வேறு சுவரொட்டிகள் பரப்பப்பட்டு வந்தன. இவை அனைத்தும் ஒன்றுசேரும் திகதியினையும் “முழு நாடும் கொழும்புக்கு” என்ற சுலோகத்தையும் கொண்டிருந்தன. சுவரொட்டிகளை உருவாக்கியவர்கள் நாட்டின் நிலைமையை எதிர்த்துப் போராடும் தனிநபர்களுக்கும் குழுக்களுக்குமான தொடுப்புப் புள்ளியை வழங்கினார்கள் (Poell and Dijck 2018)[4]. போராட்டத்தில் கலந்துகொள்ளும் தீர்மானம் தனிப்பட்ட முறையில் எடுக்கப்பட்டது என்றாலும் இந்த முடிவு பல்லாயிரக்கணக்கானவர்களை ஒன்றிணைத்தது.

> சமல்: நான் கோட்டா கோகம மக்கள் பல்கலைக்கழகத்தை நடத்தும் குழுவில் உறுப்பினராக உள்ளேன் மற்றும் பெரும்பாலான உறுப்பினர்கள் நுகேகொடைக்கு அருகில் வசிக்கின்றனர். ஜுலை 9 ஆம் திகதி நுகேகொட சந்தியில் நடக்கும் பேரணியின் பின்னர் ஹோமாகமவில் இருந்து வரும் ஆர்ப்பாட்டப் பேரணியுடன் இணையும் மக்களுக்கு ஆதரவளிக்க மக்கள் பல்கலைக்கழகம் என்ற ரீதியில் நாங்கள் தீர்மானித்தோம். எனவே, நுகேகொட போராட்டத்தின் ஏற்பாட்டாளர் என்று நாங்கள் கருதிய ஒருவரைத் தொடர்பு கொண்டு ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவளிக்கும் எமது விருப்பத்தினை அவரிடம் தெரிவித்தோம். அவர் எங்களுக்குத் தேவையான தகவல்களை வழங்கினார். நாங்கள் மும்மொழிகளில் எழுதப்பட்ட சுவரொட்டிகளை உருவாக்கி மக்கள் பல்கலைக்கழகத்தின் முகநூ ல் பக்கத்தில் வெளியிட்டோம். மூன்று சுவரொட்டிகளும் ஏறக்குறைய 2000 பேரைச் சென்றடைந்தன. ஜுலை 9 ஆம் திகதி நாங்கள் நுகேகொடைக்கு வந்தபோது அங்கு ஏற்கனவே 500-1000 பேர் இருந்தனர். எங்களுக்குத் தெரியாத பல அமைப்பாளர்கள் இருந்ததால், எங்கள் முகநூல் பதிவுகளால் இவர்கள் வரவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. மேலும், நாங்கள் அணிவகுத்துச் செல்லும் போது, உறுப்பினர் ஒருவர் 17 நிமிட முக நூ ல் பேஸ்புக் நேரலை வீடியோவை[5] (மக்கள் பல்கலைக்கழக கோட்டா கோகம

வீடியோக்கள் 2022) அணிவகுப்பு மற்றும் போராட்டம் பற்றிய வர்ணனையுடன் வழங்கினார், மேலும் இந்த வீடியோ கிட்டத்தட்ட 500 பேரைச் சென்றடைந்தது.

லாரா: சில சமயங்களில், அணிதிரட்டல் வித்தியாசமான முறையில் நடைபெற்றது - ஒரு குறிப்பிட்ட திசையில் பொதுமக்களின் அபிப்பிராயத்தினைத் திரட்டும் வகையில் பிம்பங்களும் வீடியோக்களும் பகிரப்பட்டன. ரம்புக்கனையில் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டவர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தி ஒருவரைக் கொன்ற செய்தி ஏப்ரல் 19 ஆம் திகதி நான் கோட்டா கோகமவில் இருந்தபோது கிடைத்தது. நாங்கள் மொபைல் போனைச் சுற்றி நின்று வீடியோவைப் பார்த்தோம். கூடிய கூட்டத்தின் மனநிலை இனிமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. ஆனால் அந்த உணர்வுகள் மிக வேகமாகக் கோபமாகவும் குழம்பிய மனநிலையாகவும் மாறின. அந்த நேரத்தில், அஹிம்சைக்கான உணர்வும் அர்ப்பணிப்பும் மேலோங்கி ஆர்ப்பாட்டக்காரர்கள் அனைவரும் மெழுகுவர்த்தி ஏந்திய ஊர்வலத்திற்காக ஒன்றுகூடினர். இருப்பினும், ஒரு வீடியோவைப் பகிர்வதன் மூலம் கூட்டத்தினரிடையே உடனடியான அணிதிரட்டலையும் மனநிலை மாற்றத்தினையும் ஏற்படுத்த முடியும் என்பது இதன்போது நன்கு வெளிக்காட்டப்பட்டது.

மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்களால் கோட்டா கோகம மீது மே 9 ஆம் திகதி தாக்குதல் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து மக்கள் கோட்டா கோகமவிற்கு வருகை தந்தமை தன்னிச்சையான அணிதிரட்டலின் மற்றொரு உதாரணமாகக் காணப்பட்டது. சமூக ஊடகங்களில் அரகலயவின் முக்கிய நபராக விளங்கிய திலான் சேனநாயக்க தாக்குதல் பற்றிய விரிவான இற்றைப்படுத்தலுடன் தாக்குதலை 90 நிமிட நேரலையாக பேஸ்புக்கில் (கோட்டா கோகம வீடியோ 2022) வீடியோ மூலம் வழங்கினார். இந்த நேரலைக் காணொளியைப் பார்த்தவர்களின் எண்ணிக்கை சரியாகத் தெரியவில்லை என்றாலும் இவரது நேரலைக் காணொளி வழியே பெரும் எண்ணிக்கையான மக்கள் தாக்குதல் செய்தியைப் பார்த்தனர் என்பதை உறுதியாகக் கூற முடியும். ஒரே ஒரு தொலைக்காட்சி மட்டுமே இந்தத் தாக்குதலை நேரடியாக ஒளிபரப்பியது. இருப்பினும் அருகிலுள்ள பகுதிகளில் உள்ள மக்கள் ஆர்ப்பாட்டக்காரர்களையும் போராட்டத் தளத்தையும் பாதுகாக்க கோட்டா கோகமவிற்கு விரைந்தனர். இந்தக் கட்டுரையை எழுதும் போது, இந்த வீடியோவினை 2.2 மில்லியன் பேர் பார்த்துள்ளனர், 11,400 பேர் எதிர்வினையாற்றியுள்ளனர், மற்றும் 45,000 பேர் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். தன்னிச்சையாகவும் திட்டமிட்ட முறையிலும் மக்களைத் திரட்டுவதில் சமூக ஊடகங்கள் இவ்விடயத்தில் குறிப்பிடத்தக்க வகிபாத்திரத்தினைக் கொண்டிருந்தன.

## ஹேஷ்டெக்குகளின் (#) சக்தி

அரகலயவும் சமூக ஊடகங்களில் சில குறிப்பிட்ட ஹேஷ்டெக்குகளைப் பயன்படுத்தியது. பாரிய இயக்கத்துடன் தங்களை இணைப்பதற்கும் தங்கள் சொந்த அபிப்பிராயங்கள் மற்றும் பதிவுகளுக்கு ஆதரவு பெறுவதற்கும் ஆர்ப்பாட்டக்காரர்கள் இந்த ஹேஷ்டெக்குகளைப் பயன்படுத்தினர். நவீன ஆர்ப்பாட்ட இயக்கங்களின் மிகவும் புலப்படத்தக்க குறியீடாக இந்த ஹேஷ்டெக்குகள் காணப்படுகின்றன (Freelon, McIlwain and Clark 2016). அரகலயவைப் பொறுத்தவரை, மிக முக்கியமான ஹேஷ்டெக்காக #gotagohome காணப்பட்டது அல்லது இதன் மாறுபட்ட வடிவங்கள் காணப்பட்டன. மேலே கலந்துரையாடியவாறு ஒன்லைன் மற்றும் ஓப்லைனை வித்தியாசப்படுத்துவதில் அதிகரித்து வரும் சிரமங்கள் இதை மேலும் சிக்கலாக்குகின்றன. நாம் ஓப்லைனிலும் ஒன்லைனிலும் ஹேஷ்டெக்குகளைப் பயன்படுத்தப் பழகிவிட்டோம். ஆர்ப்பாட்டங்களின் இவ்வகையான ஒன்லைன் மற்றும் ஓப்லைன் தளங்களுக்கு இடையேயான இடை-பரிசீலனை ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு ஏனைய ஆர்ப்பாட்டக்காரர்களின் தொடர்புகள் பற்றிய தெளிவான கருத்தினை வழங்கி, ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்களின் அடையாளத்தை வலுப்படுத்தி அவர்களின் பங்கேற்பைப் பகிரங்கப்படுத்தவும் உதவுகின்றன.

அரகலயவுடன் தொடர்புடைய ஹேஷ்டெக்குகள் ஆரம்பத்தில் அரகலய சூழமைவுடன் தாமே பயன்படுத்தப்பட்டாலும், அரகலய சாராத சமூக ஊடக உள்ளடக்கத்திற்கான பிரசித்தத்தினைப் பெறுவதற்காகவும் ஏனையவர்கள் இவற்றைப் பயன்படுத்தத் தொடங்கினர். சில துணிக் கடைகள் அரகலய தொனிப்பொருள் சார்ந்த காட்சிகளை உருவாக்கியது போல வாணிப நலன்களைக் கொண்ட சிலர் அவர்களின் சமூக ஊடகங்கள்

பார்க்கப்படுவதை அதிகரிப்பதற்காக இவற்றினைப் பயன்படுத்தினர்.

ஹேஷ்டெக்குகள் பயன்படுத்தப்படும் அளவினைப் பற்றிய ஆய்வும் சுவாரஸ்யமானது. ஏனெனில் அரகலயவின் வளர்ச்சியை அவற்றின் மூலம் கண்டறிய முடியும். மே 9 ஆம் திகதி தாக்குதல்கள் நடத்தப்பட்டபோது பிரஜைகள் ஊடகவியலாளர்கள் தாக்குதல் தொடர்பான வீடியோக்களை #attackonGGG போன்ற ஹேஷ்டெக்குகளுடன் குறியிடத் தொடங்கினர். கோட்டபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியை ராஜினாமாச் செய்த பின்னர், #gotagohome என்ற ஹேஷ்டெக் தேவையற்றதாக மாறியதுடன் சிலர் அதை #ranilgohome என்பது கொண்டு பதிலீடு செய்தனர் (எவ்வாறாயினும், இது கவர்ச்சியானதாகவோ அல்லது பிரபலமானதாகவோ இருக்கவில்லை). நாம் இதை எழுதும் போது, நவம்பர் 2 ஆம் திகதி நடந்த சமீபத்திய எதிர்ப்புடன் டுவிட்டரில் #aragalaya மற்றும் #economiccrisislka என்ற ஹேஷ்டெக்குகள் ட்ரெண்டிங்கில் உள்ளன. இந்த கடைசி ஹேஷ்டெக் வருடத் தொடக்கத்தில் இருந்து ஒரு பிரதான ஹேஷ்டெக்காக உள்ளதுடன் இதுவே கடைசி ஹேஷ்டெக்காக நிலைக்கும் என்ற கணிப்பு நியாயமானதே.

## எதிர்வினைகள்

அரகலயவின் ஆரம்ப நாட்களான ஏப்ரல் மாதத் தொடக்கத்தில், அனைத்து வடிவிலுமான சமூக ஊடகங்களையும் குறுகிய காலத்திற்குத் தடைசெய்ததன் மூலம் நாடளாவிய போராட்டத்திற்கான திட்டத்திற்கு அரசாங்கம் பதிற்செயற்படாற்றியது. 2014 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளிலும் 2019 ஆம் ஆண்டின் போது குறைந்த அளவிலும் நிகழ்ந்த இனக் கலவரத்திற்கும் சமூக ஊடகங்களில் பரப்பப்பட்ட வதந்திகளுக்கும் இடையிலான தெளிவான தொடர்பினைப் பார்க்கையில், இது ஒன்றும் இலங்கைக்குப் புதிய மாற்றமல்ல. இச்சூழ்நிலைகளில் அரசாங்கம் கடுமையான சமூக ஊடகத் தடைகளை விதித்தது. இருப்பினும், இந்த நேரத்தில் இந்தத் தடை நியாயமற்றது என்று கருதிய பலர் சமூக ஊடகங்களை அணுகுவதற்காக வி.பி. என்.களைப் பயன்படுத்தினர் (VPN). தடையைத் தவிர்த்துச் சமூக ஊடகங்களைச் சுற்றிவளைத்து அணுகுவதற்கான இந்த முயற்சி, அரகலயவுடன் தொடர்புடைய ஹேஷ்டெக்குகள் முன்தள்ளப்பட்டுப் பல நாடுகளிலும் “டிரெண்டிங் தலைப்புகள்” என்று குறிப்பிடப்படும் எதிர்பாராத விளைவை ஏற்படுத்தியது. ஏப்ரல் மற்றும் மே மாதங்கள் முழுவதும், கோட்டா கோகமவில் ஆர்ப்பாட்டக்காரர்கள் களத்தில் இருந்தபோது இணைய இணைப்பில் சிக்கல்களை எதிர்கொண்டனர். போராட்டக் களத்திற்கு அருகிலுள்ள தொடர்பாடல் கோபுரங்களினால் சமாளிக்க வேண்டியிருந்த பெரும் இணைய உலா நெரிசலே இதற்கான காரணமாக இருக்கலாம். எவ்வாறாயினும் அரசாங்கம் சமிக்ஞைகளை (சிக்னல்களை) தீவிரமாக நெரிசல்மிக்கதாக ஆக்கியதாகக் களத்தில் வதந்தி பரவியது. இணைப்புநிலை பற்றிய சிந்தனை அரகலய - கோட்டா கோகம நூலகத்துக்கு மிக நெருக்கமானதாகும். போராட்டத்தின் அடையாளமாக விளங்கிய இந்த நூலகம், மக்கள் தங்கள் தொலைபேசிகளை சார்ஜ் செய்யும்போது வாசிப்பதற்காகப் புத்தகங்களை அடுக்கிவைத்து மக்களை இணைக்கும் தொலைநோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட ஒன்றாகும்.

அரகலயவுக்கான எதிர்வினைகள் பல வடிவங்களை எடுத்தன. விரைவிலேயே சமூக ஊடகங்களை அணுகுவதற்கும் உள்ளடக்கங்களைப் பதிவிடுவதற்கும் தடைகள் தோன்றின. ஆர்ப்பாட்டக்காரர்களும் ஒருவருக்கொருவர் விரோதங்களையும் கருத்து வேறுபாடுகளையும் கொண்டிருந்தனர் (Poell and Dijck 2018)[6]. இத்துடன், ஆர்ப்பாட்டக்காரர்கள் அல்லாதவர்களால் அரகலயவுக்குப் பாதகமான எதிர்வினைகள் தோற்றுவிக்கப்பட்டன. குறிப்பாக எந்த ஒரு வன்முறையின் பின்னரும் இது நடந்தது. மே மாதம் 9 ஆம் திகதி கோட்டா கோகம மீது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பின்னர், ஆத்திரமடைந்த மக்கள் கலவரக்காரர்களை ஏற்றிச் சென்ற பஸ்களுக்குத் தீயிட்டு கலவரக்காரர்களைத் தாக்கவும் செய்தனர். போராட்டத்தில் பங்குபற்றாத நபர்கள் இந்த வன்முறையினை ஒரு குற்றச்செயல் என்றும் சட்டத்துக்கு முரணானது என்றும் கூறி இப்போராட்டங்கள் சமூக மாற்றத்திற்கான ஏற்கத்தக்க ஓர் இயக்கம் அல்ல என்பதற்கு இது ஆதாரமாகும் எனக் குறிப்பிட்டனர். வன்முறையில் ஈடுபட்டவர்களின் நடத்தை “எங்கள் அரகலய அல்ல” எனக் கூறி வன்முறையில் ஈடுபட்டவர்களை வன்முறையில் ஈடுபடாத ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒதுக்கிவைக்கத் தொடங்கினர். பலரும் ஆதரித்து வாதாடிய அஹிம்சைக் கொள்கைகளால் இந்த நிலைப்பாடு தூண்டப்பட்டிருக்கலாம் என்றாலும், ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றாத பொதுமக்கள் முன்னிலையிலும் பொதுவாக வெளி உலகத்தின் பார்வையிலும் தாம் சட்டத்தினை மதிப்பவர்கள் என்ற

தோற்றப்பாட்டினை வெளிக்காட்டும் விருப்பத்துடன் இது இணைக்கப்பட்டிருக்கலாம்.

## சமூக ஊடகங்கள் வழியே அதிகாரத்திற்கான எதிர்ப்பு

சமூக ஊடகங்கள் வகிபாத்திரம் வகித்த மூன்றாவது வழி, அதிகாரத்திற்கு எதிரான எதிர்ப்பின் மூலமானதாகும். கடந்த சில வருடங்களாக இலங்கை அரசியலுடன் தொடர்புபட்டிருந்த தெளிவான மற்றும் கண்டறியக்கூடிய வரலாற்றைக் கொண்டதும் அரகலயவின் போது அடிக்கடி பயன்படுத்தப்பட்டதுமான கூறுகளை ஆராய்வது சுவாரஸ்யமானதாகும். மீம்களின் ஒன்லைன் பயன்பாட்டினையும் அதிகாரத்தை முற்றிலும் நிராகரிப்பதை எடுத்து விளக்குவதற்காக அரகலய சூழமைவில் அமைவிடங்களுக்கு மறுபெயர் இட்டமையினையும் இந்தப் பகுதி ஆராய்கின்றது.

### கருத்துப் பிரதிபலிப்புக்கான சுதந்திரம் (Freedom to Meme)

> லாரா: பொது இடங்களில் அரசியல் கேலி செய்யக்கூடாது எனக் கூறி வளர்க்கப்பட்டவள் நான். கடந்த இரண்டு வருடங்களின் போதுதான் பேருந்தில் சென்றவர்கள் அரசாங்கத்தைக் கேலி செய்வதை நான் முதன்முதலில் கேட்டேன். நிச்சயமாக, முன்னரும் அரசாங்கத்தை வெளிப்படையாக விமர்சித்தவர்கள் இருந்தனர் ஆனால் அவர்கள் பொதுவாக மிகவும் தீவிரமாக இருந்தனர்.

சுதந்திரம் கிடைத்தது முதல் அரசியல் கேலிச் சித்திரங்களே செய்திப் பத்திரிகைகளின் பிரதான உள்ளீடாக இருந்து வருகின்றன. ஆனால் அதிகாரத்தில் இருப்பவர்களைக் கேலி செய்வது எனும் கருத்தியல், மேல் வர்க்க பத்திரிகையாளர்களுக்கு மட்டுமேயான ஒரு களமாக இருந்து வந்தது. இவ்வாறு மேல் வர்க்க வகுப்பைச் சேர்ந்த பத்திரிகையாளர்களாக இருந்தபோதிலும் இவர்கள் முன்வைத்த விமர்சனமிக்க கருத்துக்களுக்காக 2015 க்கு முந்தைய ஆண்டுகளில் இவர்கள் அடிக்கடி இலக்கு வைக்கப்பட்டனர். எனவே, பொதுவெளியில் அரசியல் விமர்சனங்களைச் செய்தால் அதன் விளைவுகள் மிகவும் பாரதூரமானவையாக இருக்கும் என்பதால் சாமான்யர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கும் எத்தனிப்பினைக் கொண்டிருந்தனர். இருப்பினும், அண்மைக் காலங்களில், குறிப்பாக 2015 தேர்தலுக்குப் பிறகு, அரசியல் விமர்சனங்கள் அதிகம் புலப்படுபவையாகவும் அடிக்கடி வெளியிடப்படுபவையாகவும் உள்ளன. இணையம் மற்றும் சமூக ஊடக வெளிகளுக்கான அதிகரித்த அணுகலுடன் விமர்சனங்களின் அநாமதேயம் அதிகரித்து 2015 தேர்தலுக்குப் பிறகு ஒப்பீட்டளவில் ஊடக சுதந்திரத்தின் அதிகரிப்பு ஏற்பட்டதுடன் அரசியல் விமர்சனங்கள் மிகவும் புலப்படத்தக்கவையாகவும் அடிக்கடி வெளியிடப்படுபவையாகவும் மாறின. அரசியல் தொடர்பாடல்களிலும் அரசியல் விமர்சனத்திலும் மீம்ஸ் ஒரு முக்கிய கருவியாக மாறியது. மீம்ஸ், நகைச்சுவை மூலம் சிந்தனையைத் தூண்டியது, மேலும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் பொதுமக்களிடையே இவை மிகவும் எளிதாகப் பரப்பப்பட்டன (பாரதி, 2021). சமூக ஊடகங்கள் மூலம் வெளிப்பட்ட இந்த கருத்துச் சுதந்திரம் விரைவில் ஓப்லைன் உலகிற்கு மாறியதுடன் மக்கள் பொது இடங்களிலும் சிலவேளைகளில் பொலிஸார் முன்பும் பிற அதிகாரப் பிரமுகர்கள் முன்பும் கேலி செய்வதைப் பாதுகாப்பான ஒன்றாக உணர்ந்தனர். ஹேஷ்டெக்குகளைப் போலவே, இந்த ஆண்டு பகிரப்பட்ட மற்றும் பரப்பப்பட்ட மீம்ஸ்கள் அரசியல் மற்றும் பொருளாதாரத் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிய புரிதலை வழங்குகின்றன.

## அதிகாரத்திற்கு எதிரான நகைச்சுவைகள்

அதிகாரத்தைப் பற்றிக் குடிமக்கள் கேலி செய்யும் போது, அதிகாரம் கொண்டிருப்பவர்கள் தவறு செய்யக்கூடியவர்கள் என்பதை அவர்கள் அங்கீகரிக்கிறார்கள். அதிகாரம் கொண்டுள்ள நபர்கள் நகைச்சுவையின் மூலம் அவர்களின் அதிகார பீடங்களில் இருந்து அகற்றப்பட்டு மீண்டும் மனிதர்களாக்கப்படுகின்றார்கள் (வெர்டெரி 1999). ஒன்லைன் மற்றும் ஓப்லைன் தளங்களில் சில ஆளுமைகள் பற்றிப் பரவியிருக்கும் பரிகாசங்கள், அதிகாரத்தின் நிராகரிப்பினை எடுத்துவிளக்கின. அரகலயவில் பயன்படுத்தப்பட்ட மிகவும் அடையாளம் காணத்தக்க பரிகாசமாக “கபுடு கா காகா” என்ற தொடர்ச்சியான குரலெழுப்பலைக் குறிப்பிடலாம். வாகன ஓட்டிகளும் தங்கள் வாகனங்களின் ஹாரன்களில் இந்த ஒலிக்குறியினை

இசைத்தார்கள் என்பதுடன் ஜூலை 2022 க்குப் பிறகு அரசாங்கம் மேற்கொண்ட கடும் நடவடிக்கையின் போது இவ்வாறு ஒலிக்குறியினை இசைத்தவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். காவல் துறையினதும் ஏனைய அதிகாரப் பிரதிநிதிகளதும் அதிகாரத்தினை நிராகரித்தமை மீம்ஸ் மூலமும் இந்த அதிகாரிகளுடனான பொதுமக்களின் நேரடி இடையீடுகளின் போதும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக, கோட்டா கோகமவில் வசித்தவர்கள் போராட்டத் தளத்தில் நடந்த திருட்டுத் தொடர்பான விசாரணையினை நிறுத்துமாறு காவல் துறையிடம் கூறியதுடன் திருட்டு தங்களது கிராமத்தினுள் நடந்ததால் தாங்கள் அதைக் கையாளப் போவதாகவும் குறிப்பிட்டனர்.

சில நேரங்களில் அதிகார ஆளுமைகள் பற்றிய இந்தப் பரிகாசங்கள், பாடல்கள் மற்றும் மீம்ஸ்கள் மூலம் 2019 ஆம் ஆண்டில் ராஜபக்ஷவுக்கு வாக்களித்த "69 லட்சம்'' மக்களுக்கும் நீட்டிக்கப்பட்டது. இந்த மக்கள் இலகுவான இலக்குகளாக மாறினர். மீம் உருவாக்குபவர்களில் அதிகமானவர்கள் இந்த மக்கள் ராஜபக்ஷவைத் தேர்ந்தெடுப்பதில் காட்டிய குறுகிய பார்வைக்காக அவர்களைக் குற்றம் சாட்டினர். ராஜபக்ஷவுக்கு வாக்களித்த பெரும்பான்மையானவர்கள் தங்கள் தேவைகளை ஏனையவர்கள் நிறைவேற்றவில்லை என நம்பிய ஒரு குறிப்பிட்ட மக்கள் மத்தியில் இருந்து வந்தவர்களாவர். வாக்களிப்பதற்கான தமது ஜனநாயக உரிமையைப் பயன்படுத்துகையில் இவர்கள் தங்கள் நலன்களுக்குச் சிறந்த வகையில் சேவையாற்றக்கூடியவராகத் தெரிந்தவருக்கு வாக்களித்தனர். இலங்கையில் இனத் தேசியவாத அணிதிரட்டல் சமூகப் பொருளாதார வகுப்பின் வழியேயும் ஒன்றிணைகிறது. எனவே, இந்த மக்களைப் பரிகசிப்பதையும் கேலி செய்வதையும் ஒரு வகுப்புவாத அடிப்படையிலான செயலாகவும் வியாக்கியானப்படுத்த முடியும்.

எதிர்ப்பின் ஒரு வடிவமாகப் பரிகாசம் செய்வது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஒடுக்கப்பட்ட குழுக்களதும் வர்க்கங்களதும் ஆயுதமாகவும் இது அங்கீகரிக்கப்பட்டுள்ளது (ஸ்காட் 1985). அதிகாரமிக்க பதவிகளில் இருப்பவர்களுக்கு எதிரான எதிர்ப்பின் வெளிப்பாடுகள் நியாயமானவையாக இருப்பதுடன் அதிகாரம் கொண்டிருப்பவர்கள் விமர்சனம் மற்றும் பரிகாசத்திற்கான நியாயமான இலக்குகளாக உள்ளனர். ஆனால் பரிகாசம் செய்பவர்களை விடக் குறைவான அதிகாரம் கொண்டவர்கள் பரிகசிக்கப்படலாகாது. அரசியல் எழுச்சிக் காலங்களின்போது சமூக அந்தஸ்தும் சமூக நிலைப்பாடுகளும் மாறுகின்றன என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

## இடங்களுக்கு மீள்பெயரிடல்

இடங்களின் பெயர்கள் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்கள் பற்றிய தகவல்களின் மூலங்களாகும் (Bloch 2006). ஒரு இடத்திற்கு மறுபெயரிடுவது என்பது அந்த இடத்தினை மீட்டெடுப்பதாகும் (அல்லது மாறாக அதற்கான பழைய உரிமை கோரலாகும்). காலனித்துவத்திற்குப் பிந்திய காலப்பகுதியில் இடங்களின் பெயர்கள் தொடர்பாகக் காணப்பட்ட சர்ச்சைகளில் இருந்து இது சான்றாகத் தெரிகின்றது. இதன் போது காலனித்துவப் பெயர்கள் தேசியவாதிகளின் பெயர்களைக் கொண்டு மாற்றப்பட்டன. கொழும்பு நகரத்தின் காலனித்துவப் பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கும் பல இடங்களின் பெயர்கள் கடந்த தசாப்தத்தில் மாற்றப்பட்டமை வேறுபட்ட, பின்காலனித்துவ மற்றும் "தேசிய'' வரலாற்றைப் பிரதிபலிக்கின்றது. இடங்களின் பெயர்கள் தொடர்பான இந்த போராட்டம் நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. அதிகாரத்தின் புதிய பாதுகாவலர்கள் ஓர் இடத்திற்கு மறுபெயரிடுவதற்குத் தங்கள் அதிகாரத்தினைப் பயன்படுத்தும்போது, அது இடத்திற்கான அல்லது நிலத்திற்கான பழைய உரிமைகோரல்களை அழிக்க உதவுவதுடன் அவர்கள் முக்கியமானதாகக் கருதும் கருத்துக்களையும் நம்பிக்கைகளையும் வலுப்படுத்துகின்றது (Palmberger 2012). பொதுவாக அதிகாரத்தில் உள்ளவர்களாலேயே இடங்களின் பெயர்கள் மாற்றப்படுகின்றன. எனவே அரகலயவில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் இடங்களின் பெயர்களை மாற்றுவதற்கான உரிமையைத் தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டபோது, குறிப்பிட்ட இடங்களுக்கான அரசாங்கத்தின் கோரிக்கைகளை அவர்கள் நிராகரிப்பதையே அது குறிக்கிறது.

காலி முகத்திடல் பகுதி முழுவதுமே ஒட்டுமொத்தமாக கோட்டா கோகம எனக் குறிப்பிடப்பட்டது, சிலர் கூகிள் வரைபடத்தில் இந்த இடத்தின் பெயரைக் கூட மாற்றியுள்ளனர். அலரிமாளிகைக்கு வெளியே அமைக்கப்பட்டிருந்த ஆர்ப்பாட்ட முகாம் 'மைனா கோகம'[7] என்றும், பாராளுமன்றத்துக்கு வெளியே உள்ள ஆர்ப்பாட்டப் பகுதி சுருக்கமாக 'ஹொரு கோகம'[8] என்றும் குறிப்பிடப்பட்டன. உத்தியோகபூர்வமான பெயர்களை நிராகரித்து

இந்தப் பெயர்களால் மக்கள் இந்த இடங்களை குறிப்பிடத் தொடங்கினர்.

## முடிவுரை

எமது விரல் நுனியில் இருக்கும் ஒன்லைன் உலகத்தை நாம் அணுகும் சமூகத்தில் மெய்நிகர் உலகிற்கும் நிஜ உலகிற்கும் இடையில் தெளிவான வேறுபாடு இல்லை. இரண்டையும் வேறுபடுத்தவெனத் திட்டவட்டமான வழிகள் எவையும் இல்லை. அரகலயவின் சமூக ஊடகப் போக்குகள் அரசியல் விவாதங்கள் மற்றும் நடவடிக்கைகளினுள் பரவுகின்றன. இச்சிதறிப் பரவும் இயல்பானது ஆர்பாட்ட இயக்கத்தின் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது, நிகழ்வுகளின் உள்ளடக்கம், அணிதிரட்டல் மற்றும் அதிகாரத்திற்கான எதிர்ப்பு எனப் பல மட்டங்களில் பல இடங்களில், மற்றும் முன்பு சாத்தியமாக இருந்ததை விட மிகப் பாரிய அளவில் பொதுமக்களின் மத்தியில் இது நிகழ்கின்றது. நடக்கும் நிகழ்வுகளுடன் ஆர்ப்பாட்டக்காரர்களைப் பிணைக்கும் நெருக்கத்தைச் சமூக ஊடகம் உருவாக்கியுள்ளது.

ஒவ்வொருவரின் கையிலும் கேமரா போன் எனப் பிரஜைகள் ஊடகவியலாளர்களின் தோற்றமானது அரசுக்கும் அதிகார நிறுவனங்களுக்கும் சவால் விடுத்து ஆர்ப்பாட்டங்களின் போது பிரஜைகளின் உரிமைகளை மீறுவதற்கும் பின்னர் அதிலிருந்து தப்பிப்பதற்குமான இந்நிறுவனங்களின் வாய்ப்புகளை குறைக்கிறது. எதிர்ப்பு இயக்கங்கள் அடிமட்டத்தில் இருந்து வளர்வதற்குச் சமூக ஊடகங்கள் அனுமதிப்பதுடன் பலரும் தலைமைப் பாத்திரங்களை ஏற்று தலைமைத்துவத்தின் பாரம்பரியக் கருத்தியல்களுக்குச் சவால் விடுப்பதையும் இயலுமாக்குகின்றது.

சமூக ஊடகங்கள் இரட்டை வகிபாத்திரத்தினை வகிக்கின்றன. பாரம்பரிய ஊடகங்களைப் போலவே, இது அதன் பரவலான பயன்பாடு மற்றும் ஆயிரக்கணக்கான மக்களை விரைவாகவும் மலிவாகவும் அணிதிரட்டும் திறன் ஆகியவற்றின் மூலம் தொடர்பாடலுக்கான ஒரு வழியாகச் செயல்படுகிறது. இந்த அணிதிரட்டல் தனிப்பட்ட ஆர்வம் மற்றும் தீர்மானம் ஆகியவற்றில் தங்கியுள்ளது. உந்துதலை உருவாக்கி அதனை நிலைக்கச் செய்வதன் மூலம் ஆர்ப்பாட்டக்காரர்கள் இயக்கத்தினை மேலும் முன்னேற்றுவதற்கான கருவியினைச் சமூக ஊடகங்கள் அவர்களுக்கு வழங்குகின்றன. எளிய ஹேஷ்டெக்குகளையும் மிகவும் சிக்கலான தொழில்நுட்பத் திறன்களையும் பயன்படுத்துவதன் மூலம் இது நிறைவேற்றப்படுவதுடன் இதன் மூலம் ஆர்ப்பாட்டத்திற்கான வலுவான கருவிகளும் மன்றங்களும் உருவாக்கப்படுகின்றன.

அதிகாரத்திற்கான எதிர்ப்பின் மிகவும் எதிர்வினையற்ற வடிவங்களுக்கான ஒரு தளமாகவும் சமூக ஊடகம் செயல்படுகிறது. மீம்ஸ்களைப் பகிர்வதன் மூலமும் அரசியல் அபிப்பிராயங்களைச் சுதந்திரமாக வெளிப்படுத்துவதன் மூலமும் இடங்களுக்கு மறுபெயரிடுதல் / இடங்களை மீட்டெடுத்தல் மூலமும் சமூக ஊடகங்கள் எதிர்ப்பின் தளமாக மாறுகின்றன.

ஒன்லைன் தளத்தினை ஓப்லைன் தளத்திற்கான ஒரு மாற்றீடாகவும் ஓப்லைன் தளத்தில் இருந்து வித்தியாசமான ஒன்றாகவும் கருதுவது ஒரு தவறான கருத்தியலாகும். இடங்களுடன் மக்கள் எவ்வாறு ஈடுபடுகிறார்கள் மற்றும் இன்றைய உலகில் எதிர்ப்பு இயக்கங்களின் தன்மை ஆகிய இரண்டும் பற்றிய அடிப்படையான தவறான புரிதலை இது அடிப்படையாகக் கொண்டுள்ளது. இன்றைய சமூகத்தில் மக்களில் பலரும் சமூக ஊடகங்களுக்கான ஏதோ ஒரு வகையிலான அணுகலைக் கொண்டுள்ளனர். மேலும் அவர்கள் ஒன்லைன் மற்றும் ஓப்லைன் தளங்கள் ஆகிய இரண்டிலும் கால்பரப்பி நிற்கின்றனர். பிரிக்கப்படாத ஓர் அரகலயவினை உருவாக்குவதற்காக ஒன்றுசேரும் ஒன்லைன் மற்றும் ஓப்லைன் செயற்பாடுகளாக ஆர்ப்பாட்டச் செயற்பாடுகளை இந்தக் கட்டுரை எடுத்து விளக்குகிறது என நாம் எதிர்பார்க்கின்றோம். இந்த முயற்சியில், சிறந்த அரசியல் ஒழுங்கிற்காகப் போராடும் ஈடுபாடுமிக்க பிரஜைகளின் ஒன்லைன், ஓப்லைன், மெய்நிகர் வெளிகள் மற்றும் அவர்களின் உணர்வுபூர்வமான வெளிகள் என வெவ்வேறு தளங்களின் முன்னும் பின்னும் இக்கட்டுரை உலாவித் திரிந்திருக்கின்றது.

## Endnotes

1 வெறுமனே தொடர்பாடல் ஊடகமாக அல்லாது எதிர்ப்பிற்கான ஒரு தளமாகவும் சமூக ஊடகத்தினை நோக்கும் கருத்தியல் அண்மைக்கால ஆக்கங்களில் ஆராயப்பட்டுள்ளது.

2 சில்கியின் கருத்துப்படி (2020), அமெரிக்க சிவில் உரிமைகள் இயக்கத்தின் போது மார்டின் லூதர் கிங் ஜூனியருக்கும் மால்கம் எக்சிற்கும் நடந்தது

3 இயக்கங்களுக்குப் பாரம்பரிய ஊடகங்கள் வழங்கும் அங்கீகாரத்தினை விட அதிக அங்கீகாரத்தினை வழங்கும் ஊடகத்தின் பக்கம் சாயும் எத்தனிப்பினைச் சகல இடங்களிலும் உள்ள எதிர்ப்பாளர்கள் கொண்டுள்ளனர் - Ismail, Amani, Gayane Torosyan, and Melissa Tully 2019.

4 சமூக ஊடக எதிர்ப்பியக்கங்களின் 'இணைப்புத் தலைவர்களினால்' இந்த வகிபாத்திரமே பொதுவாக வகிக்கப்படுகின்றது - Poell, Thomas, and Jose van Dijck. 2018.

5 https://www.facebook.com/PeoplesUniversity GGG/ videos/565501075181279

6 பன்முகப்படுத்தப்பட்ட சமூக ஊடக எதிர்ப்புச் சூழமைவில் தலைமைத்துவச் செயற்பாடு வெளிப்படையானதாக மாறுகையில் சாத்தியமான விளைவு - Poell and van Dijck, 2018.

7 அரகலயவில் பங்குபற்றிய போராட்டக்காரர்களாலேயே, மஹிந்த ராஜபக்ஷவிற்கு மைனா என பெயர் வழங்கப்பட்டது.

8 ஹொரா என்பது கள்வர்கள் என்பதைக் குறிக்கும் சிங்களச் சொல்லாகும். பாராளுமன்றம் கள்வர்களின் கிராமம் எனும் அரகலயவின் கருத்தினை இது குறிக்கின்றது.

## உசாத்துணைகள்


பாரதி, ஆர். வைஷ்னோ 2021. "தெற்கின் குரல்கள்", https://www.karibu.no/newsletter/2021/09/memeing-democracy/

பென்னட் Lance W. 2012. "'அரசியலின் தனிப்பயனாக்கம்: அரசியல் அடையாளம், சமூக ஊடகம் மற்றும் அரசியல் மற்றும் சமூக அறிவியலுக்கான அமெரிக்க அகடமியின் சரித்திரக் குறிப்புக்கள் 644 (1): 22.

Bloch, Marc. 2006. வரலாற்றாசிரியனின் கைத்திறம்: மன்செஸ்டர் பல்கலைக்கழக அச்சகம்.

De Haan, Leah, Hugo Santiago Barrail, Ella Burdett, Mateusz Ciasnocha, Clinton Dangote, Ashiru Ayuba Dannomau, Salome Nzuki, Zakaria Ouadah, Barima Peprah-Agyemang, and Laura Sanzarello. 2020. "வெற்றிகரமான ஆர்ப்பாட்டத்தினை எது உருவாக்குகின்றது" சதாம் ஹவுஸ். https://www.chathamhouse.org/2020/12/what-makes-successful-protest.

Freelon, Deen, Charlton Mcllwain, and Meredith Clark. 2016. "சமூக ஊடகக் கருத்திட்டத்தின் சக்தி மற்றும் விளைவுகளை அளத்தல்" செய்தி ஊடகம் மற்றும் சமூகம் 1-22.

Ghoshal, Devjvot, மற்றும் உதித் ஜயசிங்ஹ. 2022. "இலங்கை அரசாங்கத்தினை எவ்வாறு செயற்பாட்டாளர் குழு ஒன்று கவிழ்த்தது" https://www.reuters.com/world/asia-pacific/how-band-activists-helped-bring-down-sri-lankas-government-2022-07-11/. 2022. கோட்டா கோ கம வீடியோ. https://www.facebook.com/100052248543860/videos/3277118722572944.

இஸ்மாயில், அமானி, கயனி டொரஸ்யான் மற்றும் மெலிஸ்சா டுலி. 2019. "சமூக ஊடகம், மரபு ஊடகம் மற்றும் நுழைவாயில்காத்தல்: பேர்குசன் மற்றும் சாலட்டெஸ்வின் செய்தியில் ஆர்ப்பாட்ட நெறியுதாரணம்" தொடர்பாடல் மீளாய்வு22 (3): 169-195. doi:DOI: 10.1080/10714421.2019.1651153.

குருவிட்ட, ரதீந்திர. 2022. "இலங்கையின் தலைவரற்ற ஆர்ப்பாட்டங்கள்." த டிப்ளோமட். https://thediplomat.com/2022/04/sri-lankas-leaderless-protests/ -.

பிளாம்பேகர், மொனிகா. 2012. "பொது இடங்களுக்கு மறுபெயரிடல்: பொஸ்னியா மற்றும் ஹேர்சோகோவின் விலக்கிவைப்புக் கொள்கை" MMG Working Paper Series. 2022. மக்கள் பல்கலைக்கழகம் கோட்டா கோ கம. https://www.facebook.com/PeoplesUniversityGGG/videos/565501075181279.

Poell, Thomas, and Jose van Dijck. 2018. "சமூக ஊடகம் மற்றும் புதிய ஆர்ப்பாட்ட இயக்கங்கள்" In The Sage Handbook of Social Media, by Jean Burgess, Alice Marwick and Thomas Poell, 546-561. London: Sage.

Scott, James. 1985. பலவீனமானவர்களின் ஆயுதங்கள்: குடியானவர்களின் ஆர்ப்பாட்டங்களின் நாளாந்த வடிவங்கள். New Haven: Yale University Press.

சில்கி, சாரா. 2020. இன்றைய எதிர்ப்பு இயக்கங்களுக்குப் பல தலைவர்கள் உள்ளனர் - சிவில் உரிமைகள் இயக்கம் போல. https://theconversation.com/there-are-many-leaders-of-todays-protest-movement-just-like-the-civil-rights-movement-140906.

Tufekci, Zeynep, மற்றும் கிறிஸ்தோபர் வில்சன். 2012."சமூக ஊடகம் மற்றும் அரசியல் ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றுவதற்கான தீர்மானம்: தஹ்ரீர் சதுக்க அவதானிப்புக்கள்".தொடர்பாடல் ஏடு.

வெனிசூலா, செபஸ்தியன், அருட்டுரோ அர்ரியகடா மற்றும் Andres Scherman. 2012. "இளைஞர் ஆர்ப்பாட்ட நடவடிக்கை நடத்தையின் சமூக ஊடக அடிப்படை: சிலி பற்றிய விபரங்கள்" தொடர்பாடல் ஏடு1-16.

Verdery, Katherine. 1999. சடலங்களின் அரசியல் வாழ்வு: மீளடக்கமும் பின்காலனித்துவ மாற்றமும். நியூயோர்க்: கொலம்பியா பல்கலைக்கழக அச்சகம்.

# கோட்டாகோகம மக்கள் பல்கலைக்கழகம்: மாற்றுப் புலமைசார் வெளியொன்றின் ஒரு பரிசோதனை

*சமல் விமுக்தி ஹேமசந்திர**

*இக்கட்டுரையானது கோட்டா கோகம மக்கள் பல்கலைகழகத்தின் பயணத்தை அரகலய பின்னணியில் குறிப்பிடுகிறது. இது பல்கலைக்கழகத்தின் நிறுவன உறுப்பினர்களில் ஒருவரான எழுத்தாளரின் கண்ணோட்டத்தில் பார்க்கப்படுகிறது மற்றும் சமத்துவ சமூகத்திற்காக போராடும் ஒரு சிறிய குழுவின் அர்ப்பணிப்பு முயற்சிகளின் கணக்கீட்டை வழங்குகிறது.*

* சமல்விமுக்தி ஹேமச்சந்திர கொழும்பு பல்கலைக்கழக வரலாற்றுத் துறை விரிவுரையாளர் (தகுதிகாண்) ஆவார்.

## அறிமுகம்

இலங்கையின் வரலாற்றில் இதுவரை பதிவு செய்யப்பட்டிராத மாபெரும் மக்கள் எழுச்சியான *அரகலய/போராட்டத்திற்கான*எமது பங்களிப்பு கோட்டா கோகம மக்கள் பல்கலைக்கழகமாகும். போராட்டத்தின் பிரம்மாண்டத்தைக் கருத்திற் கொள்கையில், மக்கள் பல்கலைக்கழகம் சமுத்திரத்தின் ஒரு நீர்த்துளிக்கு ஒப்பானதாக இருந்தாலும், இது முறைமைசார் மாற்றம் ஒன்றினையும், தமது பிள்ளைகளுக்கும் இளைய தலைமுறையினருக்கும் சிறந்த வாய்ப்புகளையும் கோரிய மக்கள் சமுத்திரத்தினுள் உள்வாங்கப்பட்ட ஒரு துளியாகும். இந்த ஆவணம் மக்கள் பல்கலைக்கழகத்தின் பயணத்தை *அரகலயவின்/போராட்டத்தின்* சூழமைவில் எடுத்துக் காட்டுகின்றது. நான் இந்தப் பல்கலைக்கழகத்தின் தாபக உறுப்பினர் என்பதனால் இது எனது கண்ணோட்டத்தில் பார்க்கப்படுகின்றது. *அரகலய/போராட்ட* விடயத்தைப் போன்றவாறே, இது பல்கலைக்கழகத்தின் முழுமையான கதை அல்ல என்பதையும் நான் அனைத்து உறுப்பினர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்பதையும் வலியுறுத்திக் கூறவேண்டும். ஆயினும், இலங்கையை ஒரு சிறந்த இடமாக மாற்ற விரும்பும் ஒரு சிறிய குழுவின் உழைப்பைப் பற்றிய ஒரு விபரத்தை இது வழங்குகின்றது.

கோட்டா கோகம மக்கள் பல்கலைக்கழகம், 2022 ஏப்ரல் 16 ஆம் திகதி, கோட்டா கோகம நூலகத்திற்கு அடுத்ததாக உள்ள கோட்டா கோகம இடப்பரப்பில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. ஆரம்பத்தில், மக்கள் பல்கலைக்கழக அணி 11 நபர்களைக் கொண்டிருந்தது. பின்னர், தனிப்பட்ட காரணங்கள் மற்றும் மக்கள் பல்கலைக்கழகக் கூட்டத் தொடர்களுக்குக் குறிப்பிட்ட பேச்சாளர்களைத் தெரிவுசெய்தல் தொடர்பான கருத்து வேறுபாடுகள் ஆகியவற்றின் காரணமாக இரண்டு பேர் அணியை விட்டு வெளியேறியதுடன், மக்கள் பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளைக் கண்ட பின்னர் மேலும் ஏழு

பேர் அணியில் இணைந்தனர். மோசமான வானிலை காரணமாக மக்கள் பல்கலைக்கழகக் கூடாரம் 2022 மே 12 ஆம் திகதி முழுமையாக அழிவடைந்தது. நலன் விரும்பிகளின் ஆதரவுடன், மக்கள் பல்கலைக்கழகம் ஒரு சிறந்த கட்டமைப்பைப் பெற்று மே 16 முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. அதன் ஆரம்பம் முதல் 2022 ஆகஸ்ட் 13 ஆம் திகதி கோட்டா கோகம சிதைக்கப்பட்டது வரையான காலப்பகுதியில், அரசியல், கலாசாரம், சட்டம் மற்றும் விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு வகையான தலைப்புகளில் 53 கூட்டத்தொடர்களைப் பல்கலைக்கழகம் நடத்தியது. இந்த 53 கூட்டத்தொடர்களில், 36 கூட்டத்தொடர்களை மக்கள் பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்ததுடன், எஞ்சியவை *அரகலய/போராட்டத்திற்குப்* பங்களிக்க விரும்பிய ஏனைய அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்டன.

மக்கள் பல்கலைக்கழகம் என்னும் எண்ணக்கரு எவ்வாறு உருவானது என்பதை இந்த ஆவணம் முதலாவதாகக் கலந்துரையாடுகின்றது. இது பற்றிய யோசனை ஒரு தனிநபரின் மனதில் தோன்றவில்லை, மாறாக வெவ்வேறு தனிநபர்கள் மற்றும் குழுக்களின் நடவடிக்கைகளால் ஊக்கமளிக்கப்பட்டதே இந்த யோசனை என்பதை ஆவணம் சுட்டிக்காட்டுகின்றது. மக்கள் பல்கலைக்கழகம் எவ்வாறு செயற்பட்டது என்பதையும் இந்த ஆவணம் விரிவாகக் குறிப்பிடுகின்றது. இறுதியாக, இது மக்கள் பல்கலைக்கழகத்தின் தாக்கத்தையும் *அரகலய/போராட்டத்துடனான* அதன் உறவையும் விமர்சன ரீதியாக மதிப்பீடு செய்கின்றது.

## மக்கள் பல்கலைக்கழகத்தின் தோற்றம் - அதன் உருவாக்கத்திற்கு வழிவகுத்த நிகழ்வுகளைத் தொகுத்தல்

*அரகலய/போராட்டத்திற்கு* நேரடியாக வந்து ஆதரவளிக்க முடியாத நிலையில் இருந்த வெளிநாடுகளில் வாழும் சௌம்யா அமரசிங்கவின் நண்பர்கள், போராட்டத்திற்கு உதவுவதற்காக, போராட்டத்திற்குப் பொருத்தமானதென சௌம்யா கருதும் ஏதேனும் விடயத்திற்காகச் செலவிடுமாறு மொத்தம் 58,000 ரூபாவினை அவருக்கு அனுப்பி வைத்தனர். ஆரம்பத்தில் அவர் போராட்டக்காரர்களுக்குத் தண்ணீர்ப் போத்தல்கள் மற்றும் உணவு போன்றவற்றை வாங்க விரும்பினார். ஒரு தடவை மாத்திரம் இடம்பெறும் செயற்பாட்டிற்காக இந்தப் பணத்தைச் செலவிடாது, புலமைசார் கலந்துரையாடல்களை நடத்தக்கூடிய ஒரு தளமான மக்கள் பல்கலைக்கழகம் ஒன்றிற்காக முதலீடு செய்யவேண்டும் என நான் அவரிடம் பரிந்துரைத்தேன். அவரும் அதற்கு உடன்பட்டார். இதனைத் தொடர்ந்து, எமது சிந்தனையினை ஒத்த சிந்தனையினைக் கொண்ட செயற்பாட்டாளர்களான நண்பர்களை நாம் அணுகினோம். இவ்வாறே இந்த அணி கட்டியெழுப்பப்பட்டது. கோட்டா கோகம மக்கள் பல்கலைக்கழகத்தைப் பற்றி அறிந்தவர்கள் என்னை இந்த முன்னெடுப்பின் “தலைவர்” எனக் கருதுவதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், கோட்டா கோகம மக்கள் பல்கலைக்கழகத்திற்கு ஏனைய தனிநபர்கள் மற்றும் குழுக்களின் கருத்துக்களும் பங்களிப்புகளும் செல்வாக்குச் செலுத்திப் பங்களித்தன என்பதை பின்வரும் பந்திகள் ஊடாக நான் தொடர்ந்து கூறிவருகின்றேன்.

“மக்கள் பல்கலைக்கழகம்” என்னும் சொற் பதத்தை நிர்மால் தேவசிறியிடமிருந்தே நான் முதன் முதலில் கேள்விப்பட்டேன். 2016-17 காலப்பகுதியில் விளிம்புநிலை சமுதாயமொன்று வாழ்ந்த வெயங்கொட மயானத்திற்கு அருகில் மக்கள் பல்கலைக்கழகமொன்றை நாம் தாபிக்க வேண்டும் என அவர் ஒரு சில வருடங்களுக்கு முன்னர் என்னிடம் யோசனை தெரிவித்தார். அந்த யோசனையை அப்போது எம்மால் யதார்த்தமாக்க முடியவில்லை. கோட்டாகோகம நிறுவப்படுவதற்கு முன்னர், 2022 ஏப்ரல் 8 ஆம் திகதி சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்ற ‘கற்பித்தல் (teach out)’ கூட்டத்தொடரின்போது எனக்கு இந்த யோசனை மீண்டும் தோன்றியது. ஹேஷ்டெக் ஜெனரேசன் (Hashtag Generation) மற்றும் டிலீட் நதிங் (Delete Nothing) ஆகியவற்றினால் இந்தக் ‘கற்பித்தல்’ ஏற்பாடு செய்யப்பட்டது. இங்கு இரண்டு உரைகள் நிகழ்த்தப்பட்டன. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை மற்றும் பொருளாதார நெருக்கடி பற்றிய அடிப்படை விளக்கத்தை வழங்குவதில் ஓர் உரை கவனம் செலுத்தியது. 20 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் இடம்பெற்ற போராட்டங்கள் மீதான ஒரு வரலாற்றுக் கண்ணோட்டத்தை வழங்குவது தொடர்பிலானதாக இரண்டாவது உரை அமைந்திருந்தது. போராட்டத் தளமொன்றில் நடைபெற்ற புலமைசார் கலந்துரையாடலொன்றுக்கு நான் ஒருபோதும் சென்றிருக்கவில்லை என்பதால், இது எனக்கு ஒரு புத்துணர்ச்சியூட்டும் அனுபவமாக அமைந்ததுடன் இரண்டு உரைகளின் போதும் மக்கள் எவ்வாறு ஈடுபடுகிறார்கள் என்பது குறித்தும் நான் நெகிழ்ச்சியடைந்தேன். இரண்டு உரைகளும் மூன்று

மொழிகளிலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும், இது மேட்டுக்குடி சார்பான தன்மையொன்றினைக் கொண்டிருந்ததாக நான் உணர்ந்தேன். கலந்துரையாடல்கள் ஆங்கிலத்தை நோக்கியதாக நெறிப்படுத்தப்பட்டுக் காணப்பட்டமையால், சிங்கள மொழி பேசுபவர் என்னும் வகையில், அந்த வெளியில் என்னால் ஈடுபட முடியவில்லை. 2022 ஏப்ரல் 12 ஆம் திகதி மாலை நிர்மால் தேவசிறி ஆற்றிய உரையொன்றில் கோட்டாகோகமவில் மக்கள் பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்படுவதற்கான உடனடிக் காரணம் வெளியானது. ஆரம்பத்தில் அந்த உரையை கோட்டா கோகமவில் வேறேதேனும் இடத்தில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டபோதும், போராட்டக்காரர்களின் சத்தம் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் காரணமாக, அது பண்டாரநாயக்க சிலையின் கீழ் நடத்தப்பட்டது. கொட்டும் மழையிலேயே முழு உரையும் நிகழ்த்தப்பட்டது. இந்தத் தடைகள் அனைத்தையும் தாண்டி, உரையும் கலந்துரையாடலும் ஏறத்தாழ இரண்டு மணித்தியாலங்களாக இடம்பெற்றன. நான் அங்கிருந்த வேளையில், புலமைசார் கலந்துரையாடல்களை வசதி செய்வதற்கு எமக்குத் தகுந்த வெளியொன்று வேண்டும் என உறுதியாக நம்பினேன். மக்கள் பல்கலைக்கழகம் ஒன்றிற்கான யோசனைக்கு நூலகம் ஓர் இணைந்த முன்னெடுப்பாக இருந்தது. இந்த வாசகர்கள் தாங்கள் எவற்றை வாசிக்கின்றனர் என்பது பற்றியும் என்ன அனுபவிக்கின்றனர் என்பது பற்றியும் கலந்துரையாடுவதற்கும் விவாதிப்பதற்கும் ஒரு வெளியை உருவாக்குவதற்கான, உகந்த நேரத்தில் மேற்கொள்ளப்படும் இடையீடாக நான் இச்சந்தர்ப்பத்தைக் கண்டேன். யார் வேண்டுமானாலும் தங்களது யோசனைகளையும் அபிப்பிராயங்களையும் வெளிப்படுத்தக்கூடிய மற்றும் வெளிப்படுத்துவதற்கான சுதந்திரத்தைக் கொண்டுள்ள, அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கான வெளியொன்றான மக்கள் பல்கலைக்கழகம் என்னும் யோசனை, என் மனதில் மாத்திரம் ஏற்படவில்லை என்பதை நான் இங்கே கோடிட்டுக்காட்ட விரும்பினேன். *அரகலய/போராட்டம்* தொடங்குவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே இந்த யோசனை நமது அரசியல் செயற்பாட்டாளர்களிடையே பரவி வந்ததுடன், *அரகலய/போராட்டத்தின்* போது இடம்பெற்ற ஏனைய, ஒத்ததான, மேற்கூறிய நடவடிக்கைகளின் பலம் மற்றும் பலவீனங்களை அவதானித்ததன் பின்னர் இது யதார்த்தமாக்கப்பட்டது. கோட்டாகோகம மக்கள் நூலகம் அக்காலகட்டத்தில் தாபிக்கப்பட்டிருந்ததுடன், அதன் பிற்கால வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது அந்நேரத்தில் அது சிறிய அளவிலேயே இருந்தாலும், அந்த வெளி மிகவும் உயிரோட்டமாகக் காணப்பட்டதுடன், அனைத்துத் தரப்பு மக்களும் புத்தகங்களை வாசிக்கவும் கலந்துரையாடவும் அங்கு ஒன்றிணைந்தனர்.

மக்கள் பல்கலைக்கழக அணி உருவாக்கப்பட்டவுடன், நாம் கூட்டாக மக்கள் பல்கலைக்கழகத்திற்கான ஓர் ஆணையை எழுதினோம். இது எமது சொந்தக் குறிக்கோள்களையும் *அரகலய/போராட்டத்தின்* போது நாம் செயற்பட்ட விதத்தையும் எடுத்துக்காட்டியது. மக்கள் பல்கலைக்கழகத்திற்கான பின்வரும் மூன்று குறிக்கோள்களை நாம் குறிப்பிட்டோம்:

1. கோட்டாகோகமவினுள் காணப்படும் பல்வேறு அரசியல், சமூக, பொருளாதாரக் கருத்துக்களை ஒரே இடத்திற்குக் கொண்டுவந்து, யோசனைகளும் அபிப்பிராயங்களும் சங்கமிக்கும் தளமொன்றை உருவாக்குதல்.

2. 2022 மார்ச் 31 முதல் உருவாக்கப்பட்டு வரும் இலங்கையின் எதிர்காலத்தைக் கற்பனை செய்தல்.

3. சுதந்திரம் மற்றும் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட மாற்றுப் புலமைசார் வெளி ஒன்றினைப் பரிசோதனை செய்தல்.

கோட்டா கோகம தாபிக்கப்பட்டபோது, அரசியல் சித்தாந்தம், இனம் மற்றும் பாலியல் நாட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் பல்வகைமை கொண்ட ஒரு மக்கள் குழு திரண்டிருப்பதை நாம் அவதானித்தோம். இந்தக் குழுக்கள் ஒன்று கூடி தங்களது யோசனைகளையும் அக்கறைகளையும் கலந்துரையாடுவதற்கான வெளியொன்று காணப்படவில்லை. ஆகவே, பல்வேறு தலைப்புகளில் மக்கள் தங்களது யோசனைகளையும் அபிப்பிராயங்களையும் கலந்துரையாடுவதற்கான ஒரு ஒன்றுகூடுமிடமாக மக்கள் பல்கலைக்கழக வெளியைப் பயன்படுத்துதல் முதலாவது குறிக்கோளாகக் காணப்பட்டது. மக்கள் பல்கலைக்கழகம் தொலைநோக்குப் பார்வை கொண்டதாக இருத்தல் வேண்டும் என்பதை இரண்டாவது குறிக்கோள் பிரதிபலித்தது. இலங்கைக்கான ஒரு மாற்று எதிர்காலத்தைக் கற்பனை செய்வதற்கான வெளியாக இருப்பதற்கு மக்கள் பல்கலைக்கழகம் நாடியது. பங்கேற்பு மற்றும் கலந்துரையாடலில் சுதந்திரம் மற்றும் சமத்துவத்தை உறுதிப்படுத்தும் மாற்றுப் புலமைசார் வெளியொன்றைப் பரிசோதிப்பதே இறுதிக் குறிக்கோளாகும். எமது அணியின் பெரும்பான்மையானோர் பாரம்பரிய பல்கலைக்கழக

முறைமையிலிருந்து வந்தவர்கள் என்பதுடன் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் நிலவும் அதிகாரக் கட்டமைப்பு பற்றி நாம் அதிகளவில் விமர்சித்தோம். ஆகவே, ஒரு சிறந்த புலமைசார் வெளியாக அமையும் என நாம் நம்பும் இடத்தில் செயற்படுவதற்கு கோட்டாகோகம வெளி எமக்கு ஒரு சிறந்த வாய்ப்பாக காணப்பட்டது.

எமது குறிக்கோள்களை நாம் முடிவு செய்தவுடன், இந்த யோசனையைச் செயற்படுத்துதல் எமது அடுத்த சவாலாகக் காணப்பட்டது. எம்மிடமிருந்த நிதிகள் போதுமானதாக இல்லை என்பதையும், அத்தகைய நடவடிக்கைகளில் எமக்கு முன் அனுபவம் இல்லாததால் நிதிகளை எவ்வாறு சேகரிப்பது என்பது குறித்து எமக்குத் தெரியாது என்பதையும் நாம் அறிந்திருந்தோம். ஏப்ரல் 15 ஆம் திகதி, இலங்கையில் பல்வேறு இனக் குழுக்களிடையே சமாதானத்தை மேம்படுத்துவதற்காக ஒன்றிணைந்த இளைஞர்கள், தொழில்சார் குழுக்கள் மற்றும் அக்கறை கொண்ட தனிநபர்கள் ஆகியோரை உள்ளடக்கிய ரைஸ் அப் ஸ்ரீலங்கா (Rise Up Sri Lanka) அமைப்பின் உறுப்பினர் ஒருவராகவிருந்த எனது பாடசாலைத் தோழர் ஒருவரை நாம் அணுகினோம். அவர்களிடம் கடற் பக்கத்தில், நுழைவாயில் ஸீரோவுக்கு (Zero) அருகில் இரண்டு கூடாரங்கள் காணப்பட்டன. அவர் எமது யோசனையை மிகவும் பாராட்டியதுடன் அந்தக் கூடாரங்களில் ஒன்றையும் வழங்கினார். நாம் அந்த கூடாரத்தைக் கோட்டாகோகம மக்கள் நூலகத்திற்கு அருகில் மீள அமைத்தோம். கூடாரத்தை அமைப்பது ஒரு சுவாரஸ்யமான முயற்சியாக இருந்தது. சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவிடமிருந்து இரவல் பெற்ற துளையிடும் சுத்தியல் ஒன்றை நான் பயன்படுத்தினேன். கூடாரம் அமைப்பதற்கு நூலக ஊழியர்களும் எமக்கு உதவினர். கோட்டாகோகமவை உருவகப்படுத்தும் அத்தியாவசியக் கூறுகளாக, கூட்டொருமைப்பாடு, கூட்டு முயற்சி மற்றும் பகிர்வு ஆகியவை காணப்பட்டதுடன் இது இந்தச் செயன்முறையில் முழுமையாகப் பிரதிபலித்தது. ஏனெனில், எம்மில் எவரும் ஒருவரையொருவர் அறிந்திருக்கவில்லை. ஆனால் பகிரப்பட்ட புரட்சிகர உணர்வால் நாம் இணைக்கப்பட்டோம். Rise Up அமைப்பைச் சேர்ந்த எனது நண்பர், மக்கள் பல்கலைக்கழகத்திற்கு அவசியமான முக்காலிகள் மற்றும் காகிதாதிகள் போன்ற அவசியமான பொருட்களுக்கு நிதியளிப்பதற்குத் தயாராகவிருந்த தனது நண்பருடன் எம்மை இணைத்தார். ஆகவே, கோட்டாகோகம மக்கள் பல்கலைக்கழகம் என்பது ஒரு நபரின் கருத்திட்டமல்ல, மாறாக, அது ஒருவரையொருவர் கூட அறிந்திராத, ஆனால் யோசனைகளைக் கலந்துரையாடவும் விவாதிக்கவும் ஓர் இயக்கத்திற்கு ஆதரவளிக்கவும் விரும்பிய மக்களின் ஒரு கூட்டு முயற்சியாகும்.

## கோட்டாகோகம மக்கள் பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடுகள்

நாம் மக்கள் பல்கலைக்கழகத்தை மிகப் பிரம்மாண்டமான முறையில் ஏப்ரல் 16 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்தோம் (மக்கள் பல்கலைக்கழகத்தின் ஆரம்பக் கூட்டத்தொடர், யூடியுப், 2022). மதிப்பு வாய்ந்த கல்வியியலாளர்களும் செயற்பாட்டாளர்களுமான பேராசிரியர் ஜயதேவ உயங்கொட, கலாநிதி ஜானகி ஜயவர்தன, கலாநிதி பிரபா மனுரத்ன ஆகியோரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் செயற்பாட்டாளரான பெனிஸ்லோஸ் துஷான் என்பவரும் ஆரம்ப உரைகளை நிகழ்த்தினர். பேராசிரியர் உயங்கொட அவர்களின் உரை முழுமையாக சிரச தொலைக்காட்சியில் (டயஸ், பதிகட 19.04.2022) ஒளிபரப்பப்பட்டது. "நான் உங்களுக்கு (பிரஜைகளுக்கு) கற்பிப்பதற்காக இங்கு (கோட்டாகோகம) வரவில்லை, உங்களிடமிருந்து கற்றுக்கொள்ளவே வந்தேன்" என்னும் அவரது கூற்று கல்வி வட்டாரங்களில் உள்ள பலரிடையே எதிரொலித்தது. சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையின் ஜனநாயகத்திற்கு இந்த மக்கள் எழுச்சி எவ்வளவு பிரதானமானது என்பதை அவர் சுட்டிக்காட்டினார். இந்த உரையின் YouTube வீடியோ, இன்று வரை 19,000 தடவைகள் பார்க்கப்பட்டுள்ளதுடன் கருத்துக்களுக்கான பகுதியில் வீடியோ பற்றி வெளியிடப்பட்ட சாதகமான கருத்துக்கள் இந்த உரையின் சக்திவாய்ந்த தாக்கத்தைக் குறித்துரைக்கின்றன. ரன்சிரிமல் என்னும் வலைப்பதிவு எழுத்தாளர், இந்த உரையின் அடிப்படையில், போராட்டக்காரர்கள் மீதான அதன் தாக்கத்தை ஏற்று, ஒரு கவிதையை எழுதினார் (ரன்சிரிமல் 2022). கலாநிதி மனுரத்ன, மக்கள் பல்கலைக்கழகம் என்னும் யோசனையை ஒரு சர்வதேச சூழமைவில் வைப்பதன் மூலம் குடியியற் கல்விக்கான மாற்றுப் புலமைசார் வெளிகளைக் கொண்டிருப்பதன் முக்கியத்துவத்தை விளக்கினார். கலாநிதி ஜயவர்தனவின் உரையில், அரச கல்வியின் மட்டுப்பாடுகளை எதிர்கொள்வதற்கு மக்கள் பல்கலைக்கழகமொன்றைக் கொண்டிருப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். இறுதியாக, சிறுபான்மையினருக்கும் இந்த மக்கள் எழுச்சிக்கும்

இடையிலான உறவைப் பற்றித் துஷான் கலந்துரையாடினார். *அரகலய/போராட்டத்தில்* சிறுபான்மையினர் காணப்படவில்லை என சிங்கள சமூகத்தின் சில பிரிவினரிடமிருந்து வந்த விமர்சனங்களுக்கு பதிலளித்த அவர், அரச அடக்குமுறை அனைத்து சமுதாயங்களுக்கும் ஒரே விதமானதாக இல்லை எனவும், இது இந்தப் போராட்டத்தில் சிறுபான்மையினரின் வகிபங்கைத் தீர்மானிக்கின்றது எனவும் குறிப்பிட்டார்.

அங்குரார்ப்பண நிகழ்வில் பேராசிரியர் உயங்கொட ஆற்றிய உரை, ஊடகங்கள் மற்றும் மக்கள் மத்தியில் *அரகலய/போராட்டம்* பற்றிய சாதகமான உணர்வினை உருவாக்கியது. *அரகலய/போராட்டம்* பற்றி ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வந்த நிலையில், மக்கள் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டமை மக்களின் உண்மையான மாற்று வெளியொன்றாக கோட்டாகோகமவின் சட்டபூர்வமான தன்மையை அதிகரித்தது. பிரதானமாக , அரசியலை நடத்துதல் பற்றிய ஒரு பாரம்பரியப் புரிதலில் இருந்து வெளிப்பட்ட பல விமர்சனங்களுக்குக் கோட்டாகோகம உள்ளாகியது. இந்த இடம் அரசியல் சார்பற்றது என்னும் கூற்று, போராட்டக்காரர்கள் அரசியலுக்காக இங்கு வரவில்லை எனின், அவர்கள் கேளிக்கைக்காகவே இங்கு வந்திருக்க வேண்டும் என்னும் விமர்சனங்களுக்கு வழிவகுத்தது. இந்த விமர்சனங்கள் போராட்டக்காரர்கள் மீது தொடர்ச்சியாக சுமத்தப்பட்டன. இந்த விமர்சனம் சந்திமா ஜயசேனவின் “நிர்பாஷிக மினிசுன்கே தேசபாலன பாவிதாவ கொய்பத்தடத” (“கட்சி சார்பற்ற மக்களின் அரசியல் நடைமுறை எங்கே செல்கின்றது?”) என்னும் கட்டுரையில் தெளிவாகப் பிரதிபலிக்கின்றது. அங்கு நிலவிய கொண்டாட்டச் சூழ்நிலையின் காரணமாக கோட்டாகோகமவின் அரசியல் திசையை அவர் விமர்சித்தார். ஆயினும்,அதிகாரக் கருத்திட்டங்களை வன்முறையற்ற முறையில் சவாலுக்குட்படுத்துவதற்கான அறிவை மக்களுக்கு வழங்குவதற்கான ஒரு முக்கியமான அரசியல் சாளரமாக மக்கள் பல்கலைக்கழகத்தை அவரும் கூட ஏற்றுக்கொள்கின்றார் (ஜயசேன 2022). நிறுவப்பட்ட ஒரு சில நாட்களிலேயே, மக்கள் பல்கலைக்கழகம் கோட்டாகோகமவின் நிரந்தர அங்கமாக மாறியது. கோட்டாகோகமவின் நிலைமை பற்றிய பல செய்திக் கட்டுரைகள் மக்கள் பல்கலைக்கழகத்தைச் சாதகமான முறையில் குறிப்பிட்டன.

இந்த ஆவணத்தின் முன்னைய பகுதியில் குறிப்பிட்டுள்ளவாறாக, மக்கள் பல்கலைக்கழகத்தின் கூட்டத்தொடர்கள் இரண்டு வழிகளில் ஏற்பாடு செய்யப்பட்டன: அவை, மக்கள் பல்கலைக்கழகம் அதன் நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தமை மற்றும் ஏனைய நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் செயற்படுவதற்கான வெளியொன்றை உருவாக்கியமை என்பனவாகும். மக்கள் பல்கலைக்கழகம் கூட்டத்தொடர்களை ஏற்பாடு செய்தபோது, கோட்டாகோகம வெளிக்கான இக்கூட்டத்தொடரின் பொருத்தம் ஒரு தலைப்பையும் பேச்சாளரையும் (பேச்சாளர்களையும்) தெரிவு செய்வதற்கான பிரதான அளவுகோலாக அமைந்தது. உதாரணமாக, மக்கள் பல்கலைக்கழகத்தின் முதல் இரண்டு கூட்டத்தொடர்கள் *அரகலய/போராட்டத்தின்* உடனடிக் காரணமாக அமைந்த பொருளாதார நெருக்கடியைப் புரிந்துகொள்வதற்கு அர்ப்பணிக்கப்பட்டன (குருவிட்ட 2022). ஒரு ‘திருவிழா’ என கோட்டாகோகம மீது முன்வைக்கப்பட்ட விமர்சனத்தை இலக்காகக் கொண்டு, போராட்டத்தை ஒரு செயலாற்றுகையாக எவ்வாறு பார்க்க முடியும் என்பது பற்றிய ஒரு கூட்டத்தொடரை நாம் நடத்தினோம். பிரபல நடிகரும் நாடகக் கோட்பாட்டாளருமான பேராசிரியர் சௌமிய லியனகே இந்தக் கூட்டத்தொடரை நடத்தியதுடன், அரசியல் செயற்பாட்டினுள் செயலாற்றுகையின் பெறுமதியை அவர் எடுத்துக் கூறினார் (மக்கள் பல்கலைக்கழகம், கோட்டாகோகம வீடியோக்கள், மே 17, 2022). ஒரு கட்டத்தில், கோட்டாகோகமவில் இருந்த போராட்டக்காரர்கள் குழுவொன்று ஏனையோரை விடத் தாங்கள் அதிகமாகத் ‘தியாகம் செய்ததாகக்’ கோரியதன் மூலம் ஏனைய போராட்டக்காரர்களை விடத் தங்களை முன்னிலைப்படுத்த முயற்சித்தது. இது கோட்டாகோகமவின் கூட்டு இயல்பிற்கு எதிரானது என்பதால், இந்த உரிமை கோரலைப் பற்றியதாகவும் தியாகத்தின் அரசியலற்ற இயல்பை சுட்டிக்காட்டுவதற்காகவும் ஒரு கூட்டத்தொடர் ஏற்பாடு செய்யப்பட்டது. (பெரேரா 2022). இந்தக் கூட்டத்தொடர், தீவிர அரசியலில் பிரபல்யம் வாய்ந்த ஒரு நபராக இருந்த கல்யானந்த பெரேராவினால் நடத்தப்பட்டதுடன், ‘தியாகம்’ என்னும் வார்த்தையை நாம் பயன்படுத்தும்போது, போராட்டத்தின் ஒரு பகுதியாக இருப்பதை விட நாம் தியாகம் செய்தவை மிகவும் பெறுமதி வாய்ந்தவை என நாம் நம்புவதாகவும் இது போராட்டத்தின் நெறிமுறைகளுக்கு எதிரானது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தீவிர அரசியலில் பிரபல்யம் வாய்ந்த மற்றொரு செயற்பாட்டாளரான விதர்ஷன கன்னங்கர, “முறைமை சார் மாற்றம் என்றால் என்ன” எனவும் அத்துடன் இது *அரகலய/போராட்டத்தில்* ஒரு முக்கியமான கோரிக்கையாக இருந்ததால் அது உள்ளடக்கும்

அனைத்தையும் பற்றியும் கலந்துரையாடினார் (கன்னங்கர 2022). போரில் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூரும் வகையில், மே 18 ஆம் திகதி இரண்டு கூட்டத்தொடர்களை (ஹனிபா & சுரேந்திரராஜ் 2022, முணசிங்க & அணு 2022) ("நினைவு மற்றும் நினைவேந்தல் - Memory and Memorialization" 2022) மக்கள் பல்கலைக்கழகம் நடத்தியது. நினைவேந்தல் தினம் தொடர்பாக முரண்பட்ட கருத்துக்கள் இருந்தன. ஏனெனில் இது LTTE மீதான போர் வெற்றிக்கான ஒரு கொண்டாட்டமாகச் சிங்களத் தேசியவாதிகளால் கருதப்பட்டது. இந்தக் கொண்டாட்டம் சிறுபான்மையினரை, குறிப்பாக தமிழர்களை ஒதுக்கி வைத்ததுடன், கடந்த காலங்களில் நாம் செய்ததைப் போன்றே, போரின் வன்முறையையும் வெற்றிக் கொண்டாட்டத்தின் பின்னால் உள்ள தேசியவாத அரசியலையும் எடுத்துக்காட்ட விரும்பினோம். போரின் வன்முறையை எடுத்துக்காட்டுவதற்குப் பதிலாக, இந்த இரண்டு கூட்டத்தொடர்களிலும், நினைவுகூர்தலின் செயன்முறையைச் சுட்டிக்காட்டுவதன் மூலமும் நினைவுகூருவதற்கான உரிமை யாருக்கு உள்ளது என்பதை நிர்ணயிப்பதன் மூலமும் நினைவுகூரலின் அரசியலை பேச்சாளர்கள் எடுத்துக்காட்டினர். நிர்மானி லியனகே மக்களின் வெளியொன்றாக கோட்டா கோகமவின் முக்கியத்துவம் குறித்து ஒரு கூட்டத்தொடரை நடத்தியதுடன் அங்கு *அரகலய/போராட்டத்திற்கு* கோட்டாகோகம வெளி எவ்வளவு அவசியமானது என்பதை எடுத்துரைத்தார் (லியனகே 2022) இவை தவிர, இலங்கைத் தேர்தல் முறைமை (பீரிஸ், மக்கள் பல்கலைக்கழகம், கோட்டா கோகம வீடியோக்கள், 10 ஜுன் 2022), *அரகலய/போராட்டத்தைப்* புரிந்துகொள்வதற்கு ஒரு புதிய அரசியல் மொழியின் தேவை (பெரேரா 2022), தற்போதைய சுகாதார நெருக்கடி, (அமரசிங்க மற்றும் மாரசிங்க 2022) மக்கள் போராட்டங்களின் சிக்கலான தன்மை (ஹேமசந்திர 2022)மற்றும் கூட்டு அடையாளங்களின் வரலாறு (Schubert 2022) ஆகியவை பற்றியும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

*அரகலய/போராட்டத்திற்கு* தீவிரமாகப் பங்களிப்பு வழங்க விரும்பிய ஏனைய குழுக்களும் மக்கள் பல்கலைக்கழகத்தில் கூட்டத்தொடர்களை நடத்தின. கலாநிதி சுனில் விஜேசிறிவர்தன, பேராசிரியர் நிர்மால் தேவசிறி மற்றும் சுமித் சமிந்த போன்ற புத்திஜீவிகளும், கோட்டாகோகமவின் பிரபல்யம் மிக்க போராட்டக்காரர்களான லஹிரு வீரசேகர, இஷாரா ஜயசேன, பீட்டர் டி அல்மேய்தா போன்றோரும் மார்க்ஸ் ஸ்கூல், ஹைப் ஸ்ரீலங்கா மற்றும் சிஸ்டர்ஹுட் இனிசியேடிவ் உள்ளிட்ட இளைஞர் மற்றும் அரசியல் குழுக்களும் பல்வேறு தலைப்புகளில் கூட்டத்தொடர்களை நடத்தினர். இந்த கலந்துரையாடல்கள், தற்போதைய நெருக்கடி முதல் அரசியலமைப்பு மறுசீரமைப்பு மற்றும் இலங்கையில் ஒரு முஸ்லீம் பெண்ணாக இருப்பதன் அர்த்தம் என்ன என்பது குறித்த அரசியல் தலைப்புகள் வரையானவையாகப் பரந்தளவில் காணப்பட்டன. அங்குரார்ப்பண நிகழ்வில் பேராசிரியர் உயங்கொட ஆற்றிய உரை, ஊடகங்கள் மற்றும் மக்கள் மத்தியில் *அரகலய/போராட்டம்* மீதான ஒரு (சார்பு) உணர்வை உருவாக்கியது.

மேலும், மக்கள் பல்கலைக்கழக வெளியானது இரண்டு புத்தக வெளியீடுகளுக்கு வசதி செய்தது: அவை, *தம்மிக்க பெனிய* (கொவிட்டிற்கான அதிசய சிகிச்சை) பற்றிய ஓர் அறிக்கை மற்றும் *ஆர்த்திக அர்புதயட ஜனதா விசந்துமக்* (பொருளாதார நெருக்கடிக்கு மக்கள் தீர்வு) என்பனவாகும். பப்லங்கா (FabLanka) பவுண்டேசன், முப்பரிமாண அச்சுத் (3-D Printing) தொழில்நுட்பத்தின் நேரடிச் செயல்விளக்கம் ஒன்றினையும் சமூக மற்றும் கூட்டொருமைப் பொருளாதாரத்தை உருவாக்குவதன் மூலம் இலங்கையை 'உருவாக்குநர்களின் சமூகம் - Makers Society)' ஒன்றாக மாற்றுவதற்கு கைத்தொழில் 4.0 தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது எவ்வாறு என்பது குறித்த கூட்டத்தொடர் ஒன்றினையும் நடத்தியது (மக்கள் பல்கலைக்கழகம், கோட்டாகோகம வீடியோக்கள், 25 மே 2022). மக்கள் பல்கலைக்கழகத்தைக் கோட்டாகோகமவில் ஒரு முக்கிய அறிவுப் பகிர்வு வெளியாக அங்கீகரித்து, மக்கள் பல்கலைக்கழகத்திற்கு ஓர் ஒலி அமைப்பையும் நன்கொடையாக அவர்கள் வழங்கினர்.

மக்கள் பல்கலைக்கழக நடவடிக்கைகள் பௌதீக வெளிக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படவில்லை. நாம் Zoom கலந்துரையாடல்களை நடத்தியதுடன் அவற்றைச் சமகாலத்தில் கோட்டா கோகம மக்கள் பல்கலைக்கழக முக நூல் பக்கத்தில் நேரலையாக வெளியிட்டோம். உணவு நெருக்கடி மற்றும் தீர்வுகள் (தன்தெனிய மற்றும் பலர் 2022) மற்றும் வலுசக்தி நெருக்கடி மற்றும் தீர்வுகள் (மக்கள் பல்கலைக்கழகம், கோட்டாகோகம, முக நூல், ஜுன் 4, 2022) ஆகியவற்றைக் கலந்துரையாடுவது பற்றி இரண்டு கூட்டத்தொடர்கள் நடத்தப்பட்டன. மேலும், பிரஜைகள் சட்டமன்றங்களின் வெவ்வேறு மாதிரிகள் பற்றிய கூட்டத்தொடர் ஒன்றினை நடத்துவதற்கு மக்களின் அவையுடன் (People's

Forum) நாம் ஒன்றிணைந்தோம். இவற்றைத் தவிர, நிகழ்வுகளை நடத்துவதற்குத் தனிநபர்கள் மற்றும் குழுக்கள் பயன்படுத்தக்கூடியதாக நாம் எமது மெய்நிகர் வெளியைத் (virtual space) திறந்தோம். பிரஜைகளின் போராட்டப் பாதை குறித்து இரண்டு கூட்டத்தொடர்களை களுபோவில ஆனந்த தேரர் ஏற்பாடு செய்ததுடன், இலங்கையின் முறைமை ரீதியான அபிவிருத்தி தொடர்பாக இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்ட ஒரு பொது முன்மொழிவை ஹைப் ஸ்ரீலங்கா ஆரம்பித்து வைத்தது.

மக்கள் பல்கலைக்கழகம் ஜூலை 9 ஆம் திகதி இடம்பெற்ற மக்களின் எழுச்சிக்குத் தீவிர பங்களிப்பு வழங்கியது. எமது உறுப்பினர்களில் பெரும்பாலானோர் நுகேகொட சந்திக்கு அருகில் வசிப்பதால், ஹோமாகமவில் இருந்து வரும் பேரணியுடன் இணையும் நுகேகொட பேரணியின் அமைப்பாளர்களுக்கு ஆதரவளிக்க நாம் முடிவு செய்தோம். ஜூலை 9 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் நுகேகொட சந்தியில் வந்திணையுமாறு மக்களுக்குத் தெரிவிப்பதற்கு மக்கள் பல்கலைக்கழகத்தின் முகநூல் பக்கத்தை நாம் பயன்படுத்தினோம். நாம் மூன்று மொழிகளிலும் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டதுடன், இந்தத் துண்டுப்பிரசுரங்கள் 2000 பேர் வரை சென்றடைந்தன. இந்தப் பேரணி முகநூல் நேரலையிலும் ஒளிபரப்பப்பட்டதுடன் 500 பேர் வரையான பார்வையாளர்களையும் சென்றடைந்தது (மக்கள் பல்கலைக்கழகம், கோட்டாகோகம வீடியோக்கள், 9 ஜூலை 2022).

தற்போது நாம் கோட்டாகோகம போராட்டத்தின் நினைவுகளைப் பேணும் செயன்முறையில் ஈடுபட்டுள்ளோம். இது தொடர்பாக, 2022 ஏப்ரல் 9 ஆம் திகதி முதல் 2022 ஆகஸ்ட் 13 ஆம் திகதி வரையான கோட்டாகோகம வெளியின் மாற்றத்தினை அவர்களின் நினைவுகளின் மூலம் விவரணமாக்குவதற்கு 10-15 போராட்டக்காரர்களைக் கொண்ட ஒரு குழுவை நாம் ஒன்றிணைத்துள்ளோம். மக்கள் பல்கலைக்கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தொடர்களை வெளியிடுதல் மற்றைய நடவடிக்கையாகும்.

## மக்கள் பல்கலைக்கழகத்தின் தாக்கம்

கோட்டகோகம மக்கள் பல்கலைக்கழகத்தின் தாக்கத்தைப் புள்ளிவிபரப் பகுப்பாய்வு ஒன்றின் மூலம் அளவிட முடியாது. எனவே, முன்னர் குறிப்பிடப்பட்ட மூன்று குறிக்கோள்கள் தொடர்பில் மக்கள் பல்கலைக்கழகத்தின் தாக்கத்தை நான் விமர்சன ரீதியாக மதிப்பீடு செய்யவுள்ளேன். கோட்டாகோகமவில் கலந்துரையாடப்பட்ட பல்வேறு யோசனைகளை ஒரே இடத்திற்குக் கொண்டுவருவதே மக்கள் பல்கலைக்கழகத்தின் முதல் குறிக்கோள் என்பதுடன் நாம் எமது எதிர்பார்ப்புகளை அடைந்ததாக நான் எண்ணவில்லை. நாம் கோட்டா கோகமவில் உள்ள பல்வேறு குழுக்களுடன் நேரடியான கூட்டத்தொடர்களை நடத்தத் திட்டமிட்டிருந்தபோதும், சோசலிச இளைஞர் சங்கத்தின் எரங்க குணசேகரவை மாத்திரமே எம்மால் நேர்காண முடிந்தது. (குணசேகர 2022). ஆயினும், நாம் கோட்டா கோகமவில் தீவிரமாகப் பங்கேற்ற செவிப்புலனற்றோர் சமூகத்துடன் ஒரு கூட்டத்தொடரை நடத்தினோம். சைகை மொழிபெயர்ப்பாளர் ஒருவரின் வசதியுடன், ஒரு சமூகமாகத் தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும், *அரகலய/போராட்டம்* தங்களை வெளிப்படுத்துவதற்கான ஒரு வெளியை எவ்வாறு வழங்கியது என்பதையும் செவிப்புலனற்றோர் சமூகத்தின் உறுப்பினர்கள் வெளிப்படுத்தினர். இலங்கையின் எதிர்காலத்தைக் கற்பனை செய்வது குறித்த இரண்டாவது குறிக்கோளை நேரடியாக நிவர்த்தி செய்யும் பல நடவடிக்கைகளை நாம் செய்துள்ளோம் என நான் நம்பவில்லை. ஆயினும், அரசியல், சட்டம் மற்றும் பொருளியல் குறித்து நாம் கலந்துரையாடிய கருப்பொருள்கள், எதிர்காலக் கூறொன்றை உள்ளடக்கிய சீர்திருத்தங்களை முன்மொழிந்தன. வேறு வார்த்தைகளில் கூறுவதாயின், அந்தக் கூட்டத்தொடர்கள் தற்போதுள்ள கட்டமைப்புகளில் உள்ள பிரச்சினைகளையும் அந்த கட்டமைப்புகளைச் சீரமைக்க வேண்டிய வழிகளையும் சுட்டிக்காட்டின.

ஆயினும், எனது பார்வையில், மக்கள் பல்கலைக்கழகம் அதன் மூன்றாவது குறிக்கோளில், அதாவது, ஒரு மாற்று அறிவுசார் வெளியை வழங்குவதில் சிறந்து விளங்கியது. பாரம்பரிய அரச பல்கலைக்கழகக் கட்டமைப்பின் அதிகாரப் படிநிலையை நாம் நேரடியாக அனுபவித்ததால், சமத்துவமும் சுதந்திரமும் உத்தரவாதமளிக்கப்பட்ட ஒரு வெளியை நாம் பரிசோதிக்க விரும்பினோம். இது பல்வேறு

அடுக்குகள் மூலம் அடையப்பட்டுள்ளது. மக்கள் பல்கலைக்கழகக் கூட்டத்தொடர்களின் கட்டமைப்பு ஓர் அடுக்காகும். மக்கள் பல்கலைக்கழகத்தின் கட்டமைப்பு தொடர்பில் நாம் கொண்டிருந்த ஒரு விமர்சனம் என்னவெனில், பேச்சாளர் ஒருவர் முன்வந்து விரிவுரையாற்றும் ஒரு பாரம்பரியப் பல்கலைக்கழகக் கட்டமைப்பையே நாமும் கூட கோட்டாகோகமவில் தாபித்துள்ளோம் என்பதாகும். ஆயினும், இது ஒரு துல்லியமற்ற அவதானிப்பு, ஏனெனில், பாரம்பரியப் பல்கலைக்கழக அமைப்பைப் போலன்றி, இங்குள்ள பார்வையாளர்கள் மிகவும் துடிப்பாக இருந்தனர். பெரும்பாலான நேரங்களில், பேச்சாளர்கள் தங்களுக்குரிய கருப்பொருள்கள் பற்றிச் சுருக்கமாக உரையாற்றியதுடன் கலந்துரையாடலுக்குப் போதுமான நேரமும் காணப்பட்டது. கலந்துரையாடல்களில், ஒவ்வொரு யோசனைக்கும் மரியாதையுடன் இடமளிக்கப்பட்டதுடன், தங்களது வேறுபாடுகள் காரணமாக எவரும் புறக்கணிக்கப்படவுமில்லை.

சமத்துவமும் சுதந்திரமும் வெளிப்பட்ட மற்றோர் இடமாகப் பேச்சாளர்களின் தெரிவு காணப்பட்டது. பேச்சாளர்களைத் தெரிவு செய்யும்போது நாம் பல்வேறு வகையான பேச்சாளர்களுக்கு இடமளிக்க முயற்சித்தோம். உதாரணமாக, மக்கள் பல்கலைக்கழக அணி முதலாளித்துவ எதிர்ப்புப் போக்குகளைக் கொண்டிருந்த போதும், தாராளவாத அரசியல் சார்புள்ளவர்களையும் நாம் அழைத்திருந்தோம். மேலும், பேச்சாளர்களில் பெரும்பாலானோர் பாரம்பரியப் பல்கலைக்கழக அமைப்பிலிருந்து வந்தவர்கள் என்பதால், பேச்சாளர்களைத் தெரிவு செய்யும்போது ஒரு கல்விசார் பாரபட்சம் காணப்பட்டதென வாதிட முடியும். வேறு வார்த்தைகளில் கூறுவதாயின், பெரும்பாலான பேச்சாளர்கள் கலாநிதி (PhD) மற்றும் முதுகலைமானி (MA) போன்ற கல்வித் தகைமைகளைக் கொண்டிருந்தனர். ஆயினும், அவர்கள் கல்வித் தகைமைகள் மற்றும் கல்விப் பதவிகளை வகித்தபோதும், அந்த பண்புகளின் காரணமாக அல்லாது அவர்கள் வெவ்வேறு அரசியல், பொருளாதார மற்றும் சமூகக் காரணங்களுக்காகச் செயற்பாட்டாளர்களாக இருப்பதால் கோட்டாகோகமவில் இடம்பெற்று வரும் கலந்துரையாடல்களுக்கு அவர்களால் பங்களிப்பு வழங்க முடியும் என்னும் நம்பிக்கையின் காரணமாகவே தெரிவு செய்யப்பட்டனர். ஆயினும் கூட, கல்வித் தகைமைகளற்ற, ஆனால் அரசியல் செயற்பாட்டாளர்கள் என்ற ரீதியில் நீண்ட கால அனுபவத்தின் காரணமாகப் புலமைசார் கலந்துரையாடலை நிகழ்த்தக்கூடிய பேச்சாளர்களையும் நாம் அழைத்தோம். சமூகத் தலைவர்கள், அகதிகள், வெளிநாட்டவர்கள், சர்வதேச அளவில் பாராட்டப்பட்ட கல்வியாளர்கள், உள்நாட்டுக் கல்வியாளர்கள், தொழில்வாண்மையாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் போன்றோர் காணப்பட்டமையினால் மக்கள் பல்கலைக்கழகத்தில் உரையாற்றிய பேச்சாளர்களின் பட்டியல் பல்வகைமையுடைதாக அமைந்தது.

சமத்துவம் மற்றும் சுதந்திரத்தை வெளிப்படுத்திய மூன்றாவது விடயம் பார்வையாளர்களிடையே காணப்பட்டது. மக்கள் பல்கலைக்கழகம் என்பது எவரும் தாம் விரும்பியவாறு இணையக்கூடிய மற்றும் வெளியேறக்கூடிய ஒரு திறந்தவெளியாக இருந்தது. இதன் விளைவாக, சிறப்புப் பார்வையாளர்கள் என எவரும் காணப்படவில்லை, அத்துடன் ஆர்வமுள்ள எவரும் பங்கேற்கக்கூடிய நிலையும் இருந்தது. வகுப்பு, மதம், இனம் அல்லது பாலியல் நாட்டம் காரணமாக எந்தவித பாகுபாடும் காட்டப்படவில்லை. சிறுவர்கள் கூட மக்கள் பல்கலைக்கழக வெளியில் வரவேற்கப்பட்டனர். பார்வையாளர்களிடமிருந்து வரும் ஒவ்வொரு கருத்திற்கும், யோசனைக்கும் அல்லது விமர்சனத்திற்கும் இடமளிப்பதற்கு மக்கள் பல்கலைக்கழக அணி எப்போதும் முயற்சிகளை மேற்கொண்டது. பங்கேற்பாளர்களின் துடிப்பான ஈடுபாட்டின் காரணமாக கலந்துரையாடல்கள் தடம் புரண்டு வெவ்வேறு பாதைகளுக்கு நகர்ந்த சில சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. உதாரணமாக, ரஷ்யப் புரட்சி பற்றிய ரமிந்து பெரேராவின் கூட்டத்தொடரில், அதன் ஆரம்பக் கலந்துரையாடல் *அரகலய/போராட்டத்தின்* மட்டுப்பாடுகள் குறித்த இரண்டு மணி நேரக் கலந்துரையாடல் ஒன்றிற்கு நகர்ந்தது!

சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் வெளிப்படுத்திய இறுதி விடயம் வெவ்வேறு இனக் குழுக்களை வசதிப்படுத்தியதில் காணப்பட்டது. மக்கள் பல்கலைக்கழக அணியில் பெரும்பான்மையானோர் சிங்களச் சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்த காரணத்தினால், மக்கள் பல்கலைக்கழக நடவடிக்கைகளில் தமிழ் பேசும் சமூகங்களைக் கூட்டிணைப்பது தொடர்பாக நடைமுறைப் பிரச்சினைகள் காணப்பட்டன. உதாரணமாக, எமக்கு வழமையாக சிங்கள - தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் கிடைக்காததால் பெரும்பாலான கூட்டத்தொடர்கள் சிங்களத்திலேயே நடத்தப்பட்டன. ஆயினும், சில கூட்டத்தொடர்களைத் தமிழில் நடத்த அல்லது தமிழில் மொழிபெயர்ப்பினையோ அல்லது சுருக்கமொன்றையோ வழங்க எம்மால் இயலுமாக

இருந்தது. எமது உள்ளக உரையாடல்களில் நாம் கலந்துரையாடியதைப் போன்று, தமிழில் கலந்துரையாடல்களை நடத்த முடியாத பிரச்சினை பற்றி மக்கள் பல்கலைக்கழக அணி விழிப்புடன் இருந்ததுடன், சாத்தியமான போது தமிழ் மொழிக் கலந்துரையாடல்களுக்கு இடமளிக்க எங்களால் இயலுமான அளவு முயற்சித்தோம்.

மக்கள் பல்கலைக்கழகத்தின் ஒட்டுமொத்தத் தாக்கத்தை *அரகலய/போராட்டத்தின்* பிரம்மாண்டத்துடன் ஒப்பிட்டு மதிப்பிடுகையில், அதன் தாக்கம் குறைவானதே என நான் கூறுவேன். அவ்வாறிருப்பினும், பல சிறிய குழுக்களின் சிறிய தாக்கங்களின் இணைப்பினால் *அரகலய/போராட்டம்* ஒரு வெற்றிகரமான மக்கள் எழுச்சியாக மாறியது. *அரகலய/போராட்டம்* முழுவதும் மக்கள் பல்கலைக்கழகம் கூட்டத்தொடர்களை நடத்தியது. இதனால் மக்கள் பல்கலைக்கழக நடவடிக்கைகளுக்கு வழமையான பார்வையாளர்கள் உருவாகினர். கோட்டாகோகமவின் இருப்புக்கு இது இன்றியமையாததாகும், ஏனெனில், கோட்டாகோகம வெறிச்சோடியிருந்த காலங்களில் மக்கள் பல்கலைக்கழகத்தின் நடவடிக்கைகள் கோட்டாகோகம வெளியை உயிரோட்டமாக வைத்திருந்த காலங்களும் இருந்தன. ஹேஷ்டெக் ஜெனரேசன் ஏற்பாடு செய்திருந்த ஒரு கலந்துரையாடலில் இது ஏற்றுக்கொள்ளப்பட்டது. அங்கு ஒரு பேச்சாளர், கோட்டாகோகம வெளி வெறிச்சோடியிருந்த காலங்களிலும், செயற்பாடுகளைக் கைவிடாதிருந்த மக்கள் பல்கலைக்கழகத்தின் உறுதிப்பாட்டைப் பாராட்டினார் (ஹேஷ்டெக் ஜெனரேசன் 2022). மேலும், *அரகலய/போராட்டத்தின்* பிற்பகுதியில் மக்கள் பல்கலைக்கழகத்தின் பிரபல்யம் ஏனைய பிராந்திய கோட்டாகோகம வெளிகளை எட்டத் தொடங்கியது. உதாரணமாக, ஜூலை 8 ஆம் திகதி வெயங்கொட கோட்டாகோகம வளாகத்தில் ஒரு கூட்டத்தொடரை நடத்துவதற்கு எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டதுடன் நாம் அதனை ஏற்று நடத்தியுமிருந்தோம்.

## முடிவுரை

மக்கள் பல்கலைக்கழகம் பற்றிய இச்சுயபிரதிபலிப்பினை எழுதுவது எனக்கு எளிதான பணியாக இருக்கவில்லை. இதற்கு முக்கியமான காரணம், *அரகலய/போராட்டத்தின்* பிரம்மாண்டத்தையும் மக்கள் பல்கலைக்கழகம் மற்றும் அதன் செயற்பாடுகளின் எளிமையையும் கண்டமையால் ஏற்பட்ட பதட்டமாகும். ஆயினும், மேலே குறிப்பிடப்பட்டவாறு, *அரகலய/போராட்டம்* என்பது *சிறிய* குழுக்கள் மற்றும் தனிநபர்களின் *சிறிய* செயற்பாடுகளின் ஒரு பாரிய இணைப்பாகும். மக்கள் பல்கலைக்கழகம் இன்னும் அதிகமான விடயங்களைச் செய்திருக்க முடியும் என நான் எப்போதும் உணர்ந்தேன். ஆயினும், இந்த ஆவணத்தை எழுதும் வேளையில், மக்கள் பல்கலைக்கழக அணியின் ஒண்றிணைந்த உழைப்பை நான் பாராட்ட ஆரம்பித்தேன். ஏனெனில், கோட்டாகோகமவில் ஒரு கூட்டத்தொடரை நடத்துவதென்பது ஓர் எளிதான பணியல்ல. நாம் அனைவரும் முழுநேர வேலையில் அல்லது கற்கையில் ஈடுபட்டிருந்ததுடன் எல்லா நேரங்களிலும் எம்மால் போராட்டக் களங்களில் இருக்க முடியாதிருந்தது. ஒரு கருப்பொருளைத் தீர்மானித்தல், திகதி மற்றும் பேச்சாளரை நிர்ணயித்தல், முகநூல் / பிளையர்களைத் (Facebook flyers) தயாரித்தல், மக்கள் பல்கலைக்கழக முகநூல் பக்கத்தில் முன்னைய கூட்டத்தொடர்களின் புகைப்படங்களைப் பதிவேற்றுதல் போன்றவை தொடக்கம் ஒலி அமைப்பை (Sound System) ஏற்பாடுசெய்தல், கூட்டத்தொடருக்கு முன்பு துப்பரவாக இருக்கவேண்டிய மக்கள் பல்கலைக்கழக வெளியைத் தயார்செய்தல், முகநூல் நேரலை ஒளிபரப்பு மற்றும் கலந்துரையாடலில் ஈடுபடுதல் என்பவை வரையான செயற்பாடுகளுக்கு அதிகளவிலான உறுதிப்பாடு மற்றும் முயற்சி தேவைப்பட்டது. அவ்வப்போது பலத்த மழையினால் ஏற்பட்ட வெள்ளமும் சீரற்ற காலநிலையும் சில வேளைகளில் எமது உறுதிப்பாட்டைச் சோதித்தன. இத்தகைய அனைத்து இடர்களுக்கு மத்தியிலும், கோட்டாகோகம மக்கள் பல்கலைக்கழகத்தினரான நாம், ஒவ்வொரு முன்மொழிவும் மதிக்கப்படும் ஒரு வெளியை உருவாக்குவதற்கான எமது பிரதான அர்ப்பணிப்புடன் தொடர்ந்தும் செயலாற்றி வருகிறோம். அலன் பாடியூவின் (2008) கூற்றினைப் போன்று, நாம் *சோர்வடையாமல் துணிவாக* இருந்தோம் என்னும் விடயமே என்னை மிகவும் ஆச்சரியப்படுத்தியது.

## உசாத்துணைகள்


அமரசிங்க மற்றும் மாரசிங்க, இலங்கையில் தற்போதைய சுகாதார நெருக்கடி, மக்கள் பல்கலைக்கழகம் கோட்டாகோகம, ஏப்ரல் 24, 2022. யூடியுப்), https://www.youtube.com/watch?v=6E7AqX-U – இறுதி அணுகல் 12.12.2022.

போராட்ட இயக்கங்களைச் சுற்றியுள்ள நேர்மறையான விவரணங்களைப் பகுப்பாய்வு செய்தல், ஹேஷ்டெக் ஜெனரேசன், 2022, https://www.facebook.com/hashtaggenerationsl/videos/5156098587828209

Badiou, Alain. 2008. The Meaning of Sarokozy, Verso: New York, 71-76.

டயஸ், அசோக. 2022. "මෙ අරගලයට නායකත්වය දීම කතිකා වවැදගත්ද பதிகட 19.04.2022. https://www.youtube.com/watch?v=MQ2aHiqfngs&t=2s

ගුණසේකර එරංග. (குணசேகர, எரங்க). 2022. "අරගලයේ දිශානතිය." மக்கள் பல்கலைக்கழகம் கோட்டாகோகம, பேஸ்புக் வீடியோக்கள். 4 மே 2022. https://www.facebook.com/watch/live/?ref=watch_permalink&v=1358046191274233

ஹேஷ்டெக் ஜெனரேசன் வீடியோக்கள். 2022. "போராட்ட இயக்கங்களைச் சுற்றியுள்ள நேர்மறையான விவரணங்களைப் பகுப்பாய்வு செய்தல்" 21 செப்டெம்பர் 2022.29.32 - 30.30 https://www.facebook.com/hashtaggenerationsl/videos/5156098587828209

ஹெட்டியாரச்சி, சமோத், ஹசித அபேவர்தன, அனுராத ரணசிங்க தந்தெனிய, தமித் கெத்க, இந்துனில் ஹித்தெட்டிய மற்றும் பதும் எகொடவத்த 2022. " ආහාර අර්බුධය සහ විසඳුම්! - Food crisis & Solutions! –உணவு நெருக்கடித் தீர்வுகள்!"

හේමචන්ද්‍ර සමල් විමුක්ති (ஹேமச்சந்திர, சமல் விமுக்தி). 2022. "අරගලයේ බහුවිධ ඉතිහාසයන්: 71 කැරැල්ල ඇසුරින්." Facebook, மக்கள் பல்கலைக்கழகம் கோட்டாகோகமவீடியோக்கள். 6 ஜூன் 2022. https://www.facebook.com/watch/live/?ref=watch_permalink&v=485921306643789

ஜயசேன, சந்திமா. 2022. "නිර්පාක්ෂික මිනිසුන් ගේ දේශපාලන භාවිතය කොයිබටද?" 17.4.2022, ladyleader.lk, https://ladyleader.lk/life-style/7016-2022-04-16-18-47-51

කන්නන්ගර විදර්ශන (கன்னங்கர, வி.). 2022."සිස්ටම් චේන්ජ් එකක් කියන්නේ මොකද්ද?" (ஒரு முறைமை மாற்றம் என்றால் என்ன?) https://www.facebook.com/watch/live/?ref=watch_permalink&v=438828210911111

குருவிட்ட, குசல். 2022. "மக்கள் பல்கலைக்கழகம்: தனுஷ்க கெஹான் பத்திரன மற்றும் நிர்மால் ரஞ்சித் தேவசிறி, பகுதி 1 ஏப்ரல் 2022." https://www.youtube.com/watch?v=1waRTiZx8qA

லியனகே,நிர்மானி. 2022. "ගෝලීය ගෝලීය සමාජ අවකාශයක් ලෙස කියවීම පිළිබඳ නිර්මාණශීලියන ගේ සමග කළ සාකච්ඡාව." பேஸ்புக், மக்கள் பல்கலைக்கழகம், கோட்டாகோகம வீடியோக்கள், 3 மே 2022. https://www.facebook.com/watch/live/?ref=watch_permalink&v=2116241735212392

"මතකය සහ ස්මරණය /நினைவு மற்றும் நினைவேந்தல்." 2022. மக்கள் பல்கலைக்கழகம், கோட்டாகோகம, யூடியுப், 2022. https://www.youtube.com/watch?v=eKDrVL4rlZ0

மொரான், அசுசெனா மற்றும் எம். பிர்தௌஸ். 2022. "பிரஜைகள் சட்டமன்ற மாதிரிகளைப் புரிந்துகொள்ளல்."மக்கள்

Munasinghe & Anu. 2022 . "Who has the right to memorialize?" People's University Gotagogama. https://www.youtube.com/watch?v=ElDjXwrea9E

பல்கலைக்கழகம் கோட்டாகோகம, பேஸ்புக் வீடியோக்கள். 29 ஜூலை 2022. https://www.facebook.com/watch/live/?ref=watch_permalink&v=1299596333905692

"மக்கள் பல்கலைக்கழகத்தின் ஆரம்பக் கூட்டத்தொடர்," யூடியுப், 2022. https://www.youtube.com/watch?v=xmehPDYnXPA

පීරිස්, ප්‍රදීප් (பீரிஸ், பிரதீப்). 2022. "වර්තමාන අර්බුදයේ දේශපාලන පදනම: පුරවැසියන් ජන්දදායකයන් බවට පරිවර්තනය කිරීම.' பேஸ்புக், மக்கள் பல்கலைக்கழகம், கோட்டாகோகம வீடியோக்கள், 10 ஜூன் 2022. https://www.facebook.com/watch/live/?ref=watch_permalink&v=695412048412379

පෙරේරා, නිහාල් (பெரேரா, நிஹால்). 2022."නව අරගලය සහ පැරණි දේශපාලන භාෂාව යන තේමාව යටතේ නිහාල් පෙරේරා සමග සිදුකරනු ලබන සාකච්ඡාව." பேஸ்புக், மக்கள் பல்கலைக்கழகம், கோட்டாகோகம வீடியோக்கள். 18 ஜூன் 2022. https://www.facebook.com/watch/live/?ref=watch_permalink&v=559196489245133

மக்கள் பல்கலைக்கழகம் கோட்டாகோகம, பேஸ்புக் வீடியோக்கள். 2022. "ජනතා අරගලයේ දිගුකාලීන පැවැත්මට උදසො 4.0 කාර්මික තාක්ෂණය න්‍යොදාගනෙ සහයෝගිතා ආර්ථිකයක් ගොඩනගන්නේ කෙසේද?" 25 மே 2022. https://www.facebook.com/watch/live/?ref=watch_permalink&v=694591421803893

மக்கள் பல்கலைக்கழகம் கோட்டாகோகம, பேஸ்புக் வீடியோக்கள். 2022. "බලශක්ති අර්බුධය සහ විසඳුම් (விதுலி) வலுசக்தி நெருக்கடித் தீர்வுகள்." 19 ஜூன் 2022. https://www.facebook.com/watch/live/?ref=watch_permalink&v=1101580457461319

மக்கள் பல்கலைக்கழகம் கோட்டாகோகம, பேஸ்புக் வீடியோக்கள். 2022. "ජන අරගලය නුගේ ගොඩසිට ගෝල්ෆේස් අරගල භූමිය දක්වා." 9 ஜூலை 2022. https://www.facebook.com/watch/live/?ref=watch_permalink&v=565501075181279

மக்கள் பல்கலைக்கழகம் கோட்டாகோகம, பேஸ்புக் வீடியோக்கள், 2022. "ජනතා අරගලයේ දිගුකාලීන පැවැත්මට උදසො 4.0 කාර්මික තාක්ෂණය න්‍යොදාගනෙ සහයෝගිතා ආර්ථිකයක් ගොඩනගන්නේ කෙසේද?" https://www.facebook.com/PeoplesUniversityGGG/videos/694591421803893/

மக்கள் பல்கலைக்கழகம் கோட்டாகோகம வீடியோக்கள், 17 மே 2022

மக்கள் பல்கலைக்கழகம், கோட்டாகோகம, வீடியோக்கள், பேஸ்புக், 4 ஜூன் 2022. https://www.facebook.com/watch/live/?ref=watch_permalink&v=1089084645320661

පෙරේරා" කල්‍යානන්ද (பெரேரா, க.). 2022. "දුක්විඳීම්, කැපකිරීම් සහ අරගලය." மக்கள், பல்கலைக்கழகம் கோட்டாகோகம, வீடியோக்கள், பேஸ்புக். https://www.facebook.com/watch/live/?ref=watch_permalink&v=1158281981686740

ரன்சிரிமல். "காலி முகத்திடல் மக்கள் பல்கலைக்கழகம்," Blogspot, 20.4. 2022, https://lokuakuru.blogspot.com/2022/04/blog-post.html

Schubert, Andi. 2022. "இலங்கையில் கூட்டு அடையாளங்களின் வரலாறு", மக்கள் பல்கலைக்கழகம் கோட்டாகோகம, 2022. யூடியுப். https://www.youtube.com/watch?v=omRzeJ0f1ko

# மக்கள் போராட்டங்களில் பெண்கள்

*ஸ்வஸ்திகா அருலிங்கம்* மற்றும் மரிசா த சில்வா***

*இக்கட்டுரையில், மக்கள் போராட்டங்களில் பெண்களின் பங்கு மற்றும் அவர்களின் குரல்களை ஒலிக்கச் செய்வதில் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து ஆசிரியர்கள் விவாதிக்கின்றனர்.*[1]

## மிரிஹான போராட்டம்

2022 மார்ச் 31 ஆம் திகதி, மிரிஹானவில் ஜனாதிபதி கோதபாய ராஜபக்ஷவின் வாசஸ்தலத்திற்கு அருகாமையில் ஒரு சிறு எதிர்ப்புக் குழு ஒன்றுகூடியது. நீண்ட நேர மின்வெட்டு மற்றும் எரிபொருள் பற்றாக்குறைக்கு எதிராக மிரிஹானவிலுள்ள அயலவர்கள் தாமாகவே ஒன்றுசேர்ந்த ஒன்றுகூடலாகவே அந்த எதிர்ப்புத் தோன்றியது. மக்களின் சமாதான எதிர்ப்பியக்கமாக ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் உடல்ரீதியான வன்முறையாகவும் சட்ட அமுலாக்கல் அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் இடையிலான போராட்டமாகவும் மாறியது.

இலங்கையில் ஜனநாயக ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி ஒருவரினை வெளியேற்றுவதற்கு இட்டுச்சென்ற வரலாற்று முக்கியத்துவம் பெற்ற மக்கள் இயக்கத்தின் திருப்புமுனைகளில் ஒன்றாகவே மிரிஹான ஆர்ப்பாட்டம் பலராலும் நோக்கப்படுகின்றது. இளம் பெண் ஒருவர் தன் பச்சிளம் பாலகனை ஒரு கையில் சுமந்து, தன் மறு கையால் எதிர்ப்பினை வெளிப்படுத்திய, இப்போது தனிச்சிறப்புப் பெற்றுள்ள, புகைப்படம் ஒன்றினை ஊடகவியலாளர் ஒருவர் மிரிஹான ஆர்ப்பாட்டத்தின் போது எடுத்திருந்தார். இந்த உருவம் எதிர்ப்பினதும் போராட்டத்தினதும் ஆரம்பக் குறியீடுகளில் ஒன்றாக மாறியதுடன் காலி முகத்திடல் ஆக்கிரமிப்புக்கும் இது பின்னாட்களில் இட்டுச்சென்றது.

## அரகலய, போராட்டம், த ஸ்ட்ரகிள் - எப்பெயரிலும் அமைந்த மக்களின் எதிர்ப்பு

2022 மார்ச் மாதத்திற்கும் ஜூலை மாதத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் அயலவர்களின் ஒரு சிறிய வீதிப் போராட்டமாக ஆரம்பிக்கப்பட்ட இந்த எதிர்ப்பியக்கம், சமையல் எரிவாயுப் பற்றாக்குறை மற்றும் மின்சாரத் துண்டிப்புக் காரணமாகத் தமது நாளாந்த வாழ்க்கையினைக் கொண்டு நடத்த முடியாமையினால் விரக்தியடைந்த சமுதாயத்தினரின் போராட்டத்திற்குத் தீ மூட்டி, ஒரு வரலாற்று நிகழ்வாக

* *மரிசா த சில்வா* ஒரு செயற்பாட்டாளராவார், வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் சமூகங்களுடன் முதன்மையாக, இராணுவமயமாக்கல், பயங்கரவாத தடைச்சட்ட கைதிகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் பேச்சு சுதந்திரம் மற்றும் ஒன்று கூடும் சுதந்திரம் போன்ற விடயங்களில் பணியாற்றியவர். இவர் PTA மற்றும் CTA போன்ற பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்பவற்றை நீக்குதல், தொழிலாளர் மற்றும் தோட்டத் தொழிலாளர் உரிமைகள், நுண்நிதிக் கடனை ரத்து செய்தல், மற்றும் பிற ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்காக இயங்கும் ஒரு இடதுசாரி, பெண்ணியக் கூட்டமைப்பின் மகளிர் செயற்பாட்டாளர்களின் விடுதலை அமைப்பில் உறுப்பினராக உள்ளார்.

** *ஸ்வஸ்திகா அருலிங்கம்-* இவர் ஒரு சட்டத்தரணி மற்றும் தொழிற்சங்கவாதியாவார். அரகலயவின் பங்கேற்பாளராக இருந்ததுடன் காலி முகத்திடல் முற்றுகையின் போதும் அதற்குப் பின்னரும் அரசால் துன்புறுத்தப்பட்ட நபர்களைப் பாதுகாப்பதில் ஈடுபட்டார்.

உருமாறி, இலங்கையில் ஜனாதிபதியினையும் பிரதமரையும் அமைச்சரவையினையும் பதவியிலிருந்து அகற்றுவதற்குக் கால்கோளாக அமைந்தது. அப்போது ஆட்சியிலிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினைப் பதவியிலிருந்து அகற்றுவதைக் கோரும் ஒரே நோக்கத்திற்காக இலங்கையின் கொழும்பில் விலையுயர்ந்த வர்த்தகச் சொத்துக்கள் நிலைகொண்டிருந்த பிரதானமான பொதுவெளியான காலி முகத்திடலை அடையாளம் தெரியாத ஆயிரக்கணக்கான தனிநபர்களும் மக்கள் குழுக்களும் ஆக்கிரமித்துக்கொண்டனர். #கோஹோம்கோட்டா (#GoHomeGota) எனும் சுலோகம் நாடு முழுவதும் எதிரொலித்த அதேவேளை காலி முகத்திடல் ஆக்கிரமிப்புத் தளம் "கோட்டா கோகம" எனப் பெயரிடப்பட்டது. இந்த ஆக்கிரமிப்பு இயக்கத்தின் ஆரம்ப நாட்களில், கொழும்பின் புறநகர்ப் பகுதிகளில் வாழ்ந்த கீழ், உயர், நடுத்தர வகுப்பு நகரத்து மக்களே பிரதானமாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். எவ்வாறாயினும், நாட்கள் நகர்கையில், பல்வேறு வகுப்புக்களை, இனங்களை, பால் நிலையினரை மற்றும் பாலியல் தன்மையினைக் கொண்ட மக்களை கோ ஹோம் கோட்டா இயக்கம் கவர்ந்திழுத்தது. இலங்கை அரசியலுக்கே உள்ளார்ந்ததான சகல வரம்புகளுடனும், அரசியல் குரல் மறுக்கப்பட்டு, போராட்டத் தளங்களிலிருந்து தொடர்ந்தும் விலக்கி வைக்கப்பட்டிருந்த சமூகப் பிரிவுகளுக்குக் காலி முகத்திடல் ஆர்ப்பாட்டம் தளங்களைத் திறந்தது. இந்த ஆர்ப்பாட்ட இயக்கத்தின் தனித்துவமான அம்சம், அது உள்ளடக்கும் தன்மை மிக்கதாகவும் அஹிம்சை வழியிலான இயக்கமாகவும் இருந்ததாகும். "அன்பின் போராட்டம்" (AadarayeAragalaya) என இந்தப் போராட்டத்தினை அழைப்பதில் போராட்டக்காரர்கள் பெருமிதப்பட்டனர். ஏனைய அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட எவருமே கோட்டாபய ராஜபக்ஷவின் ஜனாதிபதிப் பதவியினை ஏற்பதற்குத் தயாராக இல்லாமல் இருந்த போதிலும் ஜனநாயக ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியினை இராஜினாமாச் செய்யுமாறு கோரிய இந்தப் போராட்டம் தானாகவே உருப்பெற்ற மக்களின் எதிர்ப்பாகும். போராட்ட இயக்கத்தினைப் பொதுமக்கள் தழுவிக் கொண்டமைக்கும், போராட்டக்காரர்களின் மத்தியில் பல்வகைமை மிக்கவர்களின் கலப்புக் கரைபுரண்டோடியமைக்கும் ஒரே காரணமாக அமைந்தது, இந்த இயக்கம் எந்தக் கட்சி சார்ந்த அரசியலுடனும் தன்னைப் பொதுவாகப் பிணைத்துக் கொள்ளாமையாகும்.

## பெண்களை விலக்கிவைத்த அரசியல் இயக்கங்களினுள்ளான கட்டமைப்புக்கள்

இலங்கையில், பல் சமூக, கட்டமைப்பு, மற்றும் பொருளாதாரத் தடைகள் காரணமாக, போராட்ட இயக்கங்களிலும் எதிர்ப்பு இயக்கங்களிலும் ஆண்களின் ஆதிக்கமே மேலோங்கியிருந்தது. பெண்கள் பிள்ளைகளைப் பராமரிப்பவர்களாக நோக்கப்பட்டு, வீட்டைப் பராமரிப்பதற்கான மற்றும் வீட்டு வேலைகளைச் செய்வதற்கான தனிப்பொறுப்பு அவர்களின் தோள்களில் சுமத்தப்பட்டவர்களாகப் பொதுவாக விடப்பட்டு, அரசியல் பரப்பில் இருந்தும் விலக்கி வைக்கப்பட்டனர். எனவே, இடதுசாரி இயக்கங்களின் ஆதிக்கத்திற்குட்பட்ட மிகவும் முற்போக்கான வெளிகளில் கூட அரசியல் தளங்களின் முன்னரங்குகளில் ஆண்களே நிற்பதையும் அந்த ஆண்களின் உடன்பிறந்த சகோதரிகளும் வாழ்க்கைத் துணைகளும் அல்லது தாய்க்குலமும் சேர்க்கப்படாது விட்டுவிடப்பட்டு அவர்கள் வீட்டைப் பார்த்துக்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டதையும் காண முடிந்தது.

இவ்வாறான விடயங்கள் அரசியல் தளங்களினுள் எழுப்பப்படுகையில், தங்களின் கொள்கைத் தோழர்களான ஆண்கள் தமது தரப்பு நியாயத்தினை வலியுறுத்தி வழங்கும் பதில்களையே இந்தக் கட்டுரையின் ஆசிரியர்களான பெண்கள் கேட்டுள்ளனர். 'பெண்களை யாரும் தடுக்கவில்லை', 'அரசியலினுள் அதிகமான பெண்கள் வரவேண்டும் என்பதே எமது விருப்பம்' போன்ற கருத்துக்களை ஆண்கள் வலியுறுத்துவர். 'கலந்துரையாடலுக்கு வருமாறு பெண்களை நாம் எவ்வளவுதான் அழைத்தாலும் அவர்களுக்கு அரசியலில் ஆர்வமில்லை' எனவும் அவர்கள் கூறுவர். இதில் நிச்சயமாகக் காணப்படும் முரண்பாடு என்னவெனில், இவ்வாறு கூறும் இதே ஆண்கள்தான் தமது வீட்டுச் சுமைகளைப் பெண்கள் மீது சுமத்துகின்றனர். மேலும், "அவளுக்கு அரசியல் அனுபவம் போதாது", "அவள் ஒரு மேடைப் பேச்சாளர் அல்ல," மேடையினை வழங்குவதற்கு அவள் என்ன செய்திருக்கிறாள்?, போன்ற கூற்றுக்களைக் கூறி அரசியல் கூட்டங்களில் பெண்கள் பேசுவதைத் தடுப்பதற்காக இதே ஆண்களே சாட்டுக்களைத் தேடுவர். அரிதான சந்தர்ப்பம் ஒன்றில் பெண் ஒருவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டாலும் கூட, அது கடைசியாகப் பேசும் பேச்சாளர்களில் ஒருவராக இருக்கும் வாய்ப்பாகவே இருக்கும், மிகப் பெரும்பாலும்

பெண்கள் பால் ஈர்ப்புக் கொண்ட ஆண்களை மட்டுமே கொண்ட ஒரு குழாமில் பேசுகின்ற ஒரே பெண்ணாகவும் அப்பெண் இருப்பார்.

எதிர்ப்பு இயக்கங்களினுள் தங்களின் அரசியல் வெளிகளைக் கோருவதற்கான பெண்களின் போராட்டங்கள், கட்டுநாயக்கவைத் தளமாகக் கொண்ட ஓர் அமைப்பான ஸ்டேன்ட்அப் (ஞவயனெரு) இயக்கத்தினைச் சேர்ந்த அசிலா தந்தெனியவினால் தொகுக்கப்பட்டுள்ளது. அவர் கூறுகின்றார்:

> "பேசுவதற்காக ஒலிவாங்கியினைப் பெறுவதே ஒவ்வொரு பொதுக் கூட்டத்திலும் எதிர்நோக்கும் முதல் போராட்டமாகும். கூட்டத்தில் முண்டியடித்து அப்பாடா எனப் பேசுவதற்கு ஒலிவாங்கியைக் கையில் எடுக்கும்போது, எங்களின் சக்தியில் அரைவாசி வடிந்து போயிருக்கும். கடைசியில் ஒலிவாங்கியை எடுக்கையில், நாங்கள் களைத்துப் போனவர்களாகவும் வாடிப் போனவர்களாகவும் ஆகிவிடுவோம் என்பதுடன் என்ன சொல்ல வந்தோம் என்பதே முதலில் மறந்து போயிருக்கும். இதனால், எமது பேச்சில் நிச்சயமின்மை தொனிக்கும் அத்துடன் எம் குரலும் நடுங்கத் தொடங்கிவிடும்..."

அரசியல் வெளிகளில் பெண்கள் அவர்களின் குரல்களைக் கேட்கச் செய்வதில் எதிர்நோக்கும் போராட்டத்தினை இந்தக் கூற்று வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது. முற்போக்கான இடதுசாரி இயக்கங்களின் உள்ளேயும் வெளியேயும் பெண்களை "அவர்களின் இடத்தில் வைப்பதற்காக" ஒன்று திரளும் கட்டமைப்பு ரீதியான எதிர்ப்பினையும் பிரக்ஞையற்ற முயற்சிகளையும் இவ்வாறான கருத்துக்கள் கோடிட்டுக் காட்டுகின்றன.

## போராட்டத்தில் சமூகத் தடைகளையும் கலாசாரத் தடைகளையும் உடைக்கும் பெண்கள்

இருப்பினும் இந்த அரகலயவில் ஆணாதிக்கக் கட்டமைப்பு சார்ந்த தடைகள் அரசியல் இயக்கங்களுக்குள் பொதிந்துள்ளமையை கவனக்குறைவுடன் கருத்தில் கொண்டுவந்தது. பல மாதங்கள் நீடித்த போராட்டமும் வன்முறையின்றிய பொது வெளிகளின் ஆக்கிரமிப்பும் பெண்கள் அவர்களின் ஓய்வு நேரங்களில் எதிர்ப்புக்குப் பங்களிப்பு வழங்குவதை இயலுமாக்கியதுடன் வரலாற்று ரீதியான போராட்டத்தில் தாம் ஈடுபடக்கூடியதாக இருப்பதற்காகப் பெண்கள் ஆக்கிரமிக்கப்பட்ட இடங்களினுள் பிள்ளைப் பராமரிப்பு நிலையங்களைக் கூட உருவாக்கியிருந்தனர். வீதிகளில் தொல்லைகள் ஏற்படுவதாலும் தமது உடல் ரீதியான பாதுகாப்புப் பற்றிய கரிசணை காரணமாகவும் இரவு நேர நிகழ்வுகளில் இருந்து வழமையாக ஒதுங்கியிருக்கும் இளம் பெண்கள் போராட்டத்தில் பெரும் எண்ணிக்கையில் பங்குபற்றினர். போராட்டத்தின் போது இரவு நேரங்களில் கூட, பின் ஜாமங்களில் கூட வீதிகள் பாதுகாப்பானவையாகத் தோன்றியதைச் சில பெண்கள் அவதானித்துள்ளனர்.

2022 மார்ச் 31 இல் நடைபெற்ற மிரிஹான ஆர்ப்பாட்டம் பெண்கள் அவர்களின் பிள்ளைகளைக் கொண்டுவரக்கூடிய ஓரிடமாகத் தொடர்ந்து காணப்பட்டது. ஆர்ப்பாட்டப் பேரணிகளுக்குத் தமது குழந்தைகளையும் பிள்ளைகளையும் கொண்டு வரவேண்டும் எனப் பல மத்திய வகுப்புப் பெண்கள் பிரக்ஞையுடன் தீர்மானம் எடுத்தனர். போராட்டத்திற்கு வந்த பல தாய்மார்களின் பரந்த அரசியல் உணர்வு பின்வருமாறு அமைந்திருந்தது: "இந்தப் போராட்டம் எம் பிள்ளைகளின் சிறந்த எதிர்காலத்திற்கானதாகும். எனவே, அவர்களுக்கான எமது போராட்டத்தினை அவர்கள் கண்களால் காண வேண்டும்," ஆக்கிரமிக்கப்பட்ட வெளி ஒரு பாதுகாப்பான இடம் என்பதைப் பெண்கள் உறுதிப்படுத்தினர். நிகழ்வுகள் எவ்வாறு மாறின என்பது பற்றியும் தயக்கம் கொண்ட பங்கேற்பாளர்கள் கூடப் போராட்டத் தளத்தினை விட்டு வெளியே வருவதற்குச் சிறுவர்களின் பங்கேற்பு எவ்வாறு ஒரு வெளியினை உருவாக்கியது என்பது பற்றியும் அரசு பிரக்ஞை கொண்டிருந்தது என இக்கட்டுரை ஆசிரியர்கள் நம்புகின்றனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான அரசின் கடுமையான நடவடிக்கையின் அங்கமாக, பெற்றோர்களையும் அவர்களின் பிள்ளைகளையும் முறைமை வாய்ந்த வகையில் இலக்குவைக்குமாறு சட்ட அமலாக்கலுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது என்பது தெட்டத் தெளிவான விடயமாகும். இதனால், ஒக்டோபர் 09 ஆம் திகதி காலி முகத்திடலில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் இந்த அறிவுறுத்தல்களைப் பொலிஸார் பின்பற்றினர். மிகக் கொடூரமாகப் பிள்ளைகளைப் பெற்றோரிடம் இருந்து பொலிஸார் பிரிக்கும் காணொளிகள் ஊடகங்களில் காண்பிக்கப்பட்டன. அரச இயந்திரத்தின் அங்கமான தேசிய வைத்தியசாலைப்

பணிப்பாளரும் ஆர்ப்பாட்டங்களுக்குப் பிள்ளைகளைக் கூட்டி வர வேண்டாம் என அறிவுரை வழங்கினார். ஆர்ப்பாட்டம் செய்யும் பெற்றோர் அவர்களின் பிள்ளைகளை வேண்டுமென்றே 'மனிதக் கேடயங்களாகப்' பயன்படுத்துகின்றனர் என்ற கருத்து அரசாங்கத்தினாலும் அதன் நேச அமைப்புக்களாலும் பதிலிகளாலும், ஊடகங்களிலும், சமூக ஊடகங்களிலும் பிரச்சாரம் செய்யப்பட்டன. இதனால் ஒக்டோபர் 09 ஆம் திகதி அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்திய ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல், எதிர்ப்பு இயக்கத்தில் பெண்களின் வெளியினை மூடுவதற்கான அரசின் உறுதியான ஒரு நகர்வாகவே அமைந்திருந்தது.

பெண்களின் ஊழியம், பெண் தொழிலாளர்களின் போராட்டங்கள் மற்றும் வலிந்து காணாமலாக்கப்படல் போன்ற தலைப்புக்கள் பற்றிய கலந்துரையாடலுக்கான தளத்தினையும் போராட்டம் உருவாக்கியது. இந்த விடயங்களும் கலந்துரையாடல்களும் பாரிய பெண்கள் பங்கேற்பினை உருவாக்கியது. உதாரணமாக, விடுதலை இயக்கத்தினால் (பெண்களுக்கான பெண்ணிய இடதுசாரிக் குழு - லிபரேசன் இயக்கம்) ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு கலந்துரையாடல் பின்வருவனவற்றினைக் கோடிட்டுக் காட்டியது: இலங்கையின் பொருளாதாரத்திற்குப் பெண்களின் ஊழியம் வரலாற்று ரீதியாக முதுகெலும்பாகத் திகழ்ந்து வருகின்றது. ராஜபக்ஷக்களால் கபளீகரம் செய்யப்பட்டு அழிக்கப்பட்ட செல்வங்கள், உழைக்கும் பெண்களின் குருதியினாலும் வியர்வையினாலும் கண்ணீராலும் உருவாக்கப்பட்டவையாகும். எனவே, பாரம்பரிய அரசியல் வெளிகளில் 'பிள்ளைப் பராமரிப்பு' போன்ற உள்வீட்டுப் பிரச்சினைகளைப் பற்றிக் கலந்துரையாடுவதற்கு மட்டும் பெண்கள் அழைக்கப்பட்டால், 'தேசிய முக்கியத்துவம்' வாய்ந்த விடயங்கள் ஆண்களுக்கு விடப்பட்டன. ஆனால் போராட்டம் (அரகலய) இந்த நிலையினைத் தலைகீழாகப் புரட்டிப் போட்டது. பெண்களைப் பாதிக்கும் பிரச்சினைகள் தேசிய பிரச்சினைகளாக ஆக்கப்பட்டன. இதனால், தேசிய பாதுகாப்பு, ஜனநாயகம் மற்றும் ஆளுகை மற்றும் ஏனைய தேசியப் பிரச்சினைகள் பெண்களின் பிரச்சினைகளாகவும் மாறின. எனவே, பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை நீக்கக் கோரும் ஊர்வலங்களுக்குப் பெண்கள் தலைமை தாங்குவதைக் காண்பது ஒன்றும் அசாதாரணமானதாக இருக்கவில்லை. விமுக்தி த சில்வா போன்ற செயற்பாட்டாளர்கள் நகர மண்டப வகையிலான கூட்டங்களின் தனித்துவமான கருத்துக்களுக்குச் சவால் விடுத்து "கோட்டா கோ கம" என்பது ஓர் இடமல்ல, மாற்றமாக அது ஒரு மக்கள் இயக்கம் எனக் கூறுவதைக் கேட்பது ஒரு பொதுவான நிகழ்வாக இருந்தது. அவர்கள் எம்மைத் தாக்கிய போது முழு நாடுமே எம்மைக் காக்க வந்தது. "உங்களுக்கு வெட்கமில்லையா? நாம் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்திற்காகவே போராடுகின்றோம்" என ஆர்ப்பாட்டப் பேரணியின் முன்னரங்கில் நின்று கொண்டு பொலிஸாருக்குச் சவால் விடுத்துச் செயற்பாட்டாளர் நூர் நூரா குரல் கொடுத்தது ஒன்றும் அசாதாரணமான காட்சியல்ல என்பதை ஒருபோதும் மறந்து விடவேண்டாம்.

அரசினால் ஆண்கள் இலக்கு வைக்கப்பட்ட போது, ஆர்ப்பாட்டங்களின் முன்னரங்கிற்குப் பெண்கள் வந்தனர். உலகம் முழுவதிலும் ஆர்ப்பாட்ட இயக்கங்களில் இது பொதுவானதாகும் என்பதுடன் இலங்கை ஆர்ப்பாட்டங்களிலும் இதுதான் நடந்தது. வலிந்து காணமலாக்கப்படல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான கைதுகள் போன்றவற்றுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களிலும் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விடுவிக்கக் கோரும் ஆர்ப்பாட்டங்களிலும் பெண்கள் தலைமை தாங்கினர். இதே போன்று, காலிமுகத்திடலில், பெண்களே பொதுவாக முன்னரங்குகளில் நின்று பொலிஸாருக்குச் சவால் விடுத்தனர். பொலிஸ் போன்ற அரச கட்டமைப்புக்களில் உள்ளார்ந்ததாக இருந்த ஆணாதிக்கத்தினையும் பெண்கள் குலைத்துப் போட்டனர். எனவே, தடிகளைக் கையில் எடுத்து, ஆண்களுக்கு அடித்து, அவர்களை வகை தொகையின்றிக் கைது செய்த ஆண் பொலிஸார், ஏராளமாக வந்து குவிந்த பெண் ஆர்ப்பாட்டக்காரர்களை எவ்வாறு கையாள்வது எனத் தெரியாது திகைத்தனர். பொலிஸ் கட்டுக்காவல் கூட்டில் இரவில் பெண் ஆர்ப்பாட்டக்காரர்களைத் தடுத்து வைப்பதற்கு இடம் கண்டுபிடித்தல் போன்ற நடைமுறை இக்கட்டுக்களுடன் பொலிஸார் போராடினர். நடுத்தர வகுப்புப் பெண்களுக்கு எதிராக வன்முறை நடத்துவதற்கும் பொலிஸார் அச்சமுற்றுக் காணப்பட்டனர் அல்லது தயங்கினர். அரசினால் வன்முறை மூலம் நசுக்கப்பட்ட காலி முகத்திடல் ஆக்கிரமிப்பின் பின்னரும் இந்த அனைத்து அழுத்தங்களையும் கண்கூடாகக் காண முடிந்தது.

## அரகலய / போராட்டம் - இலங்கையில் உள்ளடக்கும்தன்மை மிக்க பொதுமக்கள் அரசியல் செயற்பாட்டியத்துக்கான ஒரு பாதை

தாங்கமுடியாத பொருளாதாரக் கஷ்டத்தின் காரணமாகப் பெண் ஒருவர் அவரின் பிள்ளையைக் கையில் ஏந்திக்கொண்டு மிரிஹானவுக்கு வந்ததுடன் ஆரம்பித்த போராட்டம் இலங்கையில் பாரிய அஹிம்சை எதிர்ப்பு இயக்கங்களில் ஒன்றாகப் பரிணமித்து அது உண்மையில் எக்குறிக்கோளை அடைய வேண்டும் என நிர்ணயித்ததோ அக்குறிக்கோளைக் கோட்பாட்டு ரீதியில் அடைந்து கொண்டது. நாட்டினைப் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளிய நடவடிக்கைகளை எடுத்தமைக்காக ஜனநாயக ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியினை "வீட்டுக்கு அனுப்புவதே" அந்தக் குறிக்கோள். அவரின் செயற்பாட்டுத் தவறுகளின் காரணமாக அவர் மக்களின் நம்பிக்கையினையும் நாட்டை ஆளுவதற்கான அவரின் ஆணையினையும் இழந்தார். அரசியலில் நுழைந்து, தங்களின் அரசியல் செயற்பாட்டியத்தினை வெளிப்படுத்துவதற்குப் பெண்களுக்குத் தொடர்ந்து காணப்படும் தடைகளைத் தாண்டி, பெண்கள் எவ்வாறு அவர்களின் சொந்த வெளிகளை உருவாக்கி ஆர்ப்பாட்ட இயக்கத்தின் வெற்றிக்கு வழிகாட்டினார்கள் என்பதைக் கோடிட்டுக்காட்டி, நாடு முழுவதுமுள்ள அரசியல் இயக்கங்களின் கண்களைத் திறப்பதாகவே இந்தப் போராட்டம் தொடர்ந்தும் திகழ்கின்றது.

## போராட்டத்தில் பெண்கள் எதிர்நோக்கிய தொடர்ச்சியான சவால்கள்

எதிர்ப்பு இயக்கங்களிலும் அரசியல் வெளிகளிலும் பெண்களின் பங்கேற்பினையும் தலைமைத்துவத்தினையும் வரையறுத்து அதற்குக் கட்டுப்பாடு விதிக்கும் சில பாரம்பரிய கருத்துக்களிலிருந்து விலகி நிற்பதற்கான ஒரு வெளியாகப் போராட்டம் மாறிவந்தாலும், அனைத்துப் பெண்களுக்கும் இதே அனுபவம் கிட்டவில்லை. பால்நிலை மாறிய பெண்கள் ஆண்களின் துன்புறுத்தலுக்கு ஆளானதாகவும் அச்சுறுத்தும் சாடை சைக்கினைகளுக்கு முகங்கொடுத்ததாகவும் முறைப்பாடு செய்தனர். வண்ணமயமான சிறப்புக்களுடன் முதன்முதலில் கொழும்பில் பகிரங்க ஊர்வலம் (Pride March) நடத்தப்பட்டதைத் தாண்டியே இந்தச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. உழைக்கும் வர்க்கத்துப் பெண்களுக்கு வழமை போன்று தொழிலுக்குச் செல்லவேண்டி இருந்ததால், அவர்களால் அவர்களின் தொழிற்சாலைகளையும் பெருந்தோட்டங்களையும் விட்டு வரமுடியவில்லை. ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களுக்கு அழைப்பு விடுத்தபோது கூட அவ்வாறான ஹர்த்தால் நடவடிக்கைகளில் பங்குபற்றக் கூடாது எனத் தொழிற்சாலைகள் பெண்களை அச்சுறுத்தின.

# அரகலய - இலங்கை மக்களின் போராட்டம்: எதிர்ப்புக் கலையின் ஊடாக எதிர்க்கும் கலையின் வெளிப்பாடுகள்

*சகுன எம். கமகே**

*அரகலயவின் மிகவும் குறிப்பிடப்பட்ட அம்சங்களில் - மக்களின் போராட்டம் - சமூக ஊடகங்களின் பயன்பாடுகள் (புதிய ஊடகங்கள்) மற்றும் மக்களுடன் ஈடுபட பல்வேறு கலை வடிவங்கள் போன்றன காணப்பட்டன. அரசாங்கத்தை எதிர்க்குமாறு வலியுறுத்தி இலங்கை மக்களிடையே முறைசாரா சமூக ஒப்பந்தத்தை உருவாக்கி விரிவுபடுத்துவதில் சமூக ஊடகங்கள் பெரும் பங்கு வகித்தன.*

*ஓவியம், இசை, நாடகம், நாடகம், சினிமா, கட்புலக் கலைகள், புகைப்படம் எடுத்தல், கவிதை மற்றும் இலக்கியம் உள்ளிட்ட பல்வேறு கலை வடிவங்களும் பயன்படுத்தப்பட்டன, மேலும் அவை மாற்றுக் கலை வெளிப்பாடுகள் மூலம் மக்களின் எதிர்ப்பையும் அணிதிரட்டலையும் வெளிப்படுத்துவதில் மிகவும் தீவிரமான பங்கைக் கொண்டிருந்தன.*

## பின்னணி




***புகைப்படம் 1: கொழும்பு 01, சத்தம் வீதியில் இருந்து ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்திற்குள் நுழைய முயற்சிக்கும் இலங்கை மக்கள் (கமகே 2022).***

* சகுனா எம் கமகே லோ அன்ட் சொசைட்டி டிரஸ்டின் ஆய்வாளராவார். இவர் சமூக ஆவணப்படுத்தல் புகைப்படக்கலைஞரும் சமூகச் செயற்பாட்டாளரும் ஆவார். இவரின் ஆய்வுகளில் கவனம் பெறும் பரப்புக்களில் கட்புல மானுடவியல், சர்வதேச உறவுகள் மற்றும் பூகோள அரசியல், சமூக இயக்கங்கள், சமூக மற்றும் அரசியல் எதிர்ப்பு, கட்புல எதிர்ப்பு, கட்புலப் பூகோள அரசியல், கலாசார மானுடவியல், தொழிலாளர் உரிமைகள், உலகப் பாதுகாப்பு, பூகோள அரசியல், சுற்றாடல் பாதுகாப்பு, விளிம்புநிலையாக்கம், அடித்தட்டு மக்கள் பற்றிய ஆய்வு, கலை, திரைப்படம், ஊடகம் மற்றும் புதிய ஊடகம், புகைப்படக்கலை, மற்றும் கவிதை, கலாசார இனவரைவியல் ஆகியன உள்ளடங்குகின்றன

இலங்கையில் மக்களின் போராட்டம், உள்நாட்டில் அரகலய (சிங்களத்தில்) மற்றும் போராட்டம் (தமிழில்) என அழைக்கப்பட்ட ஒரு வெகுஜன எதிர்ப்பு இயக்கத்தின் மூலம் வெளிப்பட்டது. நாட்டில் முன்னெப்போதும் ஏற்பட்டிராத பொருளாதாரச் சீர்குலைவு மற்றும் அரசியல் குழப்பத்திற்கான எதிர்வினையே இதுவாகும். நாட்டின் பல்வேறு இடங்களில் முளைத்த சிறு சிறு போராட்டங்கள், மக்கள் இயக்கங்கள் என்பவற்றுடன் ஆங்காங்கே நடைபெற்ற தனித்தனியான போராட்டங்களுடன் வலுவடைந்து ஒரு முழுமையான மக்கள் எதிர்ப்பு இயக்கமாக ஒன்றிணைந்தன. நாடு முழுவதும் இடம்பெற்ற இந்த வெகுஜனப் போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களின் அலைகளுடன், புலம்பெயர்ந்தவர்களும் இணைந்தமையினால் நாட்டிற்கு வெளியே இடம்பெற்ற போராட்டங்களும் சேர்ந்து கொண்டன. இதனால் போராட்டங்கள் பிரபலமடைய ஆரம்பித்தன. நெருக்கடிக்கான காரணங்கள் ஆழமாக வேரூன்றியிருந்த போதும் கொவிட் 19 பெருந் தொற்றினால் ஏற்பட்ட பொருளாதார அழுத்தங்களுடன், 2020 ஆம் ஆண்டில் இந்நெருக்கடி உச்சத்தை எட்டியது.



*புகைப்படம் 2: காலிமுகத்திடல் முற்றுகைப் போராட்ட இயக்கம். மக்கள் போராட்டத்தின் முதலாம் நாள். (கமகே, காலிமுகத்திடல் ஆக்கிரமிப்பு இயக்கம் 2022)*



*புகைப்படம் 03: எரிவாயு சிலிண்டர் போராட்டம். கொழும்பு 11, ஆமர் வீதி சந்தியில் திரவ எரிவாயு கிடைக்காமையினால் விரக்தியடைந்த போராட்டக்காரர்கள், வீதியை மூடினர். (கமகே, சிலிண்டர் போராட்டம் 2022)*



*புகைப்படம் 04: பொறுமை மிக்க குடியிருப்பாளர்கள் - கிருலப்பனை சந்தியில் திரவப் பெற்றோலிய வாயுவைக் (LPG) கொள்வனவு செய்வதற்காக வரிசையில் பொறுமையாகக் காத்திருக்கும் ஒரு சிறுமியும் அவரின் தாயும். ஏனைய அத்தியாவசியப் பொருட்களுடன் எரிவாயு சிலிண்டர்களுக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது, இலங்கையின் தலைநகர் கொழும்பு.*
*(கமகே, நெருக்கடியை சமாளிக்கும் சிறுமியும் தாயும் 2022)*



*புகைப்படம் 05: இலங்கையின் பொருளாதாரம் மோசமடைந்து வரும் நிலையில் எரிபொருளை வாங்குவதற்கு ஓட்டுநர்கள் இரவு முழுவதும் வரிசையில் காத்திருக்கின்றனர் (கமகே, களனியவில் பெற்றோல் வரிசை 2022).*



*புகைப்படம் 06: விரக்தியான காலம், விரக்தியான வாழ்க்கை. முச்சக்கரவண்டிச் சாரதி, அவரின் மனைவி மற்றும் இரண்டு வயது மகள் ஆகியோர் இரவு முழுவதும் பெற்றோல் வரிசையில் நிறுத்தப்பட்டிருக்கும் முச்சக்கர வண்டியில் தூங்க முயற்சிக்கின்றனர். (கமகே, களனியில் பெற்றோல் வரிசை 2022).*

2020 ஆம் ஆண்டு முதல் மக்கள் மீதான பொருளாதார அழுத்தங்கள் அதிகரித்து வருகின்றன. பெருந்தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் பின்பற்றிய கடுமையான வழிமுறைகள் மற்றும் திடீரென இரசாயன உரத்தைத் தடைசெய்வதற்கும் வரிகளைக் குறைப்பதற்குமான குறுகிய நோக்குடைய கொள்கைகள், அதிகரித்த ஊழல் மற்றும் அரச நிதித் துஷ்பிரயோகம் ஆகியவை இணைந்து இந்த நெருக்கடிக்கு வழிவகுத்தன. இலங்கையின் அந்நியச் செலாவணி ஒதுக்கங்கள் குறைவடைந்ததுடன் டொலரைச் செயற்கை விகிதத்திற்கு உயர்த்துவதற்கான மத்திய வங்கியின் தீர்மானங்கள், புலம்பெயர்ந்த தொழிலாளர்களும் ஏற்றுமதியாளர்களும் தங்கள் வருமானத்தை வங்கி முறைமையின் மூலம் நாட்டிற்குள் அனுப்புவதற்கு மறுக்கும் நிலைமைக்கு வழிவகுத்தன. அந்நியச் செலாவணி நெருக்கடியால் அத்தியாவசிய பொருட்களை வாங்குவதில் அரசுக்கு சிரமம் ஏற்பட்டதுடன் எரிபொருள், எரிவாயு, உணவு மற்றும் மருந்துகளின் பற்றாக்குறைக்கும் இது வழிவகுத்தது. போக்குவரத்து மற்றும் மின்சாரம் வழங்கல் போன்ற பொதுச் சேவைகளை வழங்குவதிலும் அழுத்தங்கள் ஏற்பட்டன. சர்வாதிகார ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அவரது அரசாங்கமும் இந்த விடயங்களில் பகிரங்க உரையாடலை விரும்பவில்லை. எரிபொருள், எரிவாயு மற்றும் உணவைப் பெறுவதற்கு மக்கள் மணிக்கணக்காக, சில நேரங்களில் நாட்கணக்கில், வரிசையில் நிற்கவேண்டி ஏற்பட்டமையானது மக்கள் மீதான பொருளாதார அழுத்தத்தைத் தெளிவாகப் புலப்படுத்தியது. அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு மக்கள் தங்களின் பெரும்பாலான நேரத்தைச் செலவிட்டமையால் ஏனைய பொருளாதார நடவடிக்கைகள் சமரசம் செய்யப்பட்டன. இந்த அழுத்தங்கள் இறுதியில் மக்களை வீதிகளுக்கு வந்து அரசாங்கத்திற்கு எதிராக போராடத் தூண்டின.

பொருளாதார நெருக்கடிக்கு எதிரான முதலாவது வெளிப்படையான போராட்டம், 2022 மார்ச் 1 ஆம் திகதி கொஹுவலயில் ஆரம்பித்தது. தங்களது குறைகள் தொடர்பான பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகளைப் பிடித்தவாறு போராட்டக்காரர்கள் மெழுகுவர்த்தி ஏந்திக் கவனயீர்ப்புப் போராட்டமொன்றில் ஈடுபட்டனர். மின்வெட்டு மற்றும் அனைத்து அத்தியாவசியப் பொருட்களினதும் பற்றாக்குறை ஆகியவற்றினால் சோர்வடைந்த நூற்றுக்கணக்கான இலங்கையர்கள், நாட்டிலுள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கும் ஜனாதிபதி தீர்வுகளைக் கண்டறிய வேண்டும் அல்லது "வீட்டிற்குச் செல்ல வேண்டும்" எனக் கோரி, 2022 மார்ச் 31 ஆம் திகதி மிரிஹானவில் உள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தனிப்பட்ட இல்லத்திற்கு அருகில் ஒன்றுதிரண்ட போது போராட்டங்களின் வடிவத்தில் பாரிய மாற்றம் ஏற்பட்டது (கொழும்பு பேஜ், 2022). இலங்கைப் பாதுகாப்புப் படையினரின் வன்முறைப் பிரயோகத்தினால் மிரிஹான போராட்டம் ஒடுக்கப்பட்டதுடன் இதன்போது ஏறத்தாழ 50 பேர் காயமடைந்தனர். அவர்களில் ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் மற்றும் பாதுகாப்புப் படைகளின் உறுப்பினர்களும் அடங்குவர் (News1st, 2022). ஊரடங்குச் சட்டத்தை விதித்தல் மற்றும் பிற ஒடுக்குமுறை வழிகளைப் பிரயோகித்தல் என்பனவற்றின் மூலம் போராட்ட இயக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு மத்தியிலும், இந்தச் சம்பவத்தின் விளைவாக அவ்வியக்கம் தூண்டப்பட்டதுடன், இலங்கைச் சமூகத்தின் பல்வேறு வர்க்கங்களிலிருந்து பெரும் கூட்டத்தையும் அது ஈர்த்தது.




*புகைப்படம் 07: இலங்கையின் பொருளாதார நெருக்கடி மோசமடைந்து வரும் நிலையில், போராட்டக்காரர்கள் கொழும்பு கொஹுவல சந்தியில் மெழுகுவர்த்தி ஏந்தி, தங்களின் பல்வேறு குறைகள் தொடர்பான வாசகங்களைக் கொண்ட பதாகைகளுடன் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (கமகே, கொஹுவலயில் மெழுகுவர்த்தி ஏந்திய கவனயீர்ப்புப் போராட்டம் 2022).*

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகவேண்டும் எனும் எதிர்ப்பு இயக்கம் மிரிஹான ஆர்ப்பாட்டத்தின் பின்னர் தொடர்ச்சியாக வலுப்பெற்று வந்தது. போராட்டக்காரர்களின் பிரதான

வாசகம் "#கோஹோம்கோட்டா" என்பதாகும். நீண்ட நேர மின்வெட்டு அத்துடன் சமையல் எரிவாயுப் பற்றாக்குறை, போக்குவரத்துப் பிரச்சினைகள் மற்றும் உணவுப் பற்றாக்குறை ஆகியவற்றின் விளைவாகப் பொதுமக்கள் விரக்தியின் உச்சத்திற்குச் சென்றனர். கடல் காற்றை அனுபவிப்பதற்காக மக்கள் கூடும் காலி முகத்திடல் பொதுவெளியை, 2022 ஏப்ரல் 9 ஆம் திகதி அங்கு ஒன்றுதிரண்ட மக்கள் ஓர் ஆர்ப்பாட்டக் களமாக மாற்றினார்கள். முரண்நகையாக, ஜனாதிபதி கோட்டாபய, 2019 நவம்பரில் ஜனாதிபதியான பின்னர், இந்த வெளியைப் போராட்டத்திற்கான இடமாக ஒதுக்கியிருந்தார்.



*புகைப்படம் 08: மக்கள் போராட்டத்தின் முதல் நாள். எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் சிலையைச் சுற்றி மக்கள் ஒன்றுதிரள்கின்றனர். (கமகே, காலிமுகத்திடல் ஆக்கிரமிப்பு இயக்கம் 2022)*

ஏப்ரல் 9 ஆம் திகதிக்குப் பின்னர், போராட்டக்காரர்கள் மேற்கொண்ட பல புதிய நடவடிக்கைகளால் போராட்ட இயக்கம் வலுவடைந்தது. குறிப்பாக, அரகலய போராட்ட இயக்கம் ஆர்ப்பாட்டக் களங்களை நிறுவவும் விரிவுபடுத்தவும் ஆரம்பித்தது. காலிமுகத்திடலை மையமாகக் கொண்ட இந்த எதிர்ப்பு இயக்கம், கொழும்பின் மையப்பகுதியில் அமைந்துள்ள இத்தளத்தை "கோட்டா கோகம" என மீளப் பெயரிட்டது. இலங்கையின் மக்கள் இயக்கம் விரிவடைந்து, "#காலிமுகத்திடல் ஆக்கிரமிப்பு" இயக்கம் என அதனைப் பெயரிட்டு அழைத்தது. 2022 ஜூலை 9 ஆம் திகதி பாரிய போராட்டம் ஒன்று நடாத்தப்பட்டதுடன், 2022 ஜூலை 14 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி விலகல் வரையும் அத்துடன் அதன் பின்னரும் கூட அது தனது உத்வேகத்தைத் தொடர்ந்தும் கொண்டிருந்தது.



*புகைப்படம் 09: காலி, கோட்டாகோகமவில் போராட்டம் (கமகே, GGG காலி 2022).*

அரகலய என்னும் மக்கள் போராட்டத்தின் மிகவும் முன்னிலைப்படுத்தப்பட்ட அம்சங்களுள் சமூக ஊடகங்களினதும் (புதிய ஊடகங்கள்) மக்களுடன் ஈடுபடுவதற்கான பல்வேறு கலை வடிவங்களினதும் பயன்பாடும் ஒன்றாகும். அரசாங்கத்தை எதிர்க்குமாறு இலங்கை மக்களை வலியுறுத்தி, அவர்கள் மத்தியில் முறைசாரா சமூக ஒப்பந்தம் ஒன்றை உருவாக்குவதிலும் விரிவுபடுத்துவதிலும் சமூக ஊடகங்கள் ஒரு முக்கிய வகிபங்கினைக் கொண்டிருந்தன. ஓவியம், இசை, நாடகம், சினிமா, கட்புலக் கலைகள் மற்றும் புகைப்படக்கலை, கவிதை மற்றும் இலக்கியம் உள்ளிட்ட பல்வேறு கலை வடிவங்களும் பயன்படுத்தப்பட்டதுடன் அவை மாற்றுக் கலை வெளிப்பாடுகள் மூலம் மக்களின் எதிர்ப்பை வெளிப்படுத்துவதிலும் அவர்களை அணிதிரட்டுவதிலும் மிகவும் துடிப்பான வகிபங்கினைக் கொண்டிருந்தன.

# அரசியல் இயக்கங்களில் கலையும் அழகியலும்



*புகைப்படம் 10: குற்றப் புலனாய்வுப் பிரிவின் தலைமையகத்தில் இராணுவப் பொலிஸாருடன் மோதல். வலிந்து மேற்கொள்ளப்படும் கைதுகளுக்கு எதிரான கலைப் போராட்டம் (கமகே, எதிர்ப்பின் வடிவங்கள் 2022)*

அரசியற் செயற்பாட்டியல், எதிர்ப்புப் போராட்டங்கள் மற்றும் மக்கள் போராட்டங்கள் ஆகியவை எதிர்ப்பிற்கான சக்திவாய்ந்த கருவிகளாகும். நமது உலகில் ஒப்பீட்டளவில் சாதகமான மாற்றத்தை உருவாக்கக்கூடிய சக்தியை, மக்களை ஒன்றுதிரட்டுதல் உருவாக்குகின்றது. கலை என்பது அஹிம்சை வழியிலான போராட்டத்தின் ஒரு வடிவமாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. ஆழமான அர்த்தத்தைக் கொண்டிருக்கவும், வலிமைக்குச் செயலூக்கம் அளிப்பதற்கும், எதிர்ப்பிற்கான அதன் செய்தியின் மூலம் மக்களை இணைக்கவும் அதனால் முடியும். வெவ்வேறு கலை வடிவங்களால் மக்களை வெவ்வேறு வழிகளில் இணைக்க முடியும். கலை ஓர் அழகான, அசாதாரண ஊடகமாகும். மாற்றத்தை உருவாக்கவும், ஒற்றுமையை உருவாக்கவும், எதிர்ப்பிற்கான சக்தியையும் உறுதியையும் வலுப்படுத்தவும் கலை பயன்படுத்தப்படலாம். ஒரு பொதுவான செய்தியின் மூலம் மக்களைச் சென்றடைவதற்கும் அவர்களை இணைப்பதற்குமான சக்தியைக் கலை கொண்டிருப்பதுடன் அது அவர்களின் எதிர்பார்ப்புகளையும் கோரிக்கைகளையும் காட்சிப்படுத்தி அவற்றைச் சிறப்பாகவும் வெளிப்படுத்துகின்றது. கலை பன்முகத்தன்மை கொண்டது. இதனைப் பிரசாரத்திற்காகவும், தவறான விவரணங்களை உருவாக்கவும் பயன்படுத்த முடியும். ஆனால், அது இணக்கமற்றதாகவும், விமர்சன ரீதியானதாகவும், உணர்ச்சிகரமானதாகவும் அத்துடன் அச்சமற்றதாகவும் கூட இருக்கலாம். ஒடுக்கப்பட்டவர்களுக்கு, அவர்களின் உணர்ச்சிகளின் - அவர்களின் சோகம், உறுதி, விரக்தி, வலி மற்றும் ஒற்றுமை - முழு வீச்சினையும் வெளிப்படுத்துவதற்கான ஒரு வழிமுறையை இது வழங்குகின்றது. ஆதிக்கச் சொல்லாடல்கள் மற்றும் நிறுவப்பட்ட அதிகார அமைப்புகளுடன் கலை குறுக்கிடும்போது, அதன் விளைவு பெரும்பாலும் புரட்சிகரமானதாகவே இருக்கும். இது வெகுஜன அபிப்பிராயங்கள், நம்பிக்கை முறைமைகள் மற்றும் அதிகாரங்களுக்குச் சவால் விடுப்பதுடன் செயற்பாட்டியத்துக்கான ஒரு வலுவான கருவியாகவும் தொழிற்படுகின்றது. (சிங், 2021).

அரசியலுக்கான அழகியற் தனித்துவ அணுகுமுறை என்பது ஒரு புதுமையான விடயமல்ல. அலெக்சாண்டர் கோட்லீப் பாம்கார்ட்டன், Aesthetica என்னும் தனது புத்தகத்தில், உணர்வுபூர்வமான அறிவு (Sensuous Knowledge) என்னும் ஒரு குறிப்பிட்ட வகையான அறிவை வரையறுப்பதற்கு “அழகியல்” என்னும் சொற்பதத்தைப் பயன்படுத்தினார் (Sonderegger & Kleesattel, 2021, g.108). இம்மானுவேல் கான்ட் எழுதிய கிரிட்டிக் ஒப் ஜட்ஜ்மென்ட்டின் முதல் பகுதி, அழகு மற்றும் கலை பற்றிய கேள்விகளுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. அழகு பற்றிய கேள்விகளுக்கென ஒருபுறமும் கோட்பாட்டு மற்றும் நடைமுறைக் கேள்விகளுக்கு மறுபுறமுமென அவற்றிற்கிடையில் கண்டிப்பான பிரிகோடுகளை வரைவதன் மூலம் கான்ட் இதனை ஆரம்பிக்கின்றார் (Ibid. g.109). வோல்டர் பெஞ்சமின் எழுதிய “இயந்திர மீளுற்பத்தி யுகத்தில் கலையின் பணி” (1936), தொழில்நுட்பத்தின் தோற்றத்துடன் நவீன யுகத்தில் கலையில் ஏற்பட்ட மாற்றங்களின் பொதுவான வரலாற்றை வழங்குகின்றது. அவரது கருத்துகளின் பிரகாரம், ஒவ்வொரு மனித உணர்ச்சிக் கண்ணோட்டமும் முற்றிலும் உயிரியல் ரீதியானதோ இயற்கையானதோ அல்ல, அது வரலாற்று ரீதியானதும் கூட. அவை சமூக மாற்றங்களாக இருப்பினும் அல்லது, “மனிதகுலத்தின் ஒட்டுமொத்த இருப்பின் முறையையும்” பாதிக்கும் தொழில்நுட்ப மாற்றங்களாக இருப்பினும், மாற்றத்தை மக்கள் உணரும் விதங்களை இது பாதிக்கின்றது. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் கலையின் இயந்திர மீளுற்பத்தியின் ஊடாகக் கலைக்குரித்தான பிரகாசத்தை (aura) இழப்பதைப் பற்றி பெஞ்சமின் எழுதுகிறார். பெஞ்சமினைப் பொறுத்தவரையில், அப்பிரகாசம் மீளாக்கம் செய்யப்படாத ஒரு கலைப் படைப்பின் தற்படைப்பாற்றல் மற்றும் நம்பகத்தன்மையைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது. ஓர் ஓவியத்திற்கென

ஒரு பிரகாசம் உள்ளது, ஆனால் ஒரு புகைப்படம் அதனைக் கொண்டிருப்பதில்லை புகைப்படம் என்பது ஒரு படத்தின் படம், அதேவேளை, ஓவியம் முற்றிலும் தற்படைப்பினாலானது (பெஞ்சமின் 1936, 238).

“ஈஸ்தட்டிக்ஸ்” என்னும் நூலில், கலை என்னும் எண்ணக்கருவை ஒரு வரலாற்றுப் பதிவாகவும், மனிதத் துன்பத்தின் நிரந்தர மொழியாகவும் தியோடர் அடோர்னோ வெளிப்படுத்தினார் (ஆர்ட்லாண்ட், எபெர்ஹார்ட் ஹோபன், வீலேண்ட் அடோர்னோ, தியோடர் டபிள்யூ 2017). அரசியலின் அழகியல் பார்வை பிரதானமாக சித்தாந்தம் மற்றும் ஜனரஞ்சகக் கலாசாரத்துடன் தொடர்புடையது. அரசியலின் சுற்றயலில், கலை மற்றும் அழகியலை இரண்டு முக்கிய கண்ணோட்டங்களிலிருந்து - பெரும்போக்காகவும் மாற்றாகவும் - பிரதிநிதித்துவப்படுத்த முடியும். இந்தக் கண்ணோட்டங்கள் ஓர் அரசின் அதிகாரத்தின் மையத்துடனும் அரசாங்கத்தின் பிரசாரப் பொறிமுறையுடனும் தொடர்புடையவை. அன்டோனியோ கிராம்சி, மற்றைய சமுதாய வர்க்கங்களை விடவும் ஒரு குறிப்பிட்ட சமுதாய வர்க்கத்தின் மேலாதிக்கத்தை (முதலாளித்துவ மேலாதிக்கம்) குறிப்பிடும் “கலாசார மேலாதிக்கம்” என்னும் தனது எண்ணக்கருவின் மூலம் இந்த உறவை அடையாளம் காண்கிறார், இது அரசியல் மற்றும் பொருளாதாரக் கட்டுப்பாட்டைக் குறிப்பீடு செய்கின்றது. ஆனால், அரசில் உள்ள அனைவரினதும், குறிப்பாக அதற்கு அடிபணிந்தவர்களின், “பகுத்தறிவு” விழுமியங்களாகத் தாம் மாறும் பொருட்டு முதலாளித்துவ வர்க்கம் தங்கள் விழுமியங்களையும் நெறிமுறைகளையும் பரப்பிய “மேலாதிக்க கலாசாரத்தையும்” கூட இது குறிக்கின்றது, தொழிலாளர் வர்க்கத்தில் (மற்றும் பிற வர்க்கங்களில்) உள்ள மக்கள் தங்கள் நலன்களை முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களுடன் அடையாளம் கண்டு, புரட்சி செய்வதற்குப் பதிலாக தற்போதைய நிலையைத் தக்கவைத்துக் கொள்ள உதவினர். கலாசார மேலாதிக்கத்தின் சூழமைவில் (அல்லது வெளிப்பாட்டில்) தூண்டுதல், சம்மதம் மற்றும் எப்போதாவது முரட்டுத்தனமான பலத்தைப் பயன்படுத்துதல் ஆகியவற்றுக்கு இடையே ஒரு தெளிவான உறவுநிலை உள்ளது. (கிராம்சி 1971). ஆளும் மேட்டுக்குடியுடன் இணைந்த ஒரு பிரபலமான கலாசாரத்தைக் கலை கட்டமைப்பதுடன் அதன் சித்தாந்த அதிகார அடிப்படையையும் விரிவுபடுத்துகின்றது. உரிய காலத்திற்கும் இடத்திற்கும் பொருத்தமான மாற்று உரையாடல் மூலம், அந்தப் பழமைவாதத்திற்குச் சவால் விடுத்தல் பிரதானமானதாகும். பெரிய சமூகத்தினரிடையே அரசியலில் எதிர்கொள்ளும் உண்மையான யதார்த்தங்களை விரிவுபடுத்துவதற்கும் ஒடுக்கப்பட்டோருக்கு இது பிரதானமாகின்றது.




*புகைப்படம் 11: ஆக்கபூர்வமான போராட்டக்காரர் (கமகே, ஆக்கபூர்வமான போராட்டக்காரர் 2022)*




*புகைப்படம் 12: செய்தியொன்றை வெளிப்படுத்துவதற்காகத் தனது குடையைப் பயன்படுத்தும் பௌத்த பிக்கு (கமகே, போராட்டக்காரரான துறவி 2022)*

அழகியல் என்பது ஓவியம் முதற்கொண்டு, இசை, கவிதை, புகைப்படக்கலை மற்றும் திரைப்படங்கள் வரையான கலையின் நடைமுறைகளை மட்டுமல்லாது, அவை அனைத்திற்கும் மேலாக, அவை வழங்கும் உட்கருத்துகள் மற்றும் புரிதல்களையும் குறிப்பீடு செய்கின்றது. இந்த அர்த்தத்தில், "அழகியல் அரசியல்" என்பது சிறிது பின்சென்று, பிரதிபலிப்பை மேற்கொண்டு அரசியல் முரண்பாடுகளையும் குழப்பநிலைகளையும் புதிய வழிகளில் பார்ப்பதற்கும், கேட்பதற்கும், உணர்வதற்குமான ஆற்றலைப் பற்றியதாகும். இந்த அழகியல் கூருணர்வின் ஒரு முக்கிய பகுதி, தற்போது நிலவும் நியாயவாத மாதிரிகளுக்கு அப்பாற்பட்ட அரசியல் பற்றிய நமது புரிதலை விரிவுபடுத்துவதும், அரசியலில் உணர்ச்சிகள் வகிக்கும் பிரதான வகிபங்கை அங்கீகரிப்பதுமாகும். உண்மையில், சில துறைகளே அரசியலை விட உணர்ச்சிகளால் அதிகம் நிரம்பியுள்ளன (ப்ளீகர், 2018). அரசியலிலும் சமூகத்திலும் உணர்ச்சிகள் பிரதான பங்கு வகிக்கின்றன. இது அரசியல் நடவடிக்கைகளுக்கு மக்கள் பதிற்செயற்பாடாற்றும் மற்றும் எதிர்வினையாற்றும் விதத்தை மீள வடிவமைக்கின்றது. உதாரணமாக, மிரிஹான போராட்டத்தின்போது "தாயும் சேயும்" என்னும் புகைப்படம் இலங்கையில் மக்கள் போராட்டத்தின் அடையாளமாக மாறியது. அரசாங்கப் படைகளால் போராட்டக்காரர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இடைவிடாத அடக்குமுறையும், நாட்டின் பரந்த நிலைமையும் இந்தப் பிம்பத்திற்கான அனுதாப உணர்வுகளை உருவாக்கியது. இந்தப் புலனுணர்வுகள் அரசாங்கத்திற்கு எதிராக மக்களை மேலும் அணிதிரளத் தூண்டியதுடன், 2022 ஏப்ரல் தொடக்கத்தில் இருந்து மக்கள் போராட்டத்தை அங்கீகரிக்கப்பட்ட போராட்ட இயக்கமாகவும் தாபித்தது. இந்தச் சூழமைவில் அது பொது இடங்களை ஆக்கிரமிப்பதைச் சட்டப்பூர்வமாக்கியது.

## கலைக்கும் அரசியலுக்கும் இடையேயான உலகளாவிய உறவுநிலையை விபரித்தல்

கலைக்கும் அரசியலுக்கும் இடையே நிலவும் நலம்சார் உறவுடன், உலக வரலாற்றில் முரண்பாடுகளைப் பிரதிபலிப்பதற்கு அரசியல் மற்றும் சமூக இயக்கங்களில் பல்வேறு வழிகளில் கலைகள் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் உள்ளன. அமெரிக்காவின் நியூயோர்க்கில் 1918 இன் பின்னர் எழுந்த நியூ நீக்ரோ இயக்கம், ஹார்லெம் மறுமலர்ச்சியின்போது புலம்பெயர்ந்த ஆபிரிக்கர்களின் உரிமைகளைப் பெறுவதற்கு இலக்கிய இடையீடுகளைப் பயன்படுத்திய ஹெர்பர்ட் ஹரிசனின் எழுத்துக்கள், அத்துடன் ஹார்லெம் மறுமலர்ச்சியின் சகாப்தத்தில் எதிர்ப்பு வெளிப்பாட்டின் வடிவம் ஒன்றாக இசை, நாடகம் மற்றும் அரங்கியலைப் பயன்படுத்தியமை ஆகியவற்றில் இதற்கான உதாரணங்கள் காணப்படுகின்றன.

இதேபோன்று, இரவீந்திரநாத் தாகூர், உரைநடை மற்றும் கவிதை இலக்கியம், இசை, ஓவியம், நாடகம் மற்றும் அரங்கியல் ஆகியவற்றை, இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்துடன் இணைந்த ஒரு சாதகமான தேசியவாதத்தை முன்வைப்பதற்குப் பயன்படுத்தினார். சதாத் ஹசன் மண்டோ போன்ற எழுத்தாளர்கள், அநீதிகள் பற்றிய விழிப்புணர்வையும் அதற்கான எதிர்ப்பையும் உருவாக்குவதற்காக, இந்திய சுதந்திரப் போராட்டத்துடன் இணைந்து, துணைக் கண்டத்தை இந்தியா மற்றும் பாகிஸ்தான் எனப் பிரித்தபோது இடம்பெற்ற அரசியல் மற்றும் சமூக அநீதிகளை அடிப்படையாகக் கொண்ட சிறுகதைகள் மற்றும் நாவல்களை எழுதியுள்ளனர். ரித்விக் கட்டக், கௌதம் கோஷ், தீபா மேத்தா மற்றும் ஏனைய திரைப்பட இயக்குநர்கள், இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் பிரிவினைகளை அடிப்படையாகக் கொண்டு, வன்முறை, கொடூரம் மற்றும் அநீதி அத்துடன் அந்த காலகட்டத்தில் வாழ்ந்த மக்களினதும் அதேபோன்று பிரிவினையின்போது இடம்பெயர்ந்து இன்று தொடர்ந்தும் பாதிப்பை அனுபவிக்கும் குடும்பங்களினதும் துயரத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளனர்.

முரண்பாடுகளை வெளிப்படுத்துவதற்கு, இலத்தீன் அமெரிக்காவிலும் பயன்படுத்தப்படும் சக்திவாய்ந்த ஆயுதம் கலையே. 1973 ஆம் ஆண்டில் சிலி குடியரசில் சால்வடோர் ஆலண்டேவின் அரசாங்கத்தை அகஸ்டோ பினோ கவிழ்த்தபோது விக்டர் ஜாரா போன்ற கலைஞர்கள் அந்த ஜனநாயக விரோதச் செயல்களுக்கு எதிராக இசை மற்றும் பாடல்கள் மூலம் எதிர்ப்புத் தெரிவித்தனர். இந்த போராட்டங்கள் அவரது மரணத்திற்கும் வழிவகுத்தன. சிலி நாட்டில் இராணுவ ஆட்சிக்குழுவின் அடக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுக்கும் பப்லோ நெருடா போன்ற எழுத்தாளர்கள் மற்றும் கவிஞர்களின் இடையீடும் குறிப்பிடத்தக்கது. 1960களில் பீட் சீகர், ஜோஅன் பாயெஸ், பொப் டிலன் மற்றும் ஏனைய கலைஞர்களின் பாடல்கள், இனவாதம், போர் மற்றும் இராணுவ-தொழில்துறை போன்றவற்றிற்கு மேலும் எதிர்ப்பினை வெளிப்படுத்தியதன் மூலம். அரசியல் போராட்டத்திற்கான அமெரிக்கக் கலை

மரபைத் தொடர்ந்தன. வியட்நாம் போர் எதிர்ப்பு இயக்கத்தில் ஜோன் லெனனின் இசை இடையீடு மற்றும் 2013 முதல் கறுப்பினத்தவரின் உயிர்களும் முக்கியமானவை (Black lives matters) இயக்கத்தின் மீது கவனத்தை ஈர்க்கப் பயன்படுத்தப்பட்ட சுவரோவியங்கள் ஆகியவை கலைப் போராட்டத்தின் ஏனைய உதாரணங்களாகும். பொப் மார்லியின் கலகப் பாடல்கள், உலகெங்கிலுமுள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் முறைமைசார் விதத்தில் மனிதத்தன்மையற்றவர்கள் போன்று நடத்தப்படுவதற்கு எதிரான எதிர்ப்பின் வலுவான உறுதிப்படுத்தலாகும். 1960கள் தொடக்கம் 1990கள் வரை தென்னாப்பிரிக்காவில் நிகழ்ந்த யூகோஸ்லாவியப் போர்களின் போதும் எகிப்திலும் மத்திய கிழக்கில் உள்ள ஏனைய நாடுகளிலும் ஏற்பட்ட அரபு வசந்தத்தின் போதும் எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கு போராட்டக் கலை உருவானது. மிக அண்மையில், இலங்கைக்கு அருகில், இந்தியாவில் குடியுரிமைச் சட்டத் திருத்தத்திற்கு எதிரான போராட்டங்களும், விவசாயிகள் போராட்டமும், போராட்டங்களுக்கு உத்வேகமளித்தன. 22 வயதான ஈரானிய மாணவி மஹ்சா அமினி, மிகவும் தளர்வாக முக்காடு அணிந்ததாகக் கைது செய்யப்பட்டதன் பின்னர் பொலிஸ் கட்டுக்காவலில் இறந்தமையானது 2022




*புகைப்படம் 13: ஜந்தர் மந்தர், இந்தியா. அரசாங்கத்தின் கொள்கைகளினாலும் காலநிலையினாலும் ஏற்பட்ட நிதி இழப்புக்களைத் தாங்க முடியாது தற்கொலை செய்துகொண்ட விவசாயிகளின் மண்டையோடுகளைப் பயன்படுத்தி விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். (கமகே, விவசாயிகள் போராட்டம் 2017)*

நிறவெறிக்கெதிரான விடுதலைப் போராட்டம், இனரீதியான ஒடுக்குமுறையைப் பிரயோகிக்கும், சர்வாதிகார ஆட்சியொன்றின் கீழ் கலாசாரத்தின் (விசேடமாக கலை மற்றும் இலக்கியம்) பங்கு குறித்த பல சிந்தனைக் கருத்தியல்களுக்கு வழிவகுத்தது. அரசின் இன, கலாசார மற்றும் அரசியல் கொள்கைகளை விமர்சித்து நிறவெறிக்கெதிரான போராட்டத்தின்போது உருவாக்கப்பட்ட பெரும்பாலான கலைகள், 'போராட்டக் கலை' அல்லது 'எதிர்ப்புக் கலை' என முத்திரையிடப்பட்டன. (சாஹோ 2011).

முதல் ஈரானில் அரசாங்கத்திற்கு எதிராக இடம்பெறும் போராட்டங்களுக்கு வழிவகுத்தது. இந்நிகழ்வுகள் அனைத்தும் கலையின் பயன்பாட்டின் மூலம் பதிவு செய்யப்பட்டு பரவலாகப் பரப்பப்பட்டுள்ளன. இவ்வாறாக, பல்வேறு வடிவங்களிலான எதிர்ப்புக்கான சக்திவாய்ந்த கருவியொன்றாகக் கலையின் பலம் சிறப்பாக நிறுவப்பட்டுள்ளது.




*புகைப்படம் 14: இந்தியாவின் குடியுரிமைத் திருத்தச் சட்டம், பிரஜைகளின் தேசியப் பதிவேடு மற்றும் தேசியக் குடிமதிப்புப் பதிவேடு ஆகியவற்றிற்கெதிராக இந்தியாவின் புதுடெல்லி ஜமியா மில்லியா இஸ்லாமியா பல்கலைக்கழகத்தில் போராடும் பெண்கள். (கமகே, இந்தியாவின் புதுடெல்லியில் CCA இற்கெதிரான போராட்டக்காரர்கள் 2019)*

## இலங்கை மக்களின் போராட்டம் – அரசியலின் அழகியல் திருப்பமும் அழகியலின் அரசியலும்



*புகைப்படம் 15: தனது உடலில் வரையப்பட்ட“ஜனதா பரமாதிபத்ய” (மக்களின் இறைமை) என்னும் வாசகத்துடன் நடிகர் ஜெஹான் அப்புஹாமி. மக்கள் போராட்டத்தின் முதல் நாளில் எடுக்கப்பட்ட புகைப்படம். (கமகே, மக்களின் இறைமை 2022)*

இலங்கையின் அரசியல் வரலாறு முழுவதிலும், எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கும் வலுப்படுத்துவதற்குமான வழிமுறையொன்றாகக் கலை பயன்படுத்தப்பட்டுள்ளது. 1971 ஆம் ஆண்டின் இளைஞர் கிளர்ச்சியின்போதும் மற்றும் 1980களின் இரண்டாவது இளைஞர் கிளச்சியின்போதும் பல இலக்கிய மற்றும் இசை இடையீடுகள் காணப்பட்டன. உதாரணமாக, 1970 காலப்பகுதிகளில், ஒளிப்பதிவாளர் தர்மசேன பத்திராஜ தனது சிங்கள திரைப்படங்களான “பம்பரு அவித்” மற்றும் “அஹஸ் கவ்வ” அத்துடன் தமிழ்த் திரைப்படமான “பொன்மணி” ஆகியவற்றின் மூலம் இலங்கைச் சினிமாவை ஓர் அரசியல் பாதையை நோக்கித் திருப்பினார். இவை அனைத்தும் பிரதான சமூக மற்றும் அரசியல் பிரச்சினைகளை சினிமாவின் மூலம் வெளிப்படுத்தின. 1980களின் பிற்பகுதியில், நந்தா மாலனி போன்ற இசைக்கலைஞர்கள், 1980களின் இறுதியில் இடம்பெற்ற எழுச்சியின்போது இளைஞர்களை ஊக்குவித்த “பாவனா” பாடல் தொகுப்பின் மூலம் தமது பங்களிப்பை வழங்கினர். பிரேமசிறி கேமதாச மற்றும் குணதாச கபுகே ஆகியோரின் இசை, அரசியல் இசையுடன் வலுவான தொடர்புடையது என்பதுடன் இக்காலப்பகுதியில் சந்திரகுமார விக்ரமரத்னவும் தனது மாற்றுக் கவிதை மற்றும் இலக்கியத்திற்காகப் புகழ் பெற்றார்.

இலங்கையின் உள்நாட்டு யுத்தம், சிங்கள மற்றும் தமிழ்ச் சமூகங்களுக்கு இடையிலான அரசியல் மோதல்களை அடிப்படையாகக் கொண்டதுடன் வடக்கில் மையப்படுத்தப்பட்டிருந்தது. தமிழ், சிங்கள சமூகங்கள் ஆகிய இரண்டுமே கலை ஊடகத்தை நீதியின் வெளிப்பாடாகப் பயன்படுத்தி வந்துள்ளன. பாக்கியநாதன் அகிலன் மற்றும் சேரன் ருத்திரமூர்த்தி போன்ற தமிழ் எழுத்தாளர்கள், தங்கள் கவிதைகள் மற்றும் இலக்கியத்தின் மூலம் இலக்கியத்திற்கும் அரசியல் விவாதத்திற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளனர். ரத்ன ஸ்ரீ விஜேசிங்க, மஞ்சுள வெடிவர்த்தன மற்றும் பாஷண அபேவர்தன போன்ற சிங்கள எழுத்தாளர்களும் கடந்த சில தசாப்தங்களில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளனர். உள்நாட்டு யுத்தத்திற்குப் பிந்திய சகாப்தத்திலும் போராட்ட மற்றும் எதிர்ப்புக் கலை மற்றும் செயற்பாட்டியலில் இலங்கை குறிப்பிடத்தக்களவிலான எழுச்சியைக் கண்டுள்ளது. சந்திரகுப்த தேனுவர மற்றும் ஜகத் வீரசிங்க ஆகியோர் யுத்தம் மற்றும் வன்முறை அத்துடன் நாட்டின் தீர்க்கப்படாத பிரச்சினைகள் ஆகியவற்றைத் தமது கலைப்படைப்புகள் மூலம் எதிர்கொண்ட இரு கலைஞர்களாவர்.

மக்கள் போராட்ட இயக்கம் 2022 (அரகலய/ போராட்டம்), மக்கள் மீதான அதிகரித்த பொருளாதார அழுத்தங்களின் விளைவாக ஏற்பட்டதாகும். ஆரம்பத்தில், கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் காளான்களாக முளைத்த சிறிய தற்காலிக போராட்டங்கள் மற்றும் எதிர்ப்புகளால் அரகலய தோற்றம் பெற்றதாகக் கண்டறியப்பட்டது. மக்கள் போராட்ட இயக்கத்தின் (அரகலய) ஒரு குறிப்பிடத்தக்க அம்சம், அது பரவலாக்கப்பட்டிருந்தமையாகும். அது இயல்பாகவே பரவலாக்கப்பட்டிருந்தது. பல்வகையான ஆர்வக் குழுக்களும் பங்கீட்டாளர்களும் அரகலயவிற்கு கருத்தியல், நிதி மற்றும் அரசியல் ஆதரவை வழங்கியதன் மூலம் பங்களிப்பு வழங்கினர். 2022 ஏப்ரல் 9 ஆம் திகதிக்குப் பின்னர் ஓர் “ஆக்கிரமிப்பு” இயக்கமாக மாறி, காலிமுகத்திடலில் கோட்டாகோகம என இது உருப்பெற்றது. மக்கள் அங்கு சென்று பொருளாதாரக் குழப்பங்கள் மீதான தங்கள் விரக்தியையும் அத்துடன் இலங்கையின் வேரூன்றிய எதேச்சதிகார அரசியல் உள்ளிட்ட நீண்டகால சமூக, அரசியல் மற்றும் பொருளாதார பிரச்சினைகள் தொடர்பான தங்களின் குறைகளையும் வெளிப்படுத்துவதற்கான களமாக இது மாறியது. போரினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான பிரச்சினைகள், ஊடக சுதந்திரத்திற்கு எதிரான நடவடிக்கைகள், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி, விவசாயிகளின் வறுமை, சுற்றாடற் பிரச்சினைகள் மற்றும் LGBTQ உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் உள்ளிட்ட ஏனைய குறைகளைத் தெரிவிப்பதற்கான கதவுகளை அது திறந்தது. இந்தப் பிரச்சினைகள் அனைத்தும் இந்த மக்கள் போராட்ட இயக்கத்தின் முக்கிய கூறுகளாக மாறின.



*புகைப்படம் 16: யுத்தத்தின்போது காணாமலாக்கப்பட்ட தனது மகனின் புகைப்படத்தை ஏந்தியுள்ள ஒரு தந்தை. காலிமுகத்திடலில் போராட்டத்தின் 50 ஆவது நாளில் எடுக்கப்பட்டது. (கமகே, ஒரு தந்தையின் துயரம் 2022)*




*புகைப்படம் 17: மக்கள் எழுச்சியில் கலைஞர்கள் இயக்கத்தின் ஆர்ப்பாட்டப் பவனி, ஏப்ரல் 2022 (கமகே, ஜன அரகலயே கலாகருவோ 2022)*

இயக்கத்தின் ஆரம்பத்திலிருந்தே, "ஜன அரகலயே கலாகருவோ" (மக்கள் எழுச்சியில் கலைஞர்கள்) என்னும் முன்னெடுப்பின் மூலம், மக்களின் விரக்தியை வெளிப்படுத்துவதிலும், பல்வேறு விடயங்களுக்காக மக்களை அணிதிரட்டுவதிலும் கலைஞர்களின் குழுக்கள் முக்கியமான பங்கு வகித்தன.

இப்போராட்டத்தின் மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சம், பல்வேறு கலை வடிவங்கள் மூலமான எதிர்ப்பின் வெளிப்பாடாகும். மக்கள் போராட்ட இயக்கம் பன்முகத்தன்மையுடையது என்பதுடன், இலங்கை வாழ்வின் இந்தப் புதிய கட்டத்தின் சூழமைவில் கலை புதிய அர்த்தத்தையும் பெற்றுக் கொண்டது. எதிர்ப்புக் கலையானது இப்போது கலைக்கூடங்களின் கதவுகளுக்கு வெளியே உள்ள அனைவருக்கும் கிடைக்கக்கூடியதாக இருந்ததுடன் வீதிகளிலிருந்த அனைவராலும் அணுகக்கூடியதாகவும் இருந்தது. குறைகளைப் பல வழிகளில் வெளிப்படுத்துவதற்காகக் கலை தற்போது மக்களால் பயன்படுத்தப்படுகின்றது. ஆரம்பத்தில் பதாகைகளை உருவாக்குதல், வாசகங்கள் எழுதுதல் போன்ற செயல்களுடன் இது தொடங்கியது. கலைநயம்சார் வெளிப்பாடும் எதிர்ப்பிற்கான மொழியும் வெவ்வேறு குறைகளை வெளிப்படுத்துவதற்கு மட்டுமன்றி அரசியல் கோரிக்கைகளை முன்வைக்கவும் பயன்படுத்தப்பட்டது. குறிப்பாக அப்போதிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகவேண்டும் எனக் கோரப்பட்டது. மக்களை அணிதிரட்டுவதிலும், போராட்ட இயக்கத்தை உற்சாகப்படுத்துவதிலும் சமூக ஊடகங்களும் தொழில்நுட்பமும் முக்கியமான பங்கு வகித்தன. புதிய ஊடகங்களும், தொழில்நுட்பமும் இக்கலைக்கான அணுகலைப் பொதுமக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கு உதவின. உண்மையில், புதிய ஊடகங்கள் இந்தக் கலையை நாட்டின் அனைத்து மூலைகளுக்கும், சமூகத்தின் பல பிரிவுகளுக்கும் பரப்பின.

அதீத விழிப்புநிலை, மதவெறி, தீவிரமான துருவநிலை மற்றும் நிச்சயமற்ற தன்மை ஆகியவற்றால் வகைப்படுத்தப்பட்ட காலங்களுக்கு மத்தியிலும், இலங்கைக் கலைஞர்கள் தங்கள் இயல்திறனுக்கு மேற்சென்று அழகான, உருக்கமான அரசியல் கலைப்படைப்புகளை உருவாக்கியுள்ளனர். காலிமுகத்திடலில் ஆக்கிரமிப்பு இயக்கம் மற்றும் கோட்டாகோகமவின் உருவாக்கம் ஆகியவற்றுடன், இந்த எதிர்ப்புக் கலையின் போக்கு வேரூன்றியது. மேலும், கோட்டா கோகம கண்டி, கோட்டாகோகம வென்னப்புவ, கோட்டாகோகம காலி மற்றும் கோட்டாகோகம குருநாகல் போன்ற இன்னும் பல மையங்களை உருவாக்கி, தலைநகர் கொழும்பிற்கு வெளியே ஆக்கிரமிப்பு இடங்களை அமைப்பதன் மூலம், மக்கள் "ஆக்கிரமிப்பு இயக்கத்தை" பரவலாக்கத் தொடங்கினர். இலங்கையின் மிக நீண்ட போராட்டமான, "காணாமலாக்கப்பட்ட தமிழர்களின் தாய்மார்களின்" போராட்டம் மற்றும் மட்டக்களப்பில்

ஆரம்பிக்கப்பட்ட "நீதி நடைபவனி" ஆகியவை இந்த எதிர்ப்பு இயக்கத்திற்குச் சுற்றயலில் இருந்து ஆதரவளித்தன. அரசாங்கத்திற்கு எதிரான மக்கள் போராட்ட இயக்கமாக இருப்பினும் அல்லது ஏனைய பகிரங்க எதிர்ப்பு நடவடிக்கைகளாக இருப்பினும், கூட்டான வலியைப் பிரதிபலிக்கும் மற்றும் மீளுருவாக்கம் செய்யும் கலை, சுவரோவியங்கள், கவிதை, இசை, ஆக்கபூர்வமான கோஷங்கள், நாடகம், அரசியல் வெளிப்பாடு மற்றும் கல்விக்கான வெளியொன்றையும் வழங்கியது. பதாகைகளில் உள்ள வாசகங்கள் வெவ்வேறு வெளிப்பாடுகளைக் கொண்டுள்ளன. அவை வெவ்வேறு குறியீடுகளைப் பயன்படுத்துவதுடன் மக்களின் இறுதி இலக்கான - #கோட்டா கோ ஹோம் என ஜனாதிபதி பதவிவிலகுவதை உறுதிப்படுத்துதலை - வலியுறுத்தி வெவ்வேறு கோரிக்கைகளை முன்வைக்கின்றன.




*புகைப்படம் 18: நீதிக்கான நடைபவனி 2022, மட்டக்களப்பு (கமகே, நீதிக்கான நடைபவனி 2022)*

திரைப்படம் மற்றும் ஏனைய கட்புலக் காட்சிகள் இன்றிப் போராட்டங்கள் முழுமையடையாது.

2022 ஆம் ஆண்டில் இலங்கையில் இடம்பெற்ற மக்கள் போராட்டம் (அரகலய), இலங்கையின் கலை மற்றும் கலாசாரத்தின் ஒரு காட்சிக் கருவியாகக் காணப்பட்டதுடன் மிகவும் அவசியமாகக் காணப்பட்ட காலிமுகத்திடலில் கலை மற்றும் ஓவியங்களின் முக்கியமான வெளிப்பாடுகள் காணப்பட்டன. சுஜித் ரத்நாயக்க போன்ற கலைஞர்கள் "காலிமுகத்திடலை ஆக்கிரமிப்போம்" இயக்கத்தில் தீவிரமாக செயற்பட்டனர். சுஜித் ஆரம்பத்திலிருந்தே தனது வெளிப்பாடு மிக்க, கலைசார் பங்களிப்பை பல்வேறு வழிகளில் - வாசகங்கள், பதாகைகளிலுள்ள




*புகைப்படம் 19: மக்கள் எதிர்கொள்ளும் பொருளாதார அழுத்தத்தை எடுத்துக்காட்டுவதற்கு கலைஞர்கள் ஒரு தெரு நாடகத்தை நடத்துகின்றனர். (கமகே, தி ஹங்ரி கோஸ்ட் 2022)*

எழுத்துக்கள், உடல் ஓவியங்கள், சிற்பங்கள் மற்றும் தெருக்கள், சுவர்கள் மற்றும் பிற மேற்பரப்புகளில் வரைந்த சித்திரங்கள் ஆகியவற்றின் பயன்பாடு - வழங்கியதன் மூலம் அரகலயவில் ஈடுபட்டார். இலங்கையின் நெருக்கடி குறித்த தனது உணர்வை தனது கலையின் மூலம் வெளிப்படுத்திய அவர், எதிர்ப்பை வெளிப்படுத்தும் அந்த வழியை ஏனையோருக்கும் கற்பிக்க முயன்றார். மக்கள் போராட்டம் ஓர் ஆக்கிரமிப்பு இயக்கமாக நிறுவப்பட்டபோது, அனைவரும் நெருக்கடி மற்றும் அரசியலைப் பற்றிக் கலந்துரையாடி, தங்கள் கவலைகளை வெளிப்படுத்துவதற்கும், அரசியலைப் பற்றியும் நெருக்கடிக்கான காரணங்களைப் பற்றியும் கலைகள் மூலம் மேலும் அறிந்து கொள்வதற்குமென அவர் ஆக்கிரமித்திருந்த இடத்தை ஒரு திறந்த கலைக்கூடமாக மாற்றியமைத்தார். மக்கள் போராட்டங்கள் மற்றும் நெருக்கடி குறித்த தனது உணர்வை வெளிப்படுத்துவதற்காக அரகலய என்பது மிக முக்கியமான மற்றும் வரையறுக்கும் நிகழ்வுகளில் ஒன்று என்பதுடன், திரும்பிப் பார்க்கையில் வரலாறும் அதை அப்படியே தீர்மானிக்கும். எதிர்காலச் சந்ததியினருக்காகப் பேணப்பட வேண்டிய ஒரு நினைவு இது. (த சில்வா மற்றும் ஒன்டாட்ஜே 2022). சுஜித் ரத்நாயக்க கூறியது போன்று "எவ்வித ஒழுங்கு விதிகளும் மட்டுப்பாடுகளுமின்றி மக்கள் போராட்டத்திற்குப் பங்களிக்கவும் அதில் ஈடுபடவும் நான் விரும்பினேன். கலை பல்வேறு வழிகளில் அரகலயவிற்குக் குறிப்பிடத்தக்க மற்றும் மகத்தான பங்களிப்பை வழங்கியுள்ளது. நிலைமைக்கும் காலத்திற்கும் ஏற்ப மாறுபடுகின்ற மற்றும் பொருளாதார, அரசியல் நெருக்கடியுடன் தொடர்புடைய எனது கலை ஊடகத்தையும் நான் வெளிப்படுத்த விரும்பினேன். எனது கலையைக் கலைக் கூடங்களுக்கு அப்பால் கொண்டு செல்லவும், அனைவருக்கும் கதவுகளைத் திறக்கவும் நான் விரும்பினேன். கலைக்கூடத்தை




*புகைப்படம் 20: கலைஞரான சுஜித் ரத்நாயக்கவினால் ஆரம்பிக்கப்பட்ட கோட்டா கோ கம கலாகாரய. ஒரு இளம் கலைஞர் தனது கலையைப் பயிற்சி செய்கிறார் (கமகே, கோட்டாகோகம கலாகாரய 2022)*

போராட்டத்தின் தொடக்கத்தில் இருந்தே ஒரு கலைப்படைப்பை மேற்கொள்ளத் தொடங்கினார். 2022 மே 9 ஆம் திகதி, ராஜபக்ஷவின் அரசியல் ஆதரவாளர்கள், சாதாரணமாகக் கூறுவதாயின் குண்டர்கள், காலிமுகத்திடலில் ஆக்கிரமிக்கப்பட்ட இடத்தைத் தாக்கியபோது சுஜித்தின் கலைக்கூடம் எரிக்கப்பட்டது. இது கவலைக்குரியதாக இருந்தபோதும், கலைஞர் சுஜித் ரத்நாயக்க முந்தைய நாள் எரிக்கப்பட்ட தனது படைப்புகளின் சாம்பலில் இருந்து கலையை உருவாக்குவதைப் பார்த்தமை உத்வேகத்தை அளித்தது. தனது ஆக்கத்திறனின் மூலம் அவர் முறைமைக்குத் தொடர்ந்தும் சவால் விடுத்தார்.

அடிப்படையாகக் கொண்ட கலை அல்லது கலைக் கூடங்களில் காண்பிக்கப்படும் எதிர்ப்புக் கலைகளும் கூட ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினருக்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. நான் அந்த மட்டுப்பாட்டைத் தாண்டிச் செல்ல விரும்பினேன். அரகலய கலைக்கூடத்தின் ஊடாக, சிறுவர்களுக்கும் ஏனையோருக்கும் கலையைப் பற்றிக் கற்பிக்கவும், நமது வரலாற்றில் முக்கியமான இந்த அரசியல் தருணத்தின் வெளிப்பாடுகளையும் நினைவுகளையும் பதிவு செய்யவும் முயற்சித்தேன். எனது ஆரம்பகாலப் கலைப் படைப்புகள் கூட மக்களுக்கானவை, ஆனால் இந்த அரசியல் தருணம் முக்கியமானது என்பதுடன் இது விடயங்களை மக்களின் பாதையை நோக்கி மேலும் திருப்பக்கூடும் எனவும் நான் எண்ணினேன்" (ரத்நாயக்க 2022).




*புகைப்படம் 21: காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டப் பவனியின்போது “பேக்கரியே கட்டிய” இசைக்குழு (கமகே, பேக்கரியே கட்டிய 2022)*

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 9 ஆம் திகதி தொடக்கம் பிரபல கலைஞர்களான ஜெஹான் அப்புஹாமி, அஜித் குமாரசிறி மற்றும் விராஜ் லியனாரச்சி ஆகியோரை உள்ளடக்கி “பேக்கரியே கட்டிய” [2] என்னும் இசை மற்றும் நாடகக் குழு, பாடல்களாலும் இசையாலும் நாடகங்களாலும் எதிர்ப்பை ஆக்கப்பூர்வமாக விரிவுபடுத்திப் போராட்ட இயக்கத்திற்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியது. மேலும், “மக்கள் இறைமை” போன்ற வாசகங்களைப் பிரபலப்படுத்துவதற்கு முகச் சித்திரங்கள் உள்ளிட்ட உடற் சித்திரக் கலைகளை அவர்கள் பயன்படுத்தினர். காலிமுகத்திடல் கோட்டாகோகமவில் மட்டுமன்றி கண்டி, குருநாகல் அனுராதபுரம் மற்றும் பல அமைவிடங்களிலும் ‘பேக்கரியே கட்டிய’ குழு பங்குபற்றித் தனது பங்களிப்பை வழங்கியது. அத்துடன், LGBTQ உரிமைப் போராட்டம், சிறையில் அடைக்கப்பட்டுள்ள போராட்டக்காரர்களுக்குப் பிணை கோரும் போராட்டங்கள் உள்ளிட்ட மக்கள் போராட்டம் தொடர்பான பல சிறு போராட்டங்களிலும் அவர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றன. அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தைச் சேர்ந்த போராட்டக்காரர்களும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் நீதி கோரிய போராட்டக்காரர்களும் இதனைப் பயன்படுத்தினர். உதாரணமாக, 2022 ஏப்ரலில், இலங்கை நடிகர் ஜெஹான் அப்புஹாமி, 2019 உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி, இயல்புருவ அளவிலான சிலுவையைத் தனது தோளில் சுமந்தபடி கட்டுவாப்பிட்டிய தேவாலயத்தில் இருந்து காலிமுகத்திடலில் உள்ள ஜனாதிபதி அலுவலகம் வரையான அவரின் மூன்று நாள் நடைப் பயணத்தைப் பூர்த்தி செய்தார். நடிகர் கலன குணசேகர, தற்போதைய நிலைமையினைப் பிரதிபலிக்கும் வகையிலும் அரசாங்கத்தினாலும் அதன் தலைவர்களினாலும் மக்கள் மீது திணிக்கப்படும் அடக்குமுறைகளைப் பிரதிபலிக்கும் வகையிலும் காலி முகத்திடலின் கோட்டா கோ கமவில் ஆற்றுகையொன்றை நிகழ்த்தினார். அப்புஹாமி கூறியதைப் போன்று, “கடந்த தசாப்தத்தில், முக்கியமாக நாடகம்,

[2] பேக்கரியே கட்டிய என்பது மாற்று இசை, மாற்று அரங்கியல் மற்றும் கட்புலக் கலைகளை அரங்கேற்றி, முன்னெடுப்புகளை மேற்கொள்ளும் கலைஞர்களின் ஒரு கூட்டாகும். பேக்கரியே ஸ்பேஸ் கலைக்கூடமானது (Bakeriya Space Art Centre) இலங்கையில் 42/2, மஹல்வரவ வீதி, பன்னிப்பிட்டியவில் பேக்கரியொன்றிற்கு அருகில் அமைந்துள்ளது. (பேக்கரியே கட்டிய 2022)

நடிப்பு, அரங்கியல் மற்றும் சினிமா ஆகியவற்றின் ஊடாக, எதிர்ப்புக் கலையுடன், எனது ஆற்றலுக்கு அமைவாகப் பல்வேறு காரணிகளுக்குப் பங்களிப்பு வழங்க நான் முயற்சித்தேன். பொருளாதாரக் காரணங்களுக்காக மட்டுமன்றி, அரசாங்கத்தினதும் தலைவர்களினதும் அடக்குமுறை தொடர்பான ஏனைய பல காரணங்களுக்காகவும் நெருக்கடியின் இத்தருணம் முக்கியமானது என நான் எண்ணினேன். சக்திவாய்ந்த ஓர் அரசியல் இடையீட்டினை மேற்கொள்வதற்கான மகத்தான ஆற்றல் கலைக்கு இருப்பதாக நான் நம்புகிறேன். எனது நடிப்புத்திறனின் மூலமும் இசையின் மூலமும் மக்களின் குறைகளை

வேறு பலர், பல்வேறு போராட்ட முன்னெடுப்புகளுக்கு இணையாகத் தங்களது கலையை அரங்கேற்றினர். உயிர்த்த ஞாயிறு நீதிப் போராட்டம், 1983 ஆம் ஆண்டில் தமிழர்களுக்கு எதிரான கறுப்பு ஜூலை கலவரத்தின் போது இறந்த அனைத்து மக்களையும் நினைவுகூருதல் மற்றும் யுத்தத்தின் போது கொல்லப்பட்ட தங்கள் அன்புக்குரியவர்களை நினைவுகூறுவதற்கான அவர்களின் தொடர்ச்சியான முயற்சிகள் ஆகியவை இந்த போராட்ட முன்னெடுப்புகளில் உள்ளடக்கப்பட்டன. போராட்ட இயக்கம் முன் நகர்ந்த போது, பல தனிப்பட்ட கலைஞர்கள், தங்கள் ஓவியங்களைப் பகிர்ந்தும்



*புகைப்படம் 22: 2019 உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி, இயல்புருவ அளவிலான சிலுவையைத் தன் தோளில் சுமந்தவாறு ஜனாதிபதி அலுவலகத்தை நோக்கிய தனது மூன்று நாள் நடைப் பயணத்தை நிறைவு செய்யும் இலங்கை நடிகர் ஜெஹான் அப்புஹாமி (கமகே, நீதி 2022).*

நான் வெளிப்படுத்த விரும்பினேன். மக்களின் போராட்டத்தின் உணர்ச்சியை உருவாக்கி அதனை உயிர்ப்புடன் வைத்திருக்கவும் விரும்பினேன். எனவே, பாரிய கூட்டொன்றின் ஒரு பகுதியாக, எங்கள் கலையின் மூலம் எங்களால் முடிந்த அனைத்தையும் செய்வதற்கு நாம் முயற்சித்தோம். அரசியலில் நாம் ஆக்கபூர்வமாக இருக்க வேண்டும், எதிர்ப்பு என்பது மிகவும் ஆக்கபூர்வமானதாக இருக்க வேண்டும்" (அப்புஹாமி 2022).

ஓகா திரட்டு (The Ohga collective), பத்மினி கமகே நாடகக் குழு, ஜனனி குரே, பிரபுத்த திக்வத்த மற்றும் பல்வேறு போராட்டக் களங்களில் பல்வேறு காரணங்களை ஆதரித்துக் கலை நிகழ்ச்சிகளை அரங்கேற்றியும் இதில் இணைந்து கொண்டனர். அஜித் குமாரசிறி, நாமனி பாஞ்சாலி, தினுபா கோதாகொட, நதீக வலிகொடபொல மற்றும் இந்திகா உபமாலி போன்ற இசைக் கலைஞர்கள் இசை மற்றும் எதிர்ப்புப் பாடல்களுடன் போராட்ட இயக்கத்திற்குப் பங்களிப்பு வழங்கினர். பாடகர் தினுபா கோதாகொட குறிப்பிட்டவாறு, "எதிர்ப்பின் தொனியை அமைக்கும் சக்தி இசைக்கு உண்டு. இது போன்ற போராட்ட இயக்கங்களை மிகவும் உயிர்ப்புடன் வைத்திருக்க இசையால் முடியும், மேலும் மக்களின் போராட்ட

நடவடிக்கைகளின்போது அஹிம்சை உணர்வையும் இசையால் ஏற்படுத்த முடியும்" (கோதாகொட 2022).

ஜகத் மனுவர்ண, "அரகலயவின்போது அமைதியான வெகுஜன ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்கு அரச படைகள் வழக்கமாகப் பயன்படுத்தியவற்றில்



*புகைப்படம் 23: ராஜபக்ஷ ஆட்சியில் அனுபவித்த அடக்குமுறைகளை, அரகலய போராட்டக் களத்தில் சித்தரிக்கும் ஓர் இளம் கலைஞர் (கமகே, சால்வையின் அடக்குமுறை 2022)*

கண்ணீர்ப்புகையும் ஒன்றாகும். கண்ணீர்ப்புகைக் கொள்கலன்கள் வெடித்தவுடன், அது ஒரு நபரின் கண்களையே நேரடியாகப் பாதிக்கும். சினிமாவை ரசிப்பது கண்களே, எனவே, அதற்குக் "கண்ணீர்ப்புகைச் சினிமா" எனப் பெயரிட்டமையானது ஒரு எதிர்ப்புச் செயல்" எனக் கூறினார் (மனுவர்ண 2022). அரசியலையும் எதிர்ப்பையும் புரிந்துகொள்வதற்கு ஆக்கபூர்வமான பொறிமுறைகளை உள்ளடக்குவதன் முக்கியத்துவத்தை மனுவர்ண மேலும் வலியுறுத்தினார். "ஆளும் வர்க்கத்தின் இடையீட்டுக் கரங்கள் மூலம் ஜனரஞ்சகக் கலாசாரத்தின் ஊடாகக் கட்டமைக்கப்படும் பிரதான சித்தாந்தமொன்று எப்போதும் காணப்படும். இந்த விடயத்தில், அதிகார மையத்தால் நிறுவப்பட்ட சித்தாந்தக் கட்டமைப்பை எதிர்ப்பதற்கு மாற்றுக் கலைகள் பிரதானமானவை. மக்கள் போராட்டமானது மாற்றுக் கலைகளை விரிவுபடுத்துவதற்கான வெளியாகவும் எதிர் விவரணங்களுக்கான வெளியாகவும் அத்துடன் அந்தச் செய்திகளை ஒரு பெரிய கூட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்கான வழிமுறையாகவும் மாறியதை நான் கண்டேன்." (Ibid)

அரகலய பற்றிய பாடல்கள் மற்றும் இசை வீடியோக்களை உருவாக்குவது ஒரு போக்காக மாறியது. உதாரணமாக, இந்திக உபமாலியின் "பள் ஹொருனி" (அரசியல் திருடர்கள்) பாடல், இலங்கையின் ஊழல் அரசியல்வாதிகளைப் பற்றி மஞ்சுள வெடிவர்த்தன எழுதிய கவிதை ஒன்றை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டது (உபமாலி 2022).

சினிமாவும், திரைப்படங்களும் மக்கள் போராட்ட இயக்கக் காலப்பகுதியில் பல்வேறு வழிகளில் பயன்படுத்தப்பட்ட மற்றொரு சக்திவாய்ந்த கலை ஊடகமாகும். "ஜன அரகலயே கலாகருவோ" (மக்கள் எழுச்சியில் கலைஞர்கள்) ஊடாக துலிக மாரப்பன, சுஜீவ பிரியலால், நாமல் ஜயசிங்க, ஜகத் மனுவர்ண கொடித்துவக்கு, சமனலி பொன்சேகா, பீட்டர் டி அல்மேடா உள்ளிட்ட பல கலைஞர்களும் வேறு பல கலைஞர்களும் கோட்டாகோகமவில் சினிமாத் திரையரங்கு ஒன்றை அமைப்பதற்கான முன்னெடுப்பை மேற்கொண்டு அதற்கு "கண்ணீர்ப்புகைச் சினிமா" எனப் பெயரிட்டனர். திரைப்பட இயக்குநரும் நடிகருமான



*புகைப்படம் 24: பாராளுமன்ற வீதியை ஆக்கிரமித்த பின்னர் இடம்பெற்ற நேரலை இசை நிகழ்ச்சியொன்றின்போது இசைக்கலைஞர் அஜித் குமாரசிறி "ரேபிஸ் இன் பார்ளிமெண்ட் (பாராளுமன்றத்தில் வெறிநோய்)" என்னும் பாடலைப் பாடுகின்றார். போராட்டக்காரர்கள் பாராளுமன்ற நுழைவாயிலை ஆக்கிரமித்து அதற்கு "ஹொருகோகம" எனப் பெயரிட்டனர் (கமகே, ரேபிஸ் இன் பார்ளிமெண்ட் 2022)*

சமூக, அரசியல் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் தொடர்பான திரைப்படங்களை இயக்கிய இளம் திரைப்பட இயக்குநர்கள் தங்களின் படைப்புகளைத் திரையிடுவதற்கான ஒரு தளத்தைக் கலைஞர்களின் கூட்டு உருவாக்கியது. ஒவ்வொரு நாளும் உலகளவிலான சமூக, அரசியல் இயக்கங்கள் தொடர்பான திரைப்படமொன்று திரையிடப்பட்டது. இது காலிமுகத்திடல் சுயாதீன திரைப்பட விழாவில் மக்கள் மத்தியில் உள்நாட்டுப் போராட்ட இயக்கத்தின் ஆக்கத்திறனை விரிவுபடுத்த உதவியது.




*புகைப்படம் 25: ஆரம்ப நாள் - கோட்டாகோகம கண்ணீர்ப் புகைச் சினிமாத் திரையரங்கில் திரைப்படக் காட்சி . (கமகே, கண்ணீர்ப்புகை சினிமா 2022).*

"எமது ஆற்றல் மூலம் நாம் போராட்டத்தினை வசதிப்படுத்த விரும்பினோம். திரையரங்குகளில் குறைவான மக்களே திரைப்படம் பார்க்கின்றனர். பல்வேறு காரணங்களுக்காகக் கோட்டா கோகமவின் இயல்பான அரசியல் வெளியிலுள்ள அனைவருக்குமெனக் "கண்ணீர்ப்புகைச் சினிமாத் திரையரங்கைத்" திறந்து வைக்க விரும்பினோம். இந்த இயக்கம் ஒரு செயன்முறையாகும், மக்களின் என்பதுடன் எமது நாட்டின் அரசியல் மற்றும் சமூகக் குறைபாடுகளைப் பற்றி கலந்துரையாடும் உத்தேசம் கொண்டவையுமாகும். நாம் அனைவரும் அறிந்தவாறாக, இலங்கையில் எதிர்ப்புக் கலைகளின் வடிவங்கள் சனக்கூட்டத்தின் ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. இதனை ஒரு பெரிய வட்டத்திற்குக், குறிப்பாக நாடகம் மற்றும் அரங்கியலில் ஆர்வம் கொண்டோருக்கும்



*புகைப்படம் 26: அசங்க சயக்கார இயக்கிய "சங்கதாசகே சூட்டி களிசம" என்னும் அரசியல் நையாண்டி நாடகம், கோட்டா கோ கம திறந்தவெளி அரங்கில் அரங்கேற்றப்பட்டது (கமகே, சங்கதாசகே சூட்டி களிசம 2022).*


உரிமையை வென்றெடுப்பதற்குக் கலையினால் மகத்தான பங்களிப்பை வழங்க முடியுமென்பதுடன் அரசியல் ரீதியாகவும் இடையீட்டை அளிக்க முடியும்" எனக் கண்ணீர்ப்புகைச் சினிமாவை அமைப்பதில் முன்னோடியாகவிருந்த திரைப்பட இயக்குநரும் கலைஞருமான நயோமி அப்சரா கூறினார் (அப்சரா 2022).

மக்கள் போராட்டத்தின்போது, சமூக மற்றும் அரசியல் துயரங்களை வெளிப்படுத்துவதற்கான ஒரு கூட்டு முறைமையாக நாடகம் மாறியது. நாடக அரங்கியல் இயக்குநர்களான அசங்க சயக்கார, நாமல் ஜயசிங்க மற்றும் அதுல பத்திரண ஆகியோர் "அரகலயே ரங்கமண்டலவை" (மக்கள் போராட்டத்தின் திறந்தவெளி அரங்கம்) தாபித்தனர். சயக்கார கூறியவாறு, "முதலில் ஏப்ரல் 9 ஆம் திகதி நாங்கள் போராட்டத்திற்கு வந்தோம். அண்மைக் காலமாக நாம் அனுபவிப்பதை வெளிப்படுத்தி, நாடகத்தின் மூலம் இந்த எதிர்ப்புக்கு நாம் எவ்வாறு பங்களிப்பு வழங்கலாம் எனச் சிந்தித்தோம். இங்கு அரங்கேற்றப்பட்ட "மெயா துவக்குவக் நோவே", *"சங்கதாசகே சூட்டி களிசம"*, மற்றும் "சங்க வத குரு கொவி கம்கரு" உள்ளிட்ட பெரும்பாலான நாடகங்கள் அரசியல் ரீதியானவை அப்பால், எடுத்துச் செல்வதற்கு இந்த அரசியல் தருணத்தை நாங்கள் பயன்படுத்த விரும்பினோம்" (சயக்கார 2022).



*புகைப்படம் 27: தாயும் சேயும் (பெரேரா, தாயும் சேயும் 2022) புகைப்படம், அரகலயவைச் சித்தரிக்கும் புகழ்பெற்ற அடையாளமாக மாறியதுடன் பின்னர் பதாகைகள், சுவரொட்டிகள், உடற் சித்திரம் ஆகியவற்றிற்காக மீளுருவாக்கம் செய்யப்பட்டும் சமூக ஊடகங்களிலும் பயன்படுத்தப்பட்டது.*

மிரிஹான போராட்டத்தில் கலந்து கொண்ட ஒருவரான சனுக நதுன் பெரெராவினால் எடுக்கப்பட்ட "தாயும் சேயும்" என்னும் புகைப்படம் இலங்கையின் மக்கள் போராட்ட இயக்கத்தின் அடையாள பிம்பமாக மாறியது. சனுக பின்வருமாறு கூறுகின்றார், "நான் மிரிஹான பங்கிரிவத்தைக்கு அருகில் வசிக்கின்றேன். பொருளாதார அழுத்தங்கள் காரணமாகப் பல்வேறு கோரிக்கைகளை முன்வைப்பதற்கும் தமது குறைகளை வெளிப்படுத்துவதற்கும் எனது அயலவர்கள் அப்போதிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தனிப்பட்ட இல்லத்தைச் சுற்றி ஒன்றுதிரண்டனர். போராட்டத்தின்போது, தனது குழந்தையைச் சுமந்திருந்த தாயொருவரும் வாசகங்களைக் கொண்ட பதாகைகளுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதை நான் கண்டேன். பின்னர் நான் அங்கு சென்று அவர்களை எனது கையடக்கத் தொலைபேசியில் புகைப்படம் எடுத்து அதனை எனது ட்விட்டர் மற்றும் பேஸ்புக் கணக்குகள் மூலம் ஒரு நிறப்பட வடிவுருவில் பகிர்ந்தேன். அது ஓர் அடையாள பிம்பமாக மாறும் என்று நான் நினைக்கவில்லை. ஆனால் மறுநாள் காலை மிரிஹான போராட்டத்தை அரச படைகள் ஒடுக்கிய பின்னர், இலங்கை மக்களின் இப்போராட்டத்தின் அடையாளமாக அந்த உருவம் எங்கும் பரப்பப்பட்டு மீளுருவாக்கம் செய்யப்படும் விதம் குறித்து நான் ஆச்சரியமடைந்தேன்" (பெரெரா, அரகலய 2022 இன் புகழ்பெற்ற தாய் சேய் புகைப்படம்). "படங்களால் மனித வரலாற்றில் பெரும் வகிபாத்திரத்தினை வகிக்க முடியும். அடுத்த கணத்தைப் புரிந்துகொள்வதற்கும் பதிற்செயற்பாடாற்றுவதற்கும் குறிப்பாக அரசியல் சூழமைவில், கட்புலப் புலனுணர்வு முக்கியமானது. இலங்கையில் மக்கள் போராட்டம் அரசியல்



*புகைப்படம் 28: புகழ்பெற்ற "தாயும் சேயும்" புகைப்படத்துடன் கூடிய ஒரு கொடியை ஏந்திய போராட்டக்காரர். மக்கள் போராட்டத்தின் 50 ஆவது நாளில் எடுக்கப்பட்ட புகைப்படம். (கமகே, தாயும் சேயும் கொடி 2022)*

பிம்பங்களைப் புகுத்துவதற்கான பாரிய வெளியாக மாறியதுடன் மக்களின் அணிதிரட்டலில் தாக்கத்தை ஏற்படுத்தும் உடனடி பதிற்செயற்பாட்டையும் உருவாக்கின", என அரசியல் பொருளாதார நிபுணரும் சமூக ஆவணப் புகைப்படக்கலையில் ஈடுபடுபவருமான

கல்ப ராஜபக்ஷ கூறினார் (ராஜபக்ஷவின் 2022). மக்கள் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே அதனைப் புகைப்படம் எடுத்த ஒரு மூத்த புகைப்பட ஊடகவியலாளரான அஜித் செனவிரத்ன, "நாம் ஒரு கட்புல யுகத்தில் வாழ்கின்றோம். தொழில்நுட்ப வளர்ச்சியால், கட்புலன் மக்களின் நாளாந்த வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாறிவிட்டது. படங்களால் சமூகத்தின் பல்வேறு அடுக்குகளை விளக்க முடியும். கட்புல அரசியலின் இயங்கியல், பாரம்பரிய ஊடகங்களைத் தாண்டி அவற்றிற்கப்பால் செல்கின்றது. உதாரணமாக, பேஸ்புக் மற்றும் ட்விட்டர் முதல் இன்ஸ்டாகிராம் வரை டிஜிட்டல் யுகத்தில் காணப்படும் புதிய ஊடகங்களின் பல்வேறு வடிவங்கள், இலங்கையின் அரசியல் உருவெளி மற்றும் மக்கள் போராட்டம் முழுவதுமாக அதிகரித்து வந்த பிரதான வகிபங்கினைக் கொண்டிருந்தன எனக் குறிப்பிட்டார் (செனவிரத்ன 2022).

புகைப்பட ஊடகவியலாளர் ஷெஹான குணசேகர ஒரு தசாப்தத்திற்கும் மேலாக விமர்சன ரீதியான சமூக ஆவணப் புகைப்படக்கலையில் ஈடுபட்டுள்ளதுடன் அவரது பணி யுத்தம் மற்றும் யுத்தத்திற்குப் பிந்தைய அதி-தேசியவாதம் உள்ளிட்ட பல அரசியல் நிகழ்வுகளுடனும் தொடர்புடையது. பல்வேறு நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் தொடர்பான சமூக-அரசியல் கவனம்பெறும் நிகழ்வுகளைப் புகைப்படம் எடுக்கவும், இந்த சமூக-அரசியல் நிகழ்வுகளை கேள்விக்குள்ளாக்குவதற்கும் அவர் உறுதி பூண்டிருந்தார். கட்புலக் காட்சியின் விளைவானது பெரும்போக்கு மற்றும் பிரபல்ய விவரணங்களுக்கு அப்பாற்பட்டது என அவர் கருதினார். "மக்கள் போராட்டம் எனக்கும் வேறு பலருக்கும் அந்த வெளியை விரிவுபடுத்தியது (குணசேகர 2022). எனது எதிர்ப்பை வெளிப்படுத்தவும், கோட்டா கோகம மக்கள் போராட்டம் மற்றும் போராட்ட இயக்கத்துடனான ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தவும் நான் விரும்பினேன்". ஓர் இளம் புகைப்பட ஊடகவியலாளரான திலின களுதொட்டகே, "கடந்த மார்ச் மாதம் முதல், நான் அரகலய தொடர்பான பல சம்பவங்களை படம் பிடிப்பதில் பரிசோதனைகளை மேற்கொண்டும் பயிற்சி செய்தும் வருகின்றேன். எதிர்ப்பை வெளிக்காட்டுவதற்குப் புகைப்படம் மிகவும் பயனுறுதி மிக்க வழியாகும் என நான் எண்ணுகின்றேன்" எனக் குறிப்பிட்டார் (களுதொட்டகே 2022).




புகைப்படம் 29: கொழும்பு நீதவான் நீதிமன்ற நுழைவாயிலில் மேற்கொள்ளப்பட்ட ஓர் எதிர்ப்பு ஆற்றுகை. சட்டவிரோதக் கைதுகளுக்கு எதிராகவும், ராஜபக்ஷக்களால் கோட்டாகோகம மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கு நீதி கோரியும் போராட்டங்கள் (கமகே, சட்டத்தின் ஆட்சி 2022).

## முடிவுரை




*புகைப்படம் 30: ஜனாதிபதி மாளிகையை ஆக்கிரமிக்கும் போராட்டத்திற்காக கொழும்பு சத்தாம் வீதியில் ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் ஒன்றுகூடினர். 2022 ஜூலை 9 ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய பதவி கவிழ்க்கப்படுவதற்கு முன்னர் எடுக்கப்பட்டது. (கமகே, 9 ஜூலை 2022).*

ஓர் ஊடகமாக, சமூகத்தில் பரந்த சொல்லாடல்களையும் விவாதங்களையும் உருவாக்கும் ஆற்றல் கலைக்கு உள்ளது. வாழ்க்கையில் எதுவும் அரசியல் சார்பற்றது அல்ல, ஒவ்வொரு கலை வடிவத்திற்கும் கூட அரசியலில் நேரடியான அல்லது மறைமுகமான ஓர் அர்த்தம் உள்ளது. ஆளும் வர்க்கம் தனது அதிகாரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் நவீன அரசில் ஆதிக்கம் செலுத்துகின்றது.

கலையும் கலைநய வெளிப்பாடும் அதிகாரத்தைக் கையில் வைத்திருப்போர் தொடர்பாக இரண்டு திசைகளில் பயணிக்கின்றன. ஒரு திசை, ஜனரஞ்சகக் கலாசாரத்தின் மேலாதிக்கச் சித்தாந்தத்தை நிலைநிறுத்தும் பெரும்போக்கு ஜனரஞ்சக விவரணத்தை நோக்கியும், மற்றொன்று பிரதான விவரணத்தைக் கேள்விக்குள்ளாக்குவதும் அதற்கான எதிர் விவரணத்தை உருவாக்குவதுமான மாற்று விவரணத்தை நோக்கியும் காணப்படுகின்றது.

பெரும்போக்குக் கலை வடிவம், ஊடகங்கள் மற்றும் ஏனைய பல ஆதாரங்கள் மூலம் கிடைக்கும் பிரபல்ய விரிவாக்கத்தையும் புகழையும் அனுபவிக்கின்றது. இது ஜனரஞ்சகக் கலாசாரத்தின் நேரடியான அல்லது மறைமுகமான பகுதியொன்றாகும். மேலாதிக்க சித்தாந்தம் ஒடுக்குமுறை மிக்கதாகவும் மற்றும் பெரும்பான்மையானோரின் அரசியல், பொருளாதார மற்றும் சமூக அக்கறைகளின் அடிப்படையில் அவர்களுக்குப் பாதகமானதாகவும் இருப்பினும் கூட, இது அச் சித்தாந்தத்தைக் கட்டமைத்து நிலை நிறுத்துகின்றது. நம்மைச் சுற்றி நிகழும், மக்கள் நலனுக்கு எதிராகத் தொழிற்படும் கவனம் பெறும் நிகழ்வுகளைக் கேள்வி கேட்பதன் மூலம் மாற்றுக் கலையினால் ஓர் எதிர் விவரணத்தை உருவாக்க முடியும். பெரும்பாலான நேரங்களில், இந்த விவரணம் ஒரு குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட மக்கள் குழுவினால் மட்டுமே சுற்றிப் பரப்பப்பட்டு, உள்வாங்கப்பட்டுப் புரிந்துகொள்ளப்படுகின்றது. ஆயினும், இது முக்கியமானது என்பதுடன் அதிகாரத்தைக் கொண்டிருப்போருக்கும் மக்களுக்கும் இடையிலான உறவுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. பெரும்போக்கு விவரணங்கள் மற்றும் பொய்யான விவரணங்களுக்கு அப்பாற் சென்று, உண்மையை எடுத்து விளக்குவதற்கும், மக்களின் கண்ணோட்டத்தில் யதார்த்தத்தை

வெளிப்படுத்துவதற்குமான சாத்தியத்தை மாற்றுக் கலை கொண்டுள்ளது.

ராஜபக்ஷ ஆட்சியை எதிர்ப்பதற்கான போராட்டத்தின் ஆரம்பம் முதலே தமது பல்வேறு அரசியல் கலை வடிவங்களைப் பயன்படுத்திய பல்வேறு கலைஞர்களினால் இலங்கையின் மக்கள் இயக்கம் வலுவடைந்தது. இந்த மக்கள் போராட்டம் மற்றும் எதிர்ப்பு இயக்கம் முழுவதிலும், பெரும்போக்கு விவரணத்தின் மூலம் திணிக்கப்பட்ட மட்டுப்பாட்டைத் தகர்ப்பதற்கு மாற்றுக் கலையினால் இயலுமாகவிருந்தது. எதிர்ப்பை வெளிப்படுத்தவும், ராஜபக்ஷ அரசியல் மரபைக் கேள்விக்குள்ளாக்குவதற்காக ஒரு பாரிய கூட்டத்தை அணிதிரட்டவும் மாற்றுக் கலை முன்னெடுப்பை மேற்கொண்டது. அணிதிரட்டப்பட்ட வெகுஜனங்கள் அரசியல் எதிர்ப்பில் தீவிரமாகப் பங்கேற்று ஆக்கப்பூர்வமாகத் தமது பங்களிப்பை வழங்கினர். இதனால், மாற்றுக் கலை தனக்கென ஒரு சொந்த மரபினை உருவாக்கியுள்ளது.

## உசாத்துணை


பிளேக்கர், ரோலண்ட். "Aesthetic Turn in International Relations;." Oxford Bibliographies . ஜூன் 27, 2018. https://www.oxfordbibliographies.com/display/document/obo-9780199743292/obo-9780199743292-236.xml#:~:text=The%20study%20of%20aesthetics%20is,seemingly% 20trivial%20realm%20of%20aesthetics. (அணுகல், டிசம்பர் 06, 2022).

த சில்வா, சமந்தா, மற்றும் ஏஞ்சலின் ஒன்டாட்ஜே. Aragalaya art: Preserve it for posterity. ஆகஸ்ட் 28, 2022. https://www.sundaytimes.lk/220828/plus/aragalaya-art-preserve-it-for-posterity-492814.html (அணுகல், டிசம்பர் 21, 2022).

அப்புஹாமி, ஜெஹான் ஸ்ரீகாந்தா, சகுன கமகேயின் நேர்காணல். Art Resistance and Aragalaya (டிசம்பர் 15, 2022).

அப்சரா, நயோமி, சகுன கமகேயின் நேர்காணல். Aragalaya,Art & Cinema (டிசம்பர் 20, 2022).

பேக்கரியே கட்டிய. பேக்கரியே கட்டிய. 2022. https://bakeriyekattiya.org/ (அணுகல், January 17, 2023).

பெஞ்சமின், வோல்டர். The Work of Art in the Age of Mechanical Reproduction. லண்டன் (I.,): பென்குயின், 1936.

கொழும்பு பேஜ். Massive protests near President's private residence demanding Sri Lankan President to 'go home'. khu;r; 31, 2022. http://www.colombopage.com/archive_22A/Mar31_1648747227CH.php (அணுகல், 12 01, 2022).

கமகே, சகுன எம். கொஹுவலவில் மெழுகுவர்த்தி ஏந்திய போராட்டம். கொஹுவல, மார்ச் 01, 2022.

கமகே, சகுன எம். ஜூலை 09. கொழும்புஇ ஜூலை 09, 2022.

கமகே, சகுன எம். ஒரு தந்தையின் துயரம். கொழும்பு, மே 27, 2022.

கமகே, சகுன எம். இந்தியாவின் புதுடெல்லியில் CCA இற்கெதிரான போராட்டக்காரர்கள். புதுடெல்லி, டிசம்பர் 15, 2019.

கமகே, சகுன எம். பேக்கரியே கட்டிய. கொழும்பு, ஏப்ரல் 09, 2022.

கமகே, சகுன எம். சிலிண்டர் போராட்டம். கொழும்பு, மே 08, 2022.

கமகே, சகுன எம். GGG காலி. காலி, ஜூன் 12, 2022.

கமகே, சகுன எம். கோட்டாகோகம கலாகாரய. கொழும்பு, ஏப்ரல் 2022.

கமகே, சகுன எம். ஜன அரகலயே கலாகருவோ. கொள்ளுப்பிட்டி, ஏப்ரல் 29, 2022.

கமகே, சகுன எம். நீதி. கொழும்பு, ஏப்ரல் 22, 2022.

கமகே, சகுன எம். நீதிக்கான நடைபவனி. மட்டக்களப்பு, ஜூலை 2022.

கமகே, சகுன எம். நெருக்கடி நிலைமைகளில் சிறுமியும் தாயும். கொழும்புஇ மே 21, 2022.

கமகே, சகுன எம். போராட்டக்காரத் துறவி. கொழும்பு, ஏப்ரல் 13, 2022.

கமகே, சகுன எம். காலிமுகத்திடல் ஆக்கிரமிப்பு இயக்கம். கொழும்புஇ ஏப்ரல் 09, 2022.

கமகே, சகுன எம். மக்களின் சக்தி. கொழும்பு, ஜூலை 09, 2022.

கமகே, சகுன எம். மக்களின் இறைமை. கொழும்பு, ஏப்ரல் 09, 2022.

கமகே, சகுன எம். களனியவில் பெற்றோல் வரிசை. களனிய., மே 25, 2022.

கமகே, சகுன எம். பாராளுமன்றத்தில் வெறிநோய். பத்தரமுல்லை, மே 06, 2022.

கமகே, சகுன எம். சங்கதாசகே சூட்டி களிசம. கொழும்பு, ஜூன் 2022.

கமகே, சகுன எம். கண்ணீர்ப்புகை சினிமா. கொழும்பு, மே 10, 2022.

கமகே, சகுன எம். ஆக்கபூர்வமான போராட்டக்காரர். கொழும்பு, ஜூன் 13, 2022.

கமகே, சகுன எம். விவசாயிகள் போராட்டம். புதுடெல்லி, ஆகஸ்ட் 03, 2017.

கமகே, சகுன எம். எதிர்ப்பின் வடிவங்கள். கொழும்பு, ஜூன் 09, 2022.

கமகே, சகுன எம். பசித்த பேய். கொழும்பு, ஏப்ரல் 2022.

கமகே, சகுன எம். தாயும் சேயும் கொடி. கொழும்பு, மே 29, 2022.

கமகே, சகுன எம். சட்டத்தின் ஆட்சி. கொழும்பு, மே 25, 2022.

கமகே, சகுன எம். சால்வையின் அடக்குமுறை. கொழும்பு, மே 29, 2022.

கிராம்சி, அன்டோனியோ. Selections from Prison Notebooks. London: Lawrence & Wishart, 1971.

குணசேகர, ஷெஹான், சகுன கமகேயின் நேர்காணல். Aragalaya & Photograph (டிசம்பர் 25, 2022).

களுதொட்டகே, திலின, சகுன கமகேயின் நேர்காணல். Argalaya and photograph (டிசம்பர் 25, 2022).

கோதாகொட, தினுபா, சகுன கமகேயின் நேர்காணல். Aragalaya and Music resistance (டிசம்பர் 24, 2022).

மனுவர்ண, ஜகத், சகுன கமகேயின் நேர்காணல். Art,Aragalaya and role of Cinema (டிசம்பர் 16, 2022).

News1st. ஏப்ரல் 1, 2022. https://www.newsfirst.lk/2022/04/01/37-people-injured-in-mirihana-protest/ (அணுகல், 12 02, 2022).

ஆர்ட்லாண்ட், எபெர்ஹார்ட் ; ஹோபன், வீலேண்ட்; அடோர்னோ, தியோடர் டபிள்யு Aesthetics. Wiley, 2017.

பெரேரா, சனுக நதுன், சனுக நதுன் பெரேராவின் நேர்காணல். The iconic Mother and Child photograh of Aragalaya (ஜனவரி 10, 2022).

பெரேரா, சனுக நதுன். தாயும் சேயும். மிரிஹான, மார்ச் 31, 2022.

ராஜபக்ஷ, கல்ப, சகுன கமகேயின் நேர்காணல். Aragalaya and Visual Resistance (டிசம்பர் 22, 2022).

ரத்நாயக்க, சுஜித், சகுன கமகேயின் நேர்காணல். Art and Aragalaya (டிசம்பர் 10, 2022).

சாஹோ. Towards a people's culture - Art and Resistance under Apartheid. ஒக்டோபர் 19, 2011. https://www.sahistory.org.za/article/towards-peoples-culture-art-and-resistance-under-apartheid (அணுகல், டிசம்பர் 20, 2022).

சயக்கார, அசங்க, சகுன கமகேயின் நேர்காணல். Aragalye Rangamadala (Thetere of People's Struggle) (டிசம்பர் 24, 2022).

செனவிரத்ன, அஜித், சகுன கமகேயின் நேர்காணல். Aragalaya and Photograph (டிசம்பர் 25, 2022).

சிங், பிரியங்கா. The Power Of Art: An Instrument For Activism & Resistance. ஜூலை 08, 2021. https://feminisminindia.com/2021/07/08/the-power-of-art-an-instrument-for-activism-resistance/ (அணுகல், டிசம்பர் 03, 2022).

Sonderegger, Ruth, and Ines Kleesattel . "AESTHETICS AND POLITICS." In Introduction to Philosophy: Aesthetic Theory and Practice, by Valery Vino, 108-124. Qubec: Rebus Community, 2021.

உபமாலி, இந்திகா. யூடியுப். ஏப்ரல் 8, 2022. https://www.youtube.com/watch?v=83hHkG6s-A8 (அணுகல், டிசம்பர் 25, 2022).

உதவியவர்:

LAW & SOCIETY TRUST

**சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை**

இல. 03, கின்சி டெரஸ்,
கொழும்பு 00800.
இலங்கை.

தொலைபேசி: +94 11 2691 228, 2684 845, 2684853

Email : info@lstlanka.org

உதவியவர்:

diakonia

PEOPLE CHANGING THE WORLD